அடுக்குமல்லி

பாலகுமாரன்

313218

விசா பப்ளிகேஷன்ஸ்
55, வெங்கட்நாராயணா சாலை
தி.நகர், சென்னை-600 017

முதற் பதிப்பு : நவம்பர் 1992

விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

விலை : ரூ. 23.00

கிடைக்குமிடம் :

திருமகள் நிலையம்

55, வெங்கட்நாராயணா சாலை

தி. நகர் சென்னை-600 047

போன் : 442899, 441559

இலங்கையில் கிடைக்குமிடம் :

L. Muthaiah & Co.

155-Prince St, IInd Floor

Pettah

Colombo—IInd Srilanka

அச்சிட்டோர்

ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்

12, கஜபதி தெரு, ஐஸ்அவுஸ், சென்னை-5

14478

3126036

உங்கள் தீர்கமான எழுத்திற்கு வணக்கம்.

தங்களது கதைகளை நாவல்களை பாதிக்குமேல் படித்து முடித்து ஒரு வாசகர் வட்டத்தையே ஏற்படுத்திய உங்கள் தெளிவு கண்டு வணங்கிறேன்.

சமீபத்தில் நாவல் டைம் ஆரம்பத்தில் இருந்து தொடர்ந்து படித்து வருகிறேன் அதில் ஒவ்வொரு அட்டையிலும் தங்கள் முகத்தை பார்க்கும் போதெல்லாம் இமை மூடாமல் பார்த்து ரசிப்பது எனது வழக்கம்.

இந்த மாதம் அட்டையில் வித்தியாசமாக வானத்து வட்ட நிலவின் பொலிவோடு பிரகாசிக்கும் உங்கள் முகம் கண்டு மகிழ்ந்தேன் ஒரு தெளிவு, நிறைவு விவேகம், சகல ஐஸ்வரியங்களும் பொருந்திய முகப் பொலிவை கண்டு பெருமிதப்படுகிறேன் தியானத்தில் கை கூடிய நிறைவைக் காண்கிறேன். இந்த மாத நாவல் மிக சிறப்பாக இருந்தது. பாரதியை பற்றிய தங்கள் ஆதங்கத்திற்கு சரியான வடிகாலாக இந்த கதை அமைந்து விட்டது. இதை படித்த பிறகாவது, குயில் பாட்டு பாடிய அந்த பிறவிக் கவிஞனின் நினைவு சின்னத்தை காப்பாற்றுவார்களா? ஊதிய சங்கை ஊதி விட்டீர்கள். கேட்பவர்கள் காதில் கேட்டால் சரி. மனித வாழ்வில் நிச்சயமற்ற தன்மையை தடுக்கி மல்லாந்து விழ சாவு நேரும் என்று மிக தெளிவாக சொல்லியது அருமை.

நாவல் டைம் கதைகளில் மிகவும் அருமையான நாவல் இது. மேலும் தொடரட்டும் உங்கள் பணி. என்றாவது ஒருநாள் தங்கள் எழுத்தும் வேதமாகும். அதிலென்ன சந்தேகம்?

வாழ்க வளமுடன்

அன்புடன்

ஒ. ரகுராம்

ஸ்ரீ அபிராமி மெரைன ஸ்டோர்ஸ்

சேது ரோடு, ஜெகதாபட்டினம்

பாலா,

மரண பயம் என்பதே மறந்து போன தேசத்திலிருந்து—

வணக்கம்.

இரண்டு முறை கீதை படித்திருக்கிறேன்—கொஞ்சம் கஷ்டப்பட்டு. இன்று மூன்றாவது முறையாக எளிமையாக புரிந்து கொண்டேன் உன் 80—பக்கங்களுள்

உனக்கு இதெல்லாம் எழுதக்கூடாது, தேவையில்லை என்று தானிருந்தேன்—இருந்தாலும்

அந்த 80 பக்கம் படித்தவுடன்

வயிற்றுக்குள் இருக்கும் அத்தனை உறுப்புகளையும் யாரோ வாரி எடுத்து விட்டாற்போல் ஒரு வெறுமை.

சிந்தனை கூட நிசப்தமானது.

உலகை ஒருமுறை சுற்றி வந்தாற் போல் ஒரு அயர்ச்சி கண் மூட

உள்ளுக்குள் பிரளயம்.

நன்றி நெஞ்சுக்குள் நிரட—இக் கடிதம்.

—Well—

அடுத்தவன் வேதனை அவலாவது—உண்மை

இது, ''நிஜம் மறந்த தேசம்—''

''தனக்கு வரவில்லை என சந்தோஷப்படுவது—''

அருவருப்பு ''அடிக்கடி வருவது—''

''உள் மனது பற்றி ஊராரிடம் பேசாதிருக்க எண்ணுவது—''

''உறுப்பு'' பற்றிய கற்பனை உண்மை.
இது நிர்பந்தங்களின் நியமனம்.
தெளிவு நோக்கிய பயணம்
பொறுமை வேண்டி போதி மரம் தேடும் கட்டம்.

சுகத்தில் சோம்பல் வராதிருக்க வேண்டும்—சுய முயற்சி—கொண்ட,

ஒரு சுட்டிப் பையனின்
நெற்றிப் பொட்டில்—பட்டுத் தெறிக்கும்படி
இந்த ''கண்ணாடிக் கோபுரத்தை''
கட்டிய சிற்பியே—

ஓடுவது சுலபம், நிற்பது கடினம் உணர்த்தியிருக்கிறாய்—மறுபடியும் நிற்க முயற்சிக்கிறேன்.

—Oct—5—எனது பிறந்த நாள்.
இமை மூடி,
இறுகி

சூன்யத்தில் அமரும் நீலப் பொட்டில் — எதன் பொருட்டும், எவரையும் நான் எப்பொழுதும் நோகடிக்காதிருக்க—

(எனக்காக) வேண்டுங்கள் அப்பா.

அன்புடன்
ஆதிசேஷன்
லூதியானா

அன்புள்ள பாலகுமாரனுக்கு,

அன்னை பராசக்தி அருள்க.

மு. வ. என்றொரு மனிதரின் சின்னச் சின்ன சத்திய வாசகங்கள் நாவலாய் பூத்த நாளில் வாசனை நுகர ஆரம்பித்தவன். சமூக உணர்வு வந்த போது ஜெய காந்தன் கொஞ்சம் போல காந்தியைப் படித்ததும் நா. பா.

பிறகு ஒரே கொலைகளாய் ரத்தமாய் தமிழ் நாளிதழ்களும் வார இதழ்களும் யுத்தம் செய்ததால் முகச்சுழிப்பு. திடீரென்று மெர்க்குரிப் பூக்களை முகர்ந்தேன். மொத்தமாக நர்மதாவில் தங்களைப் பிடித்தேன்.

கிட்டத்தில் விசிறிச் சாமியாரின் விபூதியை குங்குமத்தில் பார்த்தேன். பாலகுமாரன் தகப்பன் சாமியாய் ஞானம் வழங்குவது அறிய. உள்ளில் ஈரம். ஞானம் என்பதை மலர்களைப் போல மெள்ள மெள்ள அடையாளம் காட்டுகிறீர்களே, அந்த எழுத்து செதுக்கப் பட்டவைகள்.

பார்த்தசாரதி, சின்மயானந்தா—போன்றவர்கள் அள்ளித் தருகிறபோது இவ்வளவு ஆழமாய் அந்தரங்கம் பனிப்பதில்லை. சுசிவதில்லை. சித்பவானந்தரைப் போல் சின்னதாய் எளிய சொற்களில் ஞான கங்கை ஊற்றாக வருகிறது. கடலோரக் குருவிகளில் மடலேறும் கருவிகள் மனத்தைப் பிசைகிறது. இதுதான் எழுத்து இதுதான் ஆன்ம விழிப்பு. இவன்தான் மனிதன். இதுதான் சமூக அமைப்பு என்று காட்ட எத்தனை முயற்சிகள்.

மனிதனை அடையாளம் சொல்லி துயிலெழுப்புகிற பள்ளியெழுச்சி இது. ஞான பீடம் பரிசு தரவேண்டிய படைப்பு இது.

அன்னை பராசக்தி தங்களை ஞானவாரிதியாக்கியிருக்கிறாள். அவளே ஞானபீடத்தில் வைப்பாள்.

எழுத்தையும் எழுதுகோலையும் தெய்வம் என்பான் பாரதி. ஞானம்தானே கடவுள். தங்கள் எழுத்து ஞானம் தந்து நிற்கிறது. நிச்சயம் ஒருநாள் நோபெல் தேடி வரும். யக்ஞம் செய்க.

அன்புடன்

நெல்லை கிருஷ்ணன்

40, வெங்கட்நாராயணா சாலை சென்னை-17

இனிய பாலகுமாரன்

நலமா?.....

.....

கனவுகளற்று இரு என்று நீங்கள் சொல்லிக் கொடுக்கும் போதே கனவுகளில் கவிழ்த்து விடுகிறீர்கள் என்பது மிக உன்னிப்பாய் இருப்பவர்களுக்குத் தான் தெரியும். சொல்லித்தரத்தான் முடியும் வாசகரை இழுத்துப் பிடித்துக் கொண்டு அலைய முடியாது என்று மகாராஜா கல்லூரியில் சொன்னீர்கள் எனக்கும் அது சரி என்று தான் தோன்றியது. அதே சமயம் இங்கே எந்த இலக்கிய கொம்பன்களிடம் இல்லாத ஒரு லகு நடை இது நேற்று நடந்த நிஜம் என்பது போன்ற கற்பனை(?) உயிர்ப்பு உங்கள் கதைகளில் இருப்பதால் மயக்கம் ஏற்பட்டு விடுவதை தவிர்க்க முடியாது. யாரோ பாண்டிச்சேரி சொந்த ஊர் என்று பேசும் போது குருமூர்த்தி அங்கே இருக்கிறான் என்கிற எண்ணம் வருகிறது வாசகரின் கதையோடு மனசு ஒன்றும் பலவீனத்தை பலமாகதாக்கும், மறுபடி மறுபடி தாக்கும் உத்தி உங்களுடையது

எனவே உங்கள் நாவல்களின் முடிவு மிக தெளிவோடு இருப்பது அவஸ்யம். சுந்தரத்துக்கு வேலை போய் விட்டது. ஆனால் தளராது சுய வேலை தேடிக் கொண்டான் என்கிற சந்தோஷ முடிவு மட்டும் போதாது. தோற்று தோல்வியை ஒப்புக் கொண்டு தோல்வியோடு வாழுகிறவர்களையும் விளக்கி எழுதவேண்டும். யதார்த்தம் என்றால், வெற்றி, சந்தோஷம் மட்டுமா.

அன்றுமுதல் அவர்கள் ஆனந்தமாய் இருந்தார்கள் என்பது மட்டும்தானா இது மேக்ப்லீஃப் இல்லையா. பாஸிடிவ் முடிவுதான் சரியா. அவலமும் வாழ்வில் உண்டே. மரணம் வரை தவிர்த்திடவே முடியாத, தன்

னலே முடியாத வேதனைகள் உண்டே. நெசுடில் கடைசி வரைக்கும் வருமே.

நான் சொல்வது புரிகிறதா. மறுபடி சொல்கிறேன். அசத்தலான நடை உங்களுடையது. மற்றவை படிக்கப் படிக்க உங்கள் சிறப்பு லெகு பிரகாசமாய் எனக்குத் தெரிகிறது. ஆயினும் வாசகரை கனவில் தள்ளாதீர்கள் ஐயா. தோல்வியை புழுக்கத்தை எழவே முடியாதபடி வேத்து சாப்பலானதை நல்லவர் அழித்ததையும் சொல்ல வேண்டும்.

பிறகு, மிடில் கிளாஸாகவே, பாத்திரப் படைப்பு அமைகிறது. வறுமையிலுள்ளோர் வருவதேயில்லை. என் இவர்களை நீங்கள் எழுதுவதில்லை. இரண்டாயிரம் ரூபாய் சம்பளக்காரன் பிரச்சனைதான் கதையாகிறது. என்பது பைசாவுக்கு தவித்து வேதனை படுபவன் காணோம். குறையாய் சொல்லவில்லை. உங்கள் திக்குகள் விரிவடைய விரும்புகிறேன்.

நிச்சயம் உங்களை எவரும அலட்சியப் படுத்த இயலாது. இன்னும சில படிகள் ஏறினால் தமிழில் உன்னதம் காட்ட உங்களால் இயலும். இதற்கு உங்கள் பிராம்மண ஆன்மீக கூடு விட்டு, சரத் உடைத்தபடி நீங்கள் வரவேணும். மாற்றுக் கருத்து உள்ளவர்களோடு பேசி பழக வேண்டும். எனக்கு நிகர் எவருமில்லை என்று நீங்கள் இறுமாப்பு கொண்டுவிடலாகாது என்ற அக்கறையுடன் எழுதுகிறேன். இது தடையாகி விடுப. மற்ற படிக்கு, ராஸ்தல் என்ன நல்லா எழுதறான் என்கிற பிய கோபம்தான், உங்களைப் பற்றி என்னிடம் இருக்கிறது இதுவும் தோழமைதான். என்னை என் சொற்களை புரிந்து கொள்வீர்கள் என்கிற நம்பிக்கையுடன்

அன்புடன்
வசந்தா சுகவனம்
பெருந்துரை, ஈரோடு

14478
3126030

அடுக்குமல்லி

1

இடபம் : எருது, காளை, ஆண் மாடு, வண்டி யிழுக்கும் மாடுகளிலிருந்து வேறுபட்டது இளவிருத்திக் காக உபயோகப்படும் காளை. ரிஷபம் என்கிற வடமொழிச் சொல்லின் தமிழ் திரிபு ரிஷப தேவர் என்பது சிவபெருமானின் வாகனமாகிய நந்தி தேவரின் வேறொரு பெயர்.

மாத்திரைகள் போட்டிருந்த சிறிய காகித உறையில் ஏதோ ஒரு பள்ளிப் பாடப்புத்தகத்தில் செய்யுள் பொருளுரை அச்சிடப்பட்டிருந்தது. காகிதப் பையில் செய்யுள் பொருளை அச்சிடுவார்களா? செய்யுள் பொருளுரையைத் தான் கிழித்துக் காகிதப் பையாக மாற்றியிருக்க வேண்டும். ஏதோ ஒரு பையன் அல்லது பெண் படித்து, பாண்டி புத்தகத்தைக் கடைக்குப் போட்டிருக்க வேண்டும். கடைக்காரன் யாருக்கோ மொத்தமாய் எடை போட்டு விற்றிருக்க வேண்டும். எடை வாங்கியவன் யாருக்கோ விற்றிருக்க வேண்டும். அப்படி விற்றதை வாங்கியவன் இப்படிப் பையாய் வீட்டில் உட்கார்ந்து பக்கங்களைக் கிழித்து, ஓரங்களைக் கிழித்து, பசை ஒட்டி மாற்றியிருக்க வேண்டும். அப்படி உறையாய் மாறிய காகிதம் உயிர் காக்கும் மாத்திரைகளைத் தாங்கி இங்கே வந்திருக்க வேண்டும்.

"ஐலோட்டில் இருபது" என்று மருந்துக் கடையில் கேட்டதும் மருந்துக் கடைக்காரர் கொஞ்சம் வியப்பாய்ப் பார்த்தார் "உங்களுக்கா சார்?" என்று தலையசைக்க வேண்டியதாயிற்று.

மருந்து வாங்க வந்தவர்களில் இரண்டு பேர் திரும்பிப் பார்த்தார்கள். அப்படிப் பார்த்தவர்களுக்கு ஐலோட்டில் பற்றித் தெரிந்திருக்கிறது. அது ஹிருதய நோய் சம்பந்தப்பட்டது. கூடவே காம்போஸ் கேட்டபோது, ரொம்ப கத்தமாய் பெயர், விலாசம், போன்ற நம்பர் எல்லாம் ரசீதில் எழுதிக் கொண்டு தான் மருந்து கொடுத்தார்கள்.

"நீங்க தானே பேஷண்ட். ஒரு கையெழுத்துப் போட்டுடுங்க சார்" என்று அன்புக் கட்டளையிட்டார்கள்.

மருந்துக் கடையிலிருந்து ஐந்தடி தொலைவு நடந்து, சைக்கிள் ரிக்ஷாவில் கையூன்றி ஏறி, களைப்போடு அமர்கின்ற, பாஸ்கரனை அவன் நகர்கின்ற வரை ஐயோ பாவம் என்று பார்த்தார்கள். சைக்கிள் ரிக்ஷா நகரும் போது ஏதோ பேசத் துவங்கினார்கள் அவர்கள் என்ன பேசுவார்கள் என்பது கேட்காமலேயே புரிகிறது.

"போன வருஷங்கூட நல்லா தான் சார் இருத்தாரு. ஷட்டில் காக் ஆடிட்டு பக்கத்துக் கடைக்கு வந்து சாத்துக்குடி ஜூஸ் சாப்பிடுவாரு திடீர்ன்னு ஹார்ட் அட்டாக். யு நோ ஹிஸ் ஏஜ்? இருபத்தி அஞ்சு வயசு. சிகரெட், குடி, ஜர்தா, பான்பராக் எதுவும் கிடையாது. மோட்டார் சைக்கிள் ஸ்டார்ட் பண்ணும் போது நெஞ்சு வலிக்குதுன்னு சொன்னாரு, டக்குன்னு ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போயிட்டாங்க. மாலிவ் அட்டாக், சமயத்துக்கு ஆஸ்பத்திரி கொண்டு போனதால பிழைச்சாரு."

"இந்தக் காலத்தில் யாருக்கு என்ன வியாதி வரும்னே

சொல்ல முடியலை சார். எப்படி இருந்த ஆளு எப்படி மாறிப் போயிட்டார் தெரியுமா? தான் ஒன்னு சொல்றேன், பணமாளுக்கு காசு பெரிசில்லை சார். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்."

"பகவானே வியாதி வெக்கை இல்லாம இருந்தா போதும்."

பாஸ்கரனுக்கு பார்மலி ஆளைத் தெரியும் பாஸ்கரனுக்கு பார்மலி ஆளை, பழக்கடைக்காரனை, எலக்ட்ரிக் ஷாப் ஓனரை, பெயிண்ட் கடை முதலாளியை, ஜெனரல் ஸ்டோர்சை, மளிகைக் கடையை, புத்தக வியாபாரியை, டெய்லரை, டீக்கடைச்சாரனை இந்தத் தெருவிலுள்ள எல்லோரையும் தெரியும். அது அவன் பேட்டை அவன் பிறந்து வளர்ந்த இடம். பள்ளிக் கூடம் போய் விட்டுத் திரும்பிய பாதை கல்லூரி முடித்து பெண்களை நோட்டமிடக் காத்திருந்த இடம். அலுவலகமாய் வேலைக்கு மோட்டார் சைக்கிளில் போன தெரு இரவு நேரத்தில் பூட்டின கடைப்படியில் உட்கார்ந்து சிரித்துக் கூவிய இடம்.

"கண்ணுங்களா மணி ரெண்டாகுது. வூட்டுக்குப் போங்க" என்று போலீஸ்காரன் துரத்திய இடம்.

"இந்த மைனருங்க க்ரூப்பை ஒரு நாள் இல்லை ஒரு நாள் மடக்கிப் போட்டு மிதிக்கப் போறேன்" ஒரு சப்இன்ஸ்பெக்டர் சவால் விட்ட இடம்.

"மடக்கிப் போட்டுடுவியா? எங்களை மடக்கிப் போட்ட ஒரே வாரம் நீ உப்புத் தண்ணி குடிக்கிற ஊருக்கு மாத்தலாயிடுவ, உன்னால முடிஞ்சதை பார்" என்று சவால் விட்ட இடம்.

ஆட்டோவும், ஆட்டோவும் ஒரு இரவு துரத்தி முட்டிக் கொள்ள பட்டாக்கத்தியும், பேட்டரி ஓயுமாய்

இரண்டு கும்பல் அடித்துக் கொள்ள ஒதுங்கி நின்று வேடிக்கைப் பார்த்த இடம்.

இப்போது அவனுடைய தெருவே அவனுக்கு அந்நியமாய்ப் போனது. அவன் வீடே அவனுக்கு அந்நியமாய்ப் போனது. அவனே அவனுக்கு அந்நியமானான்.

அந்நியமாதல் என்றால் என்ன?

ஒரு ஆள் இரண்டாகப் பிரிந்து, வெளிப் பார்வைக்கு, ஒரு மாதிரியும், உள்ளுக்குள் வேறு மாதிரியும் இருப்பது. தன்னைத் தானே தள்ளி நின்று கவனித்துப் பார்ப்பது எந்நேரமும் தன் செய்கைகளை, தன் மனசை வேறொரு ஆளாய் நின்று பார்ப்பது

''பாஸ்கரா வேகமா நடக்காதே, செத்துப் போயிடுவே'' என்று டாக்டர்கள் எச்சரித்திருக்கிறார்கள். ''மூச்சுப் பிடித்து எதையும் தூக்காதே கொலாடஸ் ஆயிடுவே'' என்று கவனப்படுத்தியிருக்கிறார்கள். ''கொஞ்சமா சாப்பிடு. அதே சமயம் வயிறு காலியாகக்கூடாது. அதனால அடிக்கடி சாப்பிடு'' என்று நினைவுபடுத்தியிருக்கிறார்கள். இதெல்லாம் செய்யாமலிருந்தாலும், திடீர்ன்னு அட்டாக் வரலாம். ஐஸோடின் கையில் வச்சுக்கோ. நெஞ்சு வலிச்சா டக்குன்னு ஒன்னு வாயில போட்டுக்க. நாக்குக்கு அடில அடக்கிக்கோ. கொஞ்சம் ரிலீஃப் கிடைச்ச உடனே ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆயிடு. மேற்கொண்டு நாங்க பார்த்துக்கறோம். கடவுள் இருக்காரு.''

கடைசி வாக்கியம் தான் பாஸ்கரனைக் கடுமையாகத் தாக்கியது. இனி உயிரோடிருக்கும் ஒவ்வொரு நேரமும் கடவுளின் விருப்பம். கடவுளின் அருள். மரணம் எப்போது வேண்டுமானாலும் சம்பவிக்கும். இரவு, பகல், காலை, மாலை, சந்தி, அந்தி எந்த நேரமும் தாக்கும். இது மனிதனுக்கும் பொருந்துமென்றாலும் அந்த மனிதர்

கள் அல்லப்போது சௌகர்யமாய் மறந்து போனார்கள். அவர்களால் மறக்க முடிந்தது. பாஸ்கரனுக்கு மறக்க முடியவில்லை. அவன் ஹிருதயம் அதைத் தொடர்ந்து ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது. அது என்னார் ஜ்ட் ஹார்ட். கொஞ்சம் விரிந்து உப்பிய ஹிருதயம். தன்றாகக் காற்று ஊதப்பட்டு மெல்லிய தோலாய் காற்றைப் பிடித்துக் கொண்டிருக்கும் பலூனைப் போன்ற இருதயம். பலூன் மீது எது பட்டாலும், பலூன் எதன் மீது பட்டாலும் உடையும், உயிர் காற்றுப் பிரியும்.

இந்த விஷயம் மூச்சிரைப்பாய், மூட்டுக்களில் வலியாய், அடிக்கடி நீர் கோர்த்துக் கொள்ளும் காலாய், ஸ்ரீரணசக்தி குறைவான தன்மையாய், சோகை பிடித்த உடம்பாய், ஒட்டிய கன்னமாய், உதிரும் முடியாய், சில சமயம் நெஞ்சை இறுக்கும் வலியாய் அவனுக்கு நினைபடுத்தப்பட்டது.

முழுவிவரமும் தெரிந்த பிறகு பாஸ்கரனின் அண்ணா அணைத்துக் கொண்டார். தங்கை மாதம் ஐநூறு ரூபாய் அனுப்புகிறேன் என்று எழுதினாள். தம்பி தானே அவனைத் தினமும் குளிப்பாட்டி விடுவதாய் வாக்களித்தான்.

''நீ நன்னா இருப்பேன்னா, அதுக்காக நான் செத்துப் போறேன்னடா'' அப்பா வாக்குக் கொடுத்தார். ஆனால், அவரவர்க்கு வந்ததை அவரவரே அனுபவிக்க வேண்டும். இதுவே உலக நியதி

இருபத்தி ஆறு வயதில் இடபம் என்றால் எருது, காளை, ஆண் மாடு, இடபம் என்பது ரிஷிபம் என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் திரிபு என்று ஒரு பிற்பகல் வேளையில், யாருமில்லாத வீட்டில் தனியே அமர்ந்து படித்துக் கொண்டிருக்கிறான்.

வீட்டிற்குள் எல்லா சௌகர்யங்களும் இருக்கின்றன.

ரேடியோ, டி.வி., ஸ்டார் கனெக்ஷன், வீடியோ டெக், ஸ்டீரியோ டேப் ரெக்கார்டர், புத்தகங்கள், சாப்பாடு, படுக்கை, சாய்வு நாற்காலி, கிழக்குப் பார்த்த பெரிய பால்கனி எல்லாம் இருக்கின்றன.

ஒரே ஒரு நிரமம். இந்த போர்ஷனுக்கு வர மூன்று மாடி ஏற வேண்டும். பதினாறு பதினாறாய் எதிரும் புதிருமாய் நடுவே இரண்டு கார் போகும் இடைவெளி விட்டு, லவகுசர்கள் மாதிரி நிற்கும் மஞ்சள் நிற ஃப்ளாட் கட்டிடம். எப்போதும் ஜனநடமாட்டமுள்ள இடம். ஒரு குரல் கொடுத்தால் நிச்சயம் உதவி கிடைக்கும். ஒவ்வொரு தான் ஒவ்வொரு நாடகம் நடக்குமிடம். ஆனால், பால்கரன் தன் போர்ஷனுக்கு வர மூன்று மாடி ஏறவேண்டும்.

அந்த இரண்டு கட்டிடத்திற்குப் பெரிய காம்பௌண்ட் சுவர் கட்டி, ஒரே ஒரு வாசல் இருந்தது. அந்த வாசலில் சுருங்கல் பதித்து, மல்லிகை என்கிற பெயராய் அந்த காம்பௌண்டிற்கு பெயர் சூட்டப்பட்டிருந்தது. எதிர்பக்கத்தில் வேறொரு சுருங்கல் பதித்து கட்டடம் கட்டி கே.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன் பெயர் செதுக்கப்பட்டிருந்தது.

பால்கரன் அந்த காம்பௌண்டிற்கு அடுக்கு மல்லிகை என்று பெயர் வைக்க ஆசைப்பட்டான். கொஞ்சம் பழுத்து மலர்ந்த பூவாய், லேசான மஞ்சள் நிறமாய், ஒன்றின் மீது ஒன்று அடுக்கி இருக்கப்பட்ட வேணியாய், அடர்த்தியான சரமாய், அந்த வீடுகள் அவனுக்குக் காட்சியளித்தன.

மல்லிகை ரொம்ப ரொமான்டிக்கான பூ. ரோஜா மாதிரி மல்லிகை கம்பீரமில்லை. போகன்வில்லா மாதிரி குப்பைத்தனமில்லை. நாகலிங்கம் மாதிரி சந்யாசியில்லை. முல்லை போலவும் குழந்தைத் தனமில்லை. தாழை போலக் முரடு இல்லை.

மருடம் போல அழுக்கு இல்லை. களாம்பரம் போல அலட்டல் இல்லை. மனோரஞ்சிதம் போல மந்திரத்தனமில்லை சாமந்தி போல திமிரில்லை. தாமரைப் போல கர்வமில்லை. பல்லிகை ஒரு ரொமான்டிக் பூ குடித்தனப் பெண்பனை காதல், காமம், அமைதி, அழைப்பு, அலட்சியம, அழகு எல்லாம் நிறைந்த பூ. கதிர் மல்லையை விட, இடம் விட்டுத் தொடுத்த சரத்தை விட, அடுக்கி இருக்கி வேணியாய்க் கட்டின மல்லிகை அழகு. அது அமைதியான கம்பீரம்.

எப்போது வேண்டுமானாலும் செத்துப் போய் விடுவோம் என்கிற பால்கரனுக்கு எல்லாம் புதுசு புதுசாய்த் தோற்றமளித்தன. ஒவ்வொரு விஷயத்திலும் புதிய அர்த்தம் தெரிந்தது. அவன் வசிக்கும் அடுக்கு மல்லி உட்பட அவனுக்கு அதிகம் ஆச்சர்யம் கொடுத்தது. இருபத்தி ஆறு வயதில் ஹிருதய நோய்க்கு ஆட்பட்டு கொஞ்சம் துள்ளினாலும், நெஞ்சு வலிக்கும் என்ற நிலையிலுள்ள இளைஞனுக்கு, இருபத்தி ஐந்து வயது வரை துள்ளிக் கொண்டிருந்தவனுக்கு பார்வை மாறிப் போனதில் ஆச்சர்யம் ஏதுமில்லை.

வாழ்க்கையில் திருப்தி உள்ளவரை வாழ்க்கை பற்றி எதுவும் புரியாது. அதிருப்தி ஏற்பட்ட மனசே யோசிக்கத் துவங்குகிறது. ஒரு விஷயத்தில் திருப்தி ஏற்பட, இன்னொரு திருப்திக்கு மனசு ஏங்கும். ஒரு விஷயத்தில் அதிருப்தி ஏற்பட, அதிருப்தி பொதாகும். அதிருப்தி வளர்வதே ஞானம். ஞானம் பந்தமறுக்கும். பந்தம் அற தனிமை நிரந்தரமாகும். தனிமையைப் பழக்கப்படுத்திக் கொண்டால் ஒட்டுதலில்லாத உறவு வளரும். இவ்வித உறவில் மற்றவர் மனசு புரியும். மற்றவர் மனது புரிய, தான் என்ன செய்ய வேண்டுமென்பது தெளிவாகும். இந்தத் தெளிவு திடமாக அமைந்து விட்டால் எவரோடும் சண்டை வராது. எல்லாம் நாடகமென்பது புரிந்து

போகும்) நாடகத்திலிருந்து கொண்டே நாடகத்தை ரசிக்க முடியும். இருந்தும் இல்லாத நிலை அலுப்பூட்டி. மரண நேரத்தில் சிலருக்கே கிடைக்கக் கூடிய மகத்தான விஷயம்.

'உற்றார் யார் உளரோ
உயிர் கொண்டு போம் பொழுது
குற்றால ஆலத்துரை கூத்தனல்லாது
உற்றார் யார் உளரோ'

பாட்டு பாட்டாக இல்லாமல் பாடமாகவே புரியும். பாஸ்கரனுக்குப் பல பாடங்கள் புரியத் துவங்கியிருந்தன.

2

சுவரோடு பதிக்கப்பட்ட வழவழப்பான மர அலமாரிக்கதவைத் திறந்து, அவள் மருந்துகளுக்கென்று ஒழித்துக் கொடுக்கப்பட்ட இடத்தில் மாத்திரைகளை வைத்தான். பரித்தது ப்ளாஸ்க்கிலிருந்து கோதுமை கஞ்சியை டம்ளரில் ஊற்றிக் குடித்தான் வாயையும் முகத்தையும் துண்டால் துடைத்துக் கொண்டு மின் விசிறி போட்டான். ஹாலில் ஓரத்தில் ஜன்னலோரம் போடப் பட்ட கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டான். களைப் பாக இருந்தது. 'லப்டப்' என்ற வேகமான துடிப்பு காதுவரை கேட்டது. நெஞ்சில் வலியில்லை. ஒரு கனமிருந்தது. இருதயம் இடது மார்பில் இருக்கிறேன் என்பதை ஏதோ தொந்தரவாய் சொல்லிக் கொண்டி ருந்தது.

இப்படி இருக்கக் கூடாது. ஆரோக்கியமாய் இருப்பவர்களுக்கு இருதயம் இருக்கும் உணர்வே

இருக்காது. தூரயிரல், இரைப்பை, குடல், மூத்திரக் காய்கள் உள்ளேயிருக்கும் உணர்வே வரக்கூடாது. அப்படியொரு உணர்வு வந்தால் அது நோய், சம்திங்ராங் என்று அர்த்தம்.

பாஸ்கரனுக்கு இருதயமிருப்பது எந்நேரமும் தெரிந்து கொண்டேயிருக்கும். வலியாகவோ, அழுத்த மாகவே, ஏதோ அடைப்பது போலவோ இருதயமானது தன்னை அவனுக்கு நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும். மரணம் பற்றி நினைத்துக் கொண்டேயிருக்க வேண்டி யிருக்கும். மரணம் பயமாய் இருந்தது மாறி விட்டது. ஏன் இன்னும் நிகழவில்லை என்கிற ஆச்சர்யமாய்ப் போய் விட்டது. எப்போது நிகழும் என்கிற எதிர்பார்ப் பாய் வந்து விட்டது.

''சார் போஸ்ட்'' என்றால் யாராவது பயப்படுவார் களா? காலிங்பெல் அடித்தால் கலவரப்படுவார்களா? என்ன? யார்? என்று எதிர்பார்ப்பு வருமில்லையா? அது போல் அமைத்து விட்டது. சிறிது நேரம் படுத்துக் கிடக்க மார்பு வேகம் சமனப்பட்டது. ஸ்டார் டி.வி. பார்க்கலாம் என்று எழுந்து உட்கார்ந்த போது, வாசல் கதவை மெல்லியதாய் தட்டும் சத்தம் கேட்டது. தட்டுகிற விதத்திலிருந்து அது எதிர்வீட்டுக் குழந்தையென்று புரிந்தது. கொஞ்சம் பரபரப்பு ஏற்பட்டது.

''ஜுப்ளி கண்ணு...இதோவரேன்...'' என்று குரல் கொடுத்தான். மெல்ல நடந்து போய் கதவு திறந்தான்.

அது ஜுப்ளிதான். ஜட்டியும், தங்க செயினும், சுருண்ட தலைமுடியுமாய் இரண்டு வயது குழந்தை நின்று கொண்டிருந்தாள். எதிர் ஃப்ளாட்டில் ஜுப்ளியின் அம்மா லைதேகி கதவு திறந்து தன் குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''உனக்கு உவ்வா சரியா போயிடுத்தா'' குழந்தை

அவன் வேஷ்டியைப் பிடித்துக் கேட்டது

"கார்த்தால எழுந்து கண்ணு முழிச்சாப் போறும் முதல் கேள்வி இதுதான். பாஸிக்கு ஒவ்வா சரியா போயிடுத்தா, பாஸி எங்க...?ன்னு புடுங்கி எடுத்துருவோ..."

பின்னால் நின்றிருந்த வைதேகியைப் பார்க்காமல் பாஸ்கரன் ஜுப்ளியை அணைத்துக் கொண்டான். பிற்பகலில் ஒரு அரை மணி நேரம் ஜீப்ளியைக் கொஞ்சுவது ஒரு வேலையாக போய் விட்டது. அனேகமாய் இரண்டிலிருந்து மூன்றுக்குள் ஜுப்ளிகதவு தட்டி உள்ளே வந்து அவனுடன் ஆட்டம் போடும். வைதேகியும் சம்பிரதாயமாய் ஒரு தரம் உடல் நலம் விசாரிப்பாள். ஐந்து நிமிடம் அவள் வீட்டு வாசலிலேயே நின்று பேசி விட்டு, 'ஜுப்ளி உங்ககிட்ட இருக்கட்டுமா?' என்று சொல்லிக் கதவு சாத்திக் கொள்வாள்

ஏதோ அடுப்பு வேலை முடித்தாற் போல ஈரக்கையை புடவையால் துடைத்தபடி 'போறும் வா, ரொம்ப தொந்தரவு பண்ணப்படாது' என்று குழந்தையை வாரிக் கொண்டு போவாள். எந்த அடமும் பிடிக்காமல் குழந்தை அம்மாவோடு போய் விடும். நிறைய குழந்தைகளுக்கு நடுவே ஜுப்ளி வேறு மாதிரி பாஸகரனுக்குத் தென்பட்டாள்.

ஜுப்ளி அதை எடுக்காதே என்றால் சரியென்று குழந்தை திரும்பிவிடும். கத்தலோ, அழுகையோ, பிடிவாதமோ அதிகமில்லாத குழந்தை அது. மல்லிகையில் பல்வேறு குழந்தைகளைப் பார்க்கும் போது ஜுப்ளி அசாத்திய சமர்த்து என்றே சொல்ல வேண்டும்.

வைதேகிகூட மிக அமைதியானவள்தான். பாஸ்கரன் அண்ணாவின் மனைவி சாருலதாவுக்கு அவள் மட்டுமே நெருங்கிய ஸ்நேகம். மனனி ஜெனரல் இன்ஷூ

ரன்ஸ் கம்பெனியில் ஆபீசராய் இருக்கிறாள். வேலை சிரமமும், பொறுப்பும் மிகுந்த உத்யோகம். ஆனால், நல்ல சம்பளம்.

வேலை நேரம் பத்திலிருந்து ஐந்து. இரண்டு நாள் லீவு. மன்னிடம் நிர்வாகத் திறனிலிருந்து கூர்மையான ஆங்கில அறிவு இருந்தது. அதிகாரம் பண்ணும் த்வனி, முகம் இயல்பாகவே இருந்தது. அவளைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று அண்ணா பிடிவாதம் பிடித்ததால் கர்வமும் இருந்தது. ஆனால் அவள் கர்வம் இதுவரை யாரையும் காயப்படுத்தியதில்லை. காலை நேர பரபரப்பில் சிறிது கடுகடுப்பாளே தவிர பிறரை நோகச் செய்யும் புத்தி அவளுக்கு இல்லை.

பாஸ்கரனுக்கு மாஸில் அட்டாக் வந்து படுத்த படுக்கையாய்க் கிடந்த போது மாரடைப்பு நோய் என்றால் என்ன? எதனால் வருகிறது என்று ஆபீஸ் லைப்ரரிலிருந்து பல மருத்துவ புத்தங்களைப் படித்தாள்.

"நத்திங் சீரியஸ் யா, இன்னும் ஒரு வாரத்தில் உனக்குச் சரியாய்ப் போயிடும்" என்று தைரிய மூட்டினாள் மெல்ல ஒருவாறு தேறி பாஸ்கரன் வீட்டுக்கு வந்ததும், "கொஞ்சம் சீரியஸ்தான் பாஸ்கர். உன் லைஃப் ஸ்டைலையே நீ மாத்திக்கணும். உனக்கு இருக்கிற ஆசையெல்லாம் மூட்டைக்கட்டி ஓரமா வைக்கணும். கிட்டத்தட்ட நீ ஒரு ப்ளுபேபி. இப்படியே தளுக்கா இருந்தா எண்பது வயசு வரைக்கும் இருக்கலாம். ஆயிரத்து நாற்பது கேஸ் உலகம் முழுக்க அப்படியிருக்கா. அதுல ஒன்னா நீ இருக்கணும். அது உன்கிட்ட இருக்கு. ஐயோ சேத்துடப் போறியேன்னு பயந்து நான் சொல்லலை அது நம்மகிட்ட இல்ல. மறுபடி மறுபடி ஸ்ட்ரோக் வந்து ஆஸ்பத்திரி வீடுன்னு அலைஞ்சு, நீயும் ரணப்பட்டு மத்தவங்களும் அவஸ்தைப்பட்டு அல்லாடறதைவிட அமைதியா இருக்கிறது நல்லது."

"எந்த டாக்டருக்கும் நம்ம சாவு பத்தி, நம்ம வலி பத்தி அக்கறையில்லை குணப்படுத்தி அனுப்பனுங்கற ஒரே எய்ம்ல ஊசி மேல ஊசி போட்டு புண்ணாக்குவா. ஸ்டெத் பண்றேன்னு கை நரம்பு வழியா கம்பிவிட்டு உன் ஹிருதயத்தை வேடிக்கை பார்ப்பா. போன தடவைவிட ஒரு மில்லி மீட்டர் பெருசாயிருக்குன்னு ரிப்போர்ட் வரும். டாக்டருக்கு காரணம் கண்டு பிடிக்கணும். அதுக்கு நாமதான் அவஸ்தைப்படணும். நரம்புதன்ன கம்பி போறது எத்தனை வலின்னு எனக்குத் தெரியும். உலகத்துல நடக்கற எந்த விஷயம் பற்றியும் கவலைப் படாதே. எல்லாத்தையும் அனுபவிச்சுட்டேங்கிற துறவி மாதிரி இரு. இருபத்தைஞ்சு வயசுப் புள்ளைகிட்ட இப்படிச் சொல்றது வேதனைதான். உன் வயசு இருபத்தைஞ்சு இல்லை. எண்பதுன்னு நினைச்சுக்கோ எண்பது வயசுன்னு நினைச்சுண்டு எண்பது வயசுன்னு நினைச்சுண்டு எண்பது வயசு வரைக்கும் இரு. இங்க என்ன வசதி வேணுமோ அத்தனையும் தறோம். மனசு திறந்து கேளு."

அவனுக்காக ஸ்டார் டீ. வி. ஏற்பாடு செய்தது அவள்தான். அவனுக்காக சுந்தரகாண்டமும் தினமும் காலையில் படிக்கிறாள். ஒரே பகுதியை ஆயிரத்து ஒரு முறை படிப்பதாக வேண்டிக் கொண்டிருக்கிறாள்.

அண்ணாவுக்கும், மன்னிக்கும் ஒரே ஒரு பிள்ளை அவனை ஊட்டிப் பள்ளிக்கூடத்தில் சேர்த்திருக்கிறார்கள். மன்னியின் அப்பாவுக்கு ஊட்டியில் ஏலக்காய், செர்ரி தோட்டம் இருக்கிறது. ஒவ்வொரு கோடைக்கும் மன்னி இருபது நாள் ஊட்டிக்குப் போய் விடுவாள். இந்தக் கோடையில் போகாததற்கு பாஸ்கரன்தான் காரணம்.

ஆனால், இருபது நாள் லீவ் போட்டுவிட்டு வைதேகியோடு சென்னையில் பல இடங்களுக்குப் போனாள்.

இரண்டுதான் அவனை வைதேகி வீட்டில் படுக்கச் சொல்லிவிட்டு வீடு முழுவதும் டிஸ்டெம்பர் பூசினாள். எந்த வேலைக்கும் போகாமல் வீட்டோடு இருக்கும் வைதேகிக்கு நிறைய போன் கால்கள் வருவது பார்த்து பாஸ்கரன் ஆச்சர்யப்பட்டான்.

"வைதேகி ரொம்ப சோஷியல் டைப். அவ வீட்டுக் காரர் கொஞ்சம் முகடு. தலையெழுத்தேன்னு அடங்கியிருக்கா. மேத்தமாட்டிக்ஸ் ஸ்டேட் பர்ஸ்ட் வந்திருக்கா. வீணை தன்னா வாசிப்பாளாம். இப்ப தொடறதே இல்லையாம்."

"நான் அவங்கிட்ட வீணை கத்துக்கட்டுமா மன்னி."

"வேண்டாம்..."

"ஏன்? உடம்புக்குக் கெடுதலா?"

"வைதேகிக்கு கெடுதல் அவ புருஷன் கொஞ்சம் சந்தேகப்படற டைப் நான் அவர்கிட்ட பர்மிஷன் கேட்டுக்கிட்டுத்தான் ரெண்டு பகல் அங்க தங்க வைச்சேன் ஆஸ்பத்திரில சேர்த்துடுங்களேன் வசதியில்லையா அது இதுன்னு அந்தாள் மடையன் மாதிரி கேட்டான். திடீர்ன்னு ஞானம் வந்த மாதிரி, டேடைம் தானே, இருக்கட்டும்னான். நல்ல வேளை உங்கண்ணா அந்த மாதிரி இல்லை."

ஆனால் அண்ணா வேறு மாதிரி. அவன் மன்னியை விட ரப்பரை அதிகமாகக் காதலித்தான். அண்ணாவும் அவன் நண்பனும் இரண்டு லட்ச ரூபாய் முதலீட்டில் ஆரம்பித்த கம்பெனியை எண்பது லட்சரூபாய் மதிப்பாக மாற்றியது அண்ணாதான். ரப்பர் என்கிற கச்சாப் பொருளைக் கொண்டு இன்னும் சமையல் பாத்திரங்கள் தான் செய்யவில்லை. மற்றதெல்லாம் செய்தாகி விட்டது என்பது அண்ணாவின் வாதம்.

ரப்பரால் ப்ளாஸ்டிக்கும் கலவல், மனைவிகள் என்பது இன்னொரு வாதம். ரப்பர் மரத்திலிருந்து கிடைப்பினும் பூமியின் அடியிலிருந்து ஒரு குறிப்பிட்ட ரசாயணப் பொருளை, ஒரு குறிப்பிட்ட வகை தாவரம் மிகக்கலனமாக உறிஞ்சுவதால் எற்படும் ரசாயனப் பொருள் என்பது அண்ணாவின் வாதம். அதே ரசாயனத்தை பூமிக்கு அடியிலுள்ள க்ரூட் ஆயிலிலிருந்து எடுக்க பல்வேறு தரத்தில் பிரிக்கக் கிடைப்பது ப்ளாஸ்டிக் என்பது இன்னொரு பேச்சு. அண்ணா இதைப் பேச ஆரம்பித்தால் முடிக்க இரண்டு நாளாகும்.

அண்ணா கணேசமூர்த்தி ஒரு ஒர்க்கஹாலிக். மதுவினருந்து போதை போல அண்ணாவுக்கு வேலை போதையான விஷயம். மோட்டார் வாகனங்களுக்கு ரப்பர் உதிரி பாகங்கள் செய்யும் கம்பெனி அவருடையது. மேலான் பைப்பிலிருந்து சிறிய ரப்பர் வாஷர் வரை ஆயிரக்கணக்கான உதிரிப்பாகங்கள் அவரின் தொழிற்சாலையில் தயாராகின்றன. ரப்பரைத் தவிர அண்ணாவுக்கு மற்ற விஷயங்களில் நாட்டம் குறைவு. பொது அறிவு சூன்யம்.

எதேச்சையாய் டி.வி.யில் ஒரு பட்டிமன்றம் பார்த்து விட்டு ரொம்பப் பரவசப்பட்டான்.

"எல்லோரும் டக்கரா பேசறாங்கய்யா பட்டிமன்றம் தமாஷா இருக்கே. இப்பத்தான் முதல்ல கேக்கறேன். ஏம்மா அந்தக் கொலுசு உடைச்சது யாரு? மாதவியா? கண்ணகியா?"

"யாருமில்லை. நான்தான் உடைச்சேன். கை தவறிக் கீழே விழுந்துடுத்து." மன்னி தலையிலடித்துக் கொண்டாள். அண்ணா அவளைக் கண்டு கொள்ளவேயில்லை.

"கொலுசு உடைச்சா நெருப்பு வருமா? ஏன் மதுரை பத்திக்கிச்சு."

"இனிமே நீங்க கொலுசெல்லாம் ரப்பர்ல பண்

ணிடுங்கோ, எதும் உடையாது. பத்திக்காது. அப்படியே பத்திக்கிட்டாலும் பொண்ணு மாதிரி புகைஞ்சு, புகைஞ்சு எரியும் ரப்பர் கொலுசு தானே."

"ஏய், என்ன ரப்பரை கேலி பண்ற..."

"ரெண்டாயிரம் வருஷத்து தமிழை நீங்க கேலி பண்ணலாம்ன்னா. இரு நூறு வருஷத்து ரப்பரை நான் கேலி பண்ணக்கூடாதா?"

"நான் எங்க தமிழை கேலி பண்ணினேன்?"

"சிலம்பை, கொலுசுன்னு சொல்றீங்களே. இன்றைய தேதிக்கு இப்படி வெளில பேசினா உதைப்பான்."

"ஸாரி. எனக்கு இந்தக் கண்ணகி சமாச்சாரத்தை ஒரு கதை மாதிரி சொல்லு பார்க்கலாம்." அண்ணா கேட்க, மன்னியும் தடுமாறினாள்.

"எப்பவோ படிச்சது யாருக்கு ஞாபகம் இருக்கு" என்றாள் எதிர் போர்ஷன் வைதேகிதான் சிலப்பதிகாரம் பற்றி அந்த வீட்டிலுள்ள எல்லோருக்கும் சொன்னாள்.

"வாசற்கடைமணி நடு நா நடுங்க

ஆவிற்கடை மணி எனகுத்தோனென்றியும்"-என்று செய்யுள் பாடினாள்.

"தமிழ் ஏன் இங்கிலீஷ் மாதிரி கலியா இல்லை." என்று அண்ணா கேட்டதற்கு யாரும் பதில் சொல்லவில்லை. அவளும் மோர்க் குழம்பு வடை பிசைந்து சாப்பிட்டுத் தூங்கி விட்டாள். வைதேகி இலக்கிய அறிவும் உள்ளவள் என்று அப்போது புரிந்தது. நிறைய பட்டிமன்றங்களில் பேசியிருக்கிறாள் என்பது அவள் சொல்லத் தெரிந்தது.

இத்தனை தெரிந்தும் அமைதியாக இருக்கிறவள் மீது எல்லாருக்கும் மதிப்பு வந்தது. "அந்த போன்

கால்கள்னாம் பழைய பட்டிமண்டபதண்பர்களா?'' என்று பாஸ்கரனுக்கு கேள்வி வந்தது ஆனால் கேட்கவில்லை. தாது வருடம் எலக்ட்ரானிக் என்ஜினியரிங் படித்துவிட்டு டி வி சப்பெனியில் டிஸைனிங் என்ஜினியராகச் சேர்ந்த நேரம் டி.வி.தான் முக்கியமாக இருந்ததே தவிர பட்டி மன்றமோ, இலக்கியமோ, இலக்கியம் தெரிந்த எதிர் வீட்டுப் பெண்ணோ முக்கியமாக இல்லை.

''டி வி.ல கோஸ்ட் வருதே என்ன பண்ணலாம்?'' என்று அடுத்தக் கட்டிட பெண் கேட்ட போது,

''சுத்தி மஞ்ச தண்ணி தெளிச்சு, விபூதி பூசி, வேப்பிலை சொருகலாம்'' என்று கண் சிமிட்டி பதில் சொன்னான்.

''சும்மா கதையடிக்காதீங்க. அது ஆண்டெனா ப்ராப்ளம்னு எனக்குத் தெரியும். உங்களுக்கு ஆண்டெனா ரிப்பேர் பண்ணத் தெரியுமா? தெரியாதா?''

''இந்த வாரம் முழுக்க கோஸ்ட் உங்க டி வி.லேயே இருக்கட்டும் ஞாயிற்றுக் கிழமை சரி பண்ணத் தரேன்.''

ஆண்டனாவைத் திசை மாற்றி வேறு பின் போட்டு, சரியாய் ட்யூனிங் செய்து, டி வி யில் தூசுத் தட்டிக் கொடுத்தால் ஒரு டி.வி யை ரிப்பேர் செய்ய அதே கட்டடத்தில் இருபது டி வி.கம்ப்ளெய்ண்டுகள் இருந்தன. உடம்பு சரியாக இருந்த போது எல்லா வீடுகளிலும் ஏதோ ஒரு சாக்கு வைத்து ஏறி இறங்கியாயிற்று. ஆனால் இவனுக்கு உடம்பு சரியாய் இல்லை. என்று சொன்னதும் எல்லா வீடும் உதவிக்கு வந்துவிடவில்லை.

''எப்படி சார் இருபத்தைஞ்சு வயசில ஹார்ட் அட்டாக் வரும். அப்ப ஏதோ கெட்ட பழக்கம் இருக்குன்னு தானே அர்த்தம். குடி, சிகரெட், கெட்ட பொம்பளாட்டிகள் ஸ்நேகிதம் ஏதோ ஒன்னு இருக்குன்னு தானே அர்த்தம்.'

''அதனாலெல்லாம் கூடவே ஹார்ட் அட்டாக் வராது ஸார். நான் கூடத்தான் குடிக்கிறேன். எப்படி கல்லு மாதிரி இருக்கேன்னு பாருங்க. ட்ரக் சார், எல்லா பின்னப் பசங்களுக்கு சுந்சா பிடிக்கறாங்க, மாத்திரை போட்டுக்கறாங்க.''

''பாஸ்கரைப் பார்த்தா அப்படித் தெரியலையே...''

''இருக்கும் எதேனா இருக்கும். இல்லேன்னா ஏன் இருபத்தைஞ்சு வயசில ஹார்ட் அட்டாக் வருது.''

ஆனால் ஆஸ்பத்திரியில் வந்து முதலில் பார்த்த ஆள் லைதேகியின் புருஷன் தான். வீட்டிலிருந்தாலும் வெளியே வந்து அதிகம் யாரோடும் பேசாதவன், அரை மயக்கமாய்க் கிடந்த பாஸ்கரன் தலையில் கை வைத்து கொனறுபதிகம் சொன்னான்.

''சரியான பைத்தியம் அவன்'' மன்னி தலையில டித்துக் கொண்டான்.

''என்னாச்சு மன்னி?',

''என்னடா மூணு நாள் சேர்ந்தாப்ல உன்னை பார்க்க வராளேன்னு அதிசயப்பட்டேன். இருபத்தைஞ்சு வயசுப்பையனுக்கே ஹார்ட் அட்டாக் வருதுன்னா எனக்கு வராதா? ஐந்நூறு ரூபா கொடுத்து டோட்டலா செக்-அப் பண்ணிக்கிறதுக்கு நினம் வரான். லேசா பிரஷ்ஷர் இருக்கு, மத்தபடி ஒன்னும் இல்லேன்னதும் பரம சந்தோஷம். ஒவ்வொரு மனுஷனும் ஒவ்வொரு விசித்திரம்.''

ஆனால், லைதேகி அதிகம் உதவி செய்தாளென்றும் வீடு கலவரப்பட்டுக் கிடந்த போது மொத்த சமையலையும் அவளே கவனித்துக் கொண்டாளென்றும் மன்னி சொன்னாள். அதே மாதிரி வேறு வகை உதவி

செய்தது நாராயணன். கப்பல் என்ஜினியர். சௌதி கப்பலில் எண்ணெய் ஏற்றிக்கொண்டு போகும்போது க்யூபாவின் கரையில் அட்டாக் வந்து விட்டது. ஹெலிகாப்டரில் கப்பலிலிருந்து எடுத்துக் கொண்டு போய் இருபத்தைந்து நாள் க்யூபாவிலேயே கப்பல் கம்பெனி வைத்தியம் பார்த்தது.

"என்ன ஆஸ்பத்திரி, என்ன ஆஸ்பத்திரி. வேற எந்த கரையில் கப்பல் நின்னிருந்தாலும் நான் செத்துப் போயிருப்பேன். க்யூபான்றதுனால பிழைச்சேன். எக்னாமிக் மெடிக்கல் ஃபெசிலிட்டி. க்யூபால நாற்பத்தாறு பேருக்கு ஒரு டாக்டர் இருக்காங்க நூறு பேருக்கு ஒரு என்ஜினியர். சின்ன நோவு என்னமா டெவலப் ஆகியிருக்கு" அவன் க்யூபாவைப் பற்றிப் பேசினால் எல்லோரும் விலகி ஓடிவிடுகிறார்கள்.

அதே சமயம் அவருக்கு ஹிருதய நோய் பல தகவல்கள் தெரிந்திருந்தன. எக்ஸ்ரே பார்க்கவும், ஈ.சி.ஜி பேப்பரை படிக்கவும் கற்று வைத்திருந்தார் இங்குள்ள டாக்டர் களையெயக்க வைத்தார்.

"இதுக்கு ஒன்னும் பெருசா மருந்து கிடையாது. யாருக்கு வேணுனாலும், எப்ப வேணாலும் ஹார்ட் அட்டாக் வரும். எப்ப வரும்னு சொல்ல முடியாது. உடம்பு தேறினதும் வீட்டுக்கு வா நான் உனக்குச் சொல்லித் தரேன். சிம்ப்ளா நாலு யோகாசனம். ஹிருதய நோய் வரவே வராது."

ஆஸ்பத்திரியில் அவர் போட்டுக் காட்டிய ஆசனங் களை டாக்டர் உற்றுப் பார்த்துவிட்டு, 'இதெல்லாம் நீங்க போடாதிங்க செத்துப் போயிடுவீங்க. சரிசரின்னு கேட்டுட்டு சும்மா இருந்துடுங்க. உங்களது எல்லார்ஜ்ட் ஹார்ட் வேகமா நடக்கறது கூடத்தப்பு"

தலைக்கு அதிகமாய் ஹார்ட் விரிவடைந்து ஆறு மாதமாயிற்று. இந்த ஆறு மாதமாய் நிதானமாய் நடப் பதும், அதிராமல் பேசுவதும் பழக்கமாகி விட்டன. ஆரோக்கியமான யாரைப் பார்த்தாலும் இவர் ஹிருதயம் எப்படியிருக்கும் என்றுதான் கேள்வி வந்தது. மரணம் என்பது வரும் வரையில் இனி எத்தனை பேருக்குப் பார மாய் இருக்கப் போகிறோமோ என்கிற கவலை வந்தது. அண்ணாவிற்கு நாற்பதாயிரம் ரூபாய் செலவாயிற்று. மன்னியினுடைய ஐம்பதுநாள் லீவு சேமிப்பும் காணாது போயிற்று. தம்பியினுடைய இரவு நேரங்களெல்லாம் அவனுக்குத் துணையாக இருப்பதிலேயே கழிந்தது. இனி துணைக்கு யாரும் வேண்டாம். என்னை நானே பார்த் துக் கொள்வேன் என்று சொல்வதற்கு நான்கு மாதங் களாயின.

வாழ்க்கை மொத்தமும் தலைகீழாய் மாறிப் போயிற்று. துள்ளல் அறவே குறைந்து விட்டது. வெறும் கனவுகள் மிகவும் ஆரோக்கியமானவை. வாலிபால் ஆடுபவை. மோட்டார் சைக்கிள் ஓட்டுபவை. சில சமயம் காமம்கூட தலைவிரித்துத் தலிக்கும். ஒரே நேரத் தில் மூன்று பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் ராஜ ராஜக் கனவுகள் வரும். ஒரு திருமணம்கூட இல்லை என்று தெரிந்து சேர்வடையும். கட்டிலும், மாத்திரையும் ஜன்னலுக்கு வெளியே தெரியும் நீலவானமும், டெலிவிஷ னும்தான் இனி உலகம் என்ற உண்மை தெருப்பாக எரிக்கும்.

அவன் தம்பி சத்யா என்கிற சத்யமூர்த்தி காதலிக் கிறான் என்று தெரிந்த போது இரண்டு நிமிடம் அழுகை கூட வந்தது 'சீச்சீ...என்ன இது..." என்று மனசைத் தேற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று. இதே அடுக்கு மல்லிகையில் எதிர் கட்டிடத்திலுள்ள பி.ஏ. படிக்கும் மரகதவல்லியை அவன் நேசிக்கிறான். சத்யா மரகதத்தை நேசிப்பது யாருக்கும் தெரியாது. பாஸ்கரனுக்குத் தெரி யும். மரகதத்தின் அம்மாவுக்கும் தெரியும். அண்ணாவுக்

கும், மன்னிக்கும் இப்போதைக்குச் சொல்ல வேண்டா மென்று சத்யா சொல்லியிருக்கிறான்.

மாதம் நாலாயிரம் சம்பளம் வந்த பிறகு திருமணம் செய்து கொள்வதாய் அவளுக்கு வாக்களித்திருக்கிறான். மரகதவல்லியின் அட்டகாசமான உடம்பைப் பார்க்கும் போது உள்ளே பொறாமைக் குமிழ்கள் வெடித்தன. நாலு பேருக்கு மெல்ல சொல்லி பற்ற வைத்து விடலாமா என்றுகூட புத்தி போயிற்று. பொறாமைக் குமிழிகளை அகற்றி மனசைத் துடைத்துக் கொள்ள வெகு நேர மாயிற்று. இது ஏன் எனக்கு மறுக்கப்பட்டது என்கிற கேவல் வந்தது.

வெள்ளை வேட்டியும், அரைக்கைச் சட்டையுமே எப்போதும் போடும் உடையாயிற்று. உடம்பு சிறுத்துப் போனதினால் எல்லா பேன்ட்டும் தொள தொளவென்று போயின. வாழ்க்கையை வேடிக்கைப் பார்க்கக் கற்றுக் கொள் பால்சுரா. வாழ்க்கையை அனுபவித்தல் என்பது வாழ்க்கைக்குள்ளே புரண்டு, புரண்டு ஆடுவது மட்டு மல்ல. விலகியும் அனுபவிக்க முடியும். வேடிக்கை பார்ப்பதும் ஒரு அனுபவம் என்று மெல்ல புத்தி தெளிவா யிற்று. வெகு சுலபமாய், கடந்த ஒரு வாரமாய் எல்லா மனிதர்களையும் கவனமாய்க் கண்காணிக்கும் ஒரு புத்தி வந்து விட்டது.

அவன் முதன் முதலில் கண்காணித்தது பால்கனியிலி ருந்து கிழக்கே தோன்றும் விடியல் வெளிச்சத்தை. விடியலை உற்றுப் பார்க்கும் எவருக்கும் ஒரு ஒட்டாத தன்மை வந்து விடுமென்று எங்கோ படித்திருந்தான். பார்க்கத் துவங்கினான். விடியலைப் பார்க்க நாலு மணிக்கு எழுந்த போது விடியல் மட்டும் கண்ணில் படவில்லை. வேறு என்னென்னமோ கண்ணில் பட்டன. வேறு என்னன்னவோ காதில் விழுந்தன. வீட்டில் வேறு யாரையும் எழுப்ப வேண்டாமென்று ஜன்னல் விளிம்பில்

அலாரம் டைம்பீஸ் வைத்து அதன் மீது ஒரு அட்டை டப்பாவைக் கவிழ்த்து வைத்திருந்தான். நாலுமணி அலாரம் அவனுக்கு மட்டும் கேட்கும். எழுந்து பின்பக்கம் போய் வந்து பால்கனியில் நின்றபடி கிழக்கு நோக்கி நாற்காலியில் உட்காரும் போது,

"அப்பாடா, இந்த வருடத்தின், இந்த மாதத்தின், இந்த நாளின் விடியலைப் பார்த்து விட்டேன். நான் மரணமடைந்த மறுநாள் விடியல் எது, அது எப்படி யிருக்கும். அன்று என்ன நிகழும்? அன்றைய ஹிண்டு வில் என்ன தலையங்கம். அன்று மனசில் பரபரப்பான செய்தி என்ன? அந்த வாரம் என்ன சினிமா ரீலிஸ்? நான் கேட்காமல் போகப் போகிற பாடல் எது? என்னை எந்த சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வார்கள். தோனா? வேனா? எனக்கென்று எந்தத் தென்னைமரம், ஓலை விரித்திருக் கிறது. எனக்கென்று எந்த மூங்கில் எங்கு வீளைந்திருக் கிறது. கால் கட்டை விரல்களை இப்படித் தானே கட்டு வார்கள். கால் கட்டை விரல்களைச் சேர்த்து வைத்துப் பார்த்துக் கொண்டான்.

நாற்காலியைப் பின்னுக்கு நகர்த்தி, பால்கனியில் பல்லாந்து படுத்துக் கொண்டு, கட்டப்படாத கட்டை விரல்களை கட்டப்பட்டது போல் இணைத்து வேடிக் கைப் பார்த்தான். சிரித்தான். மரணத்திற்குப் மரணத் திற்குப் பயப்படுகிறோமா? விரும்புகிறோமா? என்று தெரியாமல் அதை யோசிக்க முயன்றும் பிடிபடாமல் தவித்தான்.

அன்று வாராந்திர செக் அப்பிற்கு போய்விட்டு வந்த பிறகு, சுதவு தட்டி ஜன்னலையும், சற்று தொலைவே இருக்கிற அவள் அம்மா வைதேகியையும் பார்த்தான். குழந்தையைத் தூக்கிக் கொண்ட மூன்றாவது நிமிடம் வைதேகி, "குழந்தை உங்ககிட்ட இருக்கட்டுமா?" என்று கேட்டாள். சரி என்று அவன் தலையசைத்ததும் சட்

டென்று பின்னே நகர்ந்து மெல்லக் கதவைச் சாத்திக் கொண்டாள். கதவு சார்த்துவதை மெல்ல செய்தாலும், சட்டென்று நகர்ந்ததில் ஒரு அவசரம் தெரிந்தது. பாஸ்கரன் உள்ளிப்பாளான். வைதேகி ஏதோ திருட்டுத் தனம் செய்கிறாள் என்று அவனுக்குத் தோன்றியது. நீச்சயம் அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவன் செத்துப் போவதற்குள் அது என்ன திருட்டுத்தனம் என்று நிச்சயமாக அறிந்து கொள்ள வேண்டும்

அதே வராண்டாவில் நாலு வீட்டின் கதவுகள் இருந்தன. மற்ற இரண்டு வீட்டுக் கதவுகளும் மாலை தான் திறக்கப்படும். வேலைப் போகிற ஆண்களும், பெண்களும் உள்ள வீடு அது.

'தனியாயிருக்க பயமாயிருக்கு' என்று இரண்டு மூன்று முறை வைதேகி சொல்லியிருக்கிறாள். ஆனால், வைதேகியைப் பார்த்தால் தனியாக இருக்கப் பயப்படு கிறவள் போலத் தெரியவில்லை. மெல்ல குழந்தையுடன் நடந்து வைதேகி வீட்டுக் கதவில் பாஸ்கரன் திருடனைப் போலக் காது வைத்துப் பார்த்தான். டெலிபோன் சுற்றும் சத்தம் கேட்டது. பிறகு நிசப்தமாய் இருந்தது.

'என்னப்பா பண்ணிட்டிருக்கே, சாப்பாடச்சா, என்ன சாப்பாடு?''

''வைதேகி யாரோடோ பேசினாள். குழந்தை கதவை தட்டக் கை ஓங்க, அவன் தடுத்துப் பிடித்து, தன் போர்ஷனுக்குள் வந்தாள். வைதேகியிடம் கள்ளக் காதல் இருக்கறதோ என்ற எண்ணம் அவனுக்கு மூளை விட்டது. கவனிக்க வேண்டும் என்ற எண்ணம் தீர்மானமாயிற்று.

விட்டிற்குள் குழந்தையோடு வந்தபோது இந்தக் குழந்தை இப்போது தேவையில்லாத பொறுப்போ என்று தோன்றியது. திருமணமான பெண்கள் ஏன் கெட்டுப் போகிறார்கள் என்று உட்கார்ந்து யோசிக்க வேண்டும்

என்று ஆசை வந்தது. புருஷன் சரியில்லை என்றால் பெண் கெட்டுப்போவாள் என்று ஏதோ ஒருபெண் நாவல் சொல்லிற்று யாரோ ஒரு பெண்மணிதான் அந்தத் தமிழ் நாவல் எழுதியிருந்தாள். ''There Should be a strong recson for a women to go ashay'' என்று தமிழ் நாவலுக்கு தலைவ ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

எது ஸ்ட்ராங் ரீசன் என்று யார் நிர்மாணிப்பது அந்தப் பெண்ணேவா, புருஷன் குள்ளமாக இருக்கிறான் என்பதுகூட ஸ்ட்ராங் ரீஸனா? அவன் பாட்டுப் பாட வில்லையென்றும் முக்கியமான விஷயமா? இது எனக்கு முக்கியம் என ஒரு பெண் சொல்லி விட்டால் கெட்டுப் போகலாமா?

நல்ல வேளை தனக்குக் கல்யாணம் நடக்கப் போவ தில்லை. ஒரு பெண்ணோடு இருக்க வேண்டிய அவஸ்தை. அவளை அனுசரித்துப் போக வேண்டிய அவஸ்யம் தனக்கு ஏற்படப் போவதேயில்லை. யார் கற்பு பற்றியும் தனக்கு சம்மந்தமில்லை. திருமணமில்லாது ஒரு நிம்மதி குழந்தையை வெளியே அனுப்பிவிட்டு, சட்டென்று கதவை மூடிக்கொண்டு அப்படியென்ன ஒரு போன்? குழந்தையை விட புருஷனைவிட இவளுக்கு யார் முக்கியம். ஏன் முக்கியம்? உண்டு தூங்குற நிம்மதி. ஒரு மதமதப்பு. வைதேகி என்ன செய்கிறாள் என்பதை எப்படிக கண்டு பிடிக்க முடியும்? அந்த டெலிபோனை எப்படி ஒட்டுக் கேட்க முடியும். குழந்தை குறுக்கும் நெடுக்கும் ஓட யோசித்தான் ''டேய் உனக்கு ஏன்டா இது'' உள்ளே ஒரு தனித்த குரல் கேட்டது.

நீ ஏன் வம்புல மாட்டற... அவன் மனசே அவனைக் கண்டித்தது. எனக்கு ஒரு வம்புமில்லை இது ஒரு ஹியூமன் ஸ்டடி. மனிதர்களைப் பற்றி ஆராய்ச்சி. குறிப்பாய் மத்திய தரவருப்பு நடுத்தர வயதுப் பெண் களின் மனோபாவம் பற்றிய தீஸிஸ்.

அதுதான் உனக்கு என்னு கேக்கறேன். வேற விஷயமே கிடைக்கலையா?

'என் இந்த விஷயத்துக்கு என்ன?' பாஸ்கரன் தன் மனதை அதட்டினான்.

இல்லை உனக்கும் உண்டு. தூங்கி ஒரு மதமதப்பு வந்துடிச்சோன்னு சந்தேகம். நீயும் நடுத்தர வர்க்க, நடுத்தர வயது பொம்மனாட்டியோன்னு சந்தேகம்.

ஜூப்ளி ஒரு குட்டி சேரில் உட்கார்ந்து டி.வி.போடு என்று கட்டளையிட்டது. மியூசிக் டி.வி.யில் சில பெண்கள் பேய் மாதிரி ஆடிக் கொண்டிருந்தார்கள். பாட்டு அலறலாக இருந்தது. ஜூப்ளி அதில் லயிக்க ஆரம்பித்ததும் மறுபடியும் வாசலுக்குப் போனான். நடை பாதையின் இரண்டு பக்கமும் பார்த்தான். மெல்லப் போய் தாழை வைதேகி வீட்டுக் கதவில் பதிய வைத்தான்.

எங்கிட்டேயே பொய் சொல்ற பாத்தியா? எவ்வளவு ஆசை ஆசையா போன் பண்றேன். இல்லேன்னு வேற யாரையோ விட்டு சொல்ல வைக்கற. எதிர்முனை பதில் என்னவென்று தெரியவில்லை. 'சீ...அதெல்லாம் இல்லப்பா. போன்ல தான் பேச முடியும். வெளியே, வாசல்ல பார்க்க முடியாது. ஃபோன்லயாவது பேசுவோ மேன்னு நினைக்கிறேன். உனக்குக் கஷ்டமாயிருந்தா சொல்லு பேசல." எதிர்பக்கம் ஏதோ கஷ்டம் சொல்லியிருக்க வேண்டும்.

"அப்ப நீயே உனக்கு முடிஞ்ச போது ஃபோன் பண்ணு. நான் வீட்ல தான் இருப்பேன். ஜூப்ளிய பாஸ்கரன் எடுத்துண்டு போயிருக்கான்."

மறுபடியும் எதிர்குரல் மௌனம்.

"ஓச்சி...அவன் ஹார்ட் பேஷண்ட்ப்பா. மாடி

ஏறுவே கஷ்டப்படறான்." இன்னும் காது அழுத்திக் கேட்க, கதவு லிக்கென்று அசைந்தது.

"யாரு?" என்று வைதேகி குரல் கேட்டது. பாஸ்கரன் பூனை மாதிரி தன் இடத்திற்கு வந்து விட்டான்.

"எங்கே போன நீ?" ஜூப்ளி அவனைப் பார்த்துக் கேட்டது.

"பாத்ரும்" என்று பொய் சொன்னான். சட்டென்று பாத்ரூமிற்கு நகர்ந்து கையிலும் காலிலும் தண்ணீர் கொட்டிக் கொண்டான். ஒரு வேளை வைதேகி சந்தேகப்பட்டு வந்தால் காலிலும், கையிலுமிருக்கும் தண்ணீரை சாட்சியாக்கலாம். அவன் சந்தேகப்பட்டது சரியாயிற்று. வைதேகி இன்னொரு பூனை மாதிரி அவள் போர்ஷனுக்குள் எட்டிப் பார்த்தாள். "ஜூப்ளி" என்று மெல்லக் கூப்பிட்டாள். அவனைக் கலவரத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

'நீ கதவு தட்டினியா?' என்பது மாதிரிக் கேள்வி அவள் கண்களிலிருந்தது.

"வாங்க" அவள் பார்க்க, நீர்க் கையை உதறிக் கொண்டு லுங்கியால் துடைத்துக் கொண்டான்.

"சாப்பாடு ஆச்சா, அவள் சட்டென்று சாதாரணமாகிக் கேட்டாள்.

'இல்லை. இனிமேதான். ஜூப்ளி இங்கேயே சாப்பிடட்டுமே" அவனும் சாதாரணமாகச் சொன்னான்.

"இங்கே ஓடி அங்கே ஓடி ஏதாவது படுத்தப் போறோ னேன்னு தான் வந்தேன். ஜூப்ளி வா. பாவிவ தொந்தரவு பண்ணாதே."

ஜூப்ளி ஓடிப்போய் டி.வி.யை அணைத்து விட்டு அம்மா விடம் ஒட்டிக்கொண்டது. குழந்தையை வாரி

அவள் எடுத்துக் கொண்ட போது அந்த முப்பது வயக உடம்பின் வளைப்புத் தெரிந்தது அந்த அழகு அவனுக்குள் பொறாமையை ஏற்படுத்தியது.

''ஏய் திமிசுக் கட்டை, ஏதோ திருட்டுத்தனம் பண்ற. அதைக் கண்டுபிடிக்காம விடமாட்டேன்.' மனசு கருவிற்று. சமையலறைக்குப் போய் சாம்பாரும், சாதமும் எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்து பிசைந்து சாப்பிட்டான் மோர் குடித்தான் உண்டதும் ஒரு சோம்பல் வந்தது. படுக்கையில் படுத்துக் கண் மூடினான். உறக்கம் எங்கேயோ ஆழ ஒரு நிலைக்கு இழுத்தது. தூங்கிக் கொண்டேயிருக்கிறோம் என்பது தெளிவாகத் தெரிந்தது.

உயரமாய் வைக்கப்பட்ட விளக்குகளில் ஒளிக்கற்றைக்கு நடுவே வைதேகி ஒரு துண்டு மட்டும் உடம்பு சுற்றி நின்றிருந்தாள். யாரோ அவளை சவுக்கால் அடிக்கிறார்கள். அவன் பெரிய சிம்மாசனத்தில் உட்கார்ந்து அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் வைதேகி அலறுகிறாள்.

''அடித்தது போதும் ஓயில் கட்டி அவளைத் தூக்கில் போடு'' என்று சொல்கிறான். அவளை டெலிபோன் ஓயரில் தூக்குப் போடுகிறார்கள். 'விலுக் 'விலுக்'கென்று அவள் உடம்பு உதைத்துக் கொள்ள, அவள் கட்டியிருந்த ஒரே துண்டும் அவிழ்ந்து கீழே விழுந்தது, உதைத்துக் கொண்டதில் உடம்பு திரும்பி பின்பக்கம் மட்டும் காட்டியது. சவுக்கை சுருட்டி அவன் மடியில் யாரோ வைக்கிறார்கள் சவுக்கு நகர்கிறது, அது சவுக்கா, பாம்பா என்று தெரியலை. அவன் சவுக்கை உதற விழித்துக் கொண்டான். 'சே...என்ன கனவு இது?'' என்று புரண்டு படுத்தான். தூங்கிப் போனான்.

3

பாஸ்கரனின் மன்னி சாருலதாவுக்கு ஒரு மணிக்கு போன் வந்தது. டாக்டர் ராமச்சந்திரன் எதிர் முனையில் போன் செய்தார்.

''எத்தனை மணிக்கு ஆபீஸ் முடியும் உங்களுக்கு?''

''அஞ்சே கால் டாக்டர். என்ன விஷயம்?''

''ஆபீஸ் விட்டுப் போற போது இந்தப் பக்கம் வந்துட்டுப்போக முடியுமா? பாஸ்கரனுக்கு லேசா ட்ரீட்மெண்ட் மாத்தலாம்னு இருக்கேன்.''

''எனிதிங் ராங் டாக்டர்?''

''அப்படியொன்னும் இல்லம்மா. புதுசா சில மெடிசின் வந்திருக்கு. அதுபத்தி உங்ககிட்ட சொல்லணும்''

''நிச்சயமா வரேன் டாக்டர்'' என்று போன் வைத்து விட்டாள்-டாக்டர் வேறு ஏதோ சொல்லப் போகிறார் என்று மனதிற்குப்பட்டது. ஒரு மணி நேரம் பர்மிஷன் போட்டுவிட்டு, மொபட் ஏறி கிளினிக் போனாள்.

''நான் மருந்து மாத்தப் போறேன். அது ஒரு பக்கம் இருக்கட்டும். வேறு ஒரு முக்கியமான விஷயம் பாஸ்கரனுடைய ஹார்ட் இன்னும் ஒரு மில்லி மீட்டர் பெருசாயிருக்கு இந்த ஆறு மாசத்ல இன்னும் என்லார்ஜ் ஆயிருக்கு. நான் மாத்தப் போற மாத்திரை அவனை இன்னும் கொஞ்சம் 'டல்' ஆக்கும். பாஸ்கரனுடைய மூவ்மெண்டை ஸ்லோவாக்கும் அதிக நேரம் தூங்க வைக்கும். தூங்கி எழுந்தால் தெளிவாக நேரமாகும். அப்படியிருக்கிறதுதான் அவருக்கு நல்லது.''

''இருந்துட்டுப் போறது. மத்தபடி வேறொன்றும் ஆபத்தில்லையே?''

''ஆபத்தில்லைன்னு சொல்ல முடியாது. ஆபத்துன்னும் சொல்ல முடியாது. என் க்ளினிக்குக்கு வரும் போது கூட யார் துணையோடவாவது வர்றது பெட்டர் அவர் தனியே வர்றது நல்லதில்லை.''

''இன்னும் அபாய கட்டத்துலதான் பாஸ்கரன் இருக்கானா?''

''ஆமாம். பரவசம், படபடப்பு வரவே கூடாது.''

''குணப்படுத்த வேற வழியே இல்லையா?''

''எனக்குத் தெரிஞ்சு இந்தியாவில் இல்லை. அமெரிக்கா, இங்கிலாண்ட் போனா ஹிருதய மாற்றம் பண்ணலாம். நூறு சதவீத ரிஸ்க். நிறைய செலவு.''

சாருலதா முகம் சுருங்கி, தலை குனிந்து கொண்டாள்.

''என்ன சாருலதா, நீங்களே இப்படி அப்செட் ஆகறீங்க. நீங்க தைரியமா இருப்பீங்கன்னு தானே உங்கிட்ட சொல்றேன்.''

''எனக்குத் தெளிவா சொல்லுங்க டாக்டர். பாஸ்கரன் நிலைமை என்ன?''

டாக்டர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

''இப்படியே போனா, ஆறு மாசம் என்னுடைய மெடிக்கல் தியரி பிரகாரம். ஆனா, மனுஷாளோட தியரியெல்லாம் தாண்டி கடவுள்ன்னு ஒருத்தன் இருக்கான். அவன் மனசு வச்சா பாஸ்கரனுக்கு அறுபது வயது ஆயுள் கொடுக்கலாம். ஆனா, என் மெடிக்கல் தியரி பிரகாரம் ஆறு மாசம். இதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன். ஐயாம் ஸாரி;'

சாருலதா கைகூப்பிவிட்டு வெளியே வந்தாள் பொபெட்டில் ஏறினாள். மனசு குமும்பித் தவித்தது.

இருபத்தாறு வயது மைத்துனன். அவள் திருமணம் செய்து கொள்ளும் போது அவனுக்கு பதினேழோ. பதினெட்டோ வயசு. அரும்பு மீசை முளைத்து, ஆரோக்யமாய் வளர்ந்து, உருளை நிறமாக இருந்தவன் அவள் கல்யாணத்தில் நிறைய பெண்கள் அவனோடு வலிய பேசினார்கள் கேக்கலித்தார்

கொஞ்சம் முரடாக இருக்கும் போலருக்கே?' என்று அவனைப் பார்த்தும் கலைப்பட்டாள். மிக மரியாதையான பிள்ளை, நல்ல வளர்ப்பு என்று வீட்டிற்கு வந்ததும் தெரிந்து கொண்டாள் மாமனார் மாமியார் தலையிலை. ஆனால், மைத்துனர்கள் உடனிருப் பார்கள் என்று சொன்ன போது கொஞ்சம் கூச்சப் பட்டாள். கல்யாணமான ஆறு மாதத்தில் இந்த ப்ளாட் வாங்கி குடி பெயர்ந்த போது மைத்துனர்கள் இருப்பது எத்தனை உதவி என்று புரிந்து கொண்டாள். மளிகை சாமான் மொத்தமும் மோட்டார் சைக்கிளில் வாங்கி வந்து விடுகிற உழைப்பும், அதே சமயம் பணிவும் அவர்களிடமிருந்தன. உடம்பு நன்றாக இருந்த போது மைத்துனர் கள் வீட்டிலிருப்பது அரிதான விஷயம்.

''தயவு செய்து எனக்காக முழிச்சிருக்காதீங்க மன்னி. ஷார்ப் நைன் நீங்க உங்க ரூமுக்குப் போயிடலாம். நாங்க சாப்பிட்டு, நட்ட அலம்பி வச்சு, மேடையை சுத்தம் பண்ணிடறோம். நீங்க கலைலே படாதீங்க...''

இரண்டு மைத்துனர்களுமே வீட்டு வேலையைக் கருத்தாய் செய்வார்கள். பாஸ்கரன் கடைக்குப் போகும் கூடுதல் பொறுப்பை எடுத்துக் கொண்டிருந்தான். நாயிற்றுக் கிழமை வீடு துடைக்கையில் மிக சிரத்தையாக உதவி செய்வான்.

கொஞ்சம் பெண்களைக் கண்டால் இளிக்கின்ற வாலிபனாயிருந்தது. அது வயசு. உடுத்திக் கொள்வதில் ஒரு அலட்டல் இருந்தது. அது மனசு. அவர்களுக்குள் லேசாய் சண்டையிருந்தது. அது வளர்ப்பு. ஆனால், சுந்தரமூர்த்தியிடம் இரண்டு பேருமே மரியாதையாக இருந்தார்கள். சம்பளப் பணத்தை முதன் முதலில் பாஸ்கரன் கொடுத்து நமஸ்கரித்த போது சந்தோஷமாக இருந்தது.

"வீட்டுக்கு எவ்வளவு காசு எடுத்துக்க பாஸ்கரா. ஆயிரத்து ஐந்நூறு இருக்கே."

"அது மொத்தம் வீட்டுக்குத்தான் மன்னி."

"உனக்கு?"

"வெளில வேலை செய்து சம்பாதிச்சுக்குவேன்."

ஸ்டார் டி வி.கேபிள் டி.வி.எலக்ட்ரானிக் பொம்மை யிலிருந்து. வாஷிங் மெஷின் பேனல் வரை பாஸ்கரனுக்கு விஷயம் தெரிந்தது. மல்லிகை காம்பௌண்ட்டிற்கு அசோஸியேஷன் மூலம் ஸ்டார் டி.வி. நிறுவியதும் பாஸ்கரன்தான். மேல் மாடியில் நாற்பது பேர் குப்பனுக்கு நடுவே, ஏதோதோ இணைத்து கீழ் தளத்திலுள்ள ஒரு வீட்டில் ஸ்டெபிலைசர்கள் வைத்து, எல்லா வீட்டிற்கும் ஒயரிங் பண்ணிக் கொண்டு போனது அவன் மேற்பார்வையில் தான். இந்த மாதிரி இருபது முப்பது பில்டிங்கிற்கு வேலை செய்திருக்கிறான் ஒரு வாஷிங் மெஷின் மூலருக்கு தனியே கன்செல்டண்ட்டாக இருக்கிறான். சிக்கலான வேலை வர, போய்ச் செய்து விட்டு வருவான். அந்தக் காசில் தான் உடுத்திக் கொண்டு திரித்தான்.

"நாம் தூம்னு செலவு பண்ணாதே பாஸ்கரா. ஏதாவது இன்வெஸ்ட் பண்ணு. பிக்ஸட் டெபாசிட் போட்டுண்டே வா..." சாருலதா வழிகாட்ட அங்கங்கே

பத்திரங்கள் வாங்கினான். அவனுக்கு நல்ல பெண்ணாய் பார்க்க வேண்டுமே என்ற கவலை வந்த போது உடம்புக்கு வந்துவிட்டது. நிரந்தர நோயாளியாய் இருக்கிற வேதனை வந்து விட்டது அதையெல்லாம் விடப்பெரிய சிரமம் உப்பு, புளி, மிளகாயிலிருந்து அவளே வாங்க வேண்டியிருந்தது. ஆபீஸ் விட்டு வந்து காபி போட்டு விட்டு கடைக்குப் போக வேண்டியிருந்தது. படிப்பதோ படம் பார்ப்பதோ கத்தமாய் மறந்து போய் எப்பொழுதும் வீட்டைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. பாஸ்கரனால் செலவு அதிகமாயிற்று. சேமிப்புகள் கரைந்தன. சட்டென்று விரும்பிய நகையோ, பொருளோ வாங்காமல் பாஸ்கரனுக்குத் தேவைப்படுமோ என்று இறுக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. உடம்பு இன்னும் மோசமாகும் என்கிறார் டாக்டர். இன்னொரு பெரிய சிரமம் வரும் என்கிறார் டாக்டர். அது ஆஸ்பத்திரி செலவாகவோ, மரணமாகவோ இருக்கலாம் அல்லது இரண்டுமே நிகழலாம்.

மல்லிகை காம்பௌண்டின் எதிரே வண்டியை நிறுத்தி, எதிர்ப்பக்க மளிகைக் கடையில் சாமான் லிஸ்ட் கொடுக்கப்படியேறும் போது கடையிலிப்பவர்கள் ப்ளாட்டின் உச்சியைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

பாஸ்கரன் மெட்டை மாடியிலிருந்து பால்கனிக்கு ஏணியைப் போட்டு, கறுப்பு ஓயர் சுருளோடு இறங்கிக் கொண்டிருந்தான். அடுத்த வீட்டு பால்கனி மழைத்தடுப் பில் இறங்கி நின்று, ஒரு ஓயர் மூளையை சில ஆரம் பித்தான். சாருலதாவுக்கு 'திக்'கென்றது. இன்னும் எதற்கு டிஷ்ச் ஆண்டெனா பிரச்சனை. யாராவது அதைப் பார்த்துக்கட்டுமே. இவனுக்கு ஏன் தலை யெழுத்து. கோபப்பட்டாள்.

பாஸ்கரன் சீவிக் கொண்டிருந்தது டெலிபோன் ஒயர். இரண்டாவது மாடியின் இரும்பு ஆங்கிலில் பொருத்தப் பட்டிருந்த ஜங்ஷன் பாக்ஸில் தடம் தேடி வயர்கள் பிணைத்து, தன் வீட்டு பால்கனியில் சுருளை வீசினான். சாருலதா மளிகை லிஸ்ட்டைக் கொட்டுவிட்டு, கோபமாய் வீடு நோக்கி வண்டியில் போனாள்

பாஸ்கரன் மாடியிலிருந்து கீழே இறங்கவும், அவள் மேலே வரவும் சரியாக இருந்தது.

"என்ன பாஸ்கரா, ஏன் இவ்வளவு வேர்க்கிறது?" சட்டென்று அவனைக் கோபித்துக் கொள்ளக் கூடாது என்பதால் சாதாரணமாய்க் கேட்டாள்

"ரூபவாஹிணி வருதான்னு பார்த்தேன் மன்னி" பாஸ்கரன் அவளிடம் பொய் சொன்னான்.

"எதுக்கு பாஸ்கரா, இருக்கிற ஸ்டார் டி.வி.ய பார்க்கறத்துக்கே ஆளில்லை. ரூபவாஹிணி வரளேன்னு யார் அழுதா. உடம்பு சரியில்லேன்னு தெரிஞ்சும் இப்படிப் பண்றியே. ஒன்னு கெடக்க ஒன்னு ஆச்சுஸ்னா உங்கம்மாவுக்கும், அண்ணாவுக்கும் நானில்ல பதில் சொல்லணும்."

எந்த உண்மையும் தெரியாது மைத்துனன் மீதுள்ள உண்மையான அக்கறையினால் அவள் குரல் தழுதழுத்தது பாஸ்கரனுக்கு அது உறைக்கவில்லை. வழக்கத்தைக் காட்டிலும் மன்னி வீட்டிற்கு சீக்கிரத்தில் வந்து காரியத்தைக் கெடுத்து விட்டாள் என்று நினைத்தாள். மறுமுனையை தன்னுடைய டெலிபோனில் இணைக்க அவசப்பட்டான். அப்படி இணைத்தால்தான் வைதேகி வீட்டுப் போனை சரியாக டாப் செய்திருக்கிறோமோ என்று புரியும். தன் வீட்டிலுள்ள ஃபோனை இரண்டாய் பிரித்து உள்ளே மணியடிப்பதையும் தடுக்க வேண்டும். உள்ளுக்குள் இருக்கிற சின்ன உருண்டையைச் சுற்றி, மணியில் அடிபடாமல் அட்டை வைத்து தடுக்கவேண்டும்

அவள் வீட்டு ஜங்ஷன் பாக்ஸில் சிறிய வேலை செய்தால் அவன் வீட்டிற்கு தொந்தரவில்லாமல் அதே சமயம் பக்கத்து வீட்டு டெலிபோனையும் ஒட்டுக்கேட்க முடியும். இதையெல்லாம் நாளைக்குத்தான் செய்ய முடியும். வைதேகி வீட்டுப் போனை ஒட்டுக் கேட்டுகிறேனென்றால் மன்னி ஒத்துக் கொள்ள மாட்டாள். அதைச் சொல்லாமல் டெலிபோனில் வேறு ரிப்பேர் பார்க்கிறேன் என்றாலும் ஏற்றுக் கொள்ள மாட்டாள். மன்னி சமையலறைக்குப் போயி காபி தயார் செய்ய, அவன் படுக்கையில் அமர்ந்து கொண்டான். ஏணியில் ஏறி இறங்கியது கஷ்டமாக இல்லை. மாறாய் ஒரு சந்தோஷம் வந்தது.

எட்டு மணிக்கு அண்ணாவும், எட்டரை மணிக்கு தம்பியும் உள்ளே நுழைந்தார்கள். அண்ணாவுக்கு வீட்டுக்கு வந்தவுடன் தூங்க வேண்டும். பிறகு சாப்பாடு. மறுபடியும் தூக்கம். தம்பி எட்டரை மணிக்குக் குளித்து விட்டு வெளியே போய் விடுவான் இரண்டு பேருமே வீடு வந்து இரண்டு நிமிடம் அவனைப் பற்றி விசாரித்தார்கள். அவரவர் வேலையைக் கவனிக்கப் போனார்கள். இரண்டு கட்டிடங்களுக்கு இடையேயுள்ள ஒற்றைச் சோடியம் லாம்ப் விளக்கடியில், வெட்டை வெளியில் சிலர் நாற்காலி போட்டு உட்கார்த்திருந்தார்கள். நாலைந்து குழந்தைகள் சிறிய சைக்கிள்களை ஓட்டிக் கொண்டிருந்தன. ஒரு சில வீடு தவிர எல்லா வீட்டிலும் வரதராஜனின் தமிழ் செய்திக் குரல் கேட்டது.

அந்த நடைபாதைக்கு வைதேகியின் குழந்தை ஜுப்ளி எப்படி வந்தாலென்று தெரியவில்லை. இரண்டு மாடி அவளாக இறங்கி விட்டாளா? இல்லை வராண்டாவில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை வேறு யாரும் அள்ளியெடுத்துக் கொண்டு வந்து கீழே விட்டு விட்டார்களா? எட்டு வயது பத்து வயதுப் பையன்கள் சைக்கிள்

ஓட்ட ஜூப்ளி சைக்கிள்களைத் துரத்தி ஓடியது குழந்தை ஓடி ஓடி துரத்துவதால் அந்தப் பையன்கள் தெளிந்து நெளித்து சைக்கிள் ஓட்டினார்கள். மேலேயிருந்து இந்த ஆட்டம் பார்க்கச் சந்தோஷமாக இருந்தாலும், அதில் ஒரு சிறிய ஆபத்து இருப்பதை மனசு உணர்ந்தது.

''ஜூப்ளி இங்கே வா.'' நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர்கள் குழந்தையைக் கைதட்டி கூப்பிட்டார்கள். குழந்தை சைக்கிளைத் துரத்துவதை விட்டுவிட்டு சட்டென்று அவர்களை நோக்கி ஓடியது. ஜூப்ளியை உரசிப் போய் பயமுறுத்த வேண்டும் என்கிற எண்ணத்தோடு ஒரு பத்துவயசுப் பையன் சைக்கிளை வேகமாக மிதித்துக் கொண்டு வந்தான். குழந்தை முன்னும் பின்னும் அல்லாடிற்று. அந்தப் பத்துவயசுப் பையனுக்கு அல்லாடும் குழந்தையைத் தாண்டிப் போகத் தெரியவில்லை.

'நச்' சென்று அவன் சைக்கிளின் முன் சக்கரம் குழந்தையின் நெஞ்சின் மீது முட்டியது. தூக்கி இடது புறம் போட்டது. குழந்தை பொத்தென்று பிருஷ்டம் தரையில் மோத விழுந்தாள் மல்லாக்க சாய்ந்தாள், பயத்தில் வீறிட்டாள். அந்தப் பையனும் பயந்து சைக்கிளோடு இடது பக்கம் சரிந்து விழுந்தான். அந்த சைக்கிளைத் துரத்திய இன்னொரு சிறிய சைக்கிள் விழுந்தவன் பின் மண்டையில் முட்டியது. இடித்த வேகம் பையனைக் குப்புறப் புரட்டிப் போட்டது. இரண்டாவது சைக்கிள் பையனும் சறுக்கி விழுந்தான்.

ஜூப்ளியின் அப்பா, வைதேகியின் புருஷன் வெள்ளை சட்டையும், வெள்ளை பாண்டும், கையில் டிபன் பாக்ஸ் பையுமாய் காம்பௌண்டிற்குள் நுழைந்தார். தன் குழந்தையின் வீறலைக் கேட்டு ஓடி வந்தார். சகலமும் மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பாஸ்கரன் பதறினான். அவனுக்கு லேசாய் இருட்டிக் கொண்டு வந்தது. உடம்பு தள்ளாடியது சரசரவென்று வியர்த்தது.

மூதுக்கு தண்டுவடத்திற்கு இடது பக்கம் கள்ளென்று வலிக்க ஆரம்பித்தது. 'லப்ட்ப்' சத்தம் அதிகமாயிற்று. நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர்கள் ஜூப்ளியை வாரிக் கொள்ள, அவர்களிடமிருந்து ஜூப்ளியின் அப்பா குழந்தையை எடுத்து அணைத்துக் கொண்டார்.

''யார்ரா குழந்தை மேல சைக்கிளை இடிச்சது?'' ரோபமாய் சீறினார்.

''இவன் தான் மாமா'' இரண்டாவது சைக்கிள் பையன் முதல் சைக்கிள் பையனைக் காட்டிக் கொடுத்தான் ஜூப்ளியின் அப்பா கொஞ்சம் கூடத் தயங்காமல் அந்த முதல் சைக்கிள் பையனை 'பளீர்...பளீர்...'என்று கன்னத்தில் அடித்தார். தலை முடியைக் கொத்தாய்ப் பிடித்து உலுக்கித் தள்ளினார்.

''அட முட்டாள்...எதுக்கு அந்த சின்னப் பையனை அடிக்கற...?'' பாஸ்கரன் மாடியிலிருந்து பதறினான். மனசுக்குள் கத்தினான். அரண்டு தள்ளி விழுந்த சைக்கிள் பையனை ஜூப்ளியின் அப்பா நடந்து போய் பூட்ஸ் காலால் அவன் தொடையில் எட்டி உதைத்தார். நாற்காலியிலுள்ளவர்கள் பதறிப்போய் அவரைத் தடுத்துப் பிடித்தார்கள்.

''சின்னப் பையன் சார். வுட்டுருங்க!பாவம்'' என்று கெஞ்சினார்கள்.

''என்ன சார் சின்னப் பையன்? குழந்தை மூஞ்சியில நச்சுன்னு இடிச்சிருக்கான். குழந்தை தாங்குவானா? குரங்கு சார் இவன்.'' தடுப்பு மீறி மறுபடியும் எட்டி உதைத்தார் அந்தப் பையன் மறுபடியும் வீறிட்டழுதான். காட்டிக் கொடுத்த இரண்டாவது பையனும் அலறினான்.

எல்லோர் வீட்டிலும் வராதாஜன் குரலை சட்டென்று திருகி அணைத்துவிட்டுப் பால்கனிக்கு வந்து

எட்டிப் பார்த்தார்கள். கிடங்குக் கதவை மூடியதும் வளைகளிலிருந்து எட்டிப் பார்க்கும் எலிகளைப் போல மல்லிகை மனிதர்கள் என்று பாஸ்கரனுக்குத் தோன்றியது. மன்னி அவசரமாய் வந்து என்ன என்று எட்டிப் பார்த்தாள்.

''என்னாச்சு பாஸ்கரா?'' என்றாள்.

''ஜூப்ளி மேல அந்தப் பையன் சைக்கினை இடிச்சுட்டான். ஜூப்ளி அப்பா அந்தப் பையனை கண்ணுமண்ணு தெரியாம அடிக்கறாரு.''

''உனக்கு என் இப்படி வேர்க்கறது?''

''தெரியலை.''

''நீ உள்ளே போ. இந்தச் சண்டை சச்சரவிலெல்லாம் தலையிடாதே.''

''நான் எங்கே தலையிட்டேன். வேடிக்கைத் தானே பார்க்கறேன்.''

''வேடிக்கைக் கூடப் பார்க்க வேண்டாம் பாஸ்கரா. உள்ளே போ.''

''உங்க குழந்தைதான் சார் குறுக்க நெடுக்க விளையாண்டிருந்தா பசங்க சைக்கிள் ஓட்ற இடத்துல...'' எதிர்பக்க வீட்டிலிருந்து வேறு யாரோ வந்து கத்தினார்கள்.

''சைக்கிள் ஓட்டற இடமாய்யா இது சைக்கிள் ஓட்டற இடமா? பத்தடிக்கு இருபது அடில இல்லாளு ஸ்பீடா சைக்கிள் ஓட்டுவாங்களா?''

''பசங்க அப்படித்தான் சார் ஓட்டும்'' நற்காலியில் உட்கார்ந்திருந்தவர் பரிந்து பேசினார்.

''ரெண்டு வயசுப் பொண்ணு மேல எப்படி

நச்சுன்னு இடிச்சிருக்கான். எப்படி ரத்தம் வருதுன்னு பாருங்க சார்'' ஜூப்ளியின் அப்பா பதிலுக்குக் கத்தினார். ''குரங்குப் பசங்க.''

அந்தச் சைக்கிள் ஓட்டிய பையன் பெயர் பிரபு. அந்தப் பையன் கொஞ்சம் குரங்குதான். ஓட்ட லெட்டி முடியும். குச்சி குச்சியாய் கையும் காலும் இருக்கும். ஆனாலும், முகத்தில் எப்போதும் ஒரு விஷமம் கூடி விடும். குறுகுறுப்பு இருக்கும். அவன் வீட்டில் அவன் அடிவாங்கி அழும் குரல் சில சமயம் கேட்பதுண்டு.

அந்தப் பிரபுவின் அப்பா பெயர் மாணிக்கம். ஏதோ அரசு உத்தியோகம். அந்தப் பிரபுவின் அம்மா புருஷன் வருமானம் போதாமலோ என்னவோ மசாலா பொடி, அப்பளம் எல்லாம் விற்றுக் கொண்டிருந்தாள். தாலைத்து சைக்கிள் பையன்களை வைத்துக் கடைகளுக்கு விநியோகம் செய்து ஒவ்வொரு தான் மாலையிலும் கணக்குப் பார்ப்பாள். கணக்குப் பார்க்கிற நேரமெல்லாம் சண்டை தான். கொஞ்சம் நடுமனை வார்த்தைகள்கூட அந்த அம்மா பயன்படுத்துவதுண்டு. மல்லிகை காலனியின் நாகரீகத்திற்கு அதுதான் கொஞ்சம் மட்டம் என்பது பல பேருடைய அபிப்பிராயம். அந்த அம்மாள் ஒருமுறை தீபாவளி தோன்பு என்று எல்லோர் வீட்டு வாசலுக்கு எறி கூப்பிட, யாரோ இரண்டு பேர்கள் மட்டுமே போனார்கள்.

அந்த அம்மாளுக்கு அது மிகப்பெரிய வருத்தம். ஆனால், மசாலாப் பொடி விற்பனையைப் பற்றி அவள் பேச ஆரம்பித்தால் அதில் மல்லிகையிலுள்ள யாருக்கும் அக்கறையேயில்லை. வெண்ணையாய் உடுத்திக் கொண்டு போகும் ஆபீஸ் ஆட்களுக்கு நடுவே அழுக்குப் புடவையுடன் மசாலாப் பொடி விற்கும் அம்மாள் மட்டமாகத் தான் தெரிந்தாள். ஆனால், வீட்டில் உட்கார்ந்தபடி

ஆறாயிரம் லாபம் புரட்டிய அவள் மித்தையை யாரும் அங்கீகரிக்கவில்லை.

அந்த அம்மாவிடம் ஒரே ஒரு உதவிக்கு மல்லிகை போகும். பரபரப்பான விஷயங்கள் மனசில் நடந்தால், அதை விவரமாய் சொல்லும் தினத்தந்திக்கு மல்லிகை என்றும். அந்த மசாலா வீட்டில் மட்டும்தான் தினத்தந்தி வாங்குகிறார்கள் மற்றபடி ஹிண்டுவா, இண்டியன் எக்ஸ்பிரசா என்கிற அலட்டல்தான் அங்கு அதிகம். நினமணி, தினமலர் என்று இரண்டு வீடுகள் இருப்பினும் அவைகள் அங்கீகரிக்கப்பட்ட அளவுக்கு தினத்தந்தி அங்கீகரிக்கப்படவில்லை.

இந்த வாரம் கோர்ட்சேல் என்ன செய்கிறார் என்று மசாலா வீட்டில் பேச முடியாது. சிரிப்புப் படம் பற்றிப் பேச மல்லிகையில் மற்ற வீடுகளுக்குப் பிடிக்காது. அந்த வீட்டோடு பட்டும் படாமலும்தான் மல்லிகை இருந்தது. பையனின் அலறல் அந்த அம்மாவிற்கும் கேட்டிருக்க வேண்டும். அந்தப் பையன் அதிகமாக அலறுகிறான் என்று மனத்திற்குப் பட்டாலும் பத்து வயசுப் பையனை முப்பது வயசு ஆள் எட்டி உதைத்திருக்க வேண்டாமென்றுதான் தோன்றியது அந்த மசாலா அம்மா பையனின் குரல் கேட்டுவிட்டு ஓடி வந்தாள். தரையில் கிடக்கிறப் பையனைத் தூக்கி விவரம் கேட்டாள்.

"பூட்ஸ் காலால் எட்டி எட்டி உதைக்கறாரும்மா" பையன் அழுது கொண்டே சொன்னான். "நிமிர் பிடிச்ச நானே..." என்ற வார்த்தைகளுக்கு நடுவே தாதிப் பெயரைச் சேர்த்துக் கொண்டான்

"நாங்க அருவா புடிக்கிற வம்சம்டா" தன் ஜாதிப் பெயரை சொன்னாள்.

"இங்கன சைக்கிள் ஓட்டக்கூடாதுன்னு எந்த மயிரான் சொன்னது?"

"ஏய்...இந்த வார்த்தையெல்லாம் இங்க பேசாதே..." ஜாப்ளியின் அப்பா ஒற்றை விரல் நீட்டிப் பேச.

"என்ன நியாயத்துக்குடா என் புள்ளைய எட்டி உதைச்சே...நாயே..." மறுபடியும் ஜாதிப் பெயர் சொன்னாள்.

"என்னடி மசாலா இழவே, செருப்பு பிஞ்சு போயிடும்" என்று அவர் எகிற. அவள் முஷ்டி மடக்கி, ஜாப்ளியின் அப்பாவின் நெஞ்சில் குத்தினாள்.

விஷயம் கீழே மிக மோசமான நிலையை எட்டியது. யன்னி ஓடிப்போய் லைதேவி வீட்டின் கதவைத் தட்டினாள்.

"என்ன நடக்கறதுன்னே உனக்குத் தெரியலையா? ஜாப்ளி மேல ஏதோ பையன் சைக்கிளை ஏத்திட்டானாம். உங்க வீட்டுக்காரர் கத்தறார் ஓடிப்போய் பார்" என்று விரட்டினாள். லைதேவி மின்னல் வேகத்தில் ஓடுவதை காலடிச் சத்தத்திலிருந்து அறிய முடிந்தது. கீழே போய் அலறும் குழந்தையைப் புருஷனிடமிருந்து வாங்கிக் கொண்டாள். கை ஓங்கி நிற்கும் மசாலாப் பெண்மணியின் எதிரே போய் நின்றாள். கத்தத் துவங்கினாள். மல்லிகை இரண்டு கட்சியாகப் பிரிந்தது.

"பசங்க அப்படித்தால விளையாடும். மத்தவங்க வீட்டுக் குழந்தைகள பெரியவங்க அடிக்கலாமா?" ஒரு கட்சிப் பேசியது.

"அந்தப் பையனை நானே ஒரு நடலை அடிக்கணும்னு இருந்தேன். தெவசம் பண்ற போது தன்னல வழியா எட்டி எட்டிப் பார்க்கறான். நல்ல வார்த்தை சொன்னா கேக்க மாட்டேங்கறான். அவனும் ஏதோ மந்திரம் சொல்ற மாதிரி நீட்டி முழக்கி கத்தறான். தெவச நேரத்துல கோபப்படக் கூடாதுன்னு நான் சும்மாயிருந்துட்டேன்."

''சரி, அவன் சின்னப் பையன் சார்.''

''பெரியவங்க கண்டிக்க வேண்டாமா? இந்த அம்மா கிட்ட சொன்னா என்னாடா அதுஇதுன்னு இழுத்துப் பேசறாங்க. மசாலா பொடி இங்க வாங்கிக்கிறீங்களான்னு வியாபாரம் பேசறாங்க.''

''அந்த ஒரு ஃபேமிலி ஒரு மாதிரிதான் சார்.''

''பையனை அடிச்சது தப்பு.''

''நானாயிருந்தாலும் அடிச்சுத்தான் சார் இருப்பேன்.''

''எம் பையனை இப்படி அடிச்சேன்னா கைய உடைச்சுடுவேன்.''

''நீர் கைய உடைச்சா நாங்க வேடிக்கைப் பார்த்துட்டு இருப்போமா?''

'ஒரு பொட்டச்சி நெஞ்சில குத்தறா. ஏன் சார் சும்மா இருக்கேள். வாங்க சார் போலீஸ் ஸ்டேஷன் போவோம்.''

முப்பத்தாறு அடுக்குகள் கொண்ட அந்த மல்லிகைக்கு நலவாழ்வுச் சங்கமிருந்தது. சங்கத்தின் தலைவர் எண்ணெய் கம்பெனியிலிருந்து ரிடையரான சீதாராமன்.

''அடிப்பேன் உதைப்பேன்னு மல்லிகைல யாரும் பேசக்கூடாது அப்படி பேசினா நான் பிரசிடெண்ட் இல்லை'' அவரும் வெட்ட வெளிக்கு வந்து கத்தினார்.

பாஸ்கரனின் அண்ணா சுந்திரமூர்த்தியின் மாருதி கார் மெல்ல காம்பௌண்டிற்குள் நுழைந்தது. மெல்ல ஹார்ன் அடித்துக் கூட்டம் விலக்கி சுவர் அருகே நின்றது. அண்ணா என்ன தகராறு என்று விசாரித்தான். தெரிந்து கொண்டு படியேறினான் கதவு திறந்து வீட்டுக்குள் நுழைந்தான். கைப்பெட்டியை மேஜை மேல் வைத்து

விட்டு சட்டை, பேண்டைக் கழற்றி பாத்ரூம் பக்கம் போனான். உடம்பெல்லாம் ஈரமாக வந்து பிபிசி நியூசுக்கு உட்கார்ந்தான். மன்னி கலந்து கொடுத்த காபியைக் குடித்தான். தன் அறைக்குப் போய் ஏஸி போட்டு படுக்கையில் சரிந்தான். தூங்கிப் போனான்

''கீழே அனேகமா கொலை நடக்கும் போலருக்கு. உங்க அண்ணாவைப் பாரேன். கொஞ்சம் கூட அக்கறையில்லாம படுத்துத் தூங்கறத.''

''வேறென்ன செய்யணும் மன்னி.''

''ஆம்பளையா லட்சணமா அந்தக் கூட்டத்தை அதட்டி நிறுத்த வேண்டாமா?''

''சரி அவருக்கு ஆயிரம் கம்பெனி வேலை. ஏகப்பட்ட கவலை.''

''ரப்பர் கம்பெனி தானா உலகம் அக்கம் பக்க மனுஷாளோட நல்லது கெட்டதும் நிக்க வேண்டாமா? உங்க அண்ணா சரியான சோம்பேறி.''

''மன்னிப்புக் கேட்டே ஆகணும்.''

கீழே யாரோ கத்தினார்கள்

''அந்தப் பையன் வேணும்ன்னுட்டு இடிக்கலை. அவனும் குழந்தை. ரெண்டுங் கெட்டான். அவனை அடிச்சதுக்கு மன்னிப்புக் கேட்டே ஆகணும்.''

''கேக்கலைன்னா?'' ஜுப்ளியின் அப்பா சீறினார்.

''அந்தக் குழந்தையின் அம்மா, அப்பா சார்பா நான் போலீஸ்ல கம்ப்ளெய்ண்ட் குடுத்து உம்மை கம்பி எண்ணவைப்பேன்.''

ஜுப்ளியின் அப்பா அடித்திருக்கக் கூடாதென்று நிறையப் பேர் அபிப்பிராயப்பட்டார்கள். இனிமேல்

சைக்கிள் விடச்கூடாது என்றார்கள். அந்தத் திறந்த வெளி சைக்கிள் விடும் இடமல்ல என்று சொன்னார்கள்.

'ஐயாம் ஸாரி பையனை ஒரு கோபத்துல அடிச்சுட்டேன்.'' ஜூப்ளியின் அப்பா பொதுவாய் மன்னிப்புக் கேட்டார்

''மன்னிப்புக் கேட்டா ஆயிப்போச்சா.'' அந்த மசாலாப் பெண்மணி கத்த, எல்லோரும் அவளை அதட்டினார்கள்.

''அதுதான் நெஞ்சில குத்திட்டீங்களே, பெரிய வஸ்தாது மாதிரி. பொம்பளைக்கு ஒரு அடக்கம் இருக்க வேண்டாம். இத்தனை பேர் சப்போர்ட் பண்றமே, அதைப் புரிஞ்சுக்க வேண்டாம். உன் பையன் குரங்கு. வாலில்லாத குரங்கு. முதல்ல அவனை அடக்கி வை.''

அந்த அம்மாள் பையனை இழுத்து அவள் தடு முதுகில் பேய் மாதிரி அறைந்தாள். 'கூட நாலு போடு' என்று தான் எல்லோரும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். யார் அடித்தாலும் அந்தப் பையனுக்கு வலிக்கும் என்பதை மறந்து நின்றார்கள் ஒரு நொடி. ரெண்டுங் கெட்டான் அங்கிருந்த மூன்று சைக்கிள்களின் காற்றையும் பிடுங்கி விட்டான். இந்தச் சைக்கிள்கள் தான் எல்லா சண்டைக்கும் காரணம் என்று செயல்பட்டான். சைக்கிள்களுக்கு தக்கதண்டனை கொடுத்துவிட்டது போல குறுக்கும் நெடுக்கும் அலைந்தான். தடாரென்று ஜூப்ளி விட்டுக் கதவு கோபத்துடன் சாத்திக் கொண்டது.

'குழந்தைய கீழே விட்டுட்டு என்ன பண்ணிட்டிருந்தே நீ?'' வைதேகியின் கணவன் உரக்கக் கத்துவது மெலிதாய்க் கேட்டது. வைதேகி பதிலுக்கு ஏதோ உரக்கக் கத்துவது கேட்டது. 'பளீர் பளீர்'ரென்று அடிக்கும் சத்தம் கேட்டது. வைதேகி அழுகையுடன் கத்தும் சத்தம் கேட்டது. தடேரென்று அவள் வீட்டுக் கதவு மறுபடியும் திறந்தது.

''அடிக்கிறார் சாரு. யாரோ பண்ணினதப்புக்கு என்னைப் போட்டு அடிக்கிறார்.'' வைதேகி, பாலகரன் வீட்டு ஹாலிலிருந்து கத்தினாள்.

''சரி, சரி ஏதோ கோபம், நீயும் கோபப்படாதே,'' வைதேகியை, மன்னி சோபாவில் அழுத்தி உட்கார வைத்தாள். கதறும் குழந்தையை முதுகில் தட்டி சமாதானப்படுத்தினாள். சைக்கிள் சக்கரம் பட்டு வீங்கியிருந்த குழந்தையின் உதட்டுக்கு இனிசின் போட்டாள்.

''அந்த மனுஷனுக்கு ஒரு வாய் காப்பி குடுத்தியா? இங்கே வந்து உட்கார்ந்துண்டே.''

''சாகட்டும்.''

''தப்பு வைதேகி.''

''நான் செத்துறப் போறேன் சாரு, ஒரு நாள் நடுக்கூடத்துல நான் தூக்குப் போட்டுச் சாகப் போறேன்.'' புடவைத் தலைப்பை முகத்தில் போட்டுக் கொண்டு விம்மினாள்.

'விடு, நான் தர்றேன்'' மன்னி சமையலறைக்குப் போய் காபி போட்டுக் கொண்டு எடுத் போனாள்.

''இப்படிக் கோபப்படறது சரியேயில்லை.'' பொதுவாய் வாசல்படியில் நின்று பேசினான், வைதேகியின் புருஷன் பதில் பேசவேயில்லை. சுவரை நோக்கி வெறித்து உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அண்ணா அறைக் கதவு லேசாய் திறந்து கூடத்தில் அழும் வைதேகியைப் பார்த்துவிட்டு மறுபடியும் கதவைச் சாத்திக் கொண்டான். ஜூப்ளி மன்னியிடமிருந்து இறங்கி அம்மாவிடமே போய் ஒட்டிக் கொண்டது.

தன்னுடைய ஹிருதயம் நன்றாக இருந்தால் கூட

திருமணம் என்ற பந்தத்தில் மாட்டிக் கொள்ளக் கூடாது என்று பாஸ்கரனுக்குத் தோன்றியது. குழந்தையைக் கீழே விட்டுவிட்டு லைதேகி என்ன பண்ணிக் கொண்டிருந்தாள் என்கிற கேள்வி வந்தது. லைதேகியிடம் ஏதோ ஒரு தப்பு இருக்கிறது என்று உள் மனசு சொல்லியது. புருஷன் மீதும், குழந்தை மீதும் பிடிப்பற்றுப் போய் வேறு என்று எதன் மீதோ நாட்டம் வந்து விட்டது என்று தோன்றியது

"என்னடா கீழே ஒரே கலாட்டா?" எட்டரை மணிக்கு கேட்டபடியே தம்பி உள்ளே நுழைந்தான். பால்கனியில் சற்று நேரம் நின்று கும்பலாய் பேசும் மனிதர்களை லேடிச்சைப் பார்த்தான். "சரியான சோம்பேறிக் கூட்டம்" என்று சொன்னான்

"ஏன்டா இப்படிச் சொல்றே?"

"அடிதடின்னு போகக்கூடாது. பாஸ்கரா போயிட்டா சமாதானம் ஆக்ககூடாது. பையன் குழந்தைய அடிச்சானாம். பையனை' பெரியவரு அடிச்சாராம். பெரியவர பொம்பளை அடிச்சானாம். என்னங்கடா டேய். வெறும்ன நிலே ரேஸ் ஓடறானுங்க. ஒரு ரவுண்டு முழுச்சாங்களா அதுவும் இல்ல. பாதியில படுத்துக் கிட்டானுங்க. உன் டுல் பாக்ஸ் இருந்தா கொடேன்."

"எதுக்கு டுல் பாக்ஸ்?"

"மரகதவல்லி ஆன்ட்டெனா திரும்பிக்கிச்சாம்"

"இல்லையே சரியா தானே இருக்கு." தொலைவி லிருந்து அவள் வீட்டு ஆன்டெனாவைப் பார்த்தான்

"நான் திரும்பிக்கிச்சுன்னு சொல்றேன். மரகத வல்லியும் சொல்றா, நீ இல்லேன்னா எப்படி?"

பாத்ரூமிற்குப் போய் முகத்தில் தண்ணீர் அடித்துக் கொண்டு, டுல் பாக்ஸுடன் இளம்பினான். பாஸ்கரனுக் குள் சட்டென்று ஒரு வெறுமை படர்ந்தது. அவன் தம்பி

சத்யமூர்த்தி ஆன்டெனா லிப்பேர் பண்ணப் போக விலை என்பது தெளிவாய்த் தெரிந்தது மரகதவல்லி வின் அம்மா கீழே பெற்றோருடன் பேசிக் கொண்டிருந் தாள் சத்தியமூர்த்தி நிழலாய் நடந்து தாவித்தாவிப் படியேறினான். மேல் மாடிக்குப் போனான். ஆன்டெ னாவின் அடிக்கம்பியைப் பிடித்து நிலை திருப்பினான் இரண்டு நிமிடம் கழித்து மரகதவல்லியும் அவன் அருகே வந்து நின்று கொண்டாள். இரண்டு பேரும் கீழே ஒரு முறை எட்டிப் பார்த்தார்கள். சட்டென்று உட்கார்ந் தார்கள்.

ஹாலுக்குள் மல்லி குசுகுசுவென்று லைதேகியுடன் பேசிக் கொண்டிருந்தாள். பால்கரன் ஹாலுக்கு நுழைந்த வுடன் பேச்சை சற்று நிறுத்திவிட்டு இன்னும் தாழ்ந்த குரலில் பேச ஆரம்பித்தாள் பாஸ்கரன் எதிர் அறைக்குப் போனான். என்— செய்வதென்று தெரியாமல் மேஜை யிலிருந்த புத்தகங்களை அடுக்கி வைத்தான். அங்கிருப்ப தெல்லாம் அவனுடைய எலக்ட்ரானிக் புத்தகங்கள். எந்த உபயோகமுமில்லாமல் போய்விட்ட புத்தகங்கள். புத்தக வரிகளைக் கண்கள் மேய்ந்தாலும் மனசு எதிர்பக்க மொட்டை மாடியிலிருந்து மரகதவல்லியும், சத்திய மூர்த்தியும் என்ன செய்து கொண்டிருப்பார்கள் என்ற கற்பனை வந்தது யாரேனும் பார்த்து விட்டால் என்ன ஆவது? என்ற கலவரம் வந்தது. அந்தக் கலவரத்தில் ஒரு படபடப்பு அதிகரித்தது மீண்டும் முதுகுத் தண்டுவடத் திற்கு இடது பக்கம் வலித்தது.

மரகதவல்லி தன் அம்மாவிடம் "நீ கீழே போ. அப்பத்தான் அவரு மேலே வருவாரு" என்று சொல்லியி ருக்க வேண்டும். மேல் மாடிக் கதவைத் தான் போட்டி ருக்க வேண்டும். மூன்றடுக்கு மாடியில் காதலனைக் கூட்டிக் கொண்டு முத்தம் கொடுத்தால் யாருக்குமே தெரி யாது என்று நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

சத்யா தன்னிடமும் அதைச் சொல்லாமல் போயிருந்தால் நல்லதாக இருந்திருக்கும்.

''நீ காதல் கல்யாணத்தைப் பற்றி என்ன நினைக்கிறே?'' என்று ஒருநாள் கேட்டான்.

''நல்ல விஷயந்தான். ஏன் கேக்கறே?''

''எதிர்பக்கம் ஜி ப்ளாக் மாகதவல்லி நம்மளை டாவடிக்குது. அவங்க அப்பனுக்கு ஒரே பொண்ணு. நான் படக்கிடலாம்னு பார்க்கிறேன்.''

''வேற ஜாதியாச்சேடா.''

''ஒரே ஜாதில பொண்ணு கட்டறதுக்குப் பேரு லவ்வா? இதுதான் லவ்வு.''—புதுசாய் விளக்கம் சொன்னான்.

''இதை ஏன் உன்கிட்ட சொல்றேன்னா நாளைக்கு மன்னிப்பும், அண்ணாவும் எதிரணிக்க, நான் உன்னை முன்னால வச்சு கல்யாணம் பண்ணிக்குவேன். நீ நம்மளைடு நின்று சப்போர்ட் பண்ணனும்.''

''என் பேச்சு எடுபடுமா சத்யா.''

''இப்போதைக்கு நீ என்ன சொன்னாலும் எடுபடும்.'' கூச்சமில்லாமல் பதில் சொன்னான்.''

''இப்போதைக்கு'' என்று அவன் சொன்னது பாஸ்கரனின் விருப்பத்தை— அது வேதனையாக இருந்தது. ஆனால் வெளியே சொல்ல முடியவில்லை.

''நீ ஸ்பைட் பண்ண மாட்டேன்ற பாஸ்கரா, வியாதி வந்துடுச்சுன்னதும் அப்ஸெட் ஆயிட்டே. நீ மோட்டார் சைக்கிள்ல ஸ்பீடா போறது. உடுத்தறது எல்லாம் இப்படனவா போயிடுச்சு. நீ நிஜமாவே ஸைடட்டர்ன்னா— மென்ட்டலா வலுவாதின்னிருக்கணும். இதே எல்லார்ஜ் தார்ட் என் ஃப்ரெண்ட்டோட அப்பா இருக்காரு. அதை வெளில சொல்லாம மறைச்சு, கல்யாணம் கட்டி மூணு குழந்தை பெத்துட்டாரு நீ என்னமோ சுலத்தைப்

பிடிச்சுக்கிட்டு நடக்கற உலகத்து ஒண்ணும் இல்லடா. இந்த டாக்டர் பசங்க துட்டு புடுங்கறதுக்கு ஏமாத்த நாங்க என்னோட இன்னொரு ஃப்ரெண்டுக்கு ஏமாத்த ஆஸ்த்மா. உன்னை மாதிரிதான் ஓட முடியாது. படியேற முடியாது. ஆனா, அவன் வேலையை விடலை அப்படியே தனுக்கா வேலைக்கு வந்துக் கிட்டுதான் இருக்கான். நீ வேலைக்குப் போறதை விடாத பாஸ்கரா. வேலைக்குப் போ எவளையாவது கல்யாணம் பண்ணு. உடம்பு தானா சரியாகும் பார்... '' இருபத்தி நாது வயசு உக்கிரத்தோடு பேசினான்.

14478
312030

4

வீட்டுக் கதவு திறந்திருப்பினும் காலிங் பெல்லை அழுத்தினான். போர்ஷன் பையன் காலிங் பெல்லை அழுத்தினான்.

''என்னப்பா...'' ரகசியப் பேச்சு தடைப்பட்ட கோபத்தில் அவனை நோக்கி கோபமாய் கேட்டான்.

''பி.பி ஈ சரியா வராரட்டேங்குது மேடம். ரொம்ப நாய்சியா இருக்கு. பாஸ்கரல்கிட்ட சொல்லாமன்னு வந்தேன்.''

''பாஸ்கரனால அதையெல்லாம் சரி பண்ண முடியாது. அனாவசியமா அவளைத் தொந்தரவு செய்யாதே போ. அவனுக்கு உடம்பு சரியில்லைன்னு தெரியாதா.''

''நல்லா தெரியும். ஆனா பி.பி.ஈ. நாய்சியா இருக்கே. எங்கப்பா சரி பண்ணச் சொல்லுடான்னு கத்தறாங்க.''

அதே தெருவிலுள்ள வேறு ஒரு டில்க் ஆன்டெனாவை அடிக்கடி வந்து கலவரித்துக் கொள்ளச் சொல்லியும், அதற்கு காசைக் கொடுத்து விடுவதாகத் தெரிவித்தும்

அவன் தொழில் பொறாமையில் காரணமாக அதை அலட்சியப்படுத்தினான்.

"இது மோசமான டிஸ்க்குங்க. மட்டமான ஒயருங்க" என்று பல்வேறு குற்றம் சாட்டினான். தன்னிடம் சுலைக் ஷன் வாங்கிக் கொள்ளச் சொல்லி ஆசை காட்டினான்.

"ஒரு சேனல்ல கேபிள் டி.வி. வருது. ஒரு நாளைக்கு ரெண்டு தமிழ்ப்படம். உங்களுக்கு இது கிடையாது." என்று வெறுப்பேற்றினான். அவன் இத்தனை சொல்லியும் அவனை யாரும் சீண்டாதது கண்டு வெறுப்படைந்தான்.

"ராவோட ராவா ஒரு ஆளு அனுப்பிச்சு டிஸ் ஆன்டெனா லைனை பவர்ல கொடுத்தர்றேன். டி.வி.ய தப்பா தொட்டா சொடேர்ன்னு அடிக்கும். அப்ப, தானா என்கிட்ட வருவீங்க என்று பயமுறுத்திவிட்டுப் போனான். அவன் பயமுறுத்தலுக்கு நடுங்கி மல்லிகை நல்வாழ்வு சங்கம் கூட்டம் போட்டது. ஆன்டெனால பவர் லைன் வந்தா என்ன ஆகும்?" என்று பால்கரனைக் கேட்டது. "உடனே ப்யூஸ் போகும். உடனே பவர் சப்ளை நிற்கும். ஒரு நாளும் ஷாக் அடிக்காது" என்று பால்கரன் வாக்குறுதி கொடுத்தான்.

எந்தப் பிரச்சினை வந்தாலும் அங்குள்ள இளைஞர்கள் துணையோடு தானே சரி செய்வதாய்க் கூறினான். பெரும பிரச்சனை ஏதும் வராது என்று கூறினான். அப்படி வந்தால் டிஸ்க் ஆன்டெனா கம்பெனிக்குப் போன் செய்து தானே சகலமும் கவனித்துக் கொள்வதாகவும் சொன்னான். மல்லிகை நல்வாழ்வு சங்கம் அரை மனதோடு அவன் பேச்சை ஏற்றுக் கொண்டது. இப்போது வந்து சொல்லப்படும் குறைபாட்டைப் பற்றி அக்கறையில்லாமலிருந்தால் மறுபடி நல்வாழ்வு சங்க கூட்டம் கூடும்.

அதைவிட முக்கியமான அலுவலை ஒன்று இப்பொழுது இருக்கிறது. இப்போது வந்து நிற்கும் பையன் உதவியோடு அவன் பின்னிச் சின்னதாய் சிறைய ரிப்பேர்கள் செய்திருக்கிறான்.

பி.பி.சி. சரியாக வரவில்லை என்கிற குறையைவிட அதை நான் ரிப்பேர் செய்கிறேன் பார் என்கிற துடிப்பு இந்தப் பையனிடமிருக்கிறது. தன் வீட்டிற்குப் போய் அப்பாவிடமும் அம்மாவிடமும் நான்தான் ரிப்பேர் செய்தேன் என்று பீற்றிக் கொள்ளும் அசட்டுத்தனமிருக்கிறது.

நாளைக்கு செய்து கொள்ளலாம் என்றால் விடமாட்டான். தானே மாடிக்குப் போவான். மேலோட்டமாய் பால்கரனிடம் கற்றுக் கொண்டதை தானே முயற்சி செய்து பார்ப்பான். டார்ச் விளக்கில் ஆன்டெனா மேடை ஏறி எதையாவது அசைத்துத் தொலைப்பான். எல்லா சேனல்களையும் நாசம் செய்தாலும் செய்வான்.

அதை விடவும் ஒரு வேதனையான விஷயம். சிக்கலான சமாச்சாரம் இப்போது உண்டு டிஸ்க் ஆன்டெனா மாடியில் ஏறினால் அடுத்த மொட்டை மாடி தெளிவாகத் தெரியும். அங்கே மரகதமும், சத்யமூர்த்தியும் கொஞ்சிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட முடியும். அவர்கள் சொஞ்சிப் பேசிக் கொண்டிருக்கலாம் அல்லது வேறு ஏதேனும் செய்து கொண்டிருக்கலாம். இந்த ரெண்டுங் கெட்டான் பையன் பார்த்து விட்டால் இந்தச் செய்தி மல்லிகை முழுவதும் பரவும் சத்யமூர்த்திக்கு அது ஆபத்தாய் முடியும். மரகதமல்லிக்கு அவமானம் நேரும். அவர்கள் காதல் அடிபடும் அண்ணாவும், மன்னியும் இந்தக் காதலை எப்படி ஏற்பார்கள் என்று தெரியவில்லை. அண்ணாகண்டு கொள்ளாமல் விட்டுவிடலாம். மன்னிக்கு இது தெளரவப் பிரச்சினை.

''உன்னை நம்பி ரெண்டு லைன்களை ஒப்படைத்தேன் ஒருத்தனுக்கு வாரிட் அட்டாச் இன்னொருத்தன் ஓடிப்போய்ட்டான். ரொம்ப சந்தோஷமாயிருக்குயம்மா. நீ என்ன வீட்டுக்க வந்த வேளை எல்லாம் அமோகமா நடக்கறது'' அம்மாவை, அக்காவை குத்தலாகப் பேசிவிட, மன்னி அந்தப் பேச்சை கடுமையான தாக்குதலாக எடுத்துக் கொள்ளலாம். பதிலுக்கு ஏதாவது பேசலாம்.

இதையெல்லாம் விட மரகதவல்லியை வேல் எறும்பு, லொல் என்றும் மல்லிகை முல்லை பேசி விடலாம். ''நெஞ்சை நிமித்திண்டு நடக்கறப்பவே நினைச்சேன். இது எங்கேயோ சிக்கப் போறதுன்னு. இங்கேயே சிக்கிடிச்சு பாரு'' தாயிடம் வயசுக் காளிப் பெண் குற்றம் சொல்லலாம்.

'பின்பக்கம் கழட்டி கழட்டி நடக்கறாளம்மா அந்த மரகதவல்லி அது எப்படி?'' இல்லிதம் பெரிய பேச்சுகளை பாண்டரன் கேட்டிருக்கிறான்.''

''பெண்ணைவிட அம்மாதான் அழகு. வாய் நிறைய வெத்தலை போட்டுண்டு, தலையில கறிகாய் வாங்க வருவான்னு பாருங்கோ ஏதோ தஞ்சாவூர் தாலி பார்க்கற மாதிரியிருக்கும் எனக்கு. ஒருவேளை அவருக்கு தஞ்சாவூர் தாலோ?''

''தாம் தித்தாம்'' இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர் அதிரயம் பிடிக்க, மத்திம லயக் கலிரம் வெற்றிலை எச்சிலாய் நாலைதெறிக்கும்.

''ஆறு பவுன் தாலிக்கொடி, ரெட்டை அலஸ் செயின், தங்க குண்டோட கருமணி, கைக்கு ஆறாறு பவுன் ரெண்டு வளையல், எப்பவும் எதுக்கு நகைக் கடையா நிக்கறா அந்தம்மா, மன்னி உட்பட பல பெண்கள் பொறாமையாய் பேசுவதுண்டு.

''நல்ல தொட்டத்துல விளைஞ்சதுங்க'' வீட்டுக்கு ஒரு பார்சல் வந்தால், அதைக் கொண்டு வந்தவனும் அந்த அம்மா முதல் முதலாகக் கொடுத்தது வருத்தம் நிக்க வில்லை.

''திருவாலியிலே இட்டுக்க பத்து எக்கர் புஞ்சை இருக்கோம். நெல் தானுலாட்டல்லியே எடுத்து விக்க நல்லாருக்கு பதினாறு. நெல ஆப்பத்து அதுல ஒரு நகை போட்டிருக்கேன். தாலிக்கா அது இல்லேன்னு அழுத்திக்கிருவேன்'' ஸ்ரீரங்கத்துப் பெண்கள் கூட்டம் கெக்கெக்கே என்று சிரித்துக் கொடுக்கிறான்.

அழகை விடப் பணம் தான் பொறாமையான விஷயம். அழகும், பணமும் இருந்து விட்டால் அவளிடம் முழுமையாக பொறாமைப்படுதல் அழகு, பணமும் உள்ளவர்கள் சந்திக்கலாகாது. இந்தப் பொறாமை மறைமுகமாக இருக்கும். சந்தர்ப்பம் வரும் போது வேறு முகமாகத் தாக்கும்.

''உங்க மச்சினர் சந்தோஷத்தில மரகதவல்லியோட தாக்கோ தாக்கோன்னு நடக்காராமே. இது நல்ல நியூஸ் சாருகா. என்றது ஒரு கலர்ஸ் ஸ்பேஸில், மரகதவல்லி வீடு வேறமாதிரி. நல்ல வார்த்தை சொல்லி மச்சினரை நாத்து. இல்லேன்னா உனக்கு அவமானம்'' தாயேற்ற இது நிச்சயமாய் ஆட்கள் கண்டிப்.

அழகும் பணமும் பொறாமையைத் தவிர தேவைப்படுவது உதவி கேட்க இவர்கள் யாருக்கும் வெட்கமே இல்லை. அப்போது நாக்கு வேறு விதமாய்ப் பேசும். மறைமுகமாத சென்னை வரண்ட போது இந்த அடுக்கு மாடியில் அலை தண்ணீர் என்று முறை போட்ட போது.

"ஆதெல்லாம் வாணாங்க. உங்களுக்கு எவ்வளவு தண்ணீர் வேணும். நம்ம தோட்டத்துலேர்ந்து நான் அனுப்பறேன். லாரி வாடகை இருநூறு ரூபா மட்டும் இருக்கறவங்க பங்கு போட்டுக் கொடுத்துடுங்க" மரகதவல்லியின் அப்பா பெருந்தன்மையாய்ப் பேசினார்.

"தாங்க்யூ சார்..."

"தாங்க்யூ சார்..."

"தாங்க்யூ வெரிமச்" அத்தனை நாக்குகளும் எச்சில் உளறக்கூறின. தவிக்கிற வாய்க்கு தண்ணீர் கொடுப்பது மகா புண்ணியம் என்றன. ஒரு நாள் விட்டு ஒரு நாள் எட்டாயிரம் லிட்டர் சம்ப்பில் கொண்டு வந்து லாரி நிறைத்தது. மரகதவல்லியும், சத்யாவும் நட்பானது முதன் முதலாய் தண்ணீர் லாரி வந்தபோதுதான்.

பிற்பகல் இரண்டுமணிக்கு ஆண்களில்லாத நேரத்தில் தண்ணீர் லாரி வர, தண்ணீர் ஏற்றுவது பற்றி எதுவும் தெரியாது என்று பெண்கள் மறுக்க, தூங்கிக் கொண்டிருந்த சத்யாவைக் கதவு தட்டி எழுப்பி மரகதவல்லி கூட்டிக் கொண்டு போனாள்.

"சம்ப் சாக்கடையா நாறுதேம்மா. கல்கண்டு மாதிரி தண்ணிய இதுல கொட்டச் சொல்றியே?" லாரிக்காரன் குரல் கொடுக்க, யார் சுழுவுவது என்கிற பிரச்சினை வந்தது. மரகதவல்லி தானே இறங்குவதாய் இறங்க, அவளைத் தடுத்துவிட்டு சத்யமூர்த்தி சம்ப்பிற்குள் இறங்கினான். மூறம், தாம்பாளம், சேறு தூக்கித் தரப் பெரிய பாத்திரம், வாரித் துடைக்கத் துடைப்பம் என்று உள்ளே நின்றவனுக்குத் தரப்பட்டது. ஒற்றை மூடியேயுள்ள பெரிய சம்ப்பில் மூச்சுத் திணறியது. அதிகம் வியர்த்தது. கஷ்டப்பட்டு சேறு வாரி வெளியேயுள்ள பெண்களிடம் கொடுத்து ஓரம் கொட்டச்சொல்லி, லாரியிலிருந்து கொஞ்சம் நீர் வரவழைத்து, ப்ளீச்சிங்

பௌடர் போட்டு அலம்பி, ப்ளீச்சிங் பௌடர் நெடியை சுவாசித்து மேலே வந்தவன் தள்ளாடினான். மாமியை நகர்த்துவிட, மரகதவல்லி அவனை இறுக்கப் பிடித்துக் கொண்டாள்.

"நல்ல சுத்தறது. மயக்கமாயிருக்கு" என்று கத்தினான்.

"ஒரே முட்டா சேறு வார்ன்னா அப்பப்போ நின்னு செய்யணும்." அவரை படுக்க வையுங்க, அவரைப் படுக்க வையுங்க லாரிக்காரன் கத்த, மரகதவல்லி அவனை வராண்டாவில் சாய்த்தாள். முகத்தில் தண்ணீர் அடித்து மேல் துப்பட்டாவில் துடைத்தாள். யாரோ ஒரு மாமி டீ போட்டுக் கொண்டு வந்தாள்.

"நல்ல வேளை, நீங்க இறங்கல மரகதவல்லி. இறங்கிட்டிருந்தீங்கன்னா செத்துட்டிருப்பீங்க" திணறித் திணறி சத்யா சொல்ல மரகதவல்லி அவனை நன்றியுடன் பார்த்தாள். எட்டாயிரம் லிட்டர் தண்ணீரும் சம்ப்பிற்குள் அருவி போல் கொட்ட, மரகதவல்லியோடு சத்யாவையும் மல்லிகை புகழ்ந்து தள்ளியது.

"இனிமேல் ஆம்பளைங்க இருக்கறபோது தண்ணீர் கொண்டு வரச்சொல்லுங்கோ" என்று கட்டளையிட்டது.

தண்ணீர் வரும் போது வாங்கி வைத்துக் கொள்வது தான் மரியாதை என்பது அங்கே வலியுறுத்தப்பட்டது. டிஷ் ஆண்டெனாவுக்கு பாஸ்கரன் பொறுப்பு ஏற்றது போல், சம்ப் பராமரிப்புக்கு சத்யா பொறுப்பு என்பது எழுதாத சட்டமாயிற்று. எல்லார் வீட்டு மேல் நிலைத் தொட்டிக்கும் தண்ணீர் திரப்பிய பிறகும் எட்டாயிரத்தில் மிச்சமிருந்தது. அடுத்த முறை ஆயிரம் லிட்டர் தண்ணீரை, லாரிகாரன் சம்ப்பில் கொட்ட முடியாமல்

எடுத்துப் போனான். தெருவில் நிறுத்தி குடம் பத்து பைசா என்று விற்றான்.

'நமக்கு வந்த தண்ணிய அந்த லாரிக்காரன் விக்கறானே சம்ப்ல தண்ணி கொட்டறதுக்கு முன்னாடி எல்லோர் வீட்டு டேங்க்கையும் சுத்தமா கழுவி விட்டுங்கோ. சாக்கடையில் போகட்டும்' கூசாமல் நியாயம் சொல்லிற்று.

''இது ஓசில வர தண்ணிதானே சார். நமக்கு மிஞ்சி தானே அவன் தண்ணி தரான். ஏதோ பண்ணிட்டுப் போகட்டும்.'

''ஓசியா. லாரி சார்ஜ் தரலே. மிஞ்சின தண்ணிக்கு காசு கழிச்சுண்டு அப்புறந்தான் லாரி சார்ஜ் தரணும்'' அபத்தமாய் சட்டம் பேசியது.

''உங்க லாரிக்காரன் தண்ணி விக்கறான் சார்'' மரகதவல்லியின் அப்பாவிடம் குறை சொல்லிற்று.

''அது நல்லதுங்க. இந்த குடியிருப்புக்கு வந்தா ஆயிரம் லிட்டர் மிஞ்சும். அதுல கூட அம்பது ரூபா கிடைக்கும் அது வசதின்னு லாரிக்காரனுக்குப் பட்டா, நேரம் தவறாம சப்ளை பண்ணுவான். நின்னு சம்ப் நிறைச்சுட்டுப் போவான்.'' அந்தப் பெருந்தன்மை சூட்சுமம் மல்லிகை வாழ் மக்களுக்குப் புரியவேயில்லை.

''அதெப்படி சார்'' என்று நெடுநேரம் வாதாடித் திரும்பி விட்டது மரகதவல்லியின் அம்மா பாப்புலரானது லாரி தண்ணீரினால்.

ஒரு தீபாவளிக்கு பட்டைக் காமிராவோடு குழந்தைகளைப் போட்டோ எடுக்க மரகதவல்லி வர, மரகதவல்லி தன்னை எடுக்கச் சொல்லி வேறு யாரையோ கேட்க, மரகதவல்லியைச் சுற்றி பத்து பேர் நின்றார்கள். அவளோடு போட்டோ எடுத்துக் கொண்டார்கள். ஆளுக்கு

ஒரு காப்பி கேட்டார்கள். நெஞ்சு நிமிர்த்திக்கிறது. பின்னால் சுழித்துக் கொண்டு ஓடுகிறது என்ற பேசியவாயெல்லாம் சுறு தெரிய போட்டோவில் சிரித்துக் கொண்டு நின்றன.

அந்த மரகதவல்லி சத்தியமூர்த்தியைக் காதலிக்கறாளென்று தெரிந்தால் நிச்சயமமென்று தின்னும், என்னவெல்லாமோ பேசும். வாசலில் நிற்கிற இந்தப் பையன் டிஸ் ஆண்டெனா மேடையேறினால் நிச்சயமாய் சத்தியமூர்த்தியும், மரகதவல்லியும் இருப்பது தெரியும் சத்தியமூர்த்தியும், மரகதவல்லியும் பேசிக் கொண்டிருக்கிறார்களா? பேசாமல் ஏதாவது செய்து கொண்டிருக்கிறார்களா? அல்லது செய்து கொண்டே பேசுகிறார்களா? தெரியவில்லை.

'நான் பார்க்கிறேன் நீ போ.'' பாஸ்கரன் பையனைத் துரத்தினான்.

'வேண்டாம் பாஸ்கரா.'' மன்னி தடுத்தான். பாஸ்கரன் டூல்ஸ் கிட்டைத் தேடினான். அதை சத்யமூர்த்தி எடுத்துப் போயிருப்பது அப்போதுதான் ஞாபகம் வந்தது.

''என்ன பாஸ்கரா, சாயங்காலம் தானே சன்ஷேடுல ஏறி நின்னே இப்ப மறுபடியும் மாடிக்குப் போறியா? ஒன்னுகெடக்க ஒன்னு ஆச்சுன்னா என் தலைதானே உருளும். டிஷ் ஆண்டெனாவைக் கவனிக்க முடியாது. கவனிக்கக் கூடாது'' மன்னி எழுந்து நின்று கத்தினாள்.

''இது பெரிய ரிப்பேரில்லை மன்னி கேபிள்ல எங்கேயோ லூப் ஆகியிருக்கும் காக்காவோ, புறாவோ மெயின் பாக்ஸ்ல எச்சமிட்டிருக்கும். சர்க்யூட் ஷார்ட் ஆகி சத்தம் வரும் துடைச்சு விட்டா சரியாப் போயிடும்.''

''டூல் பாக்ஸ் வேண்டாமா?'' மன்னியே கேட்டாள். வேண்டாம் என்றதும்தான் அரை மனதாய் போகச் சம்மதித்தாள் பையனைக் கீழே அனுப்பிவிட்டு மெல்ல மாடிப்படி யேறினான். நின்று நின்று ஒவ்வொரு படியாய்க் கடந்தான். ஆண்டெனா மேடைக்கு ஏற ஐந்து படியுள்ள சின்ன இரும்பு ஏணியிருந்தது. அதன் மேல் ஏறி டிஷ் ஆண்டெனா கீழே நிற்க. அங்கேயிருந்து சத்யாவையும் மரகதவல்லியையும் பார்க்க முடிந்தது. அவன் பார்த்த கணம் மரகதவல்லி அவளுடைய நைட்டியை தலை வழியே கழற்றிக் கொண்டிருந்தாள். நைட்டியால் மறைத்த முகமும், வெள்ளை பிராவும் சட்டென்று கண்ணில் பட்டது.

'கடவுளே...' ஆண்டெனா அடியில் ஒண்டிக்கொண்டு பாஸ்கரன் முகம் திரும்பிக் கொண்டான். மரகதவல்லி தம்பியின் காதலியல்லவா? தம்பிக்கு மனைவியாகப் போகிறவளல்லவா? அந்தப் பெண்ணை இப்படிப் பார்க்கலாமா? தான் இப்படிப் பார்ப்பதை தப்பிப் பார்த்தால் ஏற்பானா? எந்த சமாதானம் சொன்னாலும் ஏற்பானா? கெட்ட எண்ணம் உனக்கு பாஸ்கரா என்று ஏச மாட்டானா? ச்சீய்...கேடு கெட்டவனே என்று வெறுக்க மாட்டானா?

'உன்னை எவண்டா மொட்டை மாடில அவிழ்த்துப் போட்டுட்டு ஆட சொன்னது, நான் பார்த்தது நல்ல தாப்போச்சு. வேற எவனாவது பார்த்திருந்தான்னா''

'வேற எவருக்கும் தெரியாது. நான் உன்கிட்டத் தான் சொல்லிட்டுப் போனேன் ஆனா, நீ இப்படி எட்டிப் பார்ப்பேன்னு ஒரு நாளும் நினைக்கல உனக்கு மிருதயத்துல கேடுஇல்லடா, புத்தியில கேடு மரகதவல்லி கேவிக்கேவி அழறா தெரியுமா? அவளை நான் எப்படி சமாதானப்படுத்தறது. ஆட்டுக்கு வாலை அளந்துதான் வச்சிருக்கான் கடவுள். உனக்கு உடம்பு நல்லபடியா

இருந்தது இதைவிடக் கேடு கெட்டவளா இருந்திருப்பே. என்ன வேணா செய்லே இல்லன்கிட்ட ஜாக்கிரதையா இருங்கோன்னு மன்னிக்கிட்ட ஒரு வார்த்தை சொல்லணும்.''

யோசனையில் உடம்பு கனர்ந்தது. நாடித்துடிப்பு அதிகமாயிற்று. வியர்வை பொங்கியது. ஆண்டெனாவைத் தொட பகல் சூட்டுவெம்மை அதில் இன்னுமிருப்பது தெரிந்தது. மெல்ல திரும்பி அடுத்த மாடியைப் பார்த்தான். அவர்கள் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

'இது காமம், இது காமம்.' என்று மனம் அலறிற்று.

'எதுவானால் உனக்கென்ன?' மனசின் இன்னொரு மூலை அலறிற்று. ஆண்டெனாவிலிருந்து இறங்கும் வயர்களைத் தடவிப் பார்க்க, நாற்றமான சரப் பிசுபிசுப்பு கையில் ஒட்டியது. இணைப்புப் பெட்டியில் மிதச் சரியாய் காக்கை எச்சமிட்டிருந்தது. அல்லது ஏதோ தக்கித் தொலைத்திருக்கவும் கூடும். மூடியது எதையும் கொத்தித் திறக்க காக்கைக்கு ஆவல் அதிகம். இந்த ப்ளாஸ்டிக் டப்பாவையும் இப்படித்தான் கொத்தித் திறக்க வேண்டும். நானும் காக்கையோ. அடுத்தவர் அந்தரங்கத்தை எட்டிப் பார்க்கும் காக்கையோ. ஒரு முறை கண்ணில் பட்டது ஏதேச்சை மறுமுறை என் பார்த்தேன். யாரையோ, யாரோ முத்தமிடுவதில் எனக் கென்ன ஆர்வம். இதிலென்ன உற்சாகம்.

மரகதவல்லி அழகி. சத்தியமூர்த்தி சூரன். இவர்கள் வாழ்க்கை, அவர்கள் பாடு எனக்கென்ன? எப்பொழுதோ போட்ட சுத்தையை எடுத்து, இணைப்புப் பெட்டியை சரியாய்த் துடைத்து, சரம் போக ஊதி, இரும்பு ஏணியில் உட்கார்ந்தபடி

இறங்க. மறுபடியும் அடுத்த மாடியைப் பார்த்தான் அந்த அரையிருட்டில் மரகதவல்லி மல்லாந்து கிடந்தாள். சத்தியமூர்த்தி அவளைத் தழுவிக் கொண்டிருந்தான். அவர்கள் அசைவும், புரளலும், தவிப்பும், தழுவலும் மடமடவென்று ஒரு கம்ப்யூட்டர் படங்கள் போல பாஸ்கரன் மனதில் படர்ந்தன. மெல்ல ஏணியை விட்டுக் கீழிறங்கினான் மாடிப்படிக்கருகே போனான். புகார் சொன்ன பையன் டார்ச்சுடன் துள்ளிவருவது தெரிந்தது. மெல்லிய மீசையும், அகலமான முகமுமாயிருக்கிற பதினேழு வயசுப் பையனை பாஸ்கரன் வியப்போடு பார்த்தான்.

இவனது அகலமான தோளையும், எவளாவது ஒரு பெண் இறுகத் தழுவுவாள் இவனுக்கு எதிரேயும் எவளோ ஒரு பெண் நைட்டியை ஜவிழ்த்துவிட்டு நிற்பாள். இவனும் கூடவில் ஈடுபடுவான். எனக்குத்தான் அது இல்லை. இந்த மல்லிகையில் எனக்கு மட்டுமே பெண் போகமில்லை. எந்தப் பெண்ணோடு கூடினாலும் நான் செத்துப் போவேன். ஒரு பெண் தழுவிக் கொண்டதும் இருதயம் படபடப்பு அதிகமாகி வீங்கிக் கிடக்கிற அந்த பலூன் டொப்பென்று வெடித்துவிடும். நெஞ்சில் கத்தியால் குத்தியது போல் வலிக்கும். மூச்சுத் தடுமாறும். கண்கள் சுழலும். வாய் குழறும். வியர்வை பொங்கும். புத்தி மெல்ல மெல்ல மயங்கும்

'அப்ப எல்லோருக்கும் ''போய்ட்டு வரேன்' என்று கைகூப்ப தோன்றும். நான் கைகூப்பி விடுவேனா அல்லது அலறி அலறி மடிவேனோ தெரியவில்லை மரணம் கூடதுக்கமில்லை. எதுவுமே அனுபவிக்காமல் சாகிறேனே அதுதான் துக்கம். மரணம் வெகு சீக்கிரம் என்று தெரிந்து உயிர் வாழ்கிறேனே அதுதான் வேதனை.

'என்ன அங்கிள் ஒரு மாதிரி இருக்கீங்க உடம்பு சரியில்லையா? படியிறங்கறது கஷ்டமாயிடுச்சா, அதான் நான் போயிரிப்பேர் பண்றேன்னு சொன்னேன்.''

''சிப்பேர் பண்ணியாச்சு. பான்கரன் மூச்சிரைக்க சொன்னான். வேஷ்டியால் முகத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

''ஜங்ஷன் பாக்ஸ்ல காக்கா எச்சமிட்டிருந்துச்சு, துணி வைத்து துடைச்சுட்டேன். இப்ப நாய்ஸ் வராது. வருதா போயி பார்த்துட்டு வா.''

அந்தப் பிள்ளை டார்ச்சை அவன் கையில் கொடுத்து விட்டு திபுதிபுவென்று படியில் ஓடியது. பெண்ணோடு கூடுவது இருக்கட்டும். இந்த ஓட்டம் கூட என்னால் ஓட முடியாது இதே வேகத்தில் இவன் படியேறி வருவான். என்னால் செய்ய முடியாது. மரகதவல்லி என்ன தைரியத்தில் நைட்டி அவிழ்த்தாள் என்று புரியவில்லை. அப்பா...எவ்வளவு திரட்சியான மார்புகள் பட்டணத்து விளக்கு வெளிச்சம் வானத்தில் மோதி அந்த வெளிச்சம் மொட்டை மாடிக்கு வந்து. அவள் உருவத்தை ஒரு 'சில் அவுட்'டில் காண்பித்தது. குறுகிய இடுப்பும், பெருகிய மார்பும் என்ன அழகு. இடுப்புக்கு செந்தமிழில் என்ன பெயர். மருங்குல்.

'வள்ளி இலைக்கறி விற்பாள் இவன் மருங்குல் இற்று விடுமென்று முலைக்கறிவிப்பார் இல்லையே முன்'. கல்லூரியில் படித்த தனிப்பாட்டு ஞாபகம் வந்தது. 'ஈர்க்கு இடைபுகா இளமுலையாள்' யாரோ சொன்னது நினைவுக்கு வந்தது பல காணி நிலம் உழுது பண்பட்ட கைபட்டு தலைகாணி போலாச்சு மங்கையிவள் கொங்கை யாரோ பாடிய கேலிப் பாட்டு ஞாபகம் வந்தது. சின்னப் பொண்ணு நடையப்பாரு சித்தெறும்பாட்டம். காலேஜ் கோரஸ் மனசில் ஓடியது சே...ஏன் இப்படி யோசிக்கிறேன் என்கிற வேதனையும் வந்தது அயர்ச்சி ஏற்பட்டது. உட்கார்ந்து கொள்ள வேண்டுமென்று தோன்றியது. சௌகர்யமாய் உட்கார்ந்து யோசிக்க வேண்டுமென்று

மனசு ஆசைப்பட்டது. சிறிய வயதில் அப்பா அம்மாவை அணைத்துக் கொண்டு நின்றது ஞாபகம் வந்தது. அதே அப்பா, சகலமும் விலக்கி தாயுமானவர் பாடல்களையே பாடிக் கொண்டிருந்தது ஞாபகம் வந்தது.

'டேய் இதுல ஒத கெட்ட பாட்டு இருக்காடா...' காலேஜ் படிக்கற அண்ணா ப்ளேடு படித்துக் கொண்டிருந்த பாஸ்கரனுக்கு பென்சிலால் ஒரு பாட்டைக் கோடு போட்டுக் காட்டினான். அந்தப் பாட்டை விழுந்து விழுந்து இருவரும் மனப்பாடம் செய்தது நினைவிற்கு வந்தது.

முருந்து இளநகையார் பாற
முலைமுகம் தழுவிச் செல்வாய்
விருந்தமிர்து எனை அருந்தி
வெறியாட்டுக்களாய் நாளும்
இருந்த லோகாயதப்பேர்
இனத்தனாய் இருந்த ஏழை
பொருந்தவும் கதிமேலுண்டோ?
பூரணானந்த வாழ்வே!

அண்ணா அடுத்தபடி திருப்புகழ் திறந்து எத்தனை கெட்ட பாட்டு இருக்கிறதென்று தேடினான். கல்யாணமான பிறகு மாறிப் போனான். ஒருவேளை நான் மாறமாட்டேனா, கல்யாணம் ஆகாது என்பதால் எட்டி பார்ப்பேனா.

பாரமுலை முகம் தழுவி, என்ன வார்த்தை இது. முகத்தால் முலை தழுவியா? முலை முகத்தைத் தழுவியா, நெற்றிப் பொட்டு 'விண்விண்' என்று தெறித்தது. பையன் அதே வேகத்தில் படியேறி வந்தான்.

"நைன்டீ பர்ஸெண்ட் சரியாயிடுச்சு அங்கிள். பேச்சில லேசா ஒரு ப்ளெர் அடிக்குது. இன்னொரு தடவை துடைச்சிடலாமா?"

"வேண்டாம். தானா ட்ரையாயிடும். அரை மணி நேரத்திலேயே ஈரம் உலர்ந்து சரியாயிடும். நீ வீட்டுக்குப் போ" டார்ச்சை அவனிடம் கொடுத்தான்.

"ப்ளாஸ்டிக் பாக்ஸ் மூடிட்டீங்களா அங்கிள்."

"இல்லை, திறந்து வச்சிருக்கேன். ட்ரையாயிடும்."

"ராத்திரி மழை பெய்ஞ்சுதுன்னா" பையன் நிறுத்தான். பாஸ்கரனுக்கும் தவறு புரிந்தது. நிகைப்பு வந்தது.

"நீங்க இருங்க அங்கிள். நான் போய் மூடிட்டுவந்துடறேன்." பையன் பாஸ்கரனை தாண்டி மேல் மாடிக்கு ஓடினான். பாஸ்கரனால் பையனைத் தடுக்க முடியவில்லை. டார்ச் வெளிச்சம் நாலா பக்கமும் நர்த்தனமாடியது. ஒரு வேளை அந்தப் பையன் சத்தியமூர்த்தி, மரகதவல்லியை பார்த்து விட்டால் தனக்கும் கெட்ட பெயர் வந்துவிடுமென்று தோன்றியது. நிதானமாய், ஒவ்வொரு படியாய் இறங்கினான். பையன் மேலே பாட்டுப்பாடுவது கேட்டது. மாடிப்படி வளைவு திரும்ப எதிர் மாடியின் சுவர் தெரிந்தது. பாட்டுக்குரல் கேட்டு முகம் மட்டும் காட்டி மரகதவல்லி எட்டிப் பார்த்தாள். அடுத்தாற்போல் சத்யமூர்த்தி எட்டிப் பார்த்தான். இரண்டு பேரும் பாஸ்கரன் இறங்குவதைப் பார்த்து விட்டார்கள். சட்டென்று சுவரோடு ஒதுங்கிக் கொண்டார்கள். பாஸ்கரனுக்கு உடம்பு நடுங்கிற்று. கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. நாக்கு இழுத்தது. இடது பக்க நெஞ்சுக்கும், வயிற்றுக்கும் நடுவே விரல் நீளத்தில் வலித்தது. இடது பக்க முதுகில் சுருக், சுருக்கென்று குத்திற்று.

அமைதி, அமைதி எது வந்தாலும் அமைதி. பாஸ்கரன் தன் புத்தியிடம் தானே வேண்டினான். சாவதற்கு முன் ஒரு கெட்ட பெயரோடு சாகாதேயென்று கெஞ்சினான். நின்று நிதானித்து படிப்படியாய் இறங்கி

தன் போர்ஷனுக்குப் போனாள். படுக்கையில் சாய்ந்து கொண்டாள். ஜுரம் போலும் ஒரு பயம் அவளைப் பற்றிக் கொண்டது. கண் இரைப்பைகளில் சூடு அதிகரித்து விழிக்கடையோரம் அதிகம் எரித்தது. செய்யக் கூடாத தவறை செய்து விட்டதாக எண்ணம் வந்தது. அதே சமயம் தாயுமானவர் பாடலும் மனசுள் ஓடிற்று.

பாரமுலை முகம் தழுவி
செல்வாய் விருத்து அமிர்து என அருந்தி
நாளும் இருந்த
லோகாயந்தேர் எனத்தனாய்.

இது லோகாயதமா? உலகில் எல்லோரும் செய்வதா? எனக்கு மட்டும் இல்லையா? ஏன்? ஏன் எனக்கு இல்லை? யார் மறுத்தது? ஏன் எனக்கு இந்நோய்?

செல்வாய் விருந்து
அமிர்தமென அருந்தி

செல்வாய் விருந்துகானா? பெண்ணின் இதழ்கள் சுவையான விஷயமா? அமிர்தமா? உலகத்தார் விரும்பி, விரும்பி உண்ணும் பொருளா? எனக்கு இல்லையா? நான் துறவியா? துறவியாய் இரு என்று தண்டிக்கப்பட்டேனா? நீ மகா பாபி இவ்வுலகின் சந்தோஷம் எதுவும் இல்லை என்று சபிக்கப்பட்டேனா? நான் பாண்டுவா? பாண்டுவுக்கு இரண்டு மனைவிகள். அதே சமயம் எவனோடு கூடினாலும் தலைவெடிக்கும் என்கிற சாபம் தலை வெடிக்கும் என்றால் என்ன? ப்ரெய்ன் ஹெர்மரேஜா ஹிருதயம் அதிகம் துடிக்க, ரத்த ஓட்டம் அதிகமாகி, மூளை நரம்பில் விரைவாக ஓடி, நனைந்து போன அந்த பஞ்சுப் பொதியில் ஏதோ ஒரு இடத்தில் எக்குத்தப்பாய் இறங்கி, வழிந்து, உறைந்து வலி துடிக்க ஐந்து நிமிடத்தில் பாண்டு செத்துப் போனானோ? பாண்டுவுக்கு தலை வெடிக்கும், எனக்கு நெஞ்சு வெடிக்குமோ? எதனால் பாண்டுவுக்கு அந்த சாபம்.

ஒரு நிஷி தன் பத்தினியுடன் மானாய் உருவெடுத்துக் கூட, வேட்டையாட வந்த பாண்டு மகராஜன் வில் வளைத்து அம்பெய்ய, அம்பு இரண்டு மான்களையும் துளைத்துக் கொல்ல, கூடவில் இருந்த பெண்மானே மான் தன் தலையில் சரிந்தன

மானாயிருந்த நிஷி சாபமிட்டார். "என் துணை யோடு நான் இன்பமாய்க் கூடி நிற்கையில் எங்களைக் கொன்ற பாண்டுவே, உனக்கு பெண்ணைக் கூட முடி யாது போகட்டும். அப்படியே கூடினால், உன் தலை வெடித்துப் போகட்டும்." எனக்கும் அப்படித்தான் சாபமா, எந்த ஜென்மத்திலோ, யாரோ கூடும் போது நான் வாள் உருவிக் கொன்றேனோ, அது சோழர்கள் காலமோ, பாண்டியர் அரசாண்ட நேரமோ, பல்லவர் அரசாண்ட பொழுதோ, எதைப் பிரித்தேன்? பறவையா -மிருகமா-பூச்சியா-மனிதரா? பாஸ்கரன் நெஞ்சக் குழம் பித் தவித்தது இன்னொரு தாயுமானவர் பாட்டு மன சிற்குள் வந்தது.

பாவியேன் இனி என் செய்கேன்
பரமனே! பணிந்து உன் பாதம்
சேவியேன்; விழி நீர் மல்கச்
சிவசிவ என்று தேம்பி
ஓவியே நிறைய வந்த
அமுதமே என்னோன்; அந்தோ
சாவிலோம் சமயத்து ஆழ்ந்து
ஜகத்திடைத் தவிக்கின்றேனே.

அழுகை வந்தது. கண்ணில் நீர் கட்டி, காதோரம் வழிந்தது மண்டியிட்டு மரகதவல்லி நைட்டியைத் தலை வழியே அவிழ்க்கும் காட்சி வந்தது. நல்லதும் கெட்ட தும் பாஸ்கரனை மாறி, மாறி வெட்டின.

கெட்டவனாயிருப்பவனுக்கும், நல்லவனாயிருப்பவ

னுக்கும் லேதனையேயில்லை. நல்லதற்கும் கெட்டதற்கும் நடுலே அகப்பட்டுக் கொண்டலன்தான் பாவி. அவனுக்குத்தான் புலம்பல் அதிகம். தாயுமானவரும் பாவியா. அதனால்தான் புலம்புகிறாரா? லெவ் செவாலேபாதும் வரும் எனத் தேற்றல் என்கிறாரா. எல்லாம் கடவுள் செயல் என்பது தெரியவில்லையா?

இனி என்ன செய்வது? சத்தியமூர்த்தி வந்து உற்றுப் பார்த்தால் என்ன பதில் சொல்வது? "மரகதவல்லி கேவிக் கேவி அழறா தெரியுமா? நீ இப்படிச் செய்லேன்னு நான் நினைக்கலே யில்லை பாஸ்கரா?" இதற்கு என்ன பதில் சொல்வது.

மரகதவல்லி என்னை மன்னித்துவிடம்மா. காலில் விழுந்து வணங்க வேண்டுமா. வாழ்க்கை தமிழ் சினிமாவா. நாவலா. பைஜாமாவும், தீப்பாவும் போட்டு தூணைப் பிடித்துக் கொண்டு நிற்கிற ஜெமினி கணேசன் போல சோகமாய் நிற்க வேண்டுமா?

பார முலை முகம் தழுவி-என்ன வார்த்தை இது. பார்த்தால் பாட்டு வந்து விட்டதா. பாட்டால் பார்த்தது பதிந்து விட்டதா. சொல்லால் செயலா. செயலால் சொல்லா.

"இப்ப பிபிசி தல்லா வருது அங்கிள்' அந்தப் பையன் ஹாலுக்கு நடுலே வந்து பாஸ்கரன் வீட்டு டி. வி. யைப் போட்டுப் பார்த்தான். ஒல்வொரு சேலலாய் போட்டுக் கொண்டு வந்தான்.

"அங்கிள் மைக்கேல் ஜாக்சன்! என்று கூவினான் மிழுதிக் டி.வி.யில் மைக்கேல் ஜாக்சனும் ஒரு நீக்ரோ பெண்ணும் பேயோட்டம் ஆடிக்கொண்டிருந்தார்கள்.

"டி. வியை அணைச்சுடுப்பா" பாஸ்கரன் தலை திருப்பிக் கொண்டான். அந்தப் பையன் அணைத்து

விட்டுப் போக வீடு மறுபடியும் நிசப்தமாகியது. மன்னிலைதேகியுடன் அவன் வீட்டிற்குப் போய் விட்டான் போதும். அண்ணாவும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறது. சத்தியமூர்த்தி இப்போது வந்து சண்டை போட்டால் நல்லது. யாருக்கும் தெரியாமல் அவனை சமாதானப்படுத்தலாம். மன்னிப்பு வேண்டுமானாலும் கேட்கலாம். சொந்தத் தம்பியிடம் மன்னிப்பு கேட்க வேண்டிய நிலையெழுந்து எனக்கு இரண்டு கைகளாலும் பாஸ்கரன் தெற்றியடித்துக் கொண்டே நேரம் சத்தியமூர்த்தி உள்ளே நுழைந்தான். கதவோரம் செருப்பு கழற்றியபடியே அவனை வியப்புடன் பார்த்தான்.

"எதுக்கு தலையில அடிச்சுக்கற?" அருகில் நடந்து வந்தபடியே கேட்டான்.

"சொல்லு என் தலையில அடிச்சுக்கற?"

"ஒண்ணுமில்லடா."

"அழுதியா."

"இல்லை."

"கண்ணுலேர்ந்து காது வரைக்கும் ஈலம் வழிஞ்சிருக்கு."

"ஏதோ கண் எரிச்சல்."

"பொய் சொல்லாத பாஸ்கரா."

"நிஜம் சொல்ல முடியாது சத்யமூர்த்தி."

"நாங்க ஸிஸ் அடிக்கறத பார்த்துட்ட. நான் என்ன சொல்லுலேனென்று பயப்படறே. அவ்வளவு தானே...?"

அந்தக் கேள்விக்கு பாஸ்கரன் பேசாதிருந்தான்.

"உங்க வீட்ல பி.பி.ஸி. வருதா, உங்க வீட்ல பி.பி.ஸி வருதான்னு அந்தப் பையன் கேட்ட போதே நினைச்சேன். உன்னைய ஏன்டெனா செக் பண்ண கூப்பிடுவாங்கன்னு. மரகதவல்லி கிட்டேயும் சொன்னேன். இதைவிட்டா இந்த வாரம் முழுக்க சான்ஸ் கிடைக்காது. கிட்டவாள்ளுச்சு மரகதவல்லி. நீ யாரையும் படியேற விடமாட்டேன்னு எனக்குத் தெரியும். உனக்குத்தான் தெரியுமென்னு நான் பேசாது வினையாட்ல இறங்கிட்டேன். நீ தான் அந்தப் பையனை பாட்டு பாடிட்டுப் போன்னு சொன்னியா. டக்குன்னு ஒதுங்கிட்டோம். அப்புறத்தான் மரகதவல்லி சொல்லுச்சு. பாவம் உங் கண்ணா, நாம நில்ல அடிக்கறத பார்த்தா அவர் மனசு கஷ்டப்படாதான்னு சொல்லுச்சு. அப்படியே அவனை விட்டுட்டு கீழே வந்துட்டேன்."

"டேய் நீ என்ன்டா எனக்காகப் போய்..." பாஸ்கரன் தழுதழுத்தான்.

"நான் பண்றது தப்புத்தான் பாஸ்கரா. உனக்குக் கல்யாணம் ஆகாது. நான் மட்டும் ஒரு பொண்ணோட ஜல்சாவா இருந்தா நல்லா இருக்குமா?"

சத்தியமூர்த்தி ஏன் இப்படி கர்ணகடூரமாய் பேசுகிறான். ஒரு தாயுமானவர் பாடல்கூட இவன் படிக்கலே யில்லையா? அண்ணாவும், பாஸ்கரனும் வளர்ந்தது போல் இவன் வளரவேயில்லையா. ஜல்சா என்ற வார்த்தையை இங்கே உபயோகிக்கலாமா? மரகதவல்லி அவனுக்கு மனைவியாகப் போகிறவளில்லையா. அவனை மதிக்கலேயில்லையா?

"டேய். அந்தப் பொண்ணை தைலிட்டுடாதடா. பாவம் அது. பெண் பாவம் பொல்லாதது."

"ஏன் கை விடணும். பைத்தியமா எனக்கு. அவ

ளுக்கு மட்டும் இருநூறு சவரன் நகை இருக்கு அவுங் கப்பாகிட்ட மொள்ள பேசிட்டாளாம சத்தியமூர்த்தி நல்லபடியா பழகறாரு. அவருக்கு என்னைப் பிடிச்சிருக் குன்னு சொன்னாளாம். அவங்க வீட்ல சரின்னா நானே வந்து பேசறேன்னாராம் அவங்கப்பா. நம்ம மன்னி சரின்னுமா? இல்லை மக்கர் பண்ணுமா?"

"என்ன பாஷைடா பேசற."

"இப்ப பாஷையா முக்கியம். மேட்டர் எப்படி ஆகுது. அதைச் சொல்லு."

"எனக்குத் தெரியாது. பேசிப் பார்க்கணும்."

"எனக்கு சப்போர்ட் பண்ணி இதை எப்படியாவது முடிச்சுக் கொடேன்."

"காசுக்கு ஆசைப்பட்டுக் காதலிக்கிறியா?"

"காசு, பொண்ணு ரெண்டையும் காதலிக்கிறேன் தப்பா? ஏழையா இருக்கற பொண்ணை லவ் பண்ணினாத் தான் உத்தமமா?"

"காசு கிடைச்சப் பிறகு அந்த பெண்ணை உதறிட் டேன்னா?"

"அது கொட்டைய நசுக்கிடும்."

"என்ன?"

"எல்லாப் பெண்ணையும் டபாய்க்க முடியாதும்மா. இப்பெல்லாம் லேடீஸ் ரொம்ப ஜாக்கிரதையா இருக் காங்க. மரகதவல்லி என்ன தெரியுமா சொல்லுது. கல் யாணப்பு ஏன் துட்டுசெலவழிக்கணும். உங்கண்ணன் மாட்டேன்னு சொன்னார்னா நல்லாப் போச்சு. நிறு நீர் மலைல மாலை மாத்திக்கிறு இங்கே வந்து எல்லோ குக்கும் ஜாங்கிரி, போண்டா கொடுத்துடுவோம். கல்

யாணத்துக்குன்னு அப்பா வச்சிருக்கற காசில சிங்கப்பூர் போய் ஒருவாரம் தங்கிட்டு வருவோம்ன்னுது. அண்ணன் மாட்டேன்னார்னா சிங்கப்பூர் கல்யாணத்துக்கு சரின்னார்னா கொடைக்கானல். எது பெட்டர். அதுதான் புரியல.''

பாஸ்கரனுக்கு சிரிப்பு வந்தது. எழுந்து உட்கார்ந்தான். துண்டால் முகம் துடைத்துக் கொண்டான்.

''அண்ணாகிட்ட நான் மொள்ள பேசறேன். நீ இப்போதைக்கு வாய் திறக்காதே'' வாக்குறுதி தந்தான்.

''தாங்க்யூடா'' என்று சத்தியமூர்த்தி எழுந்ததும் அவன் கையைப் பற்றித் தடுத்தான்.

''மரகதவல்லி என்னைத் தப்பா நினைச்சுக்கலியே.''

''அது திமிர் புடிச்ச பொண்ணு. எது பத்தியும் பயப்படாது.''

''உனக்கு சரியா வருமா?''

''நான் தான் சரி அதுக்கு. கடிவாளத்தை லூசா விடுற மாதிரி விட்டு சட்டுன்னு இறுக்கித் திருப்பிடுவேன். இறுக்கினதும் தெரியாது, திருப்பினதும் தெரியாது.''

''அவங்கம்மாவுக்கு நீங்க மாடில நின்னது தெரியுமா?''

''தெரியாதா என்ன. அது ஒதுங்கற மாதிரி ஒதுங்கிக்கும். நான் உள்ள போற மாதிரி போயிடுவேன். அந்தம்மா அவங்களோட இருக்கிற மாப்பிள்ளையா பார்க்கறாங்க. எனக்கும் அங்க இருக்கறது ஒன்னும் கஷ்டம் இல்லை.''

''நல்ல குடும்பமா அது.''

''அதைப்பத்தி நமக்கு என்ன. மரகதவல்லி தான் முக்கியம். அதை எப்படி மடக்கறதுன்னு எனக்குத் தெரியும்.

அவ ஆத்தாளுக்கும் நமக்கும் என்ன கனெக்ஷன். நான் யாருன்னு உனக்குத் தெரியவே தெரியாது. என்னைப் பத்தி கவலைப்படாதே. எனக்கு அதை எப்படியாவது முடிச்சுக்குடு போதும். நம்மலல் எப்படியாவது சக்ஸஸ் ஆகணும். எனக்கு ஹெல்ப் பண்ணும்மா'' சொல்லி விட்டுப் போனான். இது காதலா. நானெதற்கோ பயந்து கிடக்க. தானே முன் வந்து தனக்கு உதவி செய் என்று விட்டுப் போகிறானே. என்ன இது? எதனால் இது? காதல் மயக்கத்தில் வெட்கம், நாணம் எல்லாம் உதறி விட்டுப் போகிறானோ. காதல் இப்படிச் செய்யுமோ. இதுதான் காதலோ.

அல்லும் பகலும் பேரன்புடனே தானிருந்தால் கல்லும் உருகாதோ கல்நெஞ்சே, பொல்லாத தப்பு வழி ஏன் நினைத்தாய்

தாயுமானவரை மறுபடியும் மனசு பற்றிக் கொண்டது. இது காதலில்லை. காமம் காசு மயக்கம். இது வெல்லாம் தாண்டி வாழ்க்கை என்று ஒன்று உண்டு. இவனுக்கு அதை எப்படிச் சொல்வது. எவ்விதமாய் சொல்லித் தருவது.

சொன்னவர் தான் நிஷ்டை தொகுத்திலார். நிஷ்டையிலே மன்னினவர் போதியார்.

காதல் என்றால் என்னவென்று எனக்குத் தெரியாமல் இவனுக்கு எப்படி போதிப்பது. எனக்குள்ளும் காமம் பொங்குகிறதே. இவனை எப்படித் தடுப்பது. மரண வெறுப்பிலே இருக்கிற எனக்கு வாழ்க்கைப் பற்றி பிறருக்குச் சொல்ல என்ன அதிகாரம். உதவி என்று கேட்கிறான். செய்வோம். மற்றவை அவன் தலை எழுத்து போல் ஆகட்டும். பாஸ்கரனுக்கு பசித்தது மெல்ல சமையலறைக்குப் போனான். தலைவலி குறைந்திருந்தது. எதிலிருந்தோ யாரோ காப்பாற்றியது போல் ஒரு நிம்மதி

பரவியது சாதத்தில் மோர் ஊற்றி அள்ளி அள்ளி சாப்பிட்டான்.

பாரமுலை முகம் தழுவி-இப்போது அந்த வரி சிரிப்பைக் கொடுத்தது. இது மட்டுமே வாழ்க்கை அல்ல என்று தோன்றியது.

கீழே பாட்டு சத்தம் கேட்டது. மணி என்ன? ஒன்பதா. பாஸ்கரன் மெல்ல நடந்து பால்கனிக்குப் போனான். இரண்டு கூட்டடத்திற்கும் உள்ள இடை வெளியில் பூத்தொட்டிகள் வைத்துக் கொள்ளலாம் என்று கட்டப்பட்ட சுவரருகேயுள்ள படிக்கட்டில் பத்து விருந்து இருபது வயதிற்குட்பட்ட பையன்களும் பெண்களுமாய் உட்கார்ந்திருந்தார்கள். அன்றைய தேதிக்கு பிரபலமாகியுள்ள திரைப்படங்கள் பற்றிப் பேசினார்கள். ஆத்தி இது வாத்துக் கூட்டம் என்று கோரஸாய் பாடினார்கள். பொன்மேனி உருகுதே என்று குழைத்தார்கள். ராஜாதி ராஜன் இந்த ராஜா என்று நடனமாடினார்கள். எல்லோரும் கல்லூரியில் பள்ளியில் படிக்கிற பையன்கள், பெண்கள். அவர்களுக்கு அதுதான் கவிதை. அந்த சினிமா பாட்டுத்தான் பேரிலக்கியம்.

அந்தப் பாட்டிலுள்ள அர்த்தம் கூட முழுக்கப் புரியுமா என்பது சந்தேகம் தமிழ் அவர்களுக்கு ஒரு கடினமான மொழி. அது சினிமா வரைக்கும் தான் வரும். சிந்திக்கச் சிறந்தது ஆங்கிலம் என்பது ஒரு அபிப்பிராயம். சிந்திக்காமல் பாட்டுப் பாட சினிமாப் பாட்டு தான் சுகம். பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் அதிகம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. இப்படி பத்துப் பேராய் படிக்கட்டில் கூடி, எந்த சிந்தனையுமின்றி ஆத்தி இது வாத்துக் கூட்டம் என்று பாடலாம். கிளுகிளுத்து சிரிக்கலாம். திசை தெரியாது நடனமாடலாம். யார் வாத்துக் கூட்டம் அவர்களேவா. அல்லது இந்த ஊரா-புரியவில்லை

உண்பது உறங்குவது தவிர வாத்துக்கு எதுவும்

தெரியாது. பெரியவர் குறைவு. வாத்தை வைத்துக் கொண்டு எதுவும் பழக்க முடியாது. கினிபோல் சொன்னதைச் சொல்லாது. காக்கை போல் கலந்துண்ணாது. குயில் போல் விடியல் பார்த்துக் கூவாது. சேவல் போல் சண்டையிடாது. மயில் போல் மழைக்கு நல்லரவு கூறாது. வாத்து எதுவுமற்ற மக்கு. எது பற்றியும் சீரியஸாய் எடுத்துக் கொள்ளாத மக்கு. உண்டு தூங்கி, முட்டையிட்டு செத்துப் போகும் மனிதர்களுக்கும் அப்படியோ. எந்த நல்ல விஷயமும் இங்கு எடுபடாதே. மயக்கம் தான் வாழ்க்கையோ, மாயை தான் உண்மையோ. இங்கே தேடலில் இறங்குபவன் பைத்தியக்காரனோ, ஏன் எதற்கு என்று கேட்டவன் முட்டாளோ. இந்த வாழ்க்கையைத் தாண்டி வேறு என்ன உண்டு என்கிற கேள்வி வரவே கூடாதோ.

காகம் உறவு கலந்து உண்ணக்
கண்டீர்; அகண்டா காரசிவ
போகம் எனும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பி பூரணமாய்,
ஏக உருவாய்க் கிடக்குது ஐயோ;
இன்புற்றிட நாம் இனி எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் ஜகத்தீரே!

நான் ஒரு பாட்டுப் பாடுகிறேன் என்று இதைப் போய் கீழே பாடினால் சிரிப்பார்கள். அங்கிள் அறுக்கிறார் என்பார்கள்.

டேய் பாஸ்கரா உனக்கு ஒன்னு சொல்லட்டுமா? உன் மனசு சுவிற்று-அங்க பாடறவங்க யாருக்கும் ஹார்ட் அட்டாக் வரலடா. யாருக்கும் எந்த நோயும் இல்லை எல்லோருக்கும் உடம்பு ஆரோக்யம் ஏக்னாசா இருக்கு. மனசு ஆரோக்கியம் அதைவிட நல்லாயிருக்கு.

உனக்குத்தான் சாவு மாடில உட்கார்ந்திருக்கு. அந்த பயத்துலதான் அறுபது வயசில அப்பா படிச்ச நாயுமான வர் பாட்டை இப்ப படிச்சுட்டு அழுவுறே. உடம்பு நல்லாருத்தா ஒரு வார்த்தை தமிழ் படிப்பியோ நீ ஒரு சாமி பாட்டு பாடுவியா நீ உனக்கு பயம். சாவு பத்தி பயம். நாளைக்கு செத்துடுவோமோ, நாளன்னைக்கு செத்துடுவோமோன்னு பயம். அதுதான் சேர வாரும் ஜெகத்தீரேங்கற உடம்பு நல்லாயிருந்த போது என்ஜீனியரிங் தானேடா சேர்ந்தே. ரோட்டரி கிளப்ல தானேடா மெம்பராலே. மோட்டார் சைக்கிள் ஆசோஸியேஷன் ஃபார்ம் பண்ணலாம்ன்னு கேட்டே, கார் ரேஸ்ல கலந்துக்க காசு கட்டினே. உனக்கு எல்லாம் புரிஞ்சுட்ட மாதிரியும், அந்த பசங்க அல்பம் மாதிரியும் அலட்டிய. உன் பாட்டு, உன் புத்தி, உன் கடவுள் உன் வரைக்கும் வச்சுக்கோ. அந்தத்தலனுக்குத் தெரியலையேன்னு அலட்டாதே. பெராமைப்பட்டு இது தான் நல்லதுன்னு சொல்லிக் கொடுக்காதே. உனக்கு முடியலை. நீ சும்மா இரு.

சும்மா இருக்கிறதுன்னா என்னன்னு தெரியுமா? உனக்குத் தெரியாது. ஓரமா உட்கார்ந்து சும்மா இரு. சும்மா இருக்கறதுன்னா என்னன்னு யோசிச்சுக்கிட்டே சும்மா இரு. பால்கனி நாற்காலியில் பால்கரன் குத்திட்டு உட்கார்ந்தான். யாரோ, ஒரு பெண் பிள்ளையை 'போனும் சீக்கிரம் வா' என்று கூப்பிட, அந்தப் பெண் நண்பர்களிடம் ''குட் நைட். ஸ்வீட் ட்ரீம்ஸ்'' என்று சொல்லிவிட்டுப் போனாள். ஐந்து நிமிடத்தில் மெல்ல மெல்ல அங்கு இருந்த எல்லோரும் கலைந்தார்கள். மறுபடி நாளை இரவு கூடுவார்கள். ஆத்தி இது வாத்துக் கூட்டம் என்று பாடுவார்கள்

ஒரு வேளை இப்படிப் பாடுவது சுகமோ. சும்மா இருப்பது போலச் சுகமோ. அல்ஜீப்ரா கணக்குப் போடா

மல் சரித்திரம் மனப்பாடம் செய்யாமல் கெமிஸ்ட்ரி படிக்காமல், ஆங்கிலம் எழுதி எழுதிப் பார்க்காமல் கும்மாவுக்கு, அப்பாவுக்கு, வாத்தியாருக்கு பயப்படாமல், தொன்னூற்றி எட்டு சதவீதம் வாங்க வேண்டுமே என்று தலைப்படாமல், மெடிக்கல் காலேஜ், என்ஜீனியரிங் காலேஜ் என்டரன்ஸ் எக்ஸாமினேஷன் எழுதாமல், டியூஷனுக்குப் போகாமல், லயலின் க்ளாஸ், வாய்ப்பாட்டு, கராத்தே வகுப்பு என்று அலையாமல், எந்தக் கலையையும் தில்லாமல் ஆத்தி இது வாத்துக் கூட்டம் என்று பாடுவது சுகமோ-சும்மா இருந்தலோ. தமிழ் சினிமாவும், சிரிப்பு டிராமாவும் இதனால் தான் பிடித்து விட்டதோ. தூங்கப் போகும் முன் இப்படி இரண்டு மணி நேரம் மனசு விட்டுப்பாட, அன்றையப் பொழுதின் அழுப்பு மொத்தமும் காணாமல் போகுமோ

வாத்து இரண்டு மணி நேரம் தான் தூங்கும். நான் முழுக்க ஆற்றில் நடந்து விட்டு இருட்டிய பிறகு இரண்டு மணிநேரம் அசையாமல் உட்கார்ந்திருக்கும். பிறகு மறுபடியும் அலையத் துவங்கிவிடும். எல்லாப் பறவைகளும் இரண்டு மணி நேரம் தான் தூங்குகிறதாம். காரணம் தாக்கப்பட்டு விடுவோமோ என்கிற மரண பயமாம். மனிதனுக்கு மரண பயம் கும்மியோ. அல்லது மரணம் பற்றி மறதியோ. ஆனால், எனக்குத் தொடுப்பினை வேறாக இருக்கிறது. நாளை பொழுது நமனோ அறியேன் என்று தோன்றுகிறது. இங்கேயே உட்கார்ந்து இரவு முழுவதும் வானம் பார்க்க மெல்ல கிழக்குப் பக்கம் வெளிற, பொழுது விடிந்தது யாம் செய்த தவத்தான் என்கிற பாட்டு மனசுல் வருகிறது.

மல்லிகையின் எல்லா வீடுகளும் மெல்ல மெல்ல அணைகின்றன ஒரு மெடிக்கல் காலேஜ் மாணவன் மட்டும் ஜன்னலோரம் விளக்குப் போட்டு படித்துக் கொண்டிருக்கிறான். அரை மணியில் அவனும் தூங்கப்

போய் விடுவான். வாசற் கதவு சாத்தியிருக்கிறது. மன்னி சாப்பிட்டுவிட்டு அண்ணாவின் அறைக்குப் போய் விட்டார் போலும். அடித்த அறைக் கதவு திறந்திருக் கிறது. உள்ளே தம்பி குப்புறப்படித்துக் கொண்டிருக் கிறான் மல்லிகையின் எல்லா வீட்டிலும் ஆணும் பெண்ணுமாய்ப் படுத்துக் கொண்டிருப்பார்கள். இங்கு எதேனும் ஒரு வீட்டில் கூடல் நடந்திருக்கக்கூடும். நடந்து கொண்டிருக்கக்கூடும். தினம் காலையில் பூஜை செய்வது போல இரவு நேரமானால் இதையும் எவரேனும் செய்யக் கூடும். தொளாயிரம் சதுர அடியை என் வீடு என்றும், வாய் நாறும் ஆணை என் கணவன் என்றும், அக்குள் வியர்த்த பெண்ணை என் மனைவி என்றும் படுக்கை யிலேயே மூத்திரம் போகும் குழந்தையை என் குழந்தை யென்றும் கொஞ்சிக் கொஞ்சி இங்குள்ள பெண்கள் ரசிக்கக்கூடும். வெளியே கொட்டிக் கிடக்குது ஐயோ என்று சொன்னால் போடா பைத்தியக்காரா என்று சொல்லக்கூடும்.

வெளியே கொட்டிக் கிடப்பது எனக்குத் தெரிந்ததா. நானும் தெரியாமல் பொய் பேசுகிறேனா. தெரிந்தது போல் அலட்டுகிறேனா. எத்தனை விதங்கள் தான் சுற்றினும், கேட்கினும் என் இதயம் ஒடுங்கவில்லையே என்கிறார் தாயுமானவர் சுவாமிகள். ஞான மார்க்கம் தெரியுமா என்று எவரேனும் கேட்டால் கர்மம் தான் சிறந்தது என்று சொல்லுவேன். கர்மம் நல்லது என்று வேறொருவர் சொன்னால் ஞானம் அறியுமா அது என்பேன் என்று நெஞ்சோடு புலம்புகிறார். நானும் அப்படியோ, சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்கிற கதையோ, சும்மா இருக்க முடியவில்லையோ-மற்றவரை குறை சொல்லி தன்னை உயர்த்திக் கொள்ளும் வாடிக்கையோ? உடம்பு முழுவதும் வாயாய் பேசி சாகப் போகிறேனோ?

யார் வீட்டுக் கதவோ மெல்லத் திறப்பது கேட்டது.

அது பால்க்காட்டு ராமேந்திரன். ஏதோ ஒரு கம்பெனி யில் கான்டீன் நடத்துகிறவர். இரண்டு மூன்று பெரிய ஹோட்டலுக்கு ஸ்விட் மட்டும் போட்டுக் கொடுக்கிறவர் அவர் சம்பளை ஓசையின்றி திறப்பது தெரிந்தது இருபு மூடியை முற்றிலுமாய் நீக்கிவிட்டு கயிறு கட்டி பெரிய தலையை சம்பிற்குள் இறக்கினார். தளும்பத் தளும்ப நீர் எடுத்தார். ராமேந்திரன் மனைவி சுசீலா பக்கெட் கொண்டு வந்து மெல்ல வைக்க தலை நீரை பக்கெட்டில் கொட்டினார். ரொம்ப மெலிசாய் அந்த நீரை ஏதோ ட்ரம்பில் ஊற்றுவது கேட்டது.

"சத்தங்காட்டாதேடி" மனைவியை அவர் கடிந்து கொள்வதும் கேட்டது.

என்ன அநியாயம் இது. எதற்கு இப்படித் திருட்டுத் தண்ணீர் எடுக்க வேண்டும் மழை பெய்து கார்ப்பரே ஷன் வாட்டர் தான் வருகிறதே. எதற்கு இந்த அல்பத்த னம்.

அந்த ராமேந்திரனுக்கு லெயிலுமாகாது மழையுமா காது இயற்கை இடைவிடாது குறை சொல்லியாக வேண்டும் அவருக்கும். ஒரே சூடு. ஒரே சூடு இல்லையா என்று எல்லோரையும் கேட்டுக் கொண்டிருப்பார். நாலு நாள் மழை பெய்தால், ஒரே தணுப்பு ஒரே தணுப்பு என்று சொல்லிக் கொண்டிருப்பார். ஒரு வேளை, வேலை செய்த இடத்தின் அலுப்பு தாங்காமல் குளிக்க எடுத்துக் கொண்டு போகிறாரா, அதற்கு பத்து பக்கெட்டா?

'யோவ் மலையாளி...' இங்கிருந்து ஒரு அதட்டல் போடலாமா? நாலு பேரை எழுப்பி மாட்டி விடலாமா? எத்தனை நாளாய் இந்தத் திருட்டுத்தனம் என்று அவ மானப்படுத்தலாமா?

எதற்கு? வேண்டாம். உள் மனசு மறுத்தது. என் தண்ணீரா அது என்று கேள்வி கேட்டது. எனக்குத்

தேவையான தண்ணீர் கிடைக்கிறது. இவனை எதற்கு அடக்குவது. உள்மனம் கேள்வி கேட்டது.

இது திருட்டில்லையா. திருட்டுதான். போகட்டும்.

"அதெப்படி நாலு பேருக்கு முன்னாடி அவமானப் படுத்தி பெரிய சண்டை போட்டு..."

"இல்லை. இது உன் வேலையில்லை. நீ சும்மா இரு. உன்னால் சண்டை போட முடியாது. உரத்துக் கத்த முடியாது. அடிக்க முடியாது. அடி தாங்க முடியாது. துரத்தினால் ஓட முடியாது. உன் ஹிருதயம் ஒரு பதூன். உப்பி எப்போது வேண்டுமானாலும் வெடிக்கும் பதூன். இப்படி சண்டை போட நினைப்பதே உனக்கு படபடப்பாய் இருக்கிறது. சும்மா இரு. சும்மா இரு..."

அந்த சம்பாஷை சத்தமில்லாது மூடி சுற்றிலும் சிதறிய நீரைப் பழைய கோணியால் துடைத்துவிட்டு ராமேந்திரன் கதவு சாத்திக் கொண்டார். அவர் வீட்டிற்கு அருகேயிருந்து குளிக்கும் சத்தம் கேட்டது. ராமேந்திரன் தான் குளிக்கிறாரோ, ஒரு வேளை கூடலுக்குப் பிறகு நடக்கும் குளியலோ. ராமேந்திரனும் அவர் மனைவியும் மாறி மாறித் தண்ணீர் விட்டுக் கொண்டு பரஸ்பரம் சோப்பு தேய்த்து ஜலக்கிரீடையோ, போதும் உன் கற்பனை—சும்மாயிரு. சும்மாயிரு

நீலவானத்தில் நாரைகள் வில் வளையமாய்ப் பறந்து கொண்டிருந்தன. ஒரு சிறிய பஞ்சுப் பொதி மேகம் அம்மாவைப் பிரிந்த குழந்தை மாதிரி மலங்க மலங்க தின்று கொண்டிருந்தது நாற்காலியை சுவரோரம் தகர்த்தி காலைத் தூக்கி பால்கனியில் போட்டுக் கொண்டான். இப்போது கட்டிடங்கள் மறைந்து போய் வானம் மட்டும் தெரிந்தது. பின்தெருவில் வேப்ப மரத்தின் விளிம்பு தெரிந்தது. எல்லா ஆண்டெனாக்களும் வடக்கு

நோக்கி கைவிரித்துத் தொழுதுக் கொண்டிருந்தன. எங்கேயோ தொப்பென்று சத்தம் கேட்டது. யாரோ எதையோ தாண்டுகிறார்கள் என்று உள்ளுணர்வு அறிவித்தது. எழுந்து யாரென்று பார்க்கலாமா?

"வேண்டாம். உனக்கென்ன சும்மா இரு."

வீட்டுக்குள் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. அண்ணா கதவு திறந்து வெளியே வருவதை ஓரக்கண்ணால் கணிக்க முடிந்தது. அண்ணா அருகே வர, பாஸ்கரன் கண்களை மூடிக்கொண்டான். அண்ணா பாலகுமாரன் கண்ணாடிக் கதவை மெல்ல சார்த்தினான். பாத்ரூம் லைட் போட்டுவிட்டு கதவு திறந்து வைப்பது கண்ணாடி வழியே தெரிந்தது.

என்ன செய்கிறான் அண்ணா? ஆச்சர்யம் வந்தது. உடம்பசைக்காமல் மெல்ல முகம்திருப்பி பாத்ரூம் வெளிச்சத்தில் அண்ணா டெலிபோன் அருகே உட்கார்வதைக் கவனித்தான். பட்டன்களை அழுத்தினான். டெலிபோனைக் காதில் வைத்துக் கொண்டான். எங்கோ மணி அடிப்பது கேட்டது. மணியடிப்பது நின்றது. பாஸ்கரன் மெல்ல கை நீட்டி கதவை லேசாய் திறந்து வைத்தான்.

"வைதேகி நான்தான்" அண்ணா அடிக்குரலில் பேசினான். பாஸ்கரனுக்கு திக்கென்றது.

"ரொம்ப அடிச்சுட்டனா வைதேகி. எனக்கு மனசே தாங்கல. நான் என்ன பண்ண முடியும் சொல்லு."

அடப்பாவி பாஸ்கரன் மனது அலறியது. உடம்பில் சின்ன கிடுகிடுப்பு ஓடியது.

'மத்தியானம் புரொடக்ஷன் மீட்டிங். சரியா பேச முடியலை சரி வீட்டுக்கு வந்து சாரு தரங்கினி பிறகு போன் பண்ணலாம்னு நினைச்சேன். ரொம்ப அடி

கட்டாணா வைதேகி. ஒருதான் இல்லேன்னா ஒருதான் இல்லேன்னா ஒருதான் உன் புருஷனை நம்குன்னு கார்ல இடிச்சுக்காப் போறேன். நான் போலீசுக்குப் போனாலும் பரவாயில்லைன்னு பண்ணிடப் போறேன்.

கடவுளே, கடவுளே இதென்ன அநியாயம். அண்ணாவா இப்படி. வேலை வேலையென்று வீட்டைக் கவனிக்காமல் சதா உழைக்கிற அண்ணாவா இப்படி. என்ன இழவு இது. எனித்தக் கள்ளத்தனம்.

விரல் சொடுக்கி ''மறதிலா, தான் முழிச்சின்டிருக்கேன். சொல்லிடலாமா?''

வேண்டாம் சும்மா இரு. இதை வெளியே சொல்லி டி ணமாகும். சும்மா இரு. மல்லிக்குத் தெரிந்தால் அண்ணாவை உண்டு இல்லை என்று ஆக்கி விடுவாள். அந்த வைதேகி தேவடியாளைச் செருப்பாலடிப்பாள். அண்ணாவின் மீது கரித் துப்புவாள். எல்லோருக்கும் ஒரு கும்பிடு என்று வீட்டை விட்டுப் போய் விடுவாள். அது உன்னைத்தான் பாதிக்கும். இந்த வீட்டுச் சண்டை தாங்காமல் உன் ஹிருதயம் வெடித்துச் சிதறும். சும்மா இரு யார் எகேடு கெட்டாலும் உனக்கென்ன சும்மா இரு

''மல்லி நல்லவளில்லையா. மல்லி பாவமில்லையா?''

''யார் இங்கே நல்லவர்கள்? யார் இங்கே பாவம். எல்லாம் மல முத்திரதாரிகள். மோக ஆசை முறியிட்ட பெட்டிகள். யாரோ யாரையோ மோகித்துத் திரியட்டும். உனக்கென்ன சும்மா இரு. எல்லா மனிதர்களும் சிறிய குணமுடையவர்கள். பாஸ்கரன் முகம் நிமிர்த்திக் கண்களை மூடிக்கொண்டான். கதவு காற்றில் சாத்திக் கொண்டது. அண்ணாவின் புரியாத பேச்சுக் குரல் தொடர்ந்து கேட்டது. செவிப்புலனை அங்கிருந்து நீக்கி

வெளியே செலுத்தினான். எங்கேயோ நக்கென்று தாழ் திறக்கும் ஓசை கேட்டது.

''யாரது?'' மறுபடியும் மலையாளியா? யாராய் இருந்தாலென்ன, எவர் பற்றியும் கலைக்கப்படாத உன் னோடு நீ இரு

தந்தை, தாய், தமர், தாரம், மகவு என்னும் இவை யெல்லாம் சந்தையின் கூட்டம். இதிலோர் சந்தேக மில்லை. நீ சும்மா இரு. மனசு அடக்கினான். அண்ணா வினக்கணைத்து விட்டுப் போவது கேட்டது.

''ஏய் யாரு என்னா நீ?'' பெண்குரல் உரத்தாய்க் கேட்டது. கொஞ்சம் கிழவி குரலாய் இருந்தது. ஜிம் போர்ஷனில் ஒரு வயதான பாட்டி பால்கவியில் படுத்துக் தொள்கிறாள். ஒருவேளை அவள் உளறுகிறாளோ என் னவோ, தூக்கத்திலும் ஓர் வாழ்க்கை. துலண்டு துலண்டு போராடும் நினைவு. ஆக்கத்தில் எல்லாம் கலவு. அரிது அரிது எனப்புகழ் தேடும் போதை தாக்கம் வெளி யிலிருந்து உள்ளே வந்திருந்து லகை லகையாய்க் கொள் ளும் ஊக்கமுடன் உள்விருப்பதை வெளியே எவர் சொல்லத் துணிவார். உழல்வார் மாக்களே உயிரோடு சாகாதீர். எந்நாளும் எங்கும் சுரன் துணை.

அட யார் பாட்டு இது? தாயுமான சுவாமிகளா, இல்லை, இது என்னுடையது. இது என்னுடையது. தன் நெஞ்சிலிருந்து தேலலாய் வந்த கவிதை—தாயுமான வர் பாடல்களைப் படித்துப் படித்து தனக்குள் எழுந்த லேகம். சரியான கவிதையா இது. கவிதை நானா இது. தெரியவில்லை.

தொப்பென்று ஏதோ துணி மூட்டை போல் விழுந் தது. கதவு சாத்தும் ஒலி கேட்டது. என்னென்ன சத்தமோ கேட்கிறதே எட்டிப் பார்க்கலாமா. வேண் டாம் சும்மா இரு. எந்த யோசனையுமின்றி இரு-

அண்ணாவை, மன்னியை, தம்பியைப்பற்றி யோசிக்காதே; உன்னைப் பற்றிக்கூட நினைக்காதே. எதுபற்றியும் யோசிக்காமல் உள்ளேயிருக்கும் வெளிச்சத்தையே உற்றுப்பார். தூங்குவது போல் இரு. தூங்குவது போல் உணர்வோடு இரு. தூங்குவதை உணர்ந்து கொண்டு இரு. இது தூரில். அறிதுயில். அப்படியே இரு. உள்ளே ஏதோ மாறிக் கொண்டேயிருக்கிறது. ஏதோ படங்கள் வந்து கொண்டேயிருக்கின்றனவல்லவா. அது உள் மனசு போடும் படம். அதைக் கவனிக்காமல் இரு. அதற்கும் உனக்கும் சம்பந்தமில்லை என்று இரு. மனம், உள் மனம் எல்லாம் ஒன்றே-எந்த உன்னுதலும் அற்று இரு. எந்த முயற்சியும் அற்றுக்கிட. எந்தக் குறிக்கோளுமில்லாமல் இரு. குறிகோள் உள்ள இடத்தில் தான் குறி பிசகி விடுவதும் நடக்கிறது. எனவே எதுவுமற்று சும்மா இரு. குறி பிசகும் போதுதான் வேதனை' நொய்மை, ஒப்பிட்டுப் பார்த்தல், பொறாமை எல்லாமும் ஏற்படுகிறது. எனவே சும்மா இரு

மனம் போடும் படங்கள் மறைந்து உற்று பார்க்க வெறும் ஒளியாகி ஒளி நீலமாகி குப்பென்று காதடைத்து ரீங்காரம் உள்ளே சுழல சப்தமும், நீலமும் அலைச் சுற்றிக் கொள்ள உடம்பே அல்லாததாய் உணர, உருவமேயில்லாததாய் நகர, கண்கள் மேல் சொருகி, வாய் அகன்று விட, இதுவரை அனுபவித்திராத சுகத்தில் பாஸ்கரன் தள்ளப்பட்டது போல் உணர்ந்தான். மிதந்தான். பிடிப்பேயில்லாமல் கிடந்தான்.

"ஐயோ" என்று யாரோ கத்தினார்கள். அந்தக் கூரான சப்தம் தாக்க அதிர்ந்தான் உடம்பு சட்டென்று உணர்வு பெற்றுத் துள்ள நற்காலியிலிருந்து தூக்கி எறியப்பட்டது போல் விழுந்தான். அப்படியே அரை மயக்க நிலையில் கிடந்தான் நாலா பக்கமும் பளிச் பளிச்சென்று விளக்கெரிவதை உணர முடிந்தது. கதவு நிறக்கும் சத்தங்கள் நிறைய கேட்டன.

"எம் புள்ளைக்கு என்னமோ போலருக்கே. வாங்க சேன்" தேழே மசாலாக்காரப் பெண் குரல் கேட்டது. பாஸ்கரன் தள்ளாடியபடி எழுந்தான். பாக்கெட் சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றான்.

மெடிகல் காலேஜ் படிக்கும் பையனின் கதவை அந்த அம்மாள் தட்டிக் கொண்டிருந்தாள். அந்தப் பையன் கதவு திறந்து வெளியே வந்தான்.

"கண்ணை சொருகி முகம் நீலம் மாரிச்சுருக்கு. உடம்பு வெலுக் வெலுக்குன்னு இழுக்குது. கொஞ்சம் என் புள்ளையை வந்து பாருங்களேன்.

மெடிக்கல் பையன் தூங்கியை இறுகக் கட்டிக் கொண்டு மசாலாப் பெண் போர்வைனுக்கு ஓடினாள். நாலைந்து போர்ஷன் திறந்து என்ன என்று விசாரித்தார்கள்.

"சம்ப் சுத்தி ஈரமா இருக்கு, யாருய்யா தண்ணி எடுத்தது?" யாரோ சத்தமிட்டார்கள்.

"மெயின் கேட் வேற திறந்து கிடக்கு. மூடறதேயில்லையா? என்ன நலவாழ்வு சங்கம், மயிரு சங்கம" தூக்கம் கலைந்த ஆத்திரத்தில் வேறொருவர் கத்தினார்.

"ஆஸ்பத்திரிக்கு போகணும். உடனே ஆஸ்பத்திரிக்கு போகணும். அந்த பையனுக்கு மண்டையில் அடிபடு தாமே. ப்ரெய்ன்ல ஏதோ ப்ராப்ளம் வந்திருக்கு சார்." மெடிக்கல் பையன் வெளியே வந்து கத்தினான்.

"மேல போயி சுந்தரமூர்த்தியை எழுப்பி கார் தேளுங்க. சட்டுன்னு ஆஸ்பத்திரி போயிடலாம்."

"என்னடா என்ன கலாட்டா?" தம்பி அருகே வர, பாஸ்கரன் விஷயம் சொன்னான். தம்பி அண்ணாவைக்

கதவு தட்டி எழுப்ப, அண்ணா சட்டையும், கால் சாலியு மாய் கீழே போனார். மன்னி தலை திருப்பிப் பார்த்து விட்டு மறுபடியும் படுத்துக் கொண்டாள். ஏனி கதவு மூடிக்கொண்டது.

"பையன் உடம்பு ஜில்லுன்னு இருக்கே, உயிருக்கு ஒன்னும் ஆபத்தில்லையே" யாரோ கேட்டார்கள்

"ஐயோ, அப்படியெல்லாம் சொல்லாதிங்கய்யா" அந்த அம்மாள் வாயிலடித்துக் கொண்டு அழுதாள்.

"டேய், கீழே போகலாம் வாடா." தம்பியோடு பாஸ்கரன் கீழே இறங்கினான்.

"எதுக்கு இப்ப எதுக்கு கீழே போகணும். சும்மா இரு" இத்தனை நேரம் மனசு சொன்னதை தடபி சொன் னான்.

"ஏதோ கஷ்டம்னு சொன்னாங்களே போய் பார்ப் போமே..."

"அதுதான் அண்ணன் போயிருக்கான்ல."

"அவனை யாராவது கலைச்சு விட்டு தெரல்ப் பண்ண வேண்டாம்னு சொல்லுவாங்க. நான் தெரல்ப் பண்ணச்சொல்லப் போறேன்.' சுவர் பிடித்துப் படியிறங் கினான். கீழே போனதும் அண்ணாதயங்கி நிற்பது தெரிந்தது.

'பையன் உயிரோட இருக்கானா சொல்லு கூட்டிட் டுப் போறேன். இல்லேன்னா எதுக்கு '

"இருக்கு சார். பல்ஸ் துடிக்கிறதே"

"பாதி வழில நின்னு போயிடுச்சுன்னா?"

"அண்ணா என்ன கேள்வி இது. பையனை கூட்டிட் டுப் போ' பாஸ்கரன் அதட்ட அண்ணா காரைத் திருப்பி

பையனை ஏற்றிக் கொண்டான். அந்த அம்மாவும், இன் னும் இரண்டு பேரும் வண்டியில் திணித்துக் கொண்டு எந்த ஆஸ்பத்திரி போகலாம் என்று விவாதித்தபடியே வண்டி கிளம்பியது

"ஜுப்ளி அப்பா லொட்டு லொட்டுன்னு தலைல அடிச்சிட்டாரு ஒரு ரெண்டுங் கெட்டான்" பையன் சொல்ல எல்லோரும் அவனை அதட்டினார்கள்.

"சைக்கிள் தான் தலையில இடிச்சுது. ஜுப்ளி அப்பா கன்னத்தில தான் அடிச்சாரு." என்று பலரும் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

"இனிமே இங்கே சைக்கிள் ஓட்டுங்கோ சொல்றேன்' அந்த நடு இருட்டில் யாரோ கத்த, அவர் குரல் கலர் பட்டு விநோதமாய் எதிரொலித்தது மேல் மாடியி லிருந்து 'உவ்வே, உவ்வே' என்று குரல்கேட்டது. டொம், டொபமென்று கதவை யாரோ உதைக்கும் சத்தம் கேட் டது.

"அதென்ன சார் சத்தம், யாரோ கதவை உடைக் கறா. மரகதவல்லி வீடா."

"டேய் அது அவ அம்மா குரல்டா" பாஸ்கரனின் தம்பி சத்யமூர்த்தி எதிர்மாடியில் தாவி ஏறினான். கீழேயிருந்து பார்க்க அவன் வெளியே தாழ் போட்ட கதவை அசைத்துத் திறப்பது தெரிந்தது. உள்ளே போய் விளக்குப் போடுவதை உணர முடிந்தது விளக்குப் போட்ட உஷ்ணம் 'அய்யோ அய்யோ' என்று தம்பியின் அலறல் பயங்கரமாய் கேட்டது. பத்துப் பதினைந்து பேர் மாடியில் தாவி ஏறி ஓடினார்கள். எல்லோர் வீட்டு விளக்குகளும் எரிந்தன. தெருவின் எதிர் பக்கத்திலிருந்து தெல்லாம் ஆட்கள் ஓடி வந்தார்கள். அந்த மாடி வராண்டாவில் தம்பியைத் தள்ளிக் கொண்டு வந்து நின்றார்கள்.

''பாஸ்கரா, பாஸ்கரா'' சத்தியமூர்த்தி கீழே நிற்கும் பாஸ்கரனை நோக்கிக் கத்தினான். ''மரகதவல்லியை யாரோ கத்தியால குத்திட்டாங்க'' பெருங்குரலெடுத்து அலறினான் பாஸ்கரனுக்கு 'நிக்' என்று ஒரு வலி நெஞ்சில் குத்தியது. நெஞ்சு முழுவதும் படர்ந்தது. யாரோ கம்பி விட்டுக் குடைவது போல இடது கை முழுவதும் வலித்தது விரல் நுனிகளில் பிளந்து விடுவது போல ஒரு நோவு ஏற்பட்டது. 'மறுபடி ஒரு அட்டாக் வருமா?' பாஸ்கரன் வாய் பொத்திக் கொண்டான் சும்மா இரு' என்று அதட்டினான்.

''பர்க்ளரி சார். சப்ஜாடா எல்லாத்தையும் வாரிக் குனு போயிட்டான். யாராவது தயவு செய்து ரெண்டரைக் குப் போன் பண்ணுங்கோ...'' பயந்து போன நாலு பேர் மாடியிலிருந்து கீழே ஓடி வந்தார்கள்.

''அந்த பொம்பளைய தலைல அடிச்சிருக்கான். அந்தப் பொண்ணை நெஞ்சில குத்தியிருக்கான் சுவரெல் லாம் ரத்தம், தரையெல்லாம் ரத்தம்.'' பதட்டத்துடன் கத்தினார்கள். இரண்டு மூன்றுபேர் வீட்டுக்குள் ஓடிபோலீ ஸுக்கு போன் செய்தார்கள். யாரோ ஒரு கிழவர் வீட்டிற் குள்ளிருந்து சுட்டையெடுத்துக் கொண்டு வந்து தரையில் தட்டினார்.

''ஒருத்தன் கூட இந்த இடத்தை விட்டுப் போகக் கூடாது' கத்தினார்.

''குத்தினவன் எப்பவோ போயிட்டான். இப்ப வந்து கத்தறியே, கட்டைய கீழே போடு. இல்லன்னா உன்னை வந்து பிடிச்சுக்குவான் போலீஸ்காரன்.'' அந்த கிழவரின் மகள் கட்டையைப் பிடுங்கி வீட்டுக்குள் விசிறினாள். அந்த வீட்டிலிருந்து தூக்கம் கலைந்து வந்தவர் மீது கட்டை பட, அவர் 'அய்யோ' என்று அலறினார்.

''எந்தப் பன்னாடை கட்டையை வீசினது'' என்று

கத்தினார். விசயமல் மாடிக்கு வேடிக்கைப் பார்க்கப் போலது போல ஓடினாள். பாஸ்கரன் தன் மனதை சும்மா இரு என்று அடக்கினான். கை வலி குறைந்தாற் போலிருந்தது. நெஞ்சு வலி இன்னமுமிருந்தது.

''ஒன் அவர் முந்தி அந்த தண்ணி லாரி டிரைவர் இப்படி மாடிக்குப் போனான் சார்'' பாலக்காட்டு ராமேந்திரன் கை காட்டினார்.

''சரி, ஏதோ காசு வாங்கப் போறான் நினைச் சேன்.''

'சரி அது உனக்கெப்படி தெரியும்?''

''சும்மா ஜன்னல வழியா பார்த்துட்டிருந்தேன் சார்''

''இப்பத்தான் குளிச்சீரா? உம்ம உடம்புல சந்தன சோப் வாசனை அடிக்கறது''

''இந்தாஞ தான் சம்புலேர்ந்து தண்ணி திருடியி ருக்கணும்''

''ஆமா நான்தான் தண்ணிவெடுத்தேன் என்ன இப்போ? எங்க வீட்டு குழாய் ரிப்பேர்.''

''நாலு நாளா நடு ராத்திரில குளிக்கற சத்தம் கேக்க றது. நாலு நாளாவா குழாய் ரிப்பேர்''

''யோவ் இத விடுங்கய்யா. லிடு புகுந்து கொலை பண்ணியிருக்கான். உடம்பெல்லாம் உதர்றது எனக்கு.''

''கதவை உடைச்சிருக்கானா?''

''தட்டி எழுப்பியிருக்கான் சார்.''

''அப்புறம் குத்திக் கொன்னுட்டு எல்லாத்தையும் வாரிண்டு, கதவை நிதானமா மூட்டிண்டு போயிருக்க

னும். கெழவி பொழைச்சிடுவா. அந்தப் பொண்ணுதான் பாவம். அநியாயமாய் போயிடுத்து ரெண்டு மார்புக்கு நடுவே ஸ்ட்ரெய்ட்டா கத்தி இறக்கியிருக்கான்.''

பால்கரனுக்கு மறுபடியும் நெஞ்சு வலித்தது. சும்மா இரு. தயவு செய்து சும்மா இரு செத்துப் போகாதே. சும்மா இரு. பால்கரன் மனைதைக் கெஞ்சிக் கேட்டான்.

''மரகதவல்லி...மரகதவல்லி...'' தம்பி மாடியில் பினிரலாய் அழுவது வேதனையாயிருந்தது

மெல்ல படியேறினான். திருப்பங்களில் நின்று மூச்சு வாங்கினான். மரகதவல்லியின் வீட்டை எட்டிப் பார்த்தான்

மரகதவல்லி அதே நைட்டியில் தரையெல்லாம் ரத்தம் சேறாய் தேங்க, கையும், காலும் விரித்துக் கிடந்தாள். பிரா இல்லாத அவள் மார்புகள் எதிரெதிராய் அலண்டு கிடந்தன

பாரமுலை முகம் தழுவி
செவ்வாய் விருந்து
அமிர்து எனை அருந்தி
வெறியாட்டுக்கு ஆளாய்...

மனசுக்குள் பாட்டு ஓடியது. சுவரருகே குத்திட்டு உட்கார்ந்து அழுது கொண்டிருந்த தம்பியின் தோளைத் தொட்டான்.

''சத்யா இங்க இருக்காதே, கீழே வா. நான் நல்லதுக்கு சொல்றேன். தயவு செய்து கீழே வா. ரொம்ப அழாதே சத்யா. தப்பாயிடும். நான் சொல்றது உனக்குப் புரியலை. தப்பாயிடும். கீழே வா'' அவனை உலுக்கி எழுப்பினான். அண்ணனும், தம்பியும் கட்டிக் கொண்டார்கள். ஒருவர் தோளை ஒருவர் பிடித்து கொண்டு கிழிறங்கினார்கள்.

''பால்கரா...என் மரகதவல்லி...என் மரகதவல்லி...'' சத்தியமூர்த்தி தேம்பினான்.

''ஸ்...சும்மா இரு ரொம்ப அழாதே. போலீஸ் உன்னையும் சந்தேகப்படும். சும்மா இரு''

''லெள்ளிப் பாத்திரம், நகை எல்லாம் எடுத்துண்டு போயிட்டாண்டா அவ அம்மா தாலிக் கொடியைக் கூட அறுத்துட்டான். நான் மரகதவல்லிக்கு ஒரு மெட்டி வாங்கிக் கொடுத்தேன்டா, அது ரெண்டுத்தையும் வச்சு கை விரல்ல போட்டுண்டா. அது மட்டும் தான் இருக்கு.''

''தயவு செய்து அழாதே. சும்மா இரு. மதந்து கூட உனக்கும அவளுக்கும் லவ்வுன்னு யாருக்கும் சொல்லாதே.''

''நீ மள்ளிக்கிட்ட சொல்லிட்டியா?''

''சொல்லல, இனி சொல்ல வேண்டிய அவசியமுமில்லை. சும்மா இரு''

ஒரு மணி நேரம் கழித்து விடியும் பொழுதில் போலீஸ் வந்தது. மல்லிகையைச் சுற்றிக் கொண்டது.

''அவன் இந்த ஓட்டுக்குத்தான் தண்ணி ஓட்டறானா, என்னடா இந்தப் பக்கம் நடமாடறானேன்னு பார்த்தேன். அவன் பழைய கேடி சார். புடிச்சுடலாம். பாடிய முதல்ல யார் பார்த்தது?''

சத்தியமூர்த்தி சாதாரணமாய் முன்னே போய் ''நான்தான் சார்'' என்றான்.

''நீங்க யாரு?''

''எதிர்பக்கம் குடியிருக்கேன். ஒரு பையனுக்கு உடம்பு சரியில்லைன்னு கேள்விப்பட்டு கீழே வந்தேன். நிறைய பேர் கீழே இருந்தாங்க. மாடில அப்ப சத்தம் கேட்டுச்சு கதவு உடைக்கற மாதிரி. ஒடிப்போய்

பார்த்தேன். செத்துப் போனவங்க அம்மா தலை காயத் கோட கதவு தட்டிக்கிட்டு இருந்தாங்க. கதவு வெளியே தாழ் போட்டிருந்தது.''

''சார் ரொம்ப அழுதுட்டாரு, பாடிய பார்த்த தும்...'' யாரோ சொன்னார்கள்

''நான் ஒன்னும் அழலையா...சும்மா இரு...'' சத்ய மூர்த்தி சொன்ன ஆளை அதட்டினான் அடிபட்ட அம்மாவை வேனிலும், செத்துப் போன மரகதவல்லியை ஆம்புலன்சிலும் எடுத்துக் கொண்டு போனார்கள். சத்யமூர்த்தி ஆம்புலன்சிற்கு அருகே போய் மரகதவல் லியை எட்டிப்பார்த்தான். முகம் துடைத்துக் கொண்டு, பாஸ்கரனுக்கு அருகே வந்து ''போயிட்டாடா'' என்றான். பாஸ்கரன் அவன் கையைப் பிடித்ததில் சும்மா இரு என்ற வார்த்தை தொக்கி நின்றது. வானத் தில் வெளிச்சம் வெள்ளையாய் பரவியது. அந்தப் பஞ்சுப் பொதிமேகக் குழந்தையைக் காணோம். குயில்கள் மாறி மாறிக் கூவின. காக்கைகள் குறுக்கும் நெடுக்கும் பறந்தன.

''இன்னைக்கு தூக்கம் பனால். ஆபீஸ் போயிதான் தூங்கணும்.''

மல்லிகைக்கு செக்யூரிட்டி வேணுமென்று யாரோ சுத்தினார்கள். ஆளுக்கு நாற்பது ரூபாய் ஆகும் என்று கணக்குப் போட்டார்கள்.

அண்ணா காரில் உள்ளே வந்தான்.

''அந்தப் பையனுக்கு கண்ணு பார்வை போயிடுத் துடா. ஆனா, உயிருக்கு ஆபத்து இல்லைங்கறாங்க. என்டா போவிசெல்லாம் நிக்கறது?'' விஷயம் கேட்டு ''ஐயோ'' என்றான்.

''உன்னை யாரு முதல்ல ஓடிப்போயி கதவைத்

திறந்து பார்க்கச் சொன்னது? இப்ப நீதானே கூப்பிட்ட போதெல்லாம் சாட்சிக்கு ஓடணும். பொட்டச்சி குரல் கேட்டதும் வழிச்சுட்டு ஓடினேயாக்கும்...' அண்ணா ஆங்காரமாய் கத்தினான்.

வழிச்சுண்டு ஃபோன் பண்றது பெட்டரா? பாஸ்கர னுக்குக் கேட்கத் தோன்றியது. சும்மா இருந்தான்.

சத்தியமூர்த்தியை குளித்து, சாப்பிட்டுவிட்டு ஸ்டேஷ னுக்கு வரச்சொன்னார்கள். பாஸ்கரனுக்கு உதயமாகும் சூரியனைப் பார்க்க வேண்டும் போல ஆசை வந்தது. தன் போர்ஷன் தாண்டி மாடிக்கு மெல்ல நடந்து போனான். வெளிச்சத்தில் நாளிருக்குமிடத்திலிருந்து எதிர்மாடியைப் பார்த்தான்.

அதோ அங்கேதான் மரகதவல்லி நைட்டியை தலை வழியே அவிழ்த்தாள். சத்தியமூர்த்தி பாரமுலை முகம் தழுவினான். இப்போது அங்கே மரகதவல்லி இல்லை. அந்த உடம்பு இல்லை. நேற்றிருந்தது இன்று இல்லை. இது நேற்று சூரியனா, இன்றைய சூரியனா, நேற்று சூரியன் எரிந்து போய் இன்று புது சூரியன். இந்த உஷ்ணம் அழிந்தது. அடுத்த உஷ்ணம் புதிது. இங்கு எல்லாம் புதிது. எல்லாம் வளர்ச்சியுடையது. எல்லாம் மாறுதலுடையது. மாறுதலாய் இருப்பவையெல்லாம் புதிது. நேற்று என்று ஒன்று இல்லை. நாளை என்பது தெரியாது. இன்றே நிஜம். இந்த கணமே உண்மை. இங்கு என்ன செய்ய. சும்மா இரு.

இருபது வயசுப் பெண் குத்துப்பட்டு செத்துப் போனாள். பத்து வயதுப் பையன் தலையில் அடிபட்டு குருடானான். நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன். மரணம் வரும் வரும் என்று காத்திருந்தும் மரணமடை யாமல் இருக்கிறேன். கள்ளென்று வலித்த போதும் நெஞ்சு வெடிக்காமலிருக்கிறேன். இங்கு எல்லாம் விதி

திரம். யாருக்கு எப்போது எதனால் மரணம் வரும் என்று தெரியாத விசித்திரம்.

தருமனே, தருமனே இந்த உலகத்தில் எது சிரிப்பான விஷயம். தரும தேவதை நீர் குடிக்க வந்த பாண்டுவின் மகனைக் கேட்டான். பாண்டுவின் மூத்த புத்திரனான தருமன் அதற்கு சொன்னதாவது:-பாலர், இளைஞர், நடுத்தர வயதோர், முதியோர், முதுபெரும் கிழவர் இறப்பதை நினம் நினம் இம்மக்கள் பார்ப்பினும் தானிங்கு நெடுங்காலம் உயிரோடு இருப்பேன் என்று அகந்தையோடு வாழும் வாழ்வே சிரிப்பு. மாபெரும் நகைச்சுவை.

எதிர்பக்கம் மாடியில் ஒரு நடுத்தர வயது ஆள் மூன்று குழந்தைகளுக்கு தகப்பன் தொந்தி குலுங்க, வியர்வை தெறிக்க ஸ்கிப்பிங் ஆடிக்கொண்டிருந்தார். ஆடுவதை நிறுத்தி மூச்சிரைப்புடன் பாஸ்கரனைப் பார்த்து. ''ஹலோ'' என்றார்.

பாஸ்கரன் அவரைப் பார்த்துக் கொண்டே எதுவும் சொல்லாமல் சும்மா இருந்தான்.

அந்த அடுக்கு மல்லியில் அலரவர் அன்றாட வேலைகளை வழக்கமாய் செய்து கொண்டிருந்தார்கள். மேலே சூரியன் நகர்ந்து கொண்டிருந்தான்.

முற்றும்

நீ யொர்ணமி

1

காத்திருத்தல் என்பது போல், ஒரு கடினமான விஷயம் இவ்வுலகில் வேறேதும் இல்லையென்று சச்சிதானந்தத்திற்குத் தோன்றியது.

''சார்தி பீச்ல நிக்கட்டுமா?'' என்று கேட்டதற்கு அருணா ''வேணாம். பஸ்ஸ்டாண்டிலேயே நில்லுங்கள்'' என்று சொல்லிவிட்டாள். எந்த பஸ்ஸில் வருவாள் என்று கேட்டதற்கு சரியாய் பதில் சொல்லவில்லை. ''ஏதுனா ஒரு பஸ் பிடிச்சு எவ்வளவு சீக்கிரம் வர முடியுமோ வரேன். இன்னிக்கு நிறைய பேசணும். உங்களுக்கு வெல்லப் போனி பிடிக்குமா? எங்க ஆபீஸ் பக்கம் விக்கறாங்க. வாங்கிட்டு வரேன்'' எட்டு மாதத்திற்கு மேலாய் பழகிப் பேசி புரிந்து கொண்டு, அலல் குரலைக் கேட்கும்போது, முகம் தெரியாத பெண்ணோடு போனில் பேசும் திறக்கம் ஏற்பட்டது. தெரிந்தவரோடு பேசும் மனத்தெளிவு அறவே இல்லாது போயிற்று. ஒவ்வொரு முறையும் அருணாவோடு ஃபோனில் பேசுகிறபொழுது இப்படித்தான் ஆகிவிடுகிறது. அருணா பெரிய அழகி அல்ல கருப்பு. ஆனால் ஒரு கவர்ச்சி இருந்தது. பெரிய கண்கள்; சிறிய முகவாய்; சீரான மூக்கு. நீள்வட்ட முகம். சுமாரான உயரம். சளசளவென்ற பேச்சு. அவளைப் பற்றி நினைக்கும்போது சித்திரமாய் மனசுக்குள் வந்து கொண்டேயிருந்தது. எல்லாவற்றையும்விட, அவள் குரலில் ஒரு கவர்ச்சியிருந்தது.

''யார்ரா அந்தப் பொண்ணு? உன்னை அடிக்கடிக் கேட்டு ஃபோன் பண்ணுதே'' டெலிபோன் ஆபரேட்டர் கிருஷ்ணன் கேட்டான்.

''நம்மாளுதான், என்ன சமாச்சாரம்'' சச்சிதானந்தம் கிருஷ்ணனை மடக்குவினான்.

''தல்ல வேனை, சொல்லித் தொலைச்சே.''

''ஏன்? என்ன விஷயம்?''

''ரொம்ப செக்ஸி வாய்ஸ், சில குரல் கேக்கறபோது எதனாபேரி, கூட நாலு வார்த்தை கேக்கத் தோனும். உங்க ஆள் குரல் அப்பேர்ப்பட்டது, நான்தான் உடமன்தன்னு சொல்லிட்டேல்ல, இனிமே தேனை யில்லாத பேசமாட்டேன்-நம்மள பத்தி உங்காளுகிட்ட சொல்லி வை. கிருஷ்ணன்கிட்ட எல்லாத்தையும் சொல்லிட்டேன். பயப்படாம பேசலாம்னு சொல்லி வை,''

சச்சிதானந்தத்திற்கு அதற்குப் பிறகுதான் அவள் குரலின் மகிமை புரிந்தது. அருணா ஃபோனில் மடமட வென்று பேச தான் பதில் பேசாமல் கேட்டுக் கொண்டி ருப்பது அதனால்தான் என்பது புரிந்தது. பீச்சில் நின்றால் சுண்டலாவது தின்கலாம். கடற்கரை ஹோட்டலில் காபி குடிக்கலாம். ஒரு கல்லூரியின் மதிற்சுவருக்குப் பின்பக்கத்தில் காத்திருப்பது கொடுமை. அந்தக் கல்லூரியின் பின்புறத்திலிருந்து கழிவுநீர் வர, அதைச் சகித்துக் கொண்டு நிற்பது அதைவிடக் கொடுமை ''பஸ் ஸ்டாண்ட்ல நிக்க முடியாது. பீச்சுக்கே வா'' என்று சொல்ல முடியவில்லை. எந்த பஸ் என்று தெரியாமல் எல்லா பஸ்ஸின் வருகைக்கும் நிமிர்ந்து பார்ப்பது அலுப்பை ஏற்படுத்தியது.

''ரெண்டரைலேர்ந்து மூனுக்குள்ள வரேன். முன்னப் பின்ன ஆனாலும் ஆவும். வந்து இறங்கினவுடனே ஏன்

லேட்டுன்னு கத்தாதிங்க, உங்களைக் காக்க வைக்கணும்னு எனக்கு ஒரு வேண்டுதலும் இல்லை. என் பீட் அந்த மாதிரி ' என்று அவள் சொன்னபோது அதற்கும் சரி என்றுதான் சொல்ல வேண்டியிருந்தது

காத்திருத்தலின் கொடுமையை ஃபோனில் பேசும் போது ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை. கல்லூரியின் பின்பக்கம் நாற்றமடிப்பதை இப்போது பொறுத்துக் கொள்ள முடியவில்லை எல்லா நேரமும் தெளிவாக இருக்க ஏனோ இந்த இடத்தில் மட்டும் முடியவில்லை. இது காதல் மயக்கமா? அல்லது வேறெதாவதா? சச்சிதானந்தம் கடந்தபடி யோசிக்க ஆசைப்பட்டான். நின்று யோசிப்பதில் ஒரு அயர்ச்சி இருந்தது. யோசனை விட்டு விட்டு பல நிகழும் பரவியது. அருணா வரும்போது நேரடியாய்ச் சொல்ல வேண்டும் என்று நினைத்த பல விஷயங்கள் சொல்ல முடியாமலும் போயிருக்கிறது அதற்குக் காரணம் அருணாவின் குரலா, உடம்பா என்று தெரியவில்லை. சில சமயம் அந்த உடம்பின் கட்டு அவனைக் கிறங்கடித்திருக் கின்றன.

''உன் உடம்புல சில இடங்கள்ளாம் தொடணும்னு ஆசையா இருக்கே'' அவளிடம் ஒருமுறை கேட்டான்.

''தொடறத பத்தி எனக்கொன்னும் இல்ல, தொடாம தான் லவ் பண்ணணும் அப்படீன்னு புடிவாதம் இல்ல. அதுக்கு அப்புறம் என்ன? தொட்டுத் தொட்டு எங்க போய் முடியும். அதுபத்தி யோசிக்கணுமில்ல.''

''உங்களுக்கொண்ணும் இந்தமாதிரி யோசனை கிடை யாதா? எல்லாம் தெரிஞ்ச மாதிரி எதிர்க்காலம் பற்றியே பேசறீங்களே-''

''எங்களுக்கும் ஆசை இருக்கும். அதை வாயைத் திறந்து சொன்னா ஐயையோ இது கேஸ்ன்னு எல்லோருக்

கும் தோணும். அதனால எத்தனை ஆசை இருந்தாலும் மனசோட வச்சுக்கறது.

''ஒரு ஒண்ணு ரெண்டு அவுத்து விடுங்களேன்.''

''அதெல்லாம் வேணாம்.''

''ஏன்?''

''எல்லா ஜென்மத்துக்கும் உள் மனசுன்னு ஒண்ணு உண்டு. அது வெளி உலகத்தோட சம்பந்தப்படாம உள்ளுக்குள்ளதானப் படம் பேட்டுக்கும். ஏகப்பட்ட சினிமாக் காட்டும் ஒரு விஷயத்தைப் புடிச்சுக்கிட்டு நேரம் கிடைக்கிறபோதெல்லாம் ஒண்ணுமேல ஒண்ணா கற்பனை பண்ணிக்கும். ஒரு கதை மாதிரி அந்தக் கற்பனை வருஷக் கணக்காப் போகும்.''

''அப்படியா?''

''இன்னா அப்படியா? நீங்க பண்ணினதில்லையா கற்பனை.''

''கற்பனை பண்ணாத யார் இருக்க முடியும். ஆனா, வருஷக்கணக்கா கற்பனை பண்றேன்றதுதான் கேள்வியா இருக்கு. அப்பப்ப வந்துட்டுப் போகுமே தவிர தொடர்ந்து வராது.''

''எனக்குத் தொடர்ந்து வரும்.''

''அதுதான் சொல்லு கேப்போன்றேன்.''

சிரிக்கக்கூடாது.

''சிரிப்பு வந்தா சிரிக்காம இருக்க முடியுமா? அதைப் பாராட்டா எடுத்துக்க வேண்டியதுதான்.''

''கேலி பண்ணக் கூடாது.''

''ட்ரை பண்றேன்.''

''ராஜால்ல ராஜா அவர் முன்னாடி...''

''இளையராஜாவா?''

''நிஜ ரரஜா. பழைய காலத்து ராஜா. அவர் முன்னாடி டான்ஸ் ஆடுவேன். ராஜா மகள். ரோஜா மலர் நானே பாட்டு பாடிக்கிட்டு நானே டான்ஸ் ஆடுவேன். சவரனா ஒரு மூட்டை கட்டி ராஜா தூக்கிப் போடுவாரு. நான் வாங்கி, குனிஞ்சு வணக்கம் பண்ணிட்டு வந்துடுவேன். வாசலுக்கு வந்தா ஒரே கூட்டம். ராஜாக்குதான் டான்ஸ் ஆடுவியா? எங்களுக்கு ஆடமாட்டியா? ஒரே ஒரு டான்ஸ் ஆடுன்னு ஜனங்க கெஞ்சும். ஜனத்துக்கு நடுவே பெரிய ஜமுக்காளம் விரிச்சு, தில்லாலங்கடி தில்லாலோன்னு டான்ஸ் ஆடுவேன். அப்ப தலையில் இறகு செருகியிருப்பேன் ஹேய் சிரிக்கிறீங்க.''

''சிரிக்கலை. சொல்லு.''

சச்சிதானந்தத்தின் கன்னக் கதுப்புகளின் ஒரு வெடிடுகும் சிரிப்பு முட்டிக் கொண்டிருக்கும்

''அந்த ராஜாவோட புள்ளை எம்மேல ஆசைப்பட்டு என்னைக் கட்டிக்கிறியான்னு கேப்பான் ராணி ஆக்கிறேம்பான் நான் அதுக்கு அதெல்லாம் முடியாது. டான்ஸ் ஆடறது என் தொழிலு. என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படாதே! சரியா வராதுன்னு சொல்லுவேன். அவன் கெஞ்சுவான். அப்பால கத்தி காட்டி மிரட்டுவான்.

''டேய்...நீ ஆள் தெரியாத ஆள்கிட்ட விளையாடற பொம்ளைகிட்ட கத்தி காட்டறியே நீயெல்லாம் ஒரு ராஜாவா? நான் கை சொடுக்கினா ஊர் ஜனமெல்லாம் ஓட்டு வாசலுக்கு வந்துரும். அப்படீன்னு சொல்லி கை தட்டுவேன் தெருல போறவன் தபதபன்னு உள்ள நுழைஞ்சு என்னன்னு கேப்பான் ஒண்ணுல்ல ராஜா புள்ளைக்கு உடம்பு சரியில்லை. வீட்டுக்கு கூட்டிட்டு

போகணும்பேன். ஜனங்க புரிஞ்சிக்கும். அவனை கைப பிடியா வெளில கூட்டிட்டுப் போயிடும். அப்ப வாசல்ல வில்லு அம்பறாத் துணியோட ஒரு ஆள் நிக்கறான். கட்டுமஸ்தா ரொம்ப அழகா இருக்கான்.''

''கனவா?''

''கனால்ல நானா நினைச்சுக்கறது ஒரு டிராமா அந்தாள் மேல எனக்கு ஒரு பிரியம் நிஜம்மா என்ன நடந்துதுன்னு கேப்பான் நான் விவரம் சொல்லுவேன். என்னை கல்யாணம் பண்ணிக்க. நான் உன்னை சகல கெடுதல்கள்லேர்ந்து காப்பாத்துவேன்னு சொல்றான். இல்லப்பா நான் டான்ஸ் ஆடறவ. எனக்கு கல்யாண மெல்லாம் சரிப்பட்டு வராதுன்னு அவங்கிட்டேயும் சொல்வேன். டான்ஸ் ஆடறவங்களுக்குத்தான் கஷ்டங்கள் ஜாஸ்தி. அவங்களுக்குத்தான் கல்யாணம் அவசியம். நீ டான்ஸ் ஆடறதை நான் தடுக்கல. எங்க நீ டான்ஸ் ஆடினாலும் ஒரு ஓரமா நின்னு நீ ஆடறது பார்த்திட்டிருப்பேன்றான் எனக்கு கல்யாணம் கட்டறதா வேண்டாமான்னு ஒரே குழப்பம். அதே சமயம் அந்த ஆள் மேல ஒரே பிரியம். நான் டான்ஸ் ஆடற போதெல்லாம் அந்த ஆளை நினைச்சுக்கிட்டுத்தான் டான்ஸ் ஆடறேன். ஒருத்தன்கூட மேல கை வைக்காதபடி அந்தாள் பார்த்துக்கறான். நான் இருக்கிற வீட்டு வாசல்லதான் படுத்துக்கறான். என்னடா இவனை இப்படி செய்யறேமேன்னு எனக்கே தாங்கலை. இவனைக் கட்டிக்கறதா? இல்லை இப்படியே ஸ்நேகமா இருக்கறதான்னு தெரியலை. கட்டிக்க, கட்டிக்க வேணாம்னு ரெண்டு சீட்டு எழுதிப் போட்டு அம்மன் சன்னதில வச்சு உருக்கமா பாட்டுப் பாடறேன். நீயேகதி ஈஸ்வரி. ரெண்டு சீட்ல ஒண்ணு எடுக்கறேன்.''

''கனால, அதாவது உள் மனசில.''

''இல்லை.''

''பிறகு.''

''நானா ஆபீஸ்ல உட்கார்ந்து நாலு சீட்டு கட்டிக்கறேன். நாலு சீட்டு கட்டிக்கமாட்டேன். எழுதி குறுக்கிப் போட்டுசீட்டு எடுத்தேன்.''

''கடவுளே''

''குறுக்கப் பேசக்கூடாது. அந்த சீட்ல கட்டிக்கன்னு வந்துடுச்சு.''

''அதாவது ஆபீஸ்ல நினைவா நீ போட்ட சீட்ல.''

''ஆமாம். என்னா செய்யறதுன்னே தெரியலை சரி, கட்டிக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன். அவங்கிட்டப் போய் சொன்னேன்.''

''அதாவது இது உள் மனசில.''

''ஆமாம்.''

''அந்தாளு என்ன செஞ்சான், எனக்கும் ஆசைதான். நீ சீட்டுப் போட்டா மாதிரி நானும் கடவுள் முன்னால சீட்டுப் போட்டுப் பாக்கணும்னுட்டான். சரி போடுங்கன்னேன் சீட்டுப் போட்டுப் பார்த்தோம். நீயே எடுத்துப் படின்னான். சரின்னு நானே எடுத்துப் படிச்சேன்.''

''அதாவது இது ஆபீஸ்ல நிஜமா? நினைவோட.''

''ஆமா. ஆனா, இது வேற சீட்டு. அந்த சீட்ல கட்டிக்காதேன்னு வந்துடுச்சு.''

''ஐயோ.''

''என்ன பண்றது எனக்கு ஒரே குழப்பம்.''

''எனக்கும் குழப்பமாதான் இருக்கு, அப்பால.''

''கேலி பண்றீங்களே பார்த்தீங்களா?''

''கேலியா? உனக்கும் அவனுக்கும் நல்ல படியாக் கல்யாணம் ஆகணுமேன்னு பதை பதைச்சிட்டிருக்கேன்.

14478
3126030

''இது கேலிதான்.''

''நீ சிட்டுப் போட்ட சாமி சத்தியமா இது கேலி யில்லை. மேற்கொண்டு சொல்லு.''

''நான் கதவில சாய்ந்துக்கிட்டு மறுபடியும் கடலுனை நோக்கிப் பாட்டுப் பாடறேன். நானொரு வினை யாட்டுப் பொம்மையா பாட்டு. கட்டிக்காதேன்னு சாமி சொல்லிச்சு. இனிமே நான் காலனுக்கு இருக்கறதுகூடத் தப்பு. நான் போறேன்னு சொல்லிட்டு நடக்கறான். நான் பின்னாடியே ஓடிப்போய் அவன் கால்ல விழுந்து கெஞ்சினேன். என்னை மன்னிச்சுக்க. கடலுள் கட்ட னைய மீற முடியாதுன்னு காலை உதறிட்டுப் போயிட் டான். நான் தூக்குப் போட்டு செத்துடலாம்னு காட்டுக் கொடியெல்லாம் அறுத்து கயிறாப் பண்ணி, கழுத்தல சுருக்குப் போட்டுக்கிட்டு மரத்துல மிச்ச கயிற்றைப் போட்டேன்.''

''மரத்ல முடி போட்டுக்கிட்டுல்ல கழுத்ல சுருக்குப் போட்டுக்கணும். தப்பு பண்ணிட்டியே.''

''இந்த கேலி மயிருல்லாம் வேணாம். எவ்வளவு சீரியஸாச் சொல்லிட்டிருக்கேன்.''

''கோச்சுக்காதம்மா. தூக்குப் போடறது எப்படின்னு சொல்லிக் கொடுத்தேன்.''

''நான் தூக்குப் போட்டுக்கலை.''

''நினைச்சேன்.''

''அந்த வழியா சில சாமியார்கள் போனாங்க. நீ டான்ஸ் ஆடினதும் போதும். அதனால வந்த அவஸ்தைகளும் போதும். எல்லாத்தையும் விட்டுட்டு எங்களோட சேர்ந்து டுன்னுட்டாங்க. அதுல லீடர் மாதிரி வயசானவரு எங்க அப்பா சாயல். என் தலையை தடவி, இன்னிலேர்ந்து நீ துறவியாயிட்டே அப்படின்றாரு. நானும் சரின்னுட்டு ஒத்துக்கிட்டு அவரு பின்னாடியே பாடிக்கிட்டுப் போறேன்.''

''புத்தம் சரணம் கச்சாமி'' அவன் பாடிக் காட்டி னான்.

''சூப்பர்ட். எப்படிக் கண்டுபிடிச்சீங்க?''

''ஒண்ணும் ஒண்ணும் ரெண்டு.''

''அவரு பின்னாடி போறேன். போறேன். இன்னும் போய்க்கிட்டுதான் இருக்கேன். எப்படியிருக்குக் கதை?''

''பாவம், பாவம்.''

''யாரு?''

''நீ, உன் வயசு வந்த பொண்ணுங்க எல்லாம் பாவந்தான்.''

''ஏன் அப்படி சொல்றீங்க?''

''லவ் பண்ணனும்னு ஆசை. பண்றதுக்குப் பயம். தலர்த்தியா இருக்கணும்னு ஆசை. தன் கலர்ச்சி தனக்கே தண்டம் கொடுக்குமோன்னு பயம். கட்டிக்கறதுக்கு ராஜா லமாட்டானான்னு ஒரு ஆசை. சாதாரண ஆள்தான் சரி வரும்னு ஒரு பயம். கல்யாணங்கட்டி குடித்தனம் பண்ணனும்னு ஒரு ஆசை. சந்நியாசியா போகறதுதான் நல்லதோ அப்படின்னு ஒரு எண்ணம். உன்மனசிலேயே இரண்டாப் பிரிஞ்சு கிடக்கறீங்க. யாருக்கும் வெளில சொல்ல வேண்டாத இடத்திலேயே முழுமையா நான் டான்ஸ் ஆடறவதான்னு நிக்க முடியல. வெளியே, நீஜ உலகத்ல என்னத்த உங்களால சாதிக்க முடியும்?''

''நான் பைத்தியமா?''

''ஆமாம். ஆனா, அதுக்கு கவலைப்படாதே இங்க நீ மட்டுமே பைத்தியமில்ல! லட்சோப லட்சம் பைத்தியம். நிறைய பெரும்பளைங்க பைத்தியம்.''

''ஆம்பளைங்க பைத்தியம் இல்லையா?''

''ஆம்பளைங்களும் பைத்தியந்தான். ஆனா, லேடீஸ் பர்செண்டேஜ் ஜாஸ்தியா இருக்குமோன்னு ஒருநினைப்பு. நான் ஒண்ணும் கணக்கெடுக்கலை. இதைக் கணக்கெடுக்கவும் முடியாது. ஆனா, எக்ஸ்போஷர் அதிகமில்லாத பெண்கள் இப்படிப் பகல் கனவா, உள் மனசு யோசனையா கற்பனைலேயே இருக்கறதுக்கு வாய்ப்பு அதிகமோன்னு தோணுது.''

''உங்களுக்கு கற்பனை வராதா?''

''இருக்கு. இப்படிக் கதையா இல்ல. தொடர் நாவலா, வருஷக் கணக்கா ஓடற டிவி சீரியலா இல்லை. அப்பப்ப ஷார்ட் ஸ்டோரியா வந்துட்டுப் போகும். உதாரணமா கமலஹாசனைப் பார்க்கறபோது நமக்கும் ஒரு சீனிவாசன் இல்லையேன்னு தோணும் என் வயசில ஒரு மினிஸ்டடைரப் பார்க்கறபோது நான் மினிஸ்டரா இருந்தா எப்படின்னு தோணும். கிரிக்கெட் ஆட றவனைப் பார்க்கறபோது, அவன் முட்டை வாங்கித் திரும்பற போது அவனைவிட நான் உசத்தின்னு தோணும். எவன் எப்படிப் பந்து போட்டாலும் என்னால ஆட முடியும்னு தோணும். ஆனா, இப்படித் துண்டு துண்டாத் தோணறக் கூட அப்பப்போ உடைச்சுடுவேன்.''

''எப்படி?''

''கோபாலபுரம் க்ரவுண்ட்ல போய் ஒரு ஞாயிற்றுக் கிழமை கிரிக்கெட் ஆடினேன். மண்ணு முண்டுல பந்து எகிறி, முதல் பந்து தொடைல அடிச்சது முதுகு வரைக்கும் வலி. அடுத்தப் பந்து அவுட் எனக்குக் கிரிக்கெட் ஆட வராதுன்னு அன்னிக்கித்தான் தெரிஞ்சுக் கிட்டேன். அந்தக் கற்பனை உடைஞ்சு போச்சு. கமலஹாசன் ஜெயிச்சதுக்கு அவங்க அப்பா சீனிவாசன் மட்டும் காரணமில்லை. அந்தாளுக்கு சினிமான்னா வெறி. அவரு பாராட்டின படத்துக்குப் போனேன். பத்து ரூவா டிக்கெட் நாற்பது ரூவான்னான். அடுத்த வாரம்

பார்த்துக்கலாம்னு திரும்பி வந்துட்டேன். நாற்பது ரூபா குடுக்க முடியாத இல்லை, ஏன் குடுக்கணும் அப்படிப் பார்த்து என்னன்னு கேள்வி வந்தது. எனக்கு சினிமாலவெறி இல்லைன்னு அப்பவே தெரிஞ்சுது. இப்படித் தோணினதெல்லாம் உடைச்சுடுவேன்.''

''அந்த மினிஸ்டர் சமாச்சாரம்.''

''அது இன்னும் உடையல. அகில இந்திய அண்ணா தி.மு.க.ல உறுப்பினரா சேர்ந்துட, அடுத்த எலக்ஷன்ல விண்ணப்பம் ஒண்ணு போட்டு, அம்மா எதிர்க்க இண்டர்வியூவுக்கு நின்னு நான் எம்.ஏ.ஸைகாலஜி பர்ஸ்ட் க்ளாஸ். மோஸ்ட் பேக்வர்ட் எங்க வீட்ல எல்லோரும் படிச்சவங்க. நீ உதவி செய்தா காலாகாலத்துக்கும் உங்களுக்குக் கட்டுப்பட்டு ஜனங்களுக்கு சேவை செய்ய றேன்னு இங்லீஷல பேசணும் அம்மா நான் இங்கிலீஷ் பேசறதைப் பார்த்துட்டு ஏதோ ஒரு மூட்ல சரின்னு தலையாட்டி எனக்கு சீட் கொடுத்துட்டா எம்.எல்.ஏ என் மேடை பேச்சைப் பாத்துட்டு காதி கைத்தொழில் மந்திரின்னா, நான் மினிஸ்டர் இருபத்தியேழு வயசில, முழு வெள்ளைக் கை சட்டை, கரை போட்ட வெள்ளை வேஷ்டி, கட்சி சின்னம் போட்ட மோதிரம், நெத்தில கொஞ்சம்போல திருநீறு, சிகப்பு விளக்கோட கார். போலீஸ், பந்தா, பேச்சுன்னு ஒரு கற்பனை இன்னும் உள்ள இருக்கு. இது உடையல்ல.''

''ஏன்?''

''ஏன்னா இன்னும் நான் கட்சி உறுப்பினராக்கூட ஆகலை. ஆனாத்தான் தெரியும். அந்த இடமும் என்னால தாக்குப் பிடிக்க முடியாதுன்னு அறப்போராட்டம்னு கப்பிட்டா, போவேனான்னு சந்தேகம் இருக்கு. அதே சமயம் கண்ணாடி முன்னாடி மீட்டிங் பேசற கற்பனையும் இருக்கு.''

''நீங்க பைத்தியமில்லையா?''

''பைத்தியந்தான் அடச்சே, போன்னு பாதிப் பேச்சில உதறிடுவேன். உன்னையை மாதிரி வருஷக் கணக்கா டான்ஸ் ஆடற கதை எங்கிட்ட இல்லை.''

''என்னைக் கழட்டி விட்டுடணும்னு தோணுதா?''

''சீச்சி. இல்லை அருணா. அந்த வில்லு அம்புறாத் துணி ஆளா என்னை நினைச்சுக்கோன்னு சொல்லத் தோணுது. இப்படி ஏன் இந்த பொண்ணு சுற்பனை பண்ணுதுன்னு பரிதாபம் வருது. அருணாவுக்கு யார் மேலேயும் நம்பிக்கையில்லையோன்னு தோணுது. அதனால்தான் உள்ள ஒண்ணும், வெளில ஒண்ணுமா வாழுதோன்னு கேள்வி வருது'' இத பார் நீ டான்ஸ் ஆடற வரைக்கும் போதும் மூட்டையைக் கட்டிக்கிட்டுக் கிளம்பு, நீ ஆட்டக்காரின்னு தெரியாத இடத்துக்குப் போயி குடித்தனம் போடுவோம். இவங்க இன்னார் பொண்ணு நான் இன்னார் ஜாதின்னு வேற வகையில் போய், வேறவிதமான வாழ்க்கை வாழணும்னு நீ சொல்ற போதே எனக்குள்ள ஒரு கதை தோணிச்சு நீ எனமச்சு சோறு போட, நான் வில்லு வச்சு மானு காக்க, ரெண்டு புள்ளை ஒரு பெண்ணைப் பெத்து. அதுகளுக்கு வேலை கத்துக் கொடுத்து, கல்யாணம் காட்சி பண்ணி. உனக்கு எழுபத்தி எழு வயசு, எனக்கு எண்பது வயசு. ஆத்தாளைப் பார்த்துக்குங்கடான்னு சொல்லிட்டு, நிர்மதியா, நிறைவா செத்துப் போகணும்னு தோணுது. என் வில்லும், அம்புறாத்துணியும் நீ சாகற மட்டும் உன் தலை மாட்டிலேயே இருக்கும். உன்னை எரிக்கறபோது அதையும் எரிச்சுடணும். அவ்வளவுதான் நம்ம ரெண்டு பேர் ஆட்டமும் க்ளோஸ்.''

''என் கதை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?''

''உன்னையை பிடிச்சிருக்கு அதனால உன் கதையும் பிடிச்சுருக்கு ''

''நாம ரெண்டு பேருமே பைத்தியமில்லை ''

''லவ் பண்றவங்க எல்லோரும் பைத்தியந்தான். தனக்குத் தனக்குன்னு எல்லோரும் இறுக்கி வச்சுக்கற போது, தான் பொய்பனை, தான் ஆம்பளைன்னு இறுக்கி வச்சுக்கறவங்க எல்லாம் பைத்தியந்தான் ''

''அப்ப யார் பைத்தியமில்லை''

''தனக்குன்னு எதுவும் வச்சுக்காதவன். ஊர் நடுவில இருந்துக்கிட்டே, ஊரோட தொடர்பு இல்லாதவன் உயிர் வாழறதுக்கு மட்டும் நெனைவ வச்சுக்கிட்டு மத்த எதுவும் வேணாம்னு உதறிட்டவன் ''

''அதாவது சந்நியாசி.''

''ஆமா. நிறைய பேருக்கு சந்நியாசியா இருக்கணும்னு ஆசை இருக்கு. ஆனா புத்தி இல்லை அது வேறும் ஆசைதான். அப்படிப் போற துணிச்சல் ரொம்பக் குறைச்சலான பேருக்கே இருக்கு அதனால தான் நிஜமான சந்நியாசிக்க மதிப்பு இருக்கு. சந்நியாசி போலின்னு தெரிஞ்சுட்டா, ரொம்பக் கோவம் வருது. குடித்தனக்காரன் தப்பு பண்ணினா விட்டுடுவாங்க. சந்நியாசி தப்பு பண்ணினா கொலையே நடக்கும். மனுஷனுடைய ஒரு தன்மையையே குலைக்கறியேன்னு கோபம் வரும். ஒரு ஆள், பற்றே இல்லாதவர்ன்னு தெரிஞ்சு போச்சு. ஜனம் அவனை தெய்வமா மதிக்கும். கூடை கூடையா காசு கொட்டும் ''

''சந்நியாசிக்கு சுற்பனை இருக்காதா?''

''அதைவிட உசந்த இடம் எது. அடுத்தவேளை சாப்பாட்டைப் பற்றிக் கூட கவலைப்படாதவருக்கு சுற்பனை எப்படி வரும்?''

''அப்போ மனுஷாள்ல துறவிதான் உசத்தி.''

''ஆமான்னு தோணுது.''

''எனக்கும் துறவியாகணும்னுன்னு ஆசை இருக்கு சச்சி.''

''இது பயத்ல வந்த ஆசை பிரச்னைய ஃபேஸ் பண்ண முடியாத விட்டுட்டு ஓட்ற புத்தி.''

''இல்லை. என்னால துறவியாக முடியும்.''

''அப்படியா? என் பர்ஸ்ல ஒரு அரை பிளேடு வச்சிருப்பேன். அதால புடலை தலைப்பை அங்கங்கே கிழிச்சுடட்டுமா?''

''ஏன்? இருநூற்றி நாற்பது ரூபாய் புடலை ''

''உன்னால துறவியாக முடியாது.''

''அப்படிச் சொல்றீங்களா? ஆனா, ஆகணுன்ற மாதிரி...இப்ப இல்லாட்டாலும் ஒரு பத்து வருஷமாவது ஆசணுன்ற மாதிரி ''

''என்னைக் கல்யாணம் கட்டின பிறகா?''

''இல்லை. கல்யாணம் கட்டாத. சும்மா உங்களோட உட்கார்ந்து பேசிட்டு, அப்புறம் டக்குன்னு ஒருநாள் போதும்னு தீர்மானம் பண்ணி.''

''அதென்ன டக்குன்னு ஒருநாள். இன்னைக்குப் பண்ணேன் ''

''இன்னிக்கு ஏன்? கொஞ்சநான் லவ் பண்ணிட்டு...''

'இன்னும் ஏழெழு ஜென்மத்துக்கும் உன்னால துறவி யாக முடியாது.''

''ஆசை இருக்கே.'' அவள் பிடிவாதம் பிடிக்கும் குழந் தையைப் போல் கெஞ்சினாள்.

'இது நிராசையின் விளைவு'' அவன் அழுத்திச் சொன்னான். அவன் பேச்சில் தன் மனசு கிளறி, தன்னைப் பற்றிய யோசிப்பில், ஒரு ஆழ்ந்த மௌனத்தில் கடல் நோக்கி வெறித்தபடி நின்றாள். அவன் அவள் முதுகு தொட்டான். இடுப்பில் கைவைத்து இழுத்தான்.

''கடவுளே'' அவள் தடுக்காமலும், தவங்காமலும் அவனைத்தப்பட்டாள்.

''நமக்கு இது போதும் அருணா. இந்தக் காதல், கல்யாணம், குழந்தைப்பேறு இது சரியா அமைஞ்சாப் போறும். இதுவும் ஒரு அறம். இல்லறம். இல்லற மல்லது நல்லறமன்று.'' அடிக்குரலில் அவன் காதோரம் பேசினாள்.

''அப்ப ஏன் என்னை டான்ஸ் ஆட்ற பொம்பளையா நினைச்சக்கறேள்.'

''கொழுப்பு. மெட்ராஸ் பாஷைல சொல்றதா இருந்தா...''

''வேணாம். இதுக்கு முன்னாடி ரெண்டு மூணு தடவை அந்தக் கெட்ட வார்த்தை சொல்லிட்டீங்க.''

''சரி, நான் கெட்ட வார்த்தை சொல்லலை. நீ டான்ஸ் ஆட்றதை மரியாதையாவே சொல்றேன். கலை களில் ஆர்வம் உள்ளவள். ஒவ்வொரு வார்த்தையாய்ப் பிரித்துச் சொன்னாள். தன்னைப் பேரழகி என்று நினைத்துக் கொண்டிருக்கிறவள். எல்லோருடைய பாராட்டுக்கும் கைதட்டலுக்கும் ஏங்குகிறவள்.''

''என்னா தப்பு.'' அவள் சிறுமுடன் கேட்பாள்

''ஒரு தப்பும் இல்லை. அப்புறம் என்னா ஆடி, பாடி கைதட்டி சவரன் மூட்டையா சன்மானம் வாங்கி... அப்புறம் என்னா, ஏன் நீயே கதி ஈஸ்வரி பாடணும். ஏன் சீட்டுக் குலுக்கிப் போடணும். இதுவரைக்கும் செய்த துல உன் பொம்பளை மனசு முழுமையாகல. கல்யாணத் துக்கு மனசு ஏங்கும். அப்புறம் புள்ளைக்கு ஏங்கும். புள்ளை பெத்தா பொண்ணுக்கு ஏங்கும், புள்ளைக்கு பாலு பொண்ணுக்கு நகை, சின்னச் சின்னதா நிறைய ஏங்கும். அப்ப டான்சோ, கைதட்டோ, ராஜாவோட

நினைப்புல வராது. தினம் கார்த்தால டான்ஸ் ஆடுன்னா அடப்போ, வேற வேலையில்லை. புள்ளைய பள்ளிக்கூடம் அனுப்பணும்னு அதே வாய் பேசும். உன் உலகம்; என் உலகம் எல்லாம் நம்ம புள்ளைதான் நம்ம பெயண்ணுதான்னு ஆயிடும். அதுகளுக்குப் பொறக்கற குழந்தையைக்கொண்டாடத் தோணும். அதான் சம்சாரம், சாகரம்னு சொல்றாங்க.

ஆனா அது மலை. சுத்தி சுத்தி பாதை போட்டு காடா இருக்கற மலை. குளிரான மலை, இருட்டான காடு. அருவியும், புனலும், பூவும், செடியும், எருமையும், நரியும், பாம்பும், தேளும் இருக்கற மலை. மலை உச்சிக்குப் போய் அக்கடான்னு உட்கார்ந்துட்டு அப்படியே போயிட வேண்டியதுதான். எனக்கு மலை ஏர்றது புடிச்சிருக்கு. அவன் பேச்சில் மயங்கினாளா? பொறுமையில் கிறங்கினாளா? கனவைக் கேலி பண்ணாத கரிசனத்தில் கண் சொருகினாளா? தெரியவில்லை.

பெண்ணைச் சமதையாய் நினைத்துப் பெண்ணோடு பேசுவதே பெண்ணை ஜெயிப்பதற்கான முதல்வழி. ''ஏய், சொல்றதக் கேளு'' என்று அதட்டுபவனைப் பெண் கேட்டதேயில்லை கேட்டது போல் நடிக்கிறாள். இந்த தேசத்தில் ஆணுக்கு இருக்கும் அனுபவப் பரப்பு பெண்ணுக்கு நிச்சயம் இல்லை அதனாலேயே தன் அனுபவத்தை ஒளிவு மறைவின்றிப் பேசும் ஆணைப் பெண்ணுக்குப் பிடித்துப் போகிறது. அதை அவன் விவரிக்கும் பாங்கில் அவள் மனசு அவனிடம் லயிப்பு கொள்கிறது.

''ஒரு கிலோ மீட்டர் தானே நடந்தோம். ஏன் அருணா இவ்வளவு இளைக்குது?''

''ஆபீஸ் போனதிலேர்ந்து குண்டாயிட்டேன். உட்கார்ந்து செய்யற உத்தியோகம். வீட்ல வேலை

எதுவும் பெரிசா செய்யறதில்லை. சதை போட்டிடுடுச்சு. லேசாத் தொப்பைகூடப் போட்டிருக்கு.''

''தெரியாத என்ன, தெரியுது.''

''குறைக்கணும், எப்படிக் குறைக்கறது?''

''வயிறு உப்பறபோது மூச்சுவிடு. வயிறு உள்ள இழுக்கறபோது முச்சை இழு.''

''ஐயோ, இதை எப்படிச் செய்யறது?''

''நான் செய்யறேன். என் வயித்ல கைய வச்சுப் பார்.''

அவள் செய்ய அவன், அவள் வயிற்றில் கை வைத்து வயிறு அசைவை மட்டும் கவனிக்க, அங்கே அவள் நலனை மட்டும் முக்கியமாக நினைக்க, அவளுக்கு அவன் மீது பிரியமும், நம்பிக்கையும் ஏற்பட்டு விடுகிறது. பேச்சில் மட்டுமல்லாது செயலிலும் ஸ்நேகமாய் இருக்கும் மிகப் பெரிய நம்பிக்கை ஏற்படும். இது தந்திரமல்ல. வலை விரிப்பு அல்ல. வலை என்று தெரிந்தால் ஒரு பறவையும் ஒரு க்ஷணமும் அங்கு நிற்காது.

இப்படி பேசி பலதும் பரிமாறிக் கொண்டு காதல் கெட்டிப்பட்டு இனி மேற்கொண்டு என்ன என்கிற கேள்வியாய் எழும்போது அருணாவே ஃபோன் செய்தாள். அவசியம் பேச வேண்டும் என்றாள்.

நாளை காலைல நமக்கு கல்யாணம் உங்க வீட்டை எங்க வீட்டுக்கு வரச் சொல்றீங்களா? எங்க வீட்டை உங்க வீட்டுக்கு வரச் சொல்லட்டுமா?'' என்று கேட்பாளோ என்ற பயமும் இருந்தது. அதனாலும் அந்தக் கல்லூரி காம்பௌண்ட் வாசலில் நிற்பது கலக்கமாய் இருந்தது. இரண்டு மூன்று சஸ்பென்ஸ் ஒரு நாவலில் ஒரே நேரத்தில் வந்ததுபோல அவள் வரும் பஸ்.

நேரம், பேசப் போகும் விஷயம் எல்லாமாய் அவளைத் தாக்கின.

இதைத் தவிர அரை நாள் லீவு கொடுக்க, மேலதி காரி தேவையில்லாத கட்டுப்பாடித்தார். தலைவலி என்று லீவ் எழுதியபோது சிரித்தார்.

''எங்க தலைவலி பீச்லேயா, சினிமாலியேயா'' என்று கேட்டார்.

''இப்படியே அரை நாள், அரை நாளா லீவ் போட்டா உன் கல்யாணத்துக்கு லீவ் கிடைக்காது. ஆபீஸ்லதான் கல்யாணம் நடத்தணும்.''

''ஞாயிற்றுக்கிழமையா வச்சுக்குறேன் சார். நீங்க சனிக்கிழமை சாயங்கிரமே வந்துடணும்.'' அவள் போலியான பணிவுடன் சொன்னாள்.

''நல்லபடி நடக்கட்டும். நான் வேணாங்கல. ஆபீஸ்ல வேலைக்கு இடைஞ்சலில்லாம செய்''

ஃபோன் கூடக் குறைச்சுக்குறேன்''

இது கிருஷ்ணனின் வேலை என்று தெரிந்தது. எதுவும் செய்ய முடியவில்லை. எதுவும் செய்ய முடியாத எரிச்சல் இப்போது அமிலக்காரமாய்த் தொண்டையில் ஏறிக் கொண்டிருந்தது போலிருந்தது.

''சொன்னா சொன்ன நேரத்துக்கு வா. உன் சௌகர்யம் மட்டும் பார்க்காதே.'' பஸ் இறங்கியதும், அவனை நோக்கிக் கத்த வேண்டுமென்ற எண்ணம் வந்தது. அடுத்த முறை டெலிபோனில் பேசும்போதும் லெட்டு ஒன்னு தூண்டு இரண்டாய்ப் பேச வேண்டும் என்கிற எண்ணம் எழுந்தது.

''என்ன இங்கேயே நிக்கறீங்க?'' என்று அவள் குரல் முதுகுப் பக்கம் கேட்க, சக்திதானந்தம் திரும்பி அவளைப்

பார்த்தான் அவளைப் பார்த்த நேரம் எல்லாம் மறந்து போயிற்று.

காத்திருத்தல் கொடுமைதான் ஆனால், அந்தக் கொடுமை காத்திருக்குபவரால், காத்திருத்தல் முடிவு பெற்ற கணமே அத்தனை கொடுமையும் ஆவியாகி, கவலை தெரியாமல் போய், ஒரு சந்தோஷம் வந்து விடுகிறது.

''ரொம்ப நேரமா காத்திருக்கீங்களா?''

''இல்லை. இப்பத்தான்'' அவள் பதில் சொன்னாள். உலகத்திலுள்ள கோடானு கோடி ஆண்களும் இப்படித் தான் பதில் சொல்கிறார்கள். இதுதான் காதலின் மகிமை. ஆனால், அப்பாவி என்பதற்கான ஆதாரம.

2

''உங்க அண்ணன் பேரு என்ன?'' அருணா அவனை ஆவலோடு கேட்டான்.

''நித்யானந்தம். ஏன்?''

''அவரை என் சித்தி பொண்ணுக்குப் பாக்கறாங்க. உங்கண்ணன் ரிஸ்க் பேங்க்காமே?''

''ஆமா. எதுக்கு கேக்கற? அவரை லவ் பண்ணிவிருக் கலாமேன்னு தோணுதா?''

''ஐட சே. அது நிஜம்தானான்னு தெரிஞ்சுக்கற துக்குக் கேட்டேன்.''

''இதுதான் நீ பேசணும்னு சொன்ன முக்கியமான விஷயமா?''

''ஏன் இது முக்கியமில்லையா?''

''எங்கண்ணன் கல்யாணத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? லண்ணமா சாப்பிட்டுட்டு, வரவங்கள, வாங்க...வாங்க, போங்க...போங்கன்னு சொல்லிட்டு, அண்ணன் ஸ்ப்ரெண்ட்ஸ் எதாவது பார்ட்டி ஏற்பாடு பண்ணியிருந்தா, ஒரு பெக்கோ, ரெண்டு பெக்கோ குடிச்சுட்டு, வீட்ல போயி படுத்துக்க வேண்டியதுதான்.''

''உங்களுக்கு ஒரு பொறுப்பு இல்லையா?''

''அவன் கல்யாணத்ல எனக்கென்ன பொறுப்பு?''

''அண்ணனுக்கு நல்ல பொண்டாட்டியா கிடைக்கறும், வீட்டுக்கு ஒரு நல்ல அண்ணி வரணும், கல்யாணம் களேபரமில்லாம நல்லபடியா நடக்கணும்.''

''ஸாரி.''

''என்ன ஸாரி?''

''அண்ணனுக்கு நல்ல பொண்டாட்டியா கிடைக்கறது அவன் தலையெழுத்து. எங்க வீட்டுக்கு வர அண்ணி நல்ல அண்ணியா இருந்தாலும் கெட்ட அண்ணியா இருந்தாலும் எனக்கு கவலையில்லை. கடைசியாச்சொன்னீங்ப கல்யாணம் களேபரமில்லாம நடக்கணும்...அது சிரமம்.''

''ஏன்?''

''எங்கவீடு எலண்டா பொண்ணு பெத்தவன் கிடைப்பான்னு கத்தியை தீட்டிக்கிட்டு காத்துக்கிடக்கு. அப்படி எவனாவது மாட்டினான், அறுத்து எமாத்தரத்தத்தையும் குடிச்சுடும்.''

''ஐயோ.''

''நீ நம்ம கல்யாணம் பத்தி கவலைப்படறியா? நீ

சரின்னு ஒரு வார்த்தை சொல்லு. பத்து சண்டக்காரப் பசங்களை சாட்சியா வச்ச இங்கனயே தாலி கட்டறேன்.''

''ஐயோ.''

''சரி. இந்த இடம் பிடிக்கலையா? திருநீர் மலை, ஆபீஸ் ஆளுங்களோட முடிச்சிரலாம்.''

''எல்லாரை சேப்பாங்க.''

''கேக்கறது என்ன, முடிஞ்சா புதுசா கட்டிட்டு வா. இல்ல இருக்கிற புடவையில நல்லதாக் கட்டிட்டு வா. மத்தபடி தாலி செலவு ரெஜிஸ்டரேஷன் சார்ஜ் நான் பார்த்துக்கறேன்.''

''நான் என் கல்யாணம் பத்தி சொல்லலை எங்க சித்தி பெண்ணைப் பார்க்க வர்றதா முடிவாயிருச்சே. உங்களுக்குத் தெரியாதா?''

''இதுவெல்லாம் நான் கலந்துக்கறதில்லை என் பேச்சை அவங்க கேக்கறதாத் தெரியலை.''

''எதுனா பண்ணுங்கப்பா.''

''நான் எதுக்கு பண்ணனும்?''

''எங்க சித்தி பொண்ணுக்கு வயசாகிட்டே போதுப்பா, ஒரு இடமும் திகையல. உங்கண்ணனுக்கு மூப்பது வயசு இருக்குமா?''

''இருபத்தி ஒன்பது.''

''ஏன் இத்தனைநாள் கல்யாணம் ஆகலை.''

''வசம்மா. கொழுத்த மாடா. இருநூறு, முன்னூறு சவரனோட பொண்ணு கிடைக்காதான்னு ஒரு ஆத்தி ரத்ல காத்துக்கிட்டிருக்கான்.''

''முன்னூறு சவரனா?''

''அடிச்சுப் புடிச்சு பேசினா மூப்பது நாப்பதுக்கு வருவாங்க.''

'என்ன சொல்றீங்கன்னே புரியலையே.''

''அருணா, எனக்குப் பதினெழு லயசு இருக்கும் போது எங்கம்மா மீன் குழம்புல உப்பு ஜாஸ்தி போட்டுட்டாங்கன்னு எங்கப்பா அவளைத் துடைப்பத்தால அடிச்சாரு அப்படி நாலு தடலை போட்டாதான் அடுத்த தடலை சோறு சமைக்கும் போது கவனமா சமைப்பேன்னு எங்கப்பால பெத்த அம்மா சொன்னாங்க எங்க அம்மா மூஞ்சி, உடம்பெல்லாம் கண்டு கண்டா வீங்கிப் போயிடுச்சு நாலு நான் ஜாரத்தோட சமைச்சது அன்னிலேர்ந்து நான் மீன் குழம்பு சாப்பிடறதில்ல. நான் ஏன் சாப்பிடறதில்லேன்னு எங்கம்மாவுக்குத் தெரியும். ஆனா, அதைப் பாராட்டியோ, எதிர்த்தோ எதும் சொல்லலை போன வருஷம் புரொமோஷன் கிடைச்ச போது அரியர்ஸ் காசு ரெண்டாயிரத்து நானூறு ரூபாய நீ வச்சுக்கோன்னு எங்கம்மாகிட்ட கொடுத்தேன். மீன் குழம்பு வை மீன் குழம்பு வைன்னு எங்கப்பா சுத்தினாரு. உன் புருஷன் கேக்கறாரு வையுன்னு சொல்லிட்டுப் போயிட்டேன். அன்னிக்கு மீன் குழம்பு போட்டு சாப்பிட றப்போ அப்பா நீ ஏண்டா ஊத்திக்கலைன்னு கேட்டாரு பத்து வருஷம் முன்னாடி, உப்பு ஜாஸ்தின்னு எங்கம்மா வைப் போட்டு அடிச்சியே அன்னிலேர்ந்து சாப்பிடற திலைன்னு சொன்னேன். அந்தாளு, எங்கப்பன் நிமிர்ந்து பார்த்து சிரித்தாரு உன் தோபம் என் பாக் யம்னு சட்டி குழம்பையும் தன் பக்கம் இழுத்துக்கிட் டாரு. அவரு எழுந்து போன பிறகு எங்கம்மா கேட் டாங்க. நீ மீன் குழம்பு சாப்பிடறத நிறுத்திட்டா உலகம் மாறிப் போயிடுமான்னு கேட்டாங்க எனக்கு ரொம்ப வேதனையாயிடுச்சு. சாப்பிட்டுட்டு கை கழுவ

றப்போ உன் உலகம் மாறலேம்மா, ஆனா என் உலகம் மாறிடுச்சுன்னு சொன்னேன். என்னடா சொல்றேன் னாங்க உனக்கு இப்ப புரியாது ஒருநாள் புரியும்னு பதில் சொன்னேன் உனக்கு ஏதாவது புரியுதா அருணா?''

அருணா மெல்ல சச்சிதானந்தத்தின் கைகளைப் பற்றிக் கொண்டாள். முத்தமிட்டு கைகளைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''எனக்குப் புரியுதுப்பா. ஒரு நல்ல புருஷன் கிடைக் கறதுக்கு இந்த ஜன்மல பெரிய அதிர்ஷ்டம் பண்ணியிருக்க ணும். என்னிக்கு உன்னைப் பார்த்தேனோ அன்னிக்கே நீ நல்ல புருஷன்னு தெரியும். சட்டுன்னு வேஷ்டிய அவிழ்த்து பொம்பளை மேல போட்டியே, தொடை தெரிய அண்டர்வேரோட நின்னியே அப்படிப் போட்ட உன்னைப் பார்த்து நாலு பேர் சிரிச்சானே, கடவுளே... ஆடிப்போயிட்டேன் அன்னிக்கு.''

''அன்னிக்கு நீ ஆடிப் போகலை. நடந்தன்னு கடைக்கு ஓடிப்போய் வேஷ்டி குடுங்க, வேஷ்டி குடுங் கன்னு கத்தி, நூறு ரூபா கல்லால வச்சுட்டு, பாக்கி சில்லறை கூட வாங்காத, ஓடிலந்து என்கிட்ட வேஷ்டி கொடுத்தே. அப்பதான் எனக்கும் தெரிஞ்சுது. நமம னார்லயும் கெட்டிக்காரப் பொண்ணு உண்டுன்னு. அந்த மோட்டார் சைக்கிள்ள புடவை சுத்தி தரைல உருண்ட அவனும் பொண்டாட்டியும் வீட்டுக்குக் கூப்பிட்டு நம்ம ரெண்டு பேருக்கும் விருந்து வச்சாங்க அன்னைக்குப் பத்திக்கிச்சு.''

''அவங்களும் நல்ல ஆம்படையான் பொண்டாட்டி யில்ல.''

''ஆமாம். அதனாலதான் நாம ரெண்டு பேரையும் கூப்பிடணும்னு தோணிச்சு''

''அந்தாள்தான் ஆபீஸுக்கு வந்து கை குலுக்கி, நிச்சயம் நீங்க விட்டுக்கு வரணும்னு சொன்னாரு. எதுக்குங்க வானாபனு சொன்னேன். கூடப் பொறந்த தங்கச்சியா நினைச்சுக் கூப்பிடறேன்னு சொன்னார்.''

''நீ வருவேன்னு தான் நினைக்கலை கருணா.''

''என்னைப் பார்த்ததும் உங்களுக்கு ஒரே வெட்கமாப் போயிடுச்சுல்ல.''

''ஒரு வெட்கம் வந்தது. ஆனா, ஒரு விருந்துக்கு வர அளவுக்கு இந்தப் பொண்ணுக்குத் தைரியம் உண்டான்னு ஆச்சர்யமும் இருந்தது.''

''அந்த லேடி விருந்துக்குக் கூப்பிட்டு, உங்க கால்ல விழுந்து குப்பிட்டதுதான் ரொம்ப கஷ்டமாப் போயிடுச்சு.''

''அவங்க எமோஷனலாயிட்டாங்க அருணா. அப்ப நன்றி சொல்லலியேன்னு வேதனைப்பட்டு, நான் வீட்டுக்கு வந்ததும் எமோஷனலாயிட்டாங்க.''

''புடவை கிழிஞ்சு உள் பாவாடையோட தரதரன்னு தார் ரோட்ல இழுத்துட்டுப் போகுது மோட்டார் சைக்கிள். செத்து போயிட்டிருக்கும் அது.''

''செத்திருந்தா வெட்கம் இல்லை. சாகாததுதான் வெட்கம். ஐயோ. தொடை வரைக்கும் நாலு பேர் பார்த்துட்டாங்களேன்னுதான் வெட்கம். நான் சட்டுன்னு வேட்டிய அவிழ்த்துத் தூக்கிப் போட்டேனா அப்படியே திரௌபதி மாதிரி வாரிக் கட்டிக்கிச்சு புடவைய. முழங்கால், மூஞ்சியெல்லாம் ஒரே அடி. ஆனா, அதைப் பத்திக் கவலையே படலை அந்தப் பொம்பளை. வேஷ்டிதான் உயிராயிடுச்சு அந்த நேரம்...''

''இருக்காதா நடு மெளண்ட் ரோட்ல நாலு தீபாவளி புதுப் படத்துக்குப் போற கும்பல். ரெண்டு பக்கமும் போக்குவரத்து. செவசெவன்னு ஒரு மலையாளத்துப் பொம்பள கிடந்தா ஆம்பளதான் பாப்பாளுங்க எல்லோரும்.''

''ஆனா அவங்களுக்கு சரியா தமிழ் வரலை. மலையாளம், இங்லீஷ்லதான் பேசறாங்க.''

''எது பேசினா என்ன? பொம்பளை பொம்பளதானே அலமாலை அலமாலம் தானே. என்னமோ நாமலப் பண்றதுக்கே அந்த டிராமா நடந்தா மாதிரித் தோணுச்சு.''

''சரி எதோ சொல்லி வச்சா மாதிரில்ல பண்ணிட்டோம் தம்ம கதை கிடக்கட்டும். உங்க ஜூட்டுக் கதையச் சொல்லு.''

''நீங்க சொல்லுங்களேன்.''

''எதுனா சொல்லி நட்டிக் கழிச்சுடுங்க. எங்க வீட்டு சம்பந்தம் உங்களுக்கு வேண்டாம்.''

''ஜாதகம் பொருந்தியிருக்குப்பா.''

''அடசே. நீயும் நானும் என்னத்த ஜாதகம் பார்த்தோம். நம்ம பொருத்தத்துக்கு என்ன குறைச்சல்.''

''ஐயோ. அந்தப் பொண்ணுக்கு வயசாகிட்டே போகுது. இருபது, இருபத்திரெண்டு இடம் பார்த்து ஒண்ணும் தகையல.''

''குறைஞ்ச விலைக்குத் தள்ளணும்னு பார்த்திருப்பீங்க. நம்ம ஜாதில இன்னிய தேதிக்கு பத்து பவுன் இல்லாத முடியுமா?''

''இருபது பவுனுக்கு நாங்க ரெடி.''

''நாங்க ரெடியில்லை.''

''சரி, எத்தனை?கேப்பாங்க''

''நூறு பவுன்ல ஆரம்பிக்கும் நாற்பது பவுன்ல நிக்கும். அதைத் தவிர அதைக் குடு, இதைக் குடுன்னு நிறைய அறுத்துருவாங்க.''

செய்யலாம் ஒருவரை முறை வேணும்ல

''என்ன வரைமுறை. எந்த புண்ணாக்குல எழுதிருக்கு இந்த வரைமுறை பொண்ணு பெத்தவனும் நிருடன். புள்ளை பெத்தவனும் நிருடன். ரெண்டு நிருட்டுப் பசங்க. பேசறதுக்கு வரைமுறை என்ன?''

''ஏன் இப்படிக் கோபமா கத்தறீங்க?''

''அடிப்போம. ஆகாத வேலைக்கு என்னைப் போட்டு உறுக்கிட்டுருக்கே. எல்லாத்தையும் வுட்டுட்டு நம்ம கல்யாணத்தைப் பத்தி பேசலாம் வா. எனக்கு கம்யூனிஸ்ட் கிரெண்ட் நிறையப் பேர் உண்டு. தி. க. சிவசங்கரன்னு ஒரு நல்ல மனுஷன் நிறைய படிச்சவரு என்கிட்ட பிரியமா பேசுவாரு நம்ம விஷயம் சொன்னா அவரே நின்னு கப்பிரமா கல்யாணம் முடிச்சுக் கொடுப்பாரு. உங்கப்பாலோ, எங்கப்பாலோ வந்து வாயே திறக்க முடியாது. கையில கலரை உடைச்சுக் கொடுத்து மரியாதையா உட்காருங்கன்னு மண்டி போட வச்சுடுவார் அவரு.''

''எனக்கு கம்யூனிஸ்ட் கல்யாணம் வேணாம்.''

''சரி ஆனந்த ஜோதின்னு ஒரு குரூப். டாக்டர் நித்யானந்தம்னு சுறவரு அவங்க குரு வாரியோகம்னு ஒண்ணு சொல்லித் தராரு. நாறு நாற்பது பேர் அவர்கிட்ட உண்டு. என் ஸ்நேகிதக்காரன் அவர் சிஷ்யன். பாட்டுப் பாடி, சுலோகம் சொல்லி, பூஜை பண்ணி, அமைதியாக் கல்யாணம் நடக்கும்.''

''டாக்டரை இன்னொரு நாள் போயி பார்க்கலாம்.''

''கல்யாணத்துக்கா?''

''வாரியோகம்னு எதோ சொன்னீங்களே அது சத்தக்கறதுக்கு இப்ப என் ஒத்தி பொண்ணுக்கு எதுனா வழி பண்ணுங்க. நானை மறுநாள் பொண்ணு பார்க்க வராங்க. யார் யார் வருவாங்கன்னாலது சொல்லுங்க.''

''நான் வரமாட்டேன்.''

''அப்பா மேலதான் கோபம். அண்ணன் மேல ஏமா?''

''எங்கப்பாவும், எங்கண்ணனும் ஒண்ணு, எங்க தாயும் நாமும் ஒண்ணு.''

''உங்கண்ணன் முரடா?''

''முரடா இருந்தாலும் பரவால்ல. நிருடன், ரொம்ப நல்ல புள்ளை மாதிரி இருந்து இது கேளு, அது கேளுன்னு வீட்டு பொறுப்பனைத்தையும் தூண்டி விடுவான். தனக்கு உதவி பண்ணின வீட்டுப் பொறுப்பனைத்தையுமே அவங்க தலை மேலயும் வச்சுட்டான். அவமரியாதையா நடத்துவான். ஏன், இரக்கமில்லாதவன். சினிமாவுக்குப் போறீங்களா? சினிமாவுக்குப் போறீங்களான்னு எங்கம்மா எங்க பாட்டி, எங்க பாட்டியோட உடன் பொறந்த இழுவியோன்னு இருக்கு. அந்தக் இழுவி, எங்கப்பாவுக்கு ஒரு தங்கச்சி. புருஷனைத் தலை முழுகிட்டு இங்க உட்கார்ந்து தொந்தரவு பண்ணிட்டிருக்கும். அது எல்லாத்தையும் வெளில அனுப்பிச்சுட்டுட்டான் அண்ணிக்கின்னு பார்த்து செம மனசு.

சல்லிக் காசு போன பொம்பளைங்க வந்தாங்களா, போனாங்களான்னுகூடக் கவலையில்லை. குப்புறப் படுத்துக்கிட்டு தூங்கறான். நான் சொட்ட சொட்ட தலைதுவட்டு உள்ள வர, வீட்ல யாருமில்லை. கேட்டா சினிமாவுக்குப் போயிட்டாங்க, எனக்குத் தெரியாதுன்னான். நான் ஆட்டோ பிடிச்சு தியேட்டருக்குப்

போறேன். மழை விட்டும்னு எல்லாம் வெயிட் பண்ணிட்டிருக்கு. நாலு பேத்தையும் புளிமூட்டை மாதிரி அடைச்சுக்கிட்டு வந்தேன். எங்கம்மாவுக்காகத் தான் இதைச் செய்தேன். அது கிடக்கட்டும். கிட்டவா உன்னையத் தொடணும், கிள்ளணும்.

''அது என்ன ஜோதி?''

''ஆனந்த ஜோதி.''

''அங்க போய் அங்கே குருவா இருக்கற டாக்டர் கிட்ட பேசி, அவர் எதிர்க்க அரை பவுன்ல தாலி தங்கம் கோர்த்து, நாலு பேர் அறிய தாலி கட்டின பிறகு நீங்க என்னவேணா செய்யுங்க. உயிர் போற மாதிரி வலிச்சாக் கூட நான் முடியாதுன்னு சொல்ல மாட்டேன்.''

'சேச்சே...பொண்டாட்டிகிட்ட அப்படி நடக்க லாமா?'' பொம்பளைன்றது ஒரு உயிர் இல்லையா? என்னை நம்பி வந்த பொண்ணு நோவுன்னா அது என் நோவு இல்லையா? இருட்டில் உட்கார்ந்து உன்னைத் தடவித் தடவி பாட்டுப் பாடுவனே தவிர கண்ல ஜலம் வரா மாதிரி எதுவும் செய்ய மாட்டேன்.''

''உங்கம்மா வாங்கின அடி உங்களை ரொம்ப பாதிச்சிருக்கில்ல.

'எஸ். ரொம்ப...ரொம்ப பாதிச்சுது.''

''எங்கம்மா அழுவுறபோது, அது தலையைத் தடவிக் கொடுத்து, மடில போட்டுத் தூங்கப் போடணும்னு ஆசை. எங்கம்மா ஒத்துக்காது. நீ வளர்ந்த புள்ளை. என்னைத் தொடக்கூடாது; போடான்னு தள்ளிடும். அதுக்கு மீசை முளைச்ச யாரும், அவ பெத்த புள்ளையா இருந்தாலும் வேத்து ஆம்பளைத்தான். அது வளர்ந்த விதம் அப்படி. ஆனா, எங்கம்மா பிரியத்தை ஒரு கண்ணில காட்டும்பாரு எப்பா முதுகுத் தண்டு ஜிலுஜிலுடும்.''

அதுதான், உங்க கண்ணிலேயும் தெரியுது.''

''என்ன தெரியுது?''

''பிரியம்.''

''பதினஞ்சுக்குக் காட்ட மாட்டேங்கறீங்களே''

''நான் காட்டலையா? அட நன்றி கெட்டதே. வேலைய விட்டுட்டுப் போன்னு கத்தினான் இன்னிக்கு எங்க ஹெட் கினார்க், லீவ் தரமாட்டேன்னுட்டான், வேலைய விட்டுட்டுப் போறேன்னு சொல்லிட்டு தோல்ல மாட்டிக்கிட்டு வந்துட்டேன், வர அவசரத்ல போளிய மறந்துட்டோம்னு தெரிஞ்சுது ஐயோ வாங்கிட்டு வரோம்னு சொல்லிட்டமே அது ஆசைப்பட்டு காத்துக்கிட்டிருக்குமே அப்படின்னு நினைச்சு லொங்கு லொங்குன்னு நடந்து, மறுபடி போளி வாங்கிக்கிட்டு. ரெண்டு பஸ் மாத்தி பொட்ட வெளில உங்க பக்கத்ல உட்கார்ந்திருக்கேன். எனக்குப் பிரியம் இல்லையா? அநியாயமாப் பேசாதிங்க இப்படி.''

''எருமை மாடு நான் உன்கிட்ட போளி கேட்டேன்?''

''எங்க ஆபீஸ் போளி நல்லாருக்கும்பா.''

''இந்தப் போளி தின்னே நீ குண்டாயிட்டேன்னு நினைக்கறேன்''

''ஏன்? நான் அழகா இல்லையா?''

''இல்லைன்னா சும்மா விடுவியா?''

''இல்லைன்னா இல்லைன்னு சொல்லுங்க''

''இல்லை.''

''தூத்தேரி உங்களுக்குப் போயி போளி வாங்கிட்டு வந்தேன் பாருங்க'' அவள் பொட்டலத்தைத் தூக்கி வீசினாள் வீசப்பட்ட பொட்டலத்தை நோக்கி கடற் காக்கைகள் தாவி வந்தன. அவள் ஓடிப்போய்

பொட்டலத்தை எடுத்துக் கொண்டாள். அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

''யோவ். போளி வேணாம்னா போய்யா. என்னமோ இவரு காத்தையே சாப்பிட்டு வளர்ற மாதிரிப் பேசறாரு''

''நான் வாரத்துக்கு ஒருநாள் பட்டினி இருப்பேன் தெரியுமா உனக்கு?''

''பட்டினி கிடத்தல் பாவம். விவேகானந்தர் சொல்லியிருக்காரு.''

''இது பட்டினியில்லை. விரதம். உண்ணாவிரதம். நீங்க பண்றது உண்ணும் விரதம்.''

''ஆமாம். உண்ணும் விரதம். உங்களுக்கு வேண்டாட்டி போங்க.''

அவள் பொட்டலம் எடுத்து ஒரு பெரிய வில்லை எடுத்து, அவன் உதட்டில் சரட்டென்று நெழி, தன் வாயில் போட்டுக் கொண்டாள். உதட்டில் ஒட்டிய போளியை நாக்கால் தொட்டுச் சுவைத்தான் போளி நன்றாக இருந்தது. சூடாக இருந்தது. நெய் மணம் வீசிற்று

''எனக்கொரு துண்டு கொடேன்.'' ஆவலுடன் கேட்டான்.

''கொடுக்க முடியாது போடா.''

''நான் உன் வருங்கால புருஷனில்லையா. போடான்னு சொல்லக்கூடாது ஒரே ஒருதுண்டு கொடு.''

''எங்க வீட்டுக்குப் பொண்ணு பார்க்க வரேன்னு சொல்லுங்க. அப்பதான் தருவேன்''

''அதுவேற. இதுவேற''

''இல்லை. நீங்க வந்தாதான் தருவேன்.''

''நான் வரேன்னு சொன்னாக்கூட, எங்க வீடு வேண்டாம்னு சொல்லும் அருணா.''

''எப்படியாவது நீங்க வரணும். இதை நல்லபடியா முடிச்சுக் கொடுக்கணும்.''

''ஏன்?''

''அவ என்னைவிட ரெண்டு வயசு பெரியவப்பா. அவளுக்குக் கல்யாணமாகாம எனக்கு ஆச்சுன்னா. நல்லா இருக்குமா? சித்தி பொண்ணானாலும் சகோதரி இல்லையா? நல்ல பொண்ணுப்பா அது.''

''அதுக்கு ஆகட்டும் அப்புறம் பண்ணிக்கலாம்.''

''முடியாது.''

''ஏன்?''.

''எனக்கு முடியாது.''

''என்ன சொல்ற நீ?''

''எத்தனை நாள் பீச்சில உட்கார்ந்து குடித்தனம் பண்றது? எத்தனை நாள் கனவில கழுத்தைக் கட்டிக்கட்டு முத்தம் கொடுக்கறது? எனக்கு வயசாகலையா? நான் பொம்பளையில்லையா? ஜடமா? கல்லா? எனக்கு ஒரு ஆத்திரம், அவசரம் இருக்காதா?'' அவன், அவளை நோக்கிக் கத்தி முகம் பொத்திக் கொண்டான். மடியிலிருந்த போளி சேசாய்க் குலுங்கியது

''எழுந்திரும. எழுந்திரு எங்கனா போகலாம் எழுந்திரு.''

''அதெப்படி போக முடியும். எங்கனா?''

''ஏன் உங்க சித்தி பெண்ணைப் பார்த்தா நீ பொறந்தே. நீயும் ஆத்திர, அவசரத்ல பொறத்தலதான் எழுந்திரு.''

''அதை பத்தி எனக்குக் கவலையில்லை. என் கல்யாணம் நான் நினைச்ச மரியாதையோட நடக்கணும். அதுக்கு எது இடைஞ்சலோ அதை நோகாம எடுக்கணும். என் சித்தி பொண்ணு நம்ம கல்யாணத்துக்கு இடைஞ்சல்.''

''அதுக்கு என்னை ஏன் இம்சை பண்ற.''

''தட்டித்தட்டி இது ஒரு வரன் வந்திருக்கு. ரெண்டு வீடும் கலந்து பேசி பார்ப்போம் சரியா வந்தா நல்லது. வரலியா அவ தலையெழுத்து. கல்லெறியாத மாங்காய் விழுமா?''

''கல்லு உன் தலைல விழப்போகுது. அப்பவும் வந்து லோலோன்னு கத்தப் போற.''

''வந்து கட்டுப் போட மாட்டீங்களா? நான் நிக்க நேன்னு அப்ப நிக்கமாட்டீங்களா?''

''நிப்பேன்.''

''அப்ப எங்கக்காவ பொண்ணு பார்க்க எங்கண்ணனோட வீட்டுக்கு வாங்க.''

''சரி வரேன். அங்க வந்து உன்னைத் தெரிஞ்ச மாதிரிக் காட்டிக்கறதா? தெரியாத மாதிரிக் காட்டிக்கறதா?''

''ஐயோ, யாருக்கும் எதுவும் நம்மைப் பத்தித் தெரிய வேண்டாம்.''

''வந்து நான் என்ன பேசணும்?''

''அப்போதைக்கு எதும் பேச வேண்டாம். அவங்க பேசிட்டுப் போன பிறகு நாம பேசுவோம்.''

''பீச்லேயா?''

''வேற வழி.''

''சரி ஒரு போளி குடு.''

''நிச்சயம் வர்றீங்களா?''

''வரேன்னுட்டேன்ல அப்புறம் என்ன?''

''ஒரு போளிய வச்சு உங்களைப் புடிச்சுட்டேன் பார்த்தீங்களா?''

'அடிப் பைத்தியம் இந்த போளிக்கா நான் வரேன்னு சொன்னேன்?''

''இல்ல ராசா. இந்த ஏழைய கரை சேக்கறதா சொன்னீங்க. மறக்காத வந்திருங்கய்யா.'

'இன்னொரு போளி குடு.''

''கடவுளே. எங்காளு இந்தக் கல்யாணத்தை முடிச்சுக் குடுத்தான். உனக்கு இந்த ஆள் எடைக்கு நான் போளிதரேன்.''

''நீ புருஷனைத்தானே கடவுள்ன்னு சொல்ற''

''சீச்சீ...புருஷன் வேற, கடவுள் வேற, புருஷன் டெம்பரரி கடவுள் பர்மனென்ட்.

''உன் கைல போளி வாங்கித் தின்றம்பார். நான் ஒரு மாவங்கெட்டவன். இன்னொரு தண்டு கொடு. போளி நல்லாருக்கு.'' அவன் இந்த முறை யொட்டலத்தைப் பறித்துக் கொண்டான். அவளுக்கு அது பிடித்திருந்தது.

3

வாசலில் 'டம்,டம்' என்று கார்க் கதவுகள் சாத்தும் சத்தம் வயிற்றைத் தாக்கி, அந்த வீட்டுப் பெண்களுக்கு ஏதோ ஒரு சங்கடத்தை ஏற்படுத்தியது.

"அலங்க லத்துட்டாங்க, அலங்க லத்துட்டாங்க" என்று எல்லோரும் அறிந்ததையே, எல்லோருக்கும் சொல்லிக் கொண்டிருந்தார்கள் சொல்லும் போதே பதட்டப்பட்டார்கள். முன்னும் பின்னும் அலைந்தார்கள் சமையலறைக்கு எதிர் அறையில் ஒரு நிலைக்கண்ணாடி மேஜைக்கெதிரே ஒரு மர நாற்காலியில் பட்டுப்புடவை முழுக்கத்துடல் வயிறு தெரியாமல் இறுக்கிக் கட்டின பாவாடை நாடா இடுப்பை அறுக்க, நெற்றிச்சுட்டி முன் மயிரைப் பிடித்திழுக்க இலையெல்லாம் தாண்டி ஒரு இளம்புரியா கலவரத்துடன் தேவானை உட்கார்ந்திருந்தாள்

இவர்களெல்லாம் எப்போது போவார்கள், எப்போது சகலத்தையும் பிய்த்து எறிந்துவிட்டு, லேசாய் ஒரு நிப்பான் புடலை கட்டிக் கொண்டு அந்த இருட்டு அறையில், சுட்டில் மெத்தையில் படுத்துத் தூங்கலாம் என்று காத்திருந்தாள். தேவானைக்கு இரண்டு விஷயங்கள் மிகவும் பிடிக்கும். ஒன்று சாப்பிடுவது, மற்றொன்று தூங்குவது. சாப்பிட்டுக் கையலம்பியவுடனேயே கண் களைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வரும். கொல்லைப் புரம் போய் கைகழுவி, வாய் கொப்பளித்து, அங்கிருக்கிற மரக்காற்று பட்டால் கூட, வந்த தூக்கம் கொஞ்சம் கலைந்து போகும் அப்படித் தூக்கம் கலையாமலிருக்க, தட்டிலேயே கை கழுவிவிட்டு, சமையலறை ஓரம் தள்ளி கட்டிலில் போய்ப் படுத்துவிடுவதுண்டு. கறி வறுவலும், மீன் குழம்பும், தக்காளி ரசமும், சோறில் கலந்து சாப்பிட்டுவிட்டு, அந்தக் காரம்வாயலேயே இருக்க, மூன்று மணி நேர பகல் தூக்கம். இடி விழுந்து தரை பிளந்தாலும் அவளால் தூங்க முடியும். மாலையில் லேசாய் விட்டு வேலைகளில் அம்மாவுக்கு உதவி செய்துவிட்டு, அடுத்த வீட்டில் போய் கேபிள் டி.வி பார்த்துவிட்டு, அதே கதையை சமையலறையில் உட்கார்ந்து அம்மாவுக்குச் சொல்லுவாள்.

"சத்யராஜுக்கு ரெண்டு பொண்டாட்டியாடி?" அம்மா கேட்பாள்

"இல்லை. பானுப்ரியாதான் பெண்டாட்டி அந்த வில்லன்களெல்லாம் கட்டாயப்படுத்தறப்போ, குஷ்பு படத்துக்குப் பதிலா பானுப்ரியா படத்தை வரைஞ்சு தொடுத்துருவாரு. பானுப்ரியா ட்ரெயின் ஆக்ஸிடெண்ட்ல செத்துப் போயிடுச்சுன்னு நினைச்சுக்கிட்டிருப்பார் ஆனா, பானுப்ரியா சாவாது. நேரா பானுப்ரியா வில்லன்கிட்ட வந்து, என் புருஷன் இந்த வேலை செய்யறாராமே, எங்க இருக்கார்ன்னு கேட்கும்."

"ஸ்யோ" அம்மா பானுப்ரியாவிற்காகப் பயந்து வாயைப் பொத்திக் கொள்வாள்.

"அப்புறம்?"

கேபிள் டி.வியில் பார்த்த படத்தையே காமதேனுவில் பார்க்க அம்மாவும், பெண்ணும் ஒடுவார்கள்

"செண்பகம் புள்ளையாண்டிருக்காம். அதுலதுலோ பிரச்னையாம். அது என்னன்னு பார்த்துட்டு வரோம்." என்று படபடக்கிற வெய்யில் கிளப்புவார்கள் அந்த செண்பகத்தை ஐந்து நிமிடம் பார்த்துவிட்டு, அப்படியே சினிமாவுக்குப் போய் விடுவார்கள். மனைவி இறந்ததற்காக சத்யராஜ் குடித்துவிட்டு ஆடுகிறபோது கவலைப் படுவார்கள்,

"பொண்டாட்டி செத்துப்புட்டா, அவன்தான் என்ன பண்ணுவான் நல்லபடியா இருந்தவன்தான். ஒரு துக்கம். குடிக்கறான். நம்ம மணிமேலை புருஷன் வெங்கடேசன் கூட, பொண்டாட்டி சிக்காயிட்டான்னு குடிச்சு ஆரப்பிச்சுட்டான். எல்லா இடத்லேயும் நடக்கறதுதான் போ." என்று நியாயப்படுத்துவார்கள்.

சாப்பிட்டுவிட்டுத் தூங்குவதற்கு அப்பால், தேவா

னைக்குப் பிடித்த அடுத்த விஷயம் சினிமா. ஆனால் தேவானையின் தாயார் சின்னம்மாளுக்கு மகளைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமே என்ற கடமை உறுத்தலும் இருந்தது. மூத்த பெண்ணுக்குச் சீரும் சிறப்பும் செய்கிறபோதே, தேவானைக்கு என்ன செய்யப்போகிறோம் என்கிற கவலை வந்தது. அடுத்தபடி இரண்டு பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து, அதில் வரும் நகைகளை எடுத்து, கடைக்குட்டியான தேவானைக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று திட்டம் போட்டாள். ஆனால், இரண்டு மருமகள்களும் பத்து பைசாக் காசுகூடத் தரமுடியாது என்பதாய்ச் சொல்லிவிட்டார்கள். சாமர்த்தியமிருந்தால் மகன்களிடம் வாங்கிக் கொள்ளச் சொல்லிவிட்டார்கள்.

ஆனால், மகன்களோ தத்தம் மனைவியருக்குக் கட்டுப்பட்டு இருந்தார்கள். மூன்மாதிரி பத்து பவுன் நகைக்கு எந்த மாப்பிளையும் கிடைக்கவில்லை. வாய் கூசாது நாற்பது போடு, ஐம்பது போடு என்றார்கள். பத்தாயிரம் வரதட்சணை கேட்டார்கள்.

சின்னம்மாளின் புருஷன் ரத்தினவேலுவுக்கு கட்டாய வேலை நீக்கத்தில் உத்தியோகம் போயிற்று. கொஞ்சம் கூடக்காசு வந்தது. அந்தக் காசில்தான் தேவானைக்காக பதினாறு பவுன் நகைகள் ஒரு அடகுக் கடை மார்வாடியிடமிருந்து பழசாக இருந்தாலும் பரவாயில்லை என்று வாங்கி வைத்திருந்தது. அதைத் தவிர சின்னம்மாளின் நாலு பவுன் தாலிக் கொடியும், ஒரு தேய்ந்து போன மூக்கால் பவுன் மோதிரங்களும் இருந்தன.

எல்லாம் போட்டால் இருபத்தி இரண்டு சவரன் தேறும். மூத்த பிள்ளை மூன்று சவரனும், இளைய பிள்ளை மூன்று சவரனும் போடச் சொல்லி வற்புறுத்தியிருக்கிறார். அப்படிப் போடாது போனால், எனக்கு நீ கொள்ளி போட வேண்டாம் என்று எச்சரித்திருக்கார்.

அந்த எச்சரிக்கை பலனளித்தால் இருபத்தி எட்டு சவரன் நகை தேறும். இதுதான்டி ஒரு குன்றிமணிகூட வரி வாய்ப்பில்லை. எனெனில் ஒரு குன்றிமணி நகைகூட வேறு யாருக்கும் கொடுத்ததில்லை. மற்றபடி கல்யாண செலவுகளுக்கு யாருடைய கை காலிலாவது விழுந்து காசு சேர்க்க வேண்டும்.

ரெண்டே வாரத்தில் தரேன். என்று பொய் சொல்லி கல்யாணத்தை முடிக்க வேண்டும். கல்யாணம் முடிந்த பிறகு, "தரேன் தரேன்" என்று கூற வேண்டும். ரொம்ப எரிச்சலாள், "கொடுக்கற போதுதான் கொடுப்பேன்" என்று சொல்லி விடலாம்.

இன்றைய பெண் பார்க்கிற, இந்த விஷயத்திலாவது இருநூற்றிஐம்பது ரூபாய் எதிர்பார்த்து வாங்கிதான் நடத்த வேண்டியிருந்தது. காசு மட்டுமில்லை. ஜமுக்காளம், சோபா, வெள்ளித்தட்டு, கழுத்தில் போட்டுக் கொண்டிருந்த அட்டிகை, டேபிள்ஃபேன் எல்லாம் கடன்தான். மாப்பிள்ளைக்குத் தனியே ஒரு சோபா போட்டு, அதற்குப் பக்கத்தில் மாப்பிளை தோழன் உட்கார ஒரு மடக்கு நாற்காலி போட்டு, ஆண்களுக்கு சுவரோரம் நீள சோபாவும், பெண்களுக்கு பவானி ஜமுக்காளமும் அருணாதான் ஏற்பாடு செய்தாள். பவானி ஜமுக்காளத்தில் மைதிலி சுத்தரம் என்று எழுதப்பட்டிருக்கிறது.

யார் மைதிலி என்று கேட்டால், நம்ம பொண்ணு என்று சொல்ல வேண்டுமென்று உத்தரவாகியிருந்தது. ஜமுக்காளம் கருக்கலையாமலிருந்தது. மைதிலி எதிர் வீட்டுப் பெண். ஸ்டேட் பாங்கில் ஆபீஸர் அழுக்காக்காம குடுங்க மாமி என்றுதான் ஜமுக்காளத்தைத் தந்தாள். ஜமுக்காளம் இப்பவே அழுக்காகி விட்டது. ஜமுக்காளத்தின் மீது நடந்தால் அழுக்காகாமல் இருக்குமா? நடக்காமல் நிற்க முடியுமா? நிற்காமல் உட்கார

முடியுமா? அழுக்கானால் என்ன? துவைத்துக் கொடுத்து விடலாம் என்ற யோசனை வந்தது?

ஆனால், யார் துவைப்பார்கள் என்றுதான் தெரியவில்லை. இரண்டு கார்களில் ஆறு ஆண்களும், ஒன்பது பெண்களுமாய், ஒரு குறுநிலப்பகடை போலப் பெண் பார்க்க வீட்டிற்குள் வந்தார்கள். தேவானையின் அப்பா பின்னையின் தகப்பனை கைபிடித்து வரவேற்றார். அண்ணன்கள் இரண்டு பேரும் எழுந்து கைகூப்பினார்கள். உட்கார இடம் காட்டினார்கள். பெண்களை இரண்டு மருமகள்மாரும் வரவேற்க, ஒரு வயசான கிழவியை, ஒரு வயதான அம்மா மெல்லத் தாங்கி வந்தாள்.

சமையலறைக்கு எதிர் அறையில், கதவிடுக்கு வழியே அருணாவும் தேவானையும் ஆண்களைக் கவனித்தார்கள், சந்திரானந்தம் வெள்ளைச் சட்டையும், வெள்ளை பாண்டுமாய் உள்ளே நுழைந்தான். அதற்குப் பின்னால அதே உடையோடு நித்யானந்தம்.

''யாருடி மாப்பிள்ளை?'' தேவானை கேட்டாள்.

''பின்னால வர்றவரு.''

''அதெப்படி உனக்குத் தெரியும்?''

''பின்னால வர்றவருதான் அண்ணன் போலருக்கு. அவருதானே வயசாளியாத் தெரியறாரு.''

''எனக்கு முன்னால வர பையனைத்தான் பிடிச்சிருக்கு. டக்கரா இருக்கான்ல. கொஞ்சம் ராம்கி ஜாடை இருக்கு.'' தேவானை முகத்தை இடுக்கிக் கொண்டு பேசினாள்.

''அண்ணன் இருக்கச் சொல்ல நம்பிக்கு எப்படிக் கல்யாணம் பண்ணுவாங்க.''

''எனக்கு அந்தாளு வேண்டாம். கழண்ட கேஸ் மாதிரி இருக்கான்.''

''கழண்ட கேஸ்ன்னா?''

''தல்யாணத்துக்கு முன்னாடியே கண்ட பொண்ணுங்களோட விளையாடி ஓய்ந்து போன ஆளா.''

''ச்சீ....அப்படியெல்லாம் இருக்காது. அந்தாளும் நல்ல கலராத்தானே இருக்காரு.''

''எனக்கென்னமோ அவனைப் பிடிக்கல.''

''நம்பிக்கு இப்போதைக்கு கல்யாணம் இல்லையாமே.''

''உனக்கு யாரு சொன்னது?''

''உங்கம்மாதான்.''

''சரி. எவனோ ஒருத்தன். அங்க போனதும் அவனை மடக்கிட்டா போச்சு.''

''ச்சீ...பல்லு மேலயே போடுவேள். அருணாவுக்கு உண்மையிலேயே கோபம் வந்தது தேவானை அவளை முறைத்துப் பார்த்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

அருணா தலைசிவ முற்படுகையில், வேண்டாம் என்று தள்ளி உட்கார்ந்து கொண்டாள.

ஹாலில் அறிமுகம் நடந்து கொண்டிருந்தது.

''எங்க ஊர்ல எனக்கு நூறு வேலி பண்ணைன்னு பேரு. அது ஒரு காலம். நாங்க பட்டணத்துக்கு ரெண்டு தலைமுறை முன்னாடி வந்துட்டோம். எங்கப்பாவுக்கு அப்பா, மஞ்சள் மண்டி. இந்தியா முழுக்க சப்ளை

பண்ணிட்டிருந்தோம். மஞ்சள் ஐடுன்லே பேரு எங்க வீட்டுக்கு நடுல ஒரு தடலை பஞ்சம் வந்து மஞ்சள் கிழங்கு கிடைக்கல. எங்கப்பா மாட்டுத்தீவனை வியாபாரம் பண்ணினாரு. நான் கவர்ன்மெண்ட் பிரஸ்ல சேர்ந்துட்டேன். சம்பாதிச்சதில பசங்களை நல்லா படிக்க வச்சு பொண்ணுங்களை கல்யாணம் பண்ணியும் கொடுத்துட்டேன். மத்த ஐடு மாதிரி பொண்ணு வந்துதான் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுக்கணுங்கற கஷ்டமெல்லாம் எங்க ஐட்ல இல்லை. பெரிய புள்ளை பாம்பேல இருக்கான். இவன் ரெண்டாவது, தித்யாலந்தம், ரிஸர்வ் பாங்க் ஆபீஸர்.

அடுத்த புள்ளை சச்சிதானந்தம். இவன்தான். இன்ஷூரன்ஸ் கம்பெனில ஆபீஸர். இது மாப்பிள்ளை, என் ரெண்டாவது பொண்ணை இவருக்குக் கொடுத்திருக்கு. துறைமுகத்ல வேலை செய்யறாரு. எங்க பொண்ணும் அங்கேயே வேலை செய்யுது. அதுதான் என் ரெண்டாவது பொண்ணு. அது ரெண்டாவது பொண்ணோட சின்ன மாமியார். இது என் பொண்டாட்டி மரகதம். இது எங்கம்மா. அது எங்க சித்தி. எங்கம்மாவுக்கு கடைசி தங்கச்சி. அவங்களும் எங்ககூடத்தான் இருக்காங்க. இது எங்க அக்கா. அவங்க புருஷன் வெளிநாட்ல. துபாய்ல வேலை செய்யறாரு. அவங்க ரெண்டு பேரும் பக்கத்து வீட்டுக்காரங்க. எங்களுக்கு ரொம்ப ஸ்நேகிதம். இந்தம்மா எங்க வீட்டு மாடில குடியிருக்காங்க. சாமிநாத அய்யர்ன்னு கதையெல்லாம் எழுதுவாரே, அவங்க சம்சாரம். எங்க பையனுங்களை வளர்த்ததே அவங்கதான்.'

''ரொம்ப சந்தோஷம், ரொம்ப சந்தோஷம். எல்லோருக்கும் பலகாரம் கொண்டாம்மா'' தேவானையின் அப்பா குரல் கொடுத்தார்.

''ஏதுக்கு பலகாரமெல்லாம் பேச்சு முடிச்சுட்டு கை நனைப்பமே.''

''இது பலகாரந்தாங்க, இது ஒண்ணும் தப்பாயிடாது.''

''புள்ளைக்கு பெண்ணைப் பிடிச்சிருந்தா சாப்பிடறதோ, குடிக்கறதோ வச்சுக்கலாம். உட்கார்ந்த உடனேயே பலகாரம் வீங்கண்ணா நல்லால்லியே.''

''நீங்க பொண்ணு பாக்க வரலை. நேரிக்காரா வீட்டுக்கு வந்திருக்கறதா நினைச்சுக்கோங்க. ஒரே ஜாதி, ஒரே ஜனம்னு இப்படி உட்கார்ந்து சாப்பிட்டாதானே தட்டுத் தோப்பு வரும்.''

''என்னா ஜாதி என்னா ஜனம்? மெட்ராஸ்ல யாரைக் கேட்டாலும் நம்ம ஜாதிதான் சொல்றான். என்னடா அவ்வளவு பெருத்துப் போயிட்டமான்னு ஒரு அதிசயமாதான் இருக்கு. நூழைஞ்சு நாலு தலைமுறை கேட்டாதான், இவங்க நம்ம வம்சம் இல்லைன்னு தெரியுது.'

''அது சரி. நாங்க அப்படியில்லை. ஆறு தலைமுறையா மெட்ராஸ்லதான் இருக்கறோம. போன தலைமுறை வரைக்கும் மஞ்சள் வியாபாரந்தான். எங்க அண்ணாரு, இன்னைக்கும் அந்த வியாபாரந்தான் தொத்தவால் சாவடில பெரிய கடை இருக்க. நான் மட்டுந்தான் கம்பெனி வேலைக்குப் போயிட்டேன் இப்ப எல்லா வியாபாரத்லேயும் சேட்டுப் பசங்க பூந்துட்டாளுங்க. ஒரு ரூபா சாமானை ரெண்டு ரூபாய்க்கு வாங்கி, எட்டு ரூபாய்க்கு விக்கறான். நமக்கு ரெண்டு ரூபாய்க்கு வாங்கவும் முடியலை எட்டு ரூபாய்க்கு விக்கவும் முடியலை.''

''அது சரி. பொண்ணை வரச் சொல்லுங்களேன்.''

''ஏம்மா, பலகாரம் கொண்டா.''

''இருக்கட்டுங்க. முதல்ல பொண்ணு வரட்டும்.''

''பலகாரம் சாப்பிட்டுட்டே பொண்ணு பார்க்கலாமே.''

''முதல்ல, வந்த வேலைய முடிக்கலாம் பையனுக்கு அவசரம் எங்கேயோ போகணுங்கறான்.''

''சரி பொண்ணு வரட்டும்.''

அருணா இந்த முறை தேவானையின் முகத்தைப் பிடித்து முன் தலைவாரி விட்டாள். கர்ச்சீப்பால் நெற்றியில் ஒற்றினாள். ''நிதானமா நடந்துபோ. தபதபன்னு போகாதே'' என்று எச்சரித்தாள்.

ஐந்து, ஐந்தாய், காபி டப்ளர் வைக்கப்பட்டு, காபி ஊற்றப்பட்டு, முதல் தட்டை தேவானையும், இரண்டாவது தட்டை சின்ன மருமகளும், மூன்றாவது தட்டை மூத்த மருகளும் எடுத்துக் கொண்டார்கள். சமையலறையிலிருந்து வரிசையாய்க் கிளம்பினார்கள். அவர்கள் போவதைப் பார்த்து அருணாவுக்கு ஏனோ சிரிப்பு வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள். கதவிடுக்கின் வழியே சச்சிதானந்தத்தைப் பார்த்தாள். சச்சிதானந்தம் அலட்சியமாய், தனக்கும் இந்தக் கூட்டத்துக்கும் சம்பந்தமில்லை என்று உட்கார்ந்திருந்தான். நித்தியானந்தம் கண்ணில் பெண்ணைப் பார்க்கும் ஆவல் இருந்தது. கண்கள் நாலு பக்கமும் பரபரத்து அலைந்தன.

ராஜா மகள், ரோஜா மலர், என் ஆசை நிறைவேறுமா? என்று அந்தக் கூட்டத்திற்கு நடுவே டான்ஸ் ஆடவேண்டும் என்று அருணாவுக்கு ஆசை வந்தது. நித்யானந்தம் ஆலவாய் எழுந்ததும் சட்டென்று ஒதுங்கி விட வேண்டும். அதே போல சச்சிதானந்தம் எழுந்தால், லேசாய் அவன் அருகில் இழைய நிற்க வேண்டும். கனத்த ரோஜா மாலையை சச்சிதானந்தம் கழுத்தில் போட்டு குதிரையில் ஏறி, அவனுடன் ஓடிவிடவேண்டும். அருணா தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். தான் தேவானை மாதிரி குண்டு இல்லை. வெறும் எட்டாவது இல்லை. பழைய இட்லி குழம்பு சாப்பிட்டுவிட்டு,

நினைவிற்கு ஓடுகிற ஜாதியில்லை. அப்படியானால் தான் யார் கேள்வி எழுந்தது.

நான் ராஜா மகள், புது ரோஜா மலர் என்று பதில் வந்தது. தேவானையை விட நாறு மடங்கு அழகு என்று கர்வம் வந்தது. மறுபடி கதவிடுக்கு வழியே ஹாலில் என்ன நடக்கிறது என்று கண்ணத்தை அழுத்திப் பார்த்தாள்.

நித்யானந்தத்துக்கு ஒல்லியான பெண்களைப் பிடிக்காது.

அவர்கள் சோறு சமைப்பவர்கள். நல்பர்கள் வந்தால் காபி கொடுத்துவிட்டு உள்ளே போய்விட வேண்டியவர்கள். 'ஹாய்', டய் என்று இங்லீஷ் பேசினால் நித்யானந்தத்திற்குப் பிடிக்காது. அதுதவிர, அந்தப் பெண்ணின் மூலம் வாழ்க்கை மதிப்பு உயர வேண்டும். மைனர் செயின், பிரேஸ்லெட், லைரமோதிரம், புல்லட் மோட்டார் சைக்கிள் என்று பல பொருட்கள் கிடைக்க வேண்டும். கல்யாணத்துக்கு பத்து செட் உடையாவது எடுத்து விட வேண்டும். இரண்டு செட் ஷூவாவது வேண்டும். ரிஸர்வ் பாங்கில் எல்லோரும், எப்போதும் மாப்பிள்ளை, மாப்பிள்ளை என்று கூப்பிட வேண்டும்.

என்னா ட்ரெஸ் பண்றான்டா என்று ஆண்களே பொறாமைப்பட வேண்டும். நிதி இது எங்கே வாங்கின ஷர்ட்? என்று பெண்கள் கேட்க வேண்டும். என்ன செண்ட்ங்க அது மாக்ஸியா, சார்லியா' ஆண்-பெண் இருவருமே கேட்க வேண்டும் இப்படிப் பல நாறு ஆசைகள் அவனுக்கு இருந்தன

ஆனால், பெண் பார்க்க சச்சிதானந்தம் வந்ததுதான் அவனுக்கு வெறுப்பாக இருந்தது. அதென்னமோ சச்சிதானந்தம் முகம் மட்டுமே, பள்ளிக்கூடத்துக்குப்

போகிற பையன் முகம் மாதிரியே இருக்கிறது, கண்ணுக்குக் கீழ், வளையமில்லாமல் உதடு கறுக்காமல், தலைமுடி கொட்டாமல் அவனுக்கு இருக்கிறது.

''உன் தலைக்கு என்ன எண்ணெய் வைக்கற, உனக்கு மட்டும் என் முடி கொட்டாம இருக்கு' என்று கேட்டதற்கு முப்பது பக்க புஸ்தகத்தைத் தூக்கிப் போட்டான். வாசியோகம் என்று அந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தது.

''இதை எங்கிட்ட கத்துக்க. முடி கொட்டாது மூஞ்சி சுருங்காது.'' என்றான். அந்த புத்தகத்தை இரண்டு பக்கம் படித்தவுடனேயே தூக்கம் வந்தது. நாளை கற்றுக் கொள்ளலாம் நாளை கற்றுக் கொள்ளலாம் என்று நாட்கள் தள்ளிப் போயின.

தேவானை எழுந்ததும் அவள் இடுப்புதான் அவன் கண்ணில் பட்டது பிறகு நெஞ்சு விம்மல் கண்களை உறுத்தியது. புஜம் தெரிந்தது. குனியும்போது பிருஷ்டம் புத்தியைத் தாக்கியது. ஜாதி மாடு என்று நினைத்துக் கொண்டான். இடுப்பை இறுக்கி, நெஞ்சில் நெஞ்சு வைத்து மனசுக்குள் அவளை முத்தமிட்டான் ஏகப்பட்ட நகைகள் அவள் போட்டுக் கொண்டிருந்தது சந்தோஷமாக இருந்தது. இருபத்தைந்து முப்பது பவுன் தேறுமோ என்கிற கணக்கு உள்ளே ஓடிற்று. தன்னைச் சேர்ந்தவர்கள் தன்னைப் பார்ப்பது கண்டு கண்களைத் தாழ்த்திக் கொண்டான்.

அவனுக்கு தேவானையைப் பிடித்துவிட்டது. ஆனால், அதை உடனே சொல்லக்கூடாது. போய்க் கடிதம் எழுதுகிறேன் என்று சொல்லி, மற்ற விஷயங்கள் தகைந்த பின் பெண் பிடித்திருக்கிறது. என்று சொல்ல வேண்டும். காபி ரொம்ப சுமாராகத் தான் இருந்தது. பாதி டம்ளர் காபியை கீழே வைத்து

விட்டான் சச்சிதானந்தம் வேறு யாரையோ தேடுவது போல் தெரிந்தது. உள்ளேயிருந்து எட்டிப்பார்க்கும் வேலைக்காரப் பெண்ணை டாவடிக்கிறானா என்ற சந்தேகம் வந்தது.

''என்னடா, பேசாத உட்கார்ந்திருக்கே''—அத்தை அவனை நோக்கிப் பேச்சை ஆரம்பித்தாள். இந்த சண்டாளி அதிகம் வாய்திறக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இரண்டு மூன்று முறை நல்ல இடங்களை இவள்தான் கலைத்துவிட்டாள். ஒண்ணரைக்கண் பெண் ஒருத்தியை, இவன் கலையில் கட்டப்படாத பாடு பட்டாள். ''கண்ணு எப்படியிருந்தான்னே? என்பது பவுன் போடறேங்குறாங்க. கரக்குதா?'' என்று கேட்டாள்.

பெண்ணும் அப்சமாக இருக்க வேண்டும். காசும் கைநிறைய வரவேண்டும் என்பதால் நித்யானந்தத்தின் ஆசை அப்படிக் கல்யாணம் கட்டியவர்கள் ரிஸர்வ் பாங்கில் நிறைய உண்டு. நித்யானந்தம் சில கணங்கள் தேவானையைப் பார்த்துவிட்டு, காலுக்கருகே பரவியிருந்த ஜமுக்காளத்தின் டிஸைனை ரசிக்கத் துவங்கினான்.

அந்த இருப்புசேர் உட்கார லாட்டமில்லாமல், இடுப்பில் ஏதோ ஒரு இம்சையைக் கொடுத்துக் கொண்டேயிருந்தது. தேவானை நித்யானந்தத்துக்கும், சச்சிதானந்தத்துக்கும் காபி கொடுத்துவிட்டு, பின்னையின் தகப்பன் யார் என்று பார்த்துவிட்டு, அவருக்குக் காபி கொடுத்தாள. நித்யானந்தத்தின் அம்மாவிற்கு. அருகே உட்கார்ந்திருந்த கிழவிக்கும் காபி கொடுத்தாள்.

''நான் காபி சாப்பிடறதில்லை. என் பக்கத்ல உட்கார்'' கிழவி கொஞ்சம் அதட்டலாகவும், ஒரு அன்பு கலந்த உரிமை மாதிரியும் பேசியது. தேவானை தன் அம்மாவை ஒருமுறை பார்த்துவிட்டு கிழவிக்கு அருகே உட்கார்ந்து கொண்டான்.

''கழுத்துல போட்டிருக்கியே, இதெல்லாம் உண்மைதானா?' கிழவி நேரடியாகத் தாக்குதலில் இறங்கியது. தேவானை சற்று மிரண்டாள். சட்டென்று தைரியம் வர, ''ஆமாம். எல்லாம் எங்க வீட்டுது'' என்றாள்.

''எத்தனாவது படிச்சிருக்கே'' நித்யானந்தத்தின் அம்மா கேட்க, எட்டாவது என்று சொன்னாள்.

''அவ பெருசானவுடனே நாங்க படிப்பை நிறுத்திட்டோம்'' தேவானையின் அப்பா குறுக்கிட்டுப் பேசினார்.

'படிச்சு என்னா பண்ணப் போகுது. ஓட்டு வேலையெல்லாம் பரபரன்னு செய்யும். சகலவிதமான சமையலும், பத்து இருபது ஆளுக்குத் தானே ஒண்டியா செய்யும். நீங்க படிச்ச பொண்ணாப் பாக்கறிங்களா?''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க. எங்களுக்கு உறவு ஜனம் ஜாஸ்தி வகையா கல்யாணம் பண்ணனும்.''

''வகையான்னா எப்படி? பலவகையா செய்யலாம். ஸ்டார் ஓட்டல்ல நடத்தலாம். திருப்பதியிலேயும் நடத்தலாம். நாங்கள்ளாம் பெரும் பணக்காரங்க இல்லை. சாராயங் காச்சறதோ, கஞ்சா பயிர் பண்றதோ இல்லை. எப்படிப்பட்ட வகைன்னு சொல்லணும்'' தேவானை அப்பா பேச, தேவானை குதித்து எழுந்திருந்தாள்.

''அப்ப நான் வரேங்க'' என்று கிழவியிடம் சொல்லிவிட்டு உள்ளே போனாள். போகும் போது நித்யானந்தத்தை ஒருமுறை பார்த்துவிட்டு, பார்த்த நேரத்திலேயே, நடையை ஓட்டமாக மாற்றி அறைக்குள் புகுந்து கொண்டாள். அருணா அவள் வந்ததைத் திரும்பிப் பார்த்துவிட்டு, ஹாலில் நடக்கும் சம்பாஷணையில் காது பதியவைத்தாள்.

''எங்களுக்கு ஒரு முந்நூறு இலை விழும்'' நித்யாவின் அப்பா பேச.

''மிச்சம்'' நித்யாவின் அத்தைக்குரல் கொடுத்தாள். ''முந்நூறெல்லாம் போறாது. நானூறாவது விழும்'' என்று எண்ணிக்கையை அதிகப்படுத்தினாள்.

''எடுத்தவுடனே சாப்பாட்டைப் பத்திப் பேசினா? பொண்ணுக்கும், பிள்ளைக்கும் பிடிச்சிருக்கான்னு கேக்க வேண்டாமா?''

''என்னா கேக்கறாங்களே, பதில் சொல்லு.''

''நீங்க சொன்னா சரி.'' நித்யானந்தம் முணுமுணுப்பாய் பதில் சொன்னான்.

''அவன் சரின்னுட்டான். நீங்க உங்க பொண்ணை வேணும்னா கேட்டுட்டு வந்திருங்க.''

''நாங்க சொன்னா எங்க பொண்ணு தட்டாது. எங்களுக்கும் பையனைப் பிடிச்சிருக்குது. மத்தபடி நீங்க தீர்க்கறதுலதான் எல்லாமே அடங்கியிருக்கு.'

''நாங்க என்ன கேட்டுறப் போறோம். எல்லோரும் கேக்கறதைத்தான் கேக்கறோம்' யாரோ பெண்மணி குரல் கொடுத்தாள்.

''அவங்க எவ்ளோ செய்வாங்க. அதைக் தேளேன்டா முதல்ல'' நித்யானந்தத்தின் அத்தை கொஞ்சம் உரக்கச் சொல்ல, அந்தக் குரல் உயரலில் விடுதொங்சம் மிரண்டது.

''இருபது பவுன் செய்து வச்சிருக்கறேன்.''

''இருபதா?'' நித்யாவின் அப்பா குரலில் இளக்காரம் ஏறிற்று.

''அவங்க பேசட்டும் சும்மா இருடா'' அத்தை மறுபடியும் அடக்கினாள்.

''கூட ரெண்டோ மூணோ பவுன் போட்டு அனுப்பறோம். உங்க எதிர்பார்ப்பு என்ன?''

''எங்க பொண்ணுக்கு நாலு லருஷத்துக்கு முன்னாடி நாற்பது பவுன் போட்டோம்.''

''நாற்பது ரொம்ப அதிகமாச்சுங்களே.''

''அதுக்குக் குறைஞ்ச இடத்ல நாங்க பொண்ணு எடுக்கறதா இல்லை. எங்களுக்கு ஒரு அந்தஸ்து இல்லையா?''

''உங்க அந்தஸ்துக்கு அறுபதுகூடக் கேக்கலாம். ஆனா எனக்கு செய்ய முடியணுமே.''

''எங்க வீட்டுக்கு முதல் மருமக. இதுவே இருபது இருபத்திரெண்டுன்னா அடுத்தது அஞ்சு பத்துக்குத்தான் வரும்.''

''நீங்க சொல்றது சரி. ஆனா, எனக்கு முடியணுமில்ல''

''சரி எவ்வளதான் முடிவாச் சொல்றீங்க?''

''இருபத்தைஞ்சு பவுன் போடறேங்க.''

''அப்பால.''

''அப்பாலன்னா புரியலையே.''

''மத்தபடி ரொக்கம் எவ்வளோ. துணிமணிக்கு எவளோ.''

''வரதட்சணை வாங்கறது சட்டப்படி தப்புங்க''

''அது சரி. சட்டப்பிரகாரமா நடக்குது எல்லாம் இங்க? குடிக்கறது சட்டப்படி தப்பு. ஆனா, பேட்டைக்குப் பேட்டை சாராயம் காய்ச்சறான்.''

''அவங்க காய்ச்சலாம் நாம காய்ச்ச முடியுமா?''

''சட்டத்துக்கு அடங்கி நாம ஒண்ணும் இல்லைன்னு சொல்ல வரேன். நீங்க எவ்வளவு எதிர்பார்க்கறீங்க ரொக்கம்?''

''இருபதாயிரம் ரூபா ரொக்கமா கொடுத்துடணும். எங்களுக்குத் துணிமணி செலவு இருக்கு.''

''இருபதுல்லாம் நம்மால கொஞ்சங்கூட முடியாதுங்க. பொண்ணு வைக்க வேண்டிய இடத்ல பூ வைப்பேள்.''

''பூ வைக்கற இடத்ல பூ வைக்கணும். பொன் வைக்கற இடத்ல பொன் வைக்கணும். இருபதுக்குக் குறைஞ்ச எங்களுக்கு மரியாதையில்லை.''

''உங்க மரியாதைக்குக் கூடவே தரலாம். ஆனா, எனக்கு முடியாதுங்களே.''

''உங்களுக்கு எவ்வளவுதான் முடியும்னு கோடு போட்டா மாதிரிச் சொல்லிடுங்க.''

''இருபத்தைஞ்சு பவுன் நகை, ரெண்டாயிரம் கையில தரேன். மாப்பிள்ளை துணிக்கு ஒரு மூவாயிரம் தரேன் எனக்கும் ரொம்ப செலவு இருக்குங்க.''

''இதுதான் கடைசீங்களா?''

''இதுக்கு மேல எள்ளை அடிச்சுப் போட்டாக்கூட ஒண்ணும் கிடைக்காதுங்க''

''நாங்க ஏன் அடிக்கப் போறோம். நாற்பத்தைஞ்சு பவுன் நகையும், மூப்பதாயிரம் ரொக்கமுமா வந்தது. எங்க நித்தி பொண்ணு பிடிக்கலைன்னுட்டான். புடிக்காத பெண்ணைக் கல்யாணம் பண்ணிவச்சிட்டு யாரு கஷ்டப்படறது அதனால வேண்டாம்னுட்டோம்.''

''ஸ்கூட்டர் வேற தரேன்னாங்களே அவங்க'' ஒரு பெண்மணி எடுத்துக் கொடுத்தாள்.

''இது தவிர ஸ்கூட்டர் எதுனா வாங்கித்தறீங்களா?''

''அப்ப இதுக்கு ஒத்துக்கறீங்கன்னு அர்த்தமா?''

"நாங்க எதுவும் ஒத்துக்கலை. இது தவிரவும் எதுவும் செய்வீங்களான்னுதான் கேட்டோம்.

"இது தவிரல்லாம் நாங்க ஒண்ணும் செய்யறதா இல்லம்மா எங்களால முடிஞ்சது இவ்வளவுதான்."

"அப்ப சரி எங்களுக்குப் பொண்ணு பிடிச்சிருக்கு. உங்க பொண்ணுக்கும் என் பையனைப் பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டீங்க என் புள்ளைக்கும் எதோ காமதேர மான்னு உத்தியோகமில்லை. ரிஸர்வ் பாங்க. நீங்க யோசனை பண்ணி முடிவுக்கு வாங்க. இப்பவே உள்ள போயி பேசறதாயிருந்தாலும் பேசலாம்."

"நான் பேசறது உங்களோடதான். உள்ளுக்குள்ள போயிப் பேசறதுக்கு எனக்கொன்னும் ஆரு இல்லை. செய்ய வேண்டியதெல்லாம் நான்தான் செய்தாகணும்."

"அப்ப சரி. நாங்க போயி உங்களுக்கு லெட்டர் எழுதறோம். இல்லை யார்கிட்டேயாவது தகவல் சொல்லி யனுப்பறோம்."

"யார்கிட்ட தகவல் சொல்லுறீங்க?"

"இது மாப்பிள்ளைக்கு தம்பி. சச்சிதானந்தம். இவன்கிட்ட சொல்லியனுப்பறோம். அப்ப உங்க முடிவு அதுதானா?"

"ஆமாமா. இருபத்தைஞ்சு பவுன் ஐயாயிரம் ரொக்கம். மத்தபடி கல்யாணச் செலவு என்னுது. உங்க பக்கம் முன்னூறுன்னு கணக்கெடுக்கறேன்."

"அப்படியெல்லாம் எடுத்துச்ச வேண்டாம். நாங்க அதையும் சொல்லியனுப்பறோம். அவன் ஸ்கூட்டர் வர வேண்டா இந்த சம்பந்தமே வேண்டாங்கறான்."

"அதுசரி. ஸ்கூட்டர் அவர் என்னைக்கும் வேணா

லும் வாங்கிக்கலாம். நல்ல பொண்ணாக் கிடைக் கணுமே."

"ஒரு முப்பது பவுனாவது போடலியேன்னுதான் நாங்க ஸ்கூட்டர் கேக்கறது. அஞ்சு சவரன் பார்க்கா தீங்க."

"முப்பதுன்னா ஸ்கூட்டர் வேணாமா?"

"அதெப்படி. ஸ்கூட்டர் பேச்சு தனி நாப்பதுலேர்ந்து முப்பது வந்துட்டோம். நீங்கதான் இருபத்தைஞ்சிலேயே ஆடாத நிக்கறீங்க."

"இதுக்குமேல போடறதுக்கு வசதியில்லையே முப்பது, முப்பத்தைஞ்சு சவரன் கடன் வாங்கிப் போட்டாலாம் கல்யாணத்தன்னைக்கு வாண வேடிக்கை பண்ணாத திருக்கணும்."

"தினம் தினமா வாண வேடிக்கை கல்யாணம்ன்ற போது, நாலு மனுஷாள் மெச்சறா மாதிரிதான் கல்யா ணம் பண்ணணும். அதுல போய் சிக்கனம் பார்ப்பாங் களா? உங்களுக்கு இதுதானே கடைசிப் பொண்ணு."

"மூத பொண்ணுக்கு நிறைய செய்துட்டுதான் இப்ப முழிக்கறோம்."

"அதைச் சொல்லு மகராசான்னானாம் ஒரு கண் ணுல வெண்ணை, ஒரு கண்ணுல சுண்ணாம்பா. இந்த பொண்ணுக்கும் செய்யத் தோணலையா?

"செய்யணும்னு ஆசைதான். வசதியில்லையே."

"மனசிருந்தா வசதி வரும். எங்களுக்கு யாரையும் பிய்ச்சுப்புடுங்கணும்னு அவசியமில்லை நாலு பேர் கேக்கற போது நாங்க நிமிர்ந்து நிக்கறா மாதிரி, சீர் பத்தி சொல்ல வேணாமா?"

"முப்பது பவுன் ஒண்ணும் மட்டம் இல்லீங்க."

''அதுக்குத்தான் ஒத்துக்கிட்டோமே. அடுத்தபடி பேச மாட்டங்கறிங்களே.''

''அவ்வளவுதான் என்னால பேச முடியும்.''

''அப்ப போயி தகவல் சொல்லியனுப்பறோம்.''

அவர்கள் எழுந்தார்கள். ஹாலின் ஓரம் போய் பெண்களும், ஆண்களுமாய் குசுகுசுவென்று பேசினார்கள் போகும்போது சொந்தா வீடா என்று கேட்டு நீள அகலம் தெரிந்து கொண்டு வாசலுக்குப் போனார்கள். சச்சிதானந்தம் வெளியேறும்போது அருணா கொல்லைபுரம் சுற்றி வீட்டின் வலதுபக்க சந்து வழியாக வாசலுக்கு ஓடினாள். தோட்டக்கதவு திறந்து அவர்கள் வாசல் அடைவதற்குள் தெரு தாண்டி, எதிரேயுள்ள மைதிலி வீட்டில் நின்று கொண்டாள்

''என்னடி ஆச்சு'' மைதிலி ஆவலுடன் எழுந்து வந்து கேட்க ''ஏகப்பட்டது கேக்கறாங்க மைதிலி'' என்று பொருமினாள். சச்சிதானந்தம்தான் முதலில் வெளியே வந்தான்.

''மைதிலி.''

''என்ன?''

''இந்தாளை நல்லா பாத்துக்க. நான் அப்புறம் விஷயம் சொல்றேன்.''

''இவர்தான் மாப்பிள்ளையா?''

''மாப்பிள்ளைக்கு தம்பி.''

''நல்லாருக்கான்டி அந்தப் பையன்.''

''அது நம்ம பையன்'' அருணா மைதிலியை நோக்கி கண்சிமிட்டினாள்

''ஏய் என்ன இது?''

''நான் இன்னொரு நாள் சொல்றேன். யார்கிட்டேயும், எதுவும் பேசாதே.''

அவர்கள் காரில் ஏற அவள் வெளியே வந்தாள். சச்சிதானந்தம் அவளைப் பார்த்து நிகைத்தான். அவன் பார்க்க அவள் தேவானையின் வீட்டிற்குள் நுழைந்தாள். இரண்டு கார்களும் உருமிக் கிளம்பி, தெருவில் திரும்பி மறைந்தன.

''இத்தினி பலகாரம் பண்ணியிருக்கோம் ஒண்ணும் துண்ணாத போயிட்டீங்களே'' தேவானையின் அம்மா அலுப்போடு சொன்னாள்.

''வச்சிருந்து ராப்பிச்சைக்காரனிட்டப் போடு. போறது வரைக்கும் புண்ணியமாவது ஆகும்.

''இது இப்படிக் கொடுக்கறதைவிட, அப்படித் தூக்கிப் போட்டுடறது பெட்டர்.''

''மாப்பிள்ளை ஒரு கைபிடிங்க, எதிர்வீட்ல போய் சோபாவைப் போட்டுட்டு வந்துருவோம்' இரண்டு ஆண்கள் சோபாவைத் தூக்கிக் கொண்டு நகர, அருணா குனித்து ஜமுக்காளம் எடுத்து, கீழே இறங்க தோட்டக் கதவின் அருகே சச்சிதானந்தம் வந்து நின்றான்.

எல்லோரும் வெட்கம் அடைய, ''செருப்பு மாத்திப் போட்டுட்டுப் போயிட்டேங்க. அதுதான் மறுபடியும் வந்தேன்'' என்று சொன்னபடி அவனும் வெட்கப்பட்டான். அவன் வலது காலில் கருப்புச் செருப்பும், இடது காலில் சிகப்புச் செருப்பும் இருந்தன. அருணா அதைப் பார்த்துவிட்டு வாய்விட்டுச் சிரித்தாள். அவன் செருப்பைச் சரியாய் மாற்றிக்கொண்டு, அக்கா புருஷனிடம் கை குலுக்கிவிட்டுப் போனான். சோபாவும், ஜமுக்காளமும் எதிர்வீட்டுக்குப் போயின.

''உங்கள் படு கில்லாடிடா—உன்னைப் பார்க்கறதுக்

குன்னே செருப்பை வேணும்னு காலைமாற்றிப் போட்டுக் கிட்டுப் போயிருக்கான்'' மைதிலி ஜமுக்காளத்தை வாங்கிக் கொண்டு உரக்கச் சொன்னாள் மறுநாள் சச்சிதானந்தத்தைக் கேட்டபோது அவன் 'ஆம்' என்று அதை ஆமோதித்தான்.

4

''ஏம்ப்பா அப்படி செருப்பை மாத்திட்டுப் போனீங்க.' அருணாவுக்கு அவனைப் பற்றி எல்லா விஷயமும் சந்தோஷமாக இருந்தது. அந்த நேரம் அவன் கையைப்பிடித்து இருத்தால், உனக்கில்லாததா, எடுத்துக்கோ யேன் என்று சொல்லக் கூடிய ஆனந்தமிருந்தது அவனும் அவளுமே தேவாலையின் திருமணத்திற்கு வேர்க்கால்கள் என்கிற கர்வமிருந்தது. சொன்ன சொல் தவறாது சித்தி மகளை, அண்ணனுக்காகப் பெண்பார்க்க வந்து அலையடக்கமாய் நடந்து கொண்டவன் மீது அதித காதல் தோன்றியது. இதற்காக, இப்படிப்பட்ட புருஷனுக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுக்கலாம் என்று தோன்றியது.

பெண்கள் சிலநேரம் இவ்விதமாதான். தன்மீது கரிசனமுள்ளவர்கள்மீது காதல் பொங்கி வழியும். தனக்காக சுமக்கிறவனைப் பெண்களுக்கு அதிகம் பிடிக்கும். அந்தச் சுமைக்காக சிடுசிடுக்காமல் இருக்கிற ஆண்மீது பிரியம் வரும்.

ஆனால், அருணா தயாராக இருந்தது சச்சிதானந்தத்திற்கு உறைக்கவில்லை. அவனுக்கு தலைகால் அதிகம் வந்து விட்டன. அருணாவிற்காகத் தேவையில்லாத

விஷயத்தில் இறங்கி விட்டோமோ என்கிற கலவரம் அவனுக்குள் வேர் விட்டிருந்தது. ''அருணா, செருப்பு விஷயத்தை விட்டுடுவோம். மத்ததை பேசுவோம்''

''நல்லா பேசுங்க'' அவள் நெருங்கி உட்கார்ந்து கொண்டாள்.

''உங்க சித்தப்பா வீட்ல எதாவது கூடப் போடப் போறாங்களா?''

''இல்லை.''

''புது ஸ்கூட்டர் வாங்கித்தரப் போறாங்களா?''

''முடியாது. அது கஷ்டம்.''

''ரொம்ப நல்லதா போச்சு. எங்க வீடு ஒத்துக்காது.''

''ஏன்?'' அவள் வேதனையோடு கேட்டான்.

''கூட அஞ்சு பவுன் இல்லை ஒரு ஸ்கூட்டர். ரெண்டுலே எதாவது ஒண்ணு கேக்கறாங்க.''

''உங்க வீட்டு மனுஷங்களுக்கு என்னை பைத்தியமா பிடிச்சிருக்கு?'

''ஆமான்னு அப்பவே சொல்லேன். நீதான் கேட்கல''

''முப்பத்தைஞ்சு பவுன் அது தவிர ஐயாயிரம் அடுக்குமா இது.''

''விட்டுடுங்க.''

''எங்க வீட்டுப் பெண்ணைப் பற்றி என்ன சொல்றாங்க?''

''அவங்களுக்குப் பொண்ணு முக்கியமில்லை. காசுதான் குறி.''

14478
312603

''நான் அங்க வந்து, எதாவது குப்பை கொட்ட முடியும்னு நினைக்கறீங்களா?''

''நீ ஏன் அங்க வரே? என் வீட்டுக்கு வந்து என் குப்பைய கொட்டு போறும்.''

''உங்க வீடு நம்ம வீட்டுக்கு வராதா?''

''வந்தா என் வீடுன்னு நெஞ்சு நிமிர்த்தி சொல்லு.''

''உங்க அண்ணன் இந்த மாதிரி சொல்லமாட்டாரா?''

''மாட்டான். அவனுக்குப் பெண்ணைவிடக் காசு முக்கியம்.''

''அங்கேயே பொண்ணு பிடிச்சிருக்குன்னு சொன்னாரு.''

''உங்க சித்தி பொண்ணு குண்டா இருக்கு. கட்டிப் புடிக்கறதுக்கு வாட்டமா இருக்கும்கறதால பிடிச்சிருக்குன்னு சொன்னான்.''

''ஏன் இப்படி அசிங்கமா பேசறீங்க?''

''நானா பேசறேன். பேசினதை சொன்னேன்.''

''அப்படி சொன்னாரா உங்கண்ணன்?''

''எங்க வீட்ல மறுபடியும் அவன்கிட்ட கேட்டாங்க. என்னடா பொண்ணு பிடிச்சிருக்கான்னு. குண்டாயிருக்குன்னு பார்க்கறேன்னான். தேய்ஞ்சு துடைப்பம் மாதிரியா இருக்குன்னு கேட்டாங்க. குண்டாயிருக்கறதுதான் செளகர்யம்னு சொன்னான். எங்க வீடு சிரிச்சுது.''

''சரியான பண்ணாடைங்க.'' அவள் ஒரு பெண்மையை இழிவு படுத்திய கோபத்தோடு சீறினாள். அவன் மௌனமாயிருந்தான்.

''நீங்க என்ன நினைக்கறீங்க என் சித்தி பொண்ணு பத்தி?''

''எதுவுமே நினைக்கலை.''

''அவளை பார்த்தா நல்லவளாத் தெரியலையா?''

''ஒரு பொம்பளைய பார்த்து நல்லவளா, கெட்டவளான்னு சொல்றதெல்லாம் கஷ்டம்.''

''எங்க சித்தி வீடு தல்ல மாதிரியா தெரியலையா?''

''ஏன் போட்டு அறுக்கற, எனக்குத் தெரிஞ்சு என்ன புண்ணியம்.''

''சரி எங்க வீட்டை பத்தி என்ன சொல்றாங்க?''

''அல்பம்ன்றாங்க.''

''யாரை?''

''உங்க சித்தப்பாவை.''

''ஏன்?''

''கத்திரிக்கா வியாபாரம் மாதிரிப் பேசறான். பொண்ணு பெத்துவச்சவன் நாலு காசு சேர்த்து வச்சுக்கக் கூடாது. ரத்தினக் கம்பளம் போட்டுட்டா மயங்கிடுவமான்னு கேக்கறார்.''

''அது எங்க வீட்டுக் கம்பளம் இல்லை.''

''எனக்குத் தெரியும். ஆனா, அந்த சோபா உங்க வீட்டுதுன்னு நினைச்சேன். அதையுமா கடன் வாங்கியிருப்பீங்க.''

''எங்க சித்தி வீட்டு சோபா கொஞ்சம் அழுக்கா இருந்தது. அதுதான் எதிர் வீட்டு சோபா எடுத்தாந்தோம்.''

''அங்கதான் தப்பு பண்றீங்க. கடன் வாங்கி பெரிய பொருளா போட்டுடறீங்க. அதை வச்சு தப்பா கணை மதிப்பு போடறாங்க. வீட்ல லெதர் சோபா இருக்கே, கூட செய்யமாட்டாங்களான்னு கேக்கறாங்க.''

''அது யாரு ஒல்லியா ஒரு பொம்பளை.''

'எங்க அத்தை.''

''அந்த அம்மாதான் இவங்க பண்றாங்க, அவங்க பண்றாங்கன்னு பேசுச்சு.''

''துட்டு முக்கியம்ன்றவங்க டோரிக்கண்ணு பொண்ணையே கட்டிக்க வேண்டியதுதானே.''

''எங்களுக்குப் பொண்ணும் தல்லா இருக்கணும். துட்டும் நிறைய வரணும்.''

''பிசாசுங்க.''

''ஆமா, பிசாசுங்கதான்.''

''நான் அந்த வீட்ல இருந்தா உங்க அத்தை முழிய நோண்டியிருப்பேன்''

''உன்னை மாதிரி நூறுபேர் முழிய அவ நோண்டுவா. முழி நோண்டறதுக்குன்னே பொறந்தல அவ.''

''உங்கம்மா என்ன சொல்றாங்க.''

''எதுவும் சொல்லலை. போயி சாப்பாடு செய்ய உட்கார்ந்துட்டாங்க.''

''அது ஒரு வாயில்லாப் பூச்சி''

''நான் அங்க இருக்கறது அவளுக்கொசரம்தான்.'

''கடைசியா எவ்வளவுக்குப் படியுவாங்க.''

'முப்பத்தைஞ்சு சவரன். உங்க வீடு என்ன நினைக்குதுஎங்க வீட்டைப் பத்தி.''

''சரியான பன்னாடைங்கன்னு சொல்லுச்சு.''

''ஏன்?'' அவன் குரலில் லேசாய் கோபம் வந்தது.

''ஒன்பதும், ஆறும் பதினைஞ்சு பேரா பொண்ணுப் பார்க்க வருவாங்க.''

''என்ன தப்பு?''

''என்னமோ மாடு பிடிக்கற கூட்டம் மாதிரி இருந்தது.'

''இது தேவையில்லாத பேச்சு. சரி எங்கப்பாவை பத்தி என்ன சொன்னாங்க.''

''நம்மஜாதி கெட்டுப்போறதுக்கு இந்தமாதிரி மானங் கெட்ட பொறுக்கிங்கதான் காரணம்னு சொன்னாங்க.''

''நாங்க என்ன மானங்கெட்டதனம் பண்ணிட்டோம். பொண்ணு பாக்கறதுக்குன்னு ஏண்டி கூப்பிடறீங்க? இருபது போடறேன் இருபத்தைஞ்சு போடறேன்னு ஏன் ஆரம்பிக்கறீங்க? எதிர்வீட்டு சோபாவைக் கொண்டு வந்து ஏன் உங்க வீட்ல போடறீங்க? ஜம்பம். ஜாதி ஜம்பம். வெளக்கெண்ணை ஜம்பம். எச்ச எலையில வெளக்கெண்ணை தடவி வாசல்ல போடற ஜம்பம். அடடா அவங்க வூட்ல நெய் சோறு சாப்பிட்டிருக்காங்கன்னு ரோட்ல போறவன் நினைக்கணும் தன் புத்திய தெவலமா வச்சுக்கிட்டு அடுத்தாளைக் குற்றம் சொல்லி என்ன புண்ணியம்.''

''எதோ வாழற இடத்ல பொண்ணு நல்லா இருக்கணுமேன்னு இருபது இருபத்தைஞ்சு சவரன் போடறதுதான்.''

''அதுதான் ஏன் போடணும்னு கேக்கறேன்? அந்த பொண்ணைப் படிக்க வச்சிருந்தா அதுவாவது கல்யா

ணத்தை பார்த்துக்குமில்லியா? அதுக்காக மதிப்பு கூடுமில்லியா? என்ன படிச்சிருக்கேன்னு கேட்டா எட்டாவதுங்குது. என் எட்டாவது. ரெண்டாவதோட நீறுத்திக்க வேண்டியதுதானே. இன்னு தூங்கி, இன்னு தூங்கி, பன்னி மாதிரி வளர்ந்திருக்கு. மூஞ்சில ஒரு களையே கிடையாது. உடம்புதான் இத்தனை பெருசா இருக்கு. அப்புறம் பார்க்கற ஆம்பளையெ குத்தம் சொன்னா எப்படி?''

''அவ ஜி. ஏ. எல். படிச்சிருக்காளாக்க நீங்க இடுப்பையும், மாரையும் பார்க்காத விட்டுடுவீங்களா? அப்புறந்தான் பொம்பளைங்கள உடம்பா நினைப்பீங்க.''

''நினைக்கலாம். பேசத்தோணுமா?''

''நீங்க என்ன யோக்கியம். கண்ணு முன்னாடி முப்பத்தைஞ்சு, நாப்பதுன்னு பேசறாங்க. பெண்ணைக் காசால எடை போடறாங்க. வாயை மூடிக்கிட்டு உட்கார்ந்திருக்கிங்களே''

''நான் என்னடி பண்ண முடியும். வரல ஆயிரம் கெட்டது நடக்கும். அதெல்லாம் தடுத்துக்கிட்டு இருக்க முடியுமா?''

''உங்க வீட்டுத் தப்பையே தடுத்து நிறுத்த முடியலையே''

''எங்க வீடு தப்புன்னா உங்க வீடும் தப்பு. பெண்ணை தூட்டு குடுத்து தள்ளி விடற பேமானித்தனம். அதுக்கு பதிலா அவளை டான்ஸ் ஆடவிட்டு சம்பாதிக்கலாம். இன்னும் பெரிய இடத்து மாப்பிள்ளை கூடக் கிடைக்கும். செக்ரியா டிரெஸ் போட்டு காபி கொடுக்க வைக்கலாம். தொட்டுப் பாருங்க, எம் பொண்ணு எப்படி மெத்து மெத்துன்னு இருக்குன்னு சொல்லலாம். உங்களுக்கு உங்க பொண்ணு மேல மரியாதை இல்லை.

அதான் எதிர்வீட்டு சோபாவை உங்க வீட்டுக்குக் கொண்டு வரீங்க. திருட்டுத்தனம் பண்றீங்க அப்பவும் திருடி.''

''அத்தனை சனியன்களையும் தரையில உட்கார வச்சிருக்கணும். நான் பண்ணினது தப்பு.''

''உட்கார ஒரு நாற்காலியில்லை. இந்த வீட்ல நமக்குதுக்கு சம்பந்தம்னு அப்பவே எழுதி போயிருப்பாங்க.''

''நாற்காலியா பொம்பளை''

''நாற்காலி, சோபா இருக்கற வீட்டுலதான் நாங்க சம்பந்தம் வைப்போம். முப்பத்தைஞ்சு சவரன் போட்டு ஸ்கூட்டர் வாங்கிக் கொடுத்தா நாங்க கல்யாணம் கட்டுவோம். பெண்ணை எட்டாவது வரைக்கும் படிக்க வச்சுட்டு இந்த பேச்சுப் பேசுறீங்களே. அல பி ஏ., எம். ஏ. ன்னு இருந்தா ஆடிடுவீங்க போலருக்கே''

''எம். ஏ. படிச்சாகூடதான் கேப்பீங்க''

''தேக்குற நிலைமையே வராதுன்றேன் இன்னொரு எம். ஏ. வை அவளாலே தேடிக்குவாங்கறேன்.''

''ஒழுங்கு முறையா கல்யாணம் நடத்த ஆசைப்பட்டோம்.''

''எது ஒழுங்கு முறை ஏன் பைத்தியம் மாதிரி பேசற பெண்ணையும் படிக்க வைக்கமாட்டீங்க. தூட்டு செலவு பண்ணி கல்யாணமும் பண்ணமாட்டீங்க. உங்க சித்தப்பா என்ன குடித்தனம் பண்ணினாள் எதோ வெறிக்கு குழந்தை பெத்துட்டு, கடனேன்னு கல்யாணத்துக்கு ஆசைப்படறான். நான் ஒண்ணு சொல்லட்டுமா? நாளைக்கு ஒரு ஜுரம் வந்து அந்தக் குண்டு பொண்ணு செத்துப் போச்சுன்னா உங்க சித்தப்பனுக்கு பரம சந்தோஷம். நான் எழுதித் தரேன்.''

''டீ...வாயைக் கழுவுங்க கல்யாணம் கட்ட வக்கில்லாத உங்க அண்ணன். எவன் பெண்ணோட தூட்டு தருவான்னு அலையற ஒரு புத்தி. அவன்லாம் ஒரு ஆம்பளை. அவனுக்கெல்லாம் ஒரு மீசை உங்க அண்ணனுக்கு சாவு வராதா? அவனுக்கு பஸ் ஏறி கால் உடையாதா? அப்பவும் அந்த நொண்டி மாப்பிள்ளை இருபது சவரன் கேட்பானா? எட்டு சவரனுக்கு துடைப்பக்குச்சி மாதிரி பொண்ணு கல்யாணம் கட்டுவான். உட்கார்ந்த இடத்திலேயே சீராட்ட ஆள் தேடுவான்.''

''ஏன் இவ்வளவு ஆத்திரமா பேசற?''

''நீங்க பேசலை ஆத்திரமா? உங்க முட்டாள்தனத்தை சுட்டிக்காட்டினேன்.'

''நீங்க முட்டாள். உங்க வீடு ஒரு முட்டாள் கூட்டம்.''

''அப்படியா?''

''அப்படித்தான்.''

''ரொம்ப சந்தோஷம். இந்த முட்டாள் பக்கத்தல உடம்பு உரச எதுக்கு உட்காரணும்? எங்கனா முப்பது சவரன் போட்டு, எவனாவது குடிகாரனுக்கு வாழ்க்கைப் படு. அங்க போயி செருப்படி பட்டாத்தான் நான் யாருன்னு தெரியும்'' அவன் மணல் தட்டி எழுந்திருந்தான். அவள் திடுக்கிட்டாள். 'போக வேண்டாம்' என்று இறைஞ்ச ஆசைப்பட்டாள். 'போனால் போகட்டுமே' என்று கோபமும் பட்டாள். பேசாதிருந்தாள்.

அவள் பதறி, கைப்பிடித்து இழுப்பாள் என்று நினைத்தான். என்னை மன்னிச்சிடுங்க என்று அவள் சொல்ல ஆசைப்பட்டான். அப்படி சொல்லாவிட்டால் என்ன செய்வது என்று கலைப்பட்டான். சிறிது நேரம் அழ வைத்துவிட்டு, சமாதானப்படுத்திக் கொள்ளலாம் என்று நினைத்தான், நகர்ந்தான். அவள் நகரவில்லை. அவன் நடப்பதை நிறுத்தவில்லை. அவர்கள் இடைவெளி அதிகரித்தது. அவன் புள்ளியாய் புல்தரை ஏறும் வரை அவள் பார்த்திருந்தாள்; எழுந்தாள். அவள் உட்கார்ந்த இடத்திலிருந்து வேறு கோணம் எடுத்து, அவனை விட்டு விலகி பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடக்கத் துவங்கினாள்.

இரண்டு பேருமே திரும்பிப் பார்க்க ஆசைப்பட்டார்கள். ஆனால் திரும்பாமல் நடந்தார்கள். இரண்டு பேருமே அந்தப் பிரிவுக்கு வேதனைப்பட்டார்கள். ஆனால், தொடர்ந்து பிரிந்தார்கள். பாழாய் போகிற பஸ் சட்டென்று வந்து தொலைந்து விட்டது. அனிச்சையாய் அவள் ஏறி உட்கார அழுகை வந்தது. வெகு தொலைவில் அந்த ரோஜாப்பூ நிறப் புடவை பஸ் ஏறியதும் அவன் வேதனைப்பட்டான். அந்த பஸ்ஸை அவள் விட்டுவிட்டால், அவளிடம் போய் சமாதானம் செய்யலாம் என்றிருந்தான். அவள் பஸ் ஏறிய அலட்சியம் அவனை வேதனைப்படுத்திற்று.

''போ போய் எங்கேயாவது சாவு, எலங்கிட்டேயாவது மாட்டிக்கிட்டு உதைபடு அப்பதான் என் அருமை தெரியும். உன் எல்லா பேச்சுக்கும் தலையாட்டிக்கிட்டிருந்தேன்ல அது தப்பு பொட்டச்சிய பொட்டச்சியா நடத்தியிருக்கணும். நான் சலிப்பட்ட புஸ்தகம் படிச்சுட்டு, பொம்பளைய இழிவா நடத்தக் கூடாதுன்னு நினைச்சேன் பார் எனக்கு இதுவும் வேணும்; இன்னமும் வேணும். நீயா வந்து என்கூட பேசற வரைக்கும், நான் உன்கூட பேசினேன் என் மூஞ்சில துப்பு' சிறினான். சீற்றம் அடங்காது ஆட்டோ பிடித்தான்

''உன் வீடு பண்ற அக்கிரமத்துக்கு வக்காலத்து வாங்கறியே, உன்னை நம்பி எப்படி நான் ஓடிவர்றது.

நாளைக்கு வந்த பிறகு 'இது வாங்கிட்டு வா; அது வாங்கிட்டு வா'ன்னு நீ துரத்தமாட்டேன்னு என்ன நிச்சயம்? குண்டுப் பொம்பளை வசதியாம். எவனோ சொல்றதக் கேட்டுட்டு வந்து என்கிட்ட சொல்றியே. நாளைக்கு குண்டா இருக்கறவள பார்த்து பல்லைக்காட்ட மாட்டேன்னு என்ன நிச்சயம். நீ பல்லை காட்டி, யார் பின்னாலேயாவது ஓடினா நான் எங்க போயி நீக்க முடியும்.

''நீதான்டீ தேடி கல்யாணம் கட்டிக்கிட்டே. நீயே படுன்னு ஊர் சொல்லாதா? அதுக்குப் பிறகு நான் உசிரோட இருந்து என்ன லாபம்? அப்படி அவமானப் பட்டு சாகறதுக்கு இப்படியே இருந்துடலாம். திருடியாம். நீ எதுவும் கடன் வாங்கினதேயில்லையா? முதமுதல்ல ஊரான் வீட்டு மோட்டார் சைக்கிள்ல தானே என்னை பீச்சுக்கு கூட்டிட்டு வந்தே. உன்னை நான் திருடன்னு சொன்னேனா. எப்பவும் ஸ்நேகிதரு மோட்டார் சைக்கிள் கிடைக்குமா? நமக்கு பஸ் போதும்னு பெருந்தன்மையா சொல்லல. அந்தப் பெருந்தன்மை உனக்கு வரவேண்டாம். திருடி, திருடீன்னு எம்மேல பாய்ஞ்சா...'' அவளால் அழுகையை அடக்கவே முடியவில்லை.

பஸ்ஸிலுள்ளோர் வினோதமாய்ப் பார்ப்பது தெரிந்தும் கவலைப்படாமல் அவள் அழுது தீர்த்தாள்.

சில சமயம் இப்படித்தான் நேர்ந்து விடுகிறது சொற்களை விரயமாக்காமலிருக்க சிந்தனையில் தெளிவு வேண்டும். சிந்தனை தெளிவாக இருக்க சூழ்நிலையைக் கிரகிக்கிற ஞானம் வேண்டும். அந்த அமைதிக்கு பயிற்சி வேண்டும். அந்தப் பயிற்சி செய்ய சிலருக்கு கேவலப் பட்டால்தான் முனைப்பு ஏற்படும். இங்கே இரண்டு பேருமே கேவலப்பட்டார்கள். தாங்கள் கேவலப்பட்டது

தங்களாலேயே என்று அவர்களுக்கு இன்னும் தெரிய வில்லை.

5

அன்று இரவு எல்லோரும் தூங்கிய பிறகு நித்யானந்தம் வீடியோவில் கெட்ட சினிமா பார்த்தான். சினிமாவைவிட தேவானை நினைவே அதிகம் வந்தது. பாவாடையும், சட்டையுமாய் இருக்கிற தேவானையை மனசு கற்பனை செய்து களியாட்டம் போட்டது. காசு கொடுத்துப் பெண்ணிடம் போவதில் பல கலவரங்களி ருந்தன நோய் வந்து செத்துப் போய்விடுவோமே என்ற மிகப் பெரிய பயமும், அதில் ஒன்று. யாரும் பார்த்து விட்டால் என்னாவது என்கிற பயம் இரண்டாவது. முந்நூறு, நானூறு என்று செலவழிக்க வேண்டுமே என்ற கஷ்டம் மூன்றாவது, திருமணம் என்றாகிவிட்டால் இந்த வேதனைகளில்லை ஒரு ஸ்கூட்டர் கொடுத்துவிட்டால் இந்த இடத்தை சரி என்று சொல்லிவிடலாம். கூட வந்த நம்பியை தனியே பார்த்துப் பேசி அவனை அங்கு போகச் சொல்லி, அவர்களிடம் தன்மையாய்ப் பேசச் சொல்லி, இந்த இடத்தை முடிக்கச் சொல்லாம்.

''எங்கண்ணன் ரொம்ப நல்லவருங்க. நல்ல உத்தியாகத்ல இருக்காரு. நல்ல மாதிரி உங்க பெண்ணை வச்சு குடித்தனம் பண்ணுவாரு. நீங்க துட்டுக்கு பார்க்காதீங்க. உங்க பொண்ணு நல்லாயிருக்கணும். பதினாயிரம் ரூபா போட்டா ஸ்கூட்டர். ஆறாயிரம் முதல்ல கட்டி, மிச்சத்தை தவணை முறையில் கட்டினீங் கன்னா, உங்களுக்குக் கொடுத்ததும் தெரியாது. கட்டினதும் தெரியாது. எங்க வீடு தடா, புடான்னு பேசுதேன்னு பயப்படாதீங்க. எங்க அண்ணன் கல்யாண

மானலுடனேயே தனிக்குடித்தனம் போயிடுவாரு. அது தான் உங்க பொண்ணுக்கு, எங்க அண்ணனுக்கு வசதி. அந்தப் பேச்சை இப்ப உங்க லிட்ல எடுக்க வேண்டாம். புரியுதா? நீங்க ஸ்கூட்டருக்கு சரின்னு சொல்லிட்டீங்க கன்னா எங்க அண்ணன் இப்பவே தனி வீடு பார்க்க ஆரம்பிச்சிடுவாரு. நீங்களும் வந்து போக சௌகர்யமா இருக்கும். உங்க பொண்ணு ராணி மாதிரி இருப்பா. கவலைப்படாதீங்க,என்றுசொல்ல வைக்கலாமா?'' நித்யானந்தம் ஆழ்ந்து யோசித்தான்.

வீடியோ காட்சியின் அபத்தம் புரிந்தது. இது வேண்டாம் என்றுதோன்றியது. வெறும் நிழலில் மனசு பறி கொடுக்க விருப்பமில்லாது போயிற்று. வீடியோவை அணைத்து விட்டு சச்சியைத் தேடி மாடிக்குப் போனான். சச்சிதானந்தம் அறை திறந்து இருந்தது. நித்தி லராண்டாவின் வழியாக மேல் மாடிக்குப் போனாள். அங்கே சச்சிதானந்தம் வெறும் துண்டு மட்டும் அணிந்து, சம்மணம் கட்டி, கைகளை முழங்காலில் தொங்கவிட்டு, நேர் கோடாய் நியானத்தில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

ஆனால் சச்சிதானந்தத்திற்கு மனசு ஒருமுகப்படவேயில்லை. அருணாவின் சீற்றமே மனசுள் மறுபடி, மறுபடி படமாய் வந்து கொண்டிருந்தது. எட்டு மாச சந்திப்பில் அவள் சொன்ன ஆயிரம் கதைகளும் மனசுக்குள் தனித்தனியே சுடர் போன்று மின்னிக் கொண்டிருந்தன. அறிவும் தன்னம்பிக்கையும், அதே சமயம் அமைதியும் கொண்ட பெண் என்று அருணாவை நினைத்தது சிறிது ஆட்டம் கண்டிருந்தது. அதே நேரம் உரமும், தெளிவும் உயர்ந்த குறிக்கோளும் உள்ள ஆண் என்று தன்னைத் தானே நம்பிக்கொண்டிருந்தது சிறிலமாயிற்று. தனக்குத் தெளிவு இல்லையோ என்கிற கேள்வி வந்தது. எதற்காக அண்ணனுக்குப் பெண் பார்க்கப் போனோம் என்கிற வருத்தம் வந்தது.

''நான் வர முடியாது அருணா. இந்த செண்டமே எனக்கு ஒப்புதலில்லை என்று மறுக்காமல் போனது தவறு என்று நோன்றியது. காதல் திருமணம் என்கிற வழிமையைக் கைப்பற்றியும், தன் அண்ணனுக்குச் சம்பிரதாயச் சடங்கு என்பதில் மாட்டிக் கொண்டும் இரட்டையாய்ப் போய்விட்டோமே என்று தோன்றியது.

அல்லலை நிடமாகப் பஸ் ஏறினாளே அது சரியா என்கிற கோபம் வந்தது. பஸ் வந்ததால் ஏறினான். பஸ் வராதிருந்தால் ஏறியிருக்கமாட்டாள் என்கிற சமாதானம் வந்தது.

''ஏமறாமல்ல போயிருக்கணும் திருடி. திரும்பிப் பார்க்காம ஏறினானே' சீற்றம் வந்தது. ''நீ திருமண்ணு சொன்னது தப்பு. உன் தங்கச்சி கல்யாணத்துக்கு நீ ஊரான் வீட்டு வெள்ளிப் பாத்திரம் வாங்கிட்டு வரலையா? வாடகைக்கு ஜமுக்காளம் பிடிக்கலையா? என்ன தப்பு அதுல அது எங்க சோபான்னு யாராவது சொன்னார்களா? உங்க வீட்டு குறுதத்தைக் கொடுத்திட்டு எதிர் வீட்டு ஆனந்தவிகடனை வாங்கறதில்லையா? அது திருட்டா; முட்டாள். உன் பேச்சில நிதானமே கிடையாதுடா முட்டாள்.

நீ செருப்பு வேணும்னுட்டாலும் மாத்திட்டுப் போகலை அருணாவைப் பார்க்கணும்னு ஜொள்ளு ஒழுக மறுபடியும் அங்கே போகலை அது திருட்டுத் தனமா இல்லையா? உனக்கு ஒரு நியாயம் அவனுக்கு ஒரு நியாயமா? வேலைக்கார நாய்ய போ. நீயும் போயி பொண்ணு பாரு. வீடு வீடா ஆத்தாளும் அத்தையுமாக் கூட்டிட்டுப் போயி பொண்டாட்டி தேடு. உனக்கும் எட்டாவது படிச்ச பொண்ணுதான் கிடைக்கும். கூட்டிட்டு வந்து பீச்சுக்கு வந்து தோளு தொடு பார்ப்போம். 'யம்மாண்ணு கத்தும். ரெண்டு பொட்டலம் சுண்டல் வாங்கித்தரீங்களாண்ணு கேட்கும். வருவா

லருஷம் பட்டுப்புடவை கேட்கும். நாலாயிரரூபாய்லீலாக் கித்தந்தாதான் வருவேன்னும் வந்திட்டு சத்தியமா வாங் கித் தரீங்களான்னு கேட்கும் இலையில விளக்கெண்ணை தடவி நெய் சோறு சாப்பிட்டதா தெருவுக்கு பொய் சொல்லும். எட்டாவது படிச்சதைக் கட்டிக்கிட்டு வெரி ஹாப்பின்னு உன்னையே ஏமாத்திக்கோ.

புஸ்தகம் படிச்சுட்டா ஞானம் வந்துராதுடா. உன்ன புத்தி மாறணும். உனக்கு புத்தி மட்டு, நிதானம் கும்மி நீ லவ் பண்றதுக்கே லாயக்கில்லாதவன். லவ்வுன்னா என் னன்னு தெரியாதவன். உள்ளொன்று வைத்துப் புற மொன்று பேசுபவன் முப்பது முப்பத்தைஞ்சு சவரன்னு பேசறபோது அதை எதிர்த்து வாயே திறக்காத அயோக் யன். அருணா உன்னைத் திட்டுது. சரி. போ. போயி எட்டாவது கட்டிக்க. எரிச்ச மீன் குழம்பும், புதினா துகை யலும் தின்னு. வாதியோகம் கத்துக்கணும்னா ஆசைப் படறே. திண்டித் தீனி தின்னுட்டு தொப்பை வளர்க்கறது தான் உன் யோகம். உன்னை அவ அல்பம்னு சொன்னது நூத்துக்கு நூறு சரி'' தன்னைத் தானே நொந்து கொண்டு கழிவிரக்கத்தில் கண் திறந்தான். பெருமூச்சு விட்டான் பக்கத்தில் யாரோ உட்கார்ந்திருப்பது கண்டு திடுக்கிட்டு எழுந்தான்.

''என்னடா பண்ற'' இருட்டில் அண்ணன் குரல் கேட் டதும் நிதானமானான். ''நீதானா? பயத்துட்டேன்'' என்றான்.

''தியானம் பண்றவனுக்குப் பயம் வருமா?'' அண்ணன் கேட்க மௌனமாயிருந்தான்.

கண்மூடி கண்டதும் நினைப்பதற்குப் பெயர் தியானமா? ஆனால், நித்தி ஏதோ தன்னைப் பெரியதாய் நினைத்துக் கேள்வி கேட்கிறான். தாழ்த்திக் கொள்வா னேன். யோசித்தான்.

''தியானம் பண்ணினா நல்ல பாம்பை எடுத்து கழுத்தில போட்டுக்குவாங்கன்னு நினைக்கறியா? அதெல் லாம் உயர்ந்த இடம். நாள் இப்பத்தான்...பினர்.''

''புல மாசமா பண்ற போலருக்கே.''

''புல வருஷம் பண்ணணும். அப்பதான் சுமாரான இடத்துக்கு வரமுடியும்.''

''உங்ககிட்ட பேசணும்னு வந்தேன்''

''பேச''

''உன்னைத் தொந்தரவு பண்ணலியே''

''பண்ணிட்டப் பிறகு கேள்வி என்னா? பேசு.''

''எனக்கு அந்தப் பொண்ணைப் பிடிச்சிருக்குடா. நம்ம வீடு சொதப்பிடுமோன்னு கவலையா இருக்கு இப்படியே போனா எனக்கு இந்த ஜென்மத்ல கல்யாணம் ஆகாது.''

''நீங்கதான் என்னனென்னமோ, கேக்கறீங்களே. அது முடியாதுன்னுட்ட பிறகு ஆசை என்ன?''

''அந்தப் பொண்ணு பார்க்க சுமாரா இருந்துதுல்ல.''

''நான் சரியா பார்க்கலை.''

''எனக்கென்னமோ புடிச்சிருந்தது.''

''முப்பது சவரனுக்கு ஒத்துக்க.''

''நான் ஒத்துக்குவேன். நம்ம வீடு ஒத்துக்காது. அத்தை, பாட்டியெல்லாம் இளக்காரமா பேசுவாங்க. அந்தப் பொண்ணு வந்த பிறகு எதுனா சொல்லி அழ வைப்பாங்க.''

''வந்து நாலு நாள்ல தனியா போயிடு. இங்க ஏன் இருக்கே.''

"தானும் அதுதான் யோசிக்கறேன். தனிக்குடித்தனம் போயிடலாம்னு பார்க்கறேன். ஆனா, அதை நம்ம வீட்ல இப்ப சொல்ல முடியாது. அந்தப் பொண்ணு வீட்ல ரகசியமாச் சொன்னா ஸ்கூட்டர் தரமாட்டாங்களா? நம்ம வீடு லேஉஸ் கொந்தரவில்லாத தனிக்குடித்தனம் பண்றோம்னு சந்தோஷப்பட மாட்டாங்களா?"

"இப்படிப் பேரம் பேசறது எனக்குப் பிடிக்கலை."

"பேரம் இல்லடா. ஸ்கூட்டர் நான்கூட கடன் போட்டு வாங்கிடுவேன். இது நம்ம வீட்ல இருந்தா சட்டுன்னு வெளிவாசலெல்லாம் போக முடியாது. போனா எதுக்குப் போற, ஏன் போறேன்னு கேள்வி வரும் என் கைல இருபதாயிரம் வச்சிருக்கேன் ஒரு தனிக்குடித்தனம்னு பார்த்தா, அட்வான்ஸ் வாடகைன்னு செலவாகாதா, கட்டில், பீரோ அலங்க குடுத்தாக்கூட நாலு நாற்காலி நாம வாங்கிப் போட வேண்டாமா? இங்க ஆயிரம் ரூபாய்க்கு வந்து வீட்ல இருக்கறதைவிட பழுவந்தாங்கல், குரோம்பேட்டைன்னு போனம்னா பலதுக்கும் வசதியில்லையா? ஒரே ஹால், ரெண்டு ரூம்னு இருக்கும் மனசுக்குச் சந்தோஷமா இருக்கும் அங்கனேயே உள்ள தள்ளி நிலம வாங்கி வீடுகட்ட முடியும். அப்படி அலையறதுக்கு ஸ்கூட்டர் இருந்தா நல்லாயிருக்கும. அதான் கேக்கறேன்."

"இப்ப நான் என்ன பண்ணனுங்கற?"

"நீ போய் சடயுடன்னு சண்டை போடாத, இதமா பேசி ஸ்கூட்டரோட அவசியம் சொல்லேன்."

"அப்புறம் தனிக்குடித்தனம் போக மாட்டேன்னுட்டா?"

"போறதுதான் எனக்கு வசதி."

"பொண்டாட்டியோட ப்ளஸ் பாயிண்ட் பார்க்கப் போறியா?"

"பார்த்தா என்ன? காமம் தப்பா?"

"தப்பில்லை. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு."

"ஒரு பெண்டாட்டிதானே."

"அதையும் ரொம்ப தொந்தரவு பண்ணக் கூடாதில்ல?"

"ஆனா எம்புத்தி ஒருமாதிரி அலையுதுடா. உன்னை மாதிரித் தியாணம் கத்துக்கணும்னு ஆசைப்படறேன். முடியமாட்டேங்குது."

"எதுக்கு தியாணம் கத்துக்கணும்னு நினைக்கற?"

"மனசு அலையாத இருக்க நீ கத்துக்கொடேன்."

"என்னை தாஜா பண்ண கேக்கறியா?"

"சீ... இல்லடா. பொண்டாட்டின்னு வந்த பிறகு மனச அலையக் கூடாது பாரு, அதுக்காகத்தான் நெனக்கறேன்."

"கெட்ட படம் பார்க்கறதில்லைன்னு சத்தியம் பண்ணு."

"எதுக்குடா?"

"வெளக்கெண்ணையும் குடிச்சுட்டு, பூரி மசாலாவும் ஏப்பிட முடியாது. செத்துடுவே."

"தியாணம் பண்ண ஆரம்பிச்சா கெட்டது நானாப் போயிடுமில்ல?"

"கெட்டது வாணாங்கற வைராக்கியம் முதல்ல வணும். ஜெர்மன் படத்து பொம்பளை மாதிரி நம்ம பொம்பளையில்லையேன்னு துக்கம் வந்துடும்."

"சரி பார்க்கலை. தியாணம் கத்துக் கொடு."

"சரி உட்கார்."

''எப்போதோ கற்றுக் கொண்ட ஆழ்நிலை தியானத்தின் அடிப்படை விதிகளை அண்ணனுக்குச் சொல்லி, அவனை அமைதியாய்த் தன் எண்ணங்களைக் கூர்ந்து பார்க்கச் சொன்னான். அண்ணன் நித்யானந்தம் ஆடாது அமர்ந்திருக்க, தம்பி சச்சிதானந்தம் மாடியில் இடதும், வலதும் நடந்தான்.

''இவனுக்கு ஒரு ஸ்கூட்டரை நாமளே வாங்கி கொடுத்துட்டா என்ன? ஆறாயிரம் கட்டி, அப்பறம் ஆயிரம் ஆயிரமா கட்டிக்கக் கூடாதா? அந்த வீட்டுக்குப் போயி ஸ்கூட்டர் கேக்கறதவிட, கல்யாணப் பரிசா நாமளே ஒரு ஸ்கூட்டர் வாங்கிக் கொடுத்தா என்ன? ஸ்கூட்டர் நீங்க வாங்கிக் கொடுத்ததா இருக்கட்டும். என் பேர் சொல்லா தீங்க. ஸ்கூட்டர் நான் வாங்கிக் கொடுத்ததா இருக்கட்டும்னு அந்த வீட்ல போயி சொன்னா என்ன? அருணாகிட்டக்கூட சொல்ல வேண்டாம்னு தேவானை அப்பாவைத் தனியா கூப்பிட்டு சொன்னா என்ன? கல்யாணம் முடிஞ்சதும் அருணாகிட்ட சொல்லுங்கன்னு சொன்னா என்ன? அது பீச்சுக்கு வந்து நிற்கும். ஸ்கூட்டர் உங்க காசாமேன்னு கேக்கும். பதிலே சொல்லாம உட்கார்ந்துக்கணும். திரும்பாத உட்கார்ந்திடணும் மேலே சாயும். என் மேல கோபமான்னு கேக்கும். இல்லீங்க. உங்க மேல கோபமே இல்லைன்னு சொல்லணும். என்ன வாங்க, போங்கன்னு பேசறீங்கன்னு கலவரப்படும். எனக்கு வேற இடத்துல கல்யாணம் நிச்சயம் ஆயிடுச்சுன்னு சொல்லணும் பொண்ணு எட்டாவது படிச்சிருக்கு. இருபத்தைஞ்சு சவரன் நகை போட்டு, எட்டாயிரம் ரூபா கையில கொடுக்கறாங்க மாமனார் டூரிஸ்ட் டாக்ஸி வச்சிருக்காரு எப்ப வேணா, எந்த கார் வேணா எடுத்துக்கிட்டுப் போகச் சொல்றாருன்னுகதை விடணும் அழும் அப்ப வரேங்கன்னு எழுந்து போகணும். பின்னாலேயே ஓடிவரும் சட்டுன்னு திரும்பி, 'அன்னிக்கி சொல்லாது கொள்ளாது பிரிஞ்சு

போனியடீ நாயேன்னு' தலைய உலுக்கணும் இப்ப புரியதா என் வேதனை அப்படீன்னு கேக்கணும் ஒன்னு...மூஞ்சிய பொத்திட்டு அழும். ரெண்டு கைய விலக்கி நடு பீச்ல இறுக்கிக் கட்டிக்கணும். போலீஸ்காரன் என்னப்பா அது'ன்னு கேட்பான் மன்னிச்சுக்கங்க. இது நான் கட்டிக்க போற பொம்பளைன்னு பதில் சொல்லிட்டு, கையக் கோர்த்துக்கிட்டு புகாரி போயிடணும் சும்மா டூப் விட்டேன். உன்னைய விட்டுட்டு நான் எங்கடி போக முடியும் நாயேன்னு இடுப்பைக் கட்டிக்கிட்டு கொஞ்சணும். அப்ப என்ன செய்தாலும் பேசாம இருக்கும் திட்டம் உருவானவுடன் அதைத் தெளிவாய் யோசித்து, நிதானமாய் அண்ணனுக்கு அருகில் நெருங்கி, போதும் என்று கை தட்டினான்.

''புது ஸ்கூட்டர் முப்பது பவுன் நகை, அவங்களால முடிஞ்ச சீர், செனத்தி. அதுக்குப் பிறகு எதுக்கும், எப்பவும் ஒரு துரும்பு கேட்கக் கூடாது இதுக்கு ஒத்துக்கிட்டா அந்தக் கல்யாணத்தை நான் முடிச்சு வைக்கறேன்.''

''ஒத்துக்கறேன்.''

''நீ தனிக்குடித்தனம் போவேன்னு உன் சார்பா அங்க சத்தியம் பண்ணுகிறேன்.''

''செய்திரு.''

''நம்ம வீடு மடக்கினா.''

''சர்தான் போங்கன்னுடுவேன்.''

''உடனடியா வீடு பார்த்து அட்வான்ஸ் குடு. தேவானை அப்பாவை அங்க கூட்டிட்டுப் போயி காட்டணும், நான்.''

செய்திடலாம்.'' அண்ணன் மிகப் பணிவாகச் சொன்னான்.

இரண்டு மணிக்குயில் சத்தோஷம் என்று கூவியது. அண்ணனும், தம்பியும் உரசிக் கொண்டு மாடிப்படி யிறங்கினார்கள்.

6

''பொண்ணு பெத்தா போறாது, பேசத் தெரிய ணும்'' அருணா சித்தப்பாவை நோக்கிச் சிரினாள்.

''இருபத்தைஞ்சு சவரன்லேர்ந்து முப்பது சவர னுக்குப் போனீங்களே, அதுக்கு முன்னாடியே ஸ்கூட்டர் தரேன்னு சொல்லியிருக்கணும்.''

''அஞ்சு பவுன் நகையைவிட ஸ்கூட்டர் விலை அதிக மில்லையா அருணா?'

''ஒரு ஸ்கூட்டர் விலை என்ன?''

''தெரியாது. நாப்பது அம்பது இருக்குமா.''

''இருபது ரூபாய்க்கு கிடைக்கும்.''

''அப்படிச் செய்திடலாமே. இருபத்தைஞ்சு பவுன் நகையும், ஸ்கூட்டரும் கொடுத்துடலாமே.''

'நீங்க முப்பது பவுன் நகைன்னு சொல்லிட்டு, இப்ப இருபத்தைஞ்சு பவுனுக்கு இறங்கினா யார் ஒத்துக்கு வாங்க? உங்களுக்கு ரிஸர்வ் பாங்க் மாப்பிள்ளையும் வேணும். ரெண்டாயிரம் ரூபா போறும்னு சொல்ற வனாவும் வேணும்.''

''இப்ப என்ன சொல்ற?''

''இது நல்ல இடம். உம் பொண்ணை எம். ஏ.வரை படிக்க வச்சிருக்கே. எதுனா ஆபீசுக்குப் போய் வேலை செய்யறாளா? எட்டாவதோட நிறுத்திட்டு இவ்வளவு

தான், அவ்வளவுதான்னா எப்படி? இப்பமே இருபத் தைஞ்சு வயசு. இன்னும் ரெண்டு வருஷம் போச்சுன்னா முப்பது முப்பத்தைஞ்சு வயசு. ஜாதகம்தான் பாக்கணும். ரெண்டாந்தாரமாதான் கட்டணும். ரெண்டாந்தாரம் கட்டறவன் வரதட்சணையும் கேட்க மாட்டான். உங்க ளுக்கும் சௌகர்யம்.

''நான் என்னடி தப்பு செய்தேன்? எனக்கு முடிஞ்சத சொன்னேன். இனிமே உழைச்சு, உத்தியோகம் பார்த்து எனக்கு முடியாது அருணா.''

''நீ ஏன் உழைக்கணும்? தடிமாடு மாதிரி ரெண்டு புள்ளை பெத்திருக்கல்ல. அவனுங்களை ஒத்துக்கச் சொல்லு கொல்லைப்புறத்து நிலத்தை சேட்டுக்கு வித்து துட்டு புரட்டு, எதுனா பண்ணி உன் பெண்ணைக் கரையேத்து''

''உனக்கு ஏன்மா இத்தனை பதட்டம்?''

''அது நல்ல இடம்.''

''உனக்கு எப்படித் தெரியும்.''

''என் உள்மனசு சொல்லுது. இதைவிட நல்ல இடம் உங்களுக்குக் கிடைக்காது. அந்தப் புள்ளையோட அம்மாக்காரி ரொம்ப நல்லவ. அந்த மாதிரி மாமியார்க் காரி கிடைக்க கொடுத்து வச்சிருக்கணும்.''

''இதையும் என் உள்மனசு சொல்லுதுன்னு சொல் லாதே''

''சித்தப்பா, நீ எழுந்திரு. என்கூட கொல்லைப் புறத்துக்கு வா. உன்கூடத் தனியா பேசணும்'' அருணா சித்தப்பாவோடு கொல்லைப்புறத்து செப்பருத்திச் செடிக்குக் கீழேயுள்ள கல்மேடையில் அமர்ந்து கொண்டாள். சச்சிதானந்தத்துக்கும் தனக்கும் உள்ள காதலைச் சொன்னாள். அவன் வீட்டைப் பற்றி அவன்

விவரித்ததை விளக்கினான் அவன் அம்மாவைப் பற்றி அவன் பேசியதை விவரித்தான்.

''அத்தை நெனியும், பாட்டிக் கிழவியும்தான் ஆடு துங்க. மிஞ்சினா அஞ்சு வருஷம்...ரெண்டும் வலகுந்தம் போயிடும். அப்படியே உசிரோட இருந்தாலும் அத்தப் புள்ளையோட அம்மா இருக்கற வரைக்கும் நம்ம பொண்ணு கண்கலங்காது. இருபதாயிரம் ரூபா காசுக்கு பார்க்காதே. என் காசு பத்தாயிரம் தரேன். முதல் தவணைக் கட்டி ஸ்கூட்டரை எடு. மிச்சத்தை மாசம் மாசம் கட்டு.''

''உனக்கு காசு வேண்டாமா? உன் கல்யாணத்துக்கு சீர் செய்ய வேண்டாமா?'' சித்தப்பா நெகிழ்ந்த குரலில் பேசினார்.

''ஒரே ஜாதி பையன்தான். தப்பில்லை மூத்தவனை விட இளையவன் துடிப்பாக தெரியறான். அதுக்காக உன் கல்யாணத்தை நடக்காத விட்டுடலாமா? நாலு பேரைக் கூப்பிட்டு நல்லது பண்ண வேண்டாமா? தடால்னு உன் காசை தரேன்றியே அருணா.''

''இந்தக் கூத்தெல்லாம் நான் ஆட முடியாது அவருக்கும் இப்படிக் கல்யாணம் கட்டறதுல விருப்பம் கிடையாது. உங்களுக்காக வாதாடி அவரை பகைச்சுக் கிட்டேன். மறுபடி அவங்க பேச வந்தா கூட்டித் தரேன்னு சொல்லுங்க. எப்படியாவது இந்த இடத்தை முடிக்கச் சொல்லுங்க என்னைவிட தேவானை வயசில பெரியவ அவளுக்குத்தான் கல்யாணம் முதல்ல நடக்கணும் அவளுக்கு கல்யாணம் நடக்கணும்னு நான்... நான்...'' அவள் பேச முடியாது அழுதாள். சித்தப்பா அவள் தலையை வருடி, சரி என்று சொன்னார்.

''உங்கப்பனுக்குத் தெரியுமாடி இதெல்லாம்.''

''தெரியாது. உன்னை நம்பி சொல்றேன். உன் திருவாயை மூடிட்டு இரு இதையும் எதுனா பேசி கெடுத்துடாதே அந்த மனுஷன் எனக்கு இல்லேன்னு தெரிஞ்சுது, மாத்திரை சாப்பிட்டு செத்துடுவேன். இது நிச்சயம்.''

''சே...என்ன பேச்சு இது. நான் இருக்கேன். அப்படியெல்லாம் பேசாதே. தேவானை கல்யாணம் முடிஞ்ச கையோட உன் கல்யாணம் நடக்கும். உங்கப்பன் மாட்டேன்னா நான் தின்னு நடத்தறேன். அந்தப் பையனை எனக்குப் பிடிச்சிருக்கு. ஆமா...அவன் ஏன் செருப்பை மாத்திக்கிட்டுப் போனான். தெரிஞ்சா, தெரியாமலா?'' சித்தப்பா கேட்க அருணா விபரமாய்ச் சொன்னாள் இரண்டு பேரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''ஏங்க, புள்ளை வீட்டுலேர்ந்து அந்த சின்னப் பையன் வந்திருக்காரு. உங்களாண்ட எதோ தனியா பேசணுமாம்.''

நிழலாய் வராலில் அவன் இருப்பதைப் பார்த்து விட்டு, அருணா வீட்டை விட்டு அடுத்த சந்தில் துள்ளி ஓடினாள் எதிர்பக்க மைதிலி வீட்டில் புகுந்து கொண்டாள்.

அதே மேடையில், அதே செம்பருத்திச் செடியின் கிழ் அடுத்த அரைமணி நேரம் தேவானையின் அப்பாவோடு சச்சிதானந்தம் சகலமும் பேசினான்.

தானே காசு கட்டி ஸ்கூட்டர் தருவதாகவும், அண்ணன் தனிக்குடித்தனம் போக இருபதாயிரம் ரூபாவோடு தயாராக இருப்பதாகச் சொன்னான். எப்படியும் இந்தத் திருமணம் நடக்க வேண்டுமென்று வற்புறுத்தினான்.

''உங்களுக்கு ஏன் தம்பி இவ்வளவு அக்கறை?''

''உங்க சம்சாரத்து அக்கா பொண்ணு அருணாவை நான் லவ் பண்றேங்க.''

''லவ்வா. அவங்க வீட்ல அதுக்கு ஒத்துக்க மாட்டாங்களே.''

''ஒத்துக்கலைன்னா விட்டுடுவோமா'' விட்டுவாசல்ல நாலு பேரோட இறங்கி அந்தப் பொண்ணு கலை மயிரைப் பிடிச்சுத் தூக்கிட்டுப் போகல. நான் ஆம்பளை யில்லை ''

''நாங்க விட்டுடுவோமா?''

''அடிப்பீங்க. அடிபட்டு செத்தாலும் சரிதான் தலிர, அந்தப் பொண்ணை விட்டு டுப் போகவே மாட்டேன். அதுக்குத்தான் என் காசு போட்டு ஸ்கூட்டர் வாங்கறேன்.''

''அந்தப் பொண்ணு உன்னை வேண்டாம்னு சொல் விடுச்சுன்னா ''

''அவளைக் குத்திக் கொன்னுட்டு, என்னையும் குத்திக்குவேன்யா.''

''யப்பா உட்கார், உட்கார்ந்து பேசு. நீ எழுந் திருக்கறத பார்த்தா என்னைக் குத்திடுவே போலருக்கு இத்தக் கொல்லைப்புறத்த வித்தா எழுபத்தைஞ்சாயிர ரூபாய் கிடைக்கும். இதுல நான் ஸ்கூட்டர் வாங்கித் தரேன். நீ யாரையும் குத்தாது வீட்டுக்குப்போ. எல்லாம் நல்லதா நடக்கும்.''

' இதை ஏன் விக்கணும்?''

''மேல மேல கேக்கறீங்களே.''

''எனக்கு வித்திருங்களேன். நானும் அருணாவும் இங்க ஒரு குடிசை போட்டுட்டு இருந்திடறோம்.''

''சொந்தக்காரனுக்கு வித்தா கொஞ்சம் சொஞ்சமா தான் காசு கிடைக்கும். நான் வித்ததுக்கு அர்த்தமே யில்லாத போகும்.''

''நான் லோன் போடறங்க. அருணாகிட்ட காச கேக்கறேங்க. அஞ்சோ, பத்தோ அது கொடுத்தா ஆயிரம் ரூபா காசா வைக்கறேங்க.''

''அது ரெண்டு நாளா இங்க வரலை. எதோ மனசுக்குக் கஷ்டம்னு அழுதுக்கிட்டிருக்காம். யார் என்ன சொன்னாங்களோ தெரியலை.''

''நான்தாங்க நேத்தைக்குக் கொஞ்சம் கோபமா பேசிட்டேன்.''

''ஏங்க?''

''பீச்சுல, காந்தி சிலைக்கு நேர் பின்னாடி.''

என்னமோ லவ் பண்றதா சொன்னீங்க. அப்புறம், எங்க வீட்டுப் பெண்ணைக் கோபமா பேசுவானேன்?''

''அது எங்க வீட்டை திட்ட, நான் உங்க வீட்டை திட்ட, தேவையில்லாத பேசிட்டோம். எனக்கு அருணாவைப் பார்க்கணுங்க. எப்படியாவது அருணா கிட்ட பேசி என்னை இன்னிக்கு சாயந்திரம் பீச்ல வந்து பார்க்கச் சொல்லுங்களேன் ''

' என்னப்பா மரியாதை குறையுது. யார்கிட்ட என்னை கேக்கறன்னு புரிஞ்சு பேசறியா?''

''தப்புதாங்க. அதே சமயம் நான் அவங்க வீட்டுக்குப் போக முடியாதே. போயி அருணான்னு கூப்பிட முடியாதே அதுக்கு கஷ்டமாயிடுமே.''

''அத்தனை அச்சுறை இருக்கறவன் என் பொண்ணு கல்யாணம் வரைக்கும் பொத்திக்கிட்டு பேசாத இரு. பீச்ல பார்க்கறது. பகல்ல பார்க்க பார்க்கறது இந்த வேலையெல்லாம் வேண்டாம் ''

''மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்குங்க.''

''இருக்கட்டும் எனக்குத் தெரிஞ்சவன் யாராவது அந்தப் பெண்ணை பீச்ல பார்த்து, எம பொண்ணையும் தப்பா நினைச்சுட்டா? எம் பொண்ணு கல்யாணம் வரைக்கும் அந்தப் பொண்ணை நீ பார்க்க முடியாது.''

''கடுமையா பேசறீங்கய்யா' எம் மனசுக்கு நீங்க பேசறது புரியவேயில்லை.'' சத்சிதானந்தத்தின் குரல் இணறித் திணறி வெளியே வந்தது அவன் கண்ணோரம் நீர் கட்டியிருந்தது

''புரியுது தம்பி'' தேவானை நகப்பனும் மனசு இளகி அன்போடு அவன் தோளைத் தொட்டார்.

''இந்த நேரம் உன்னைய மாதிரி ஒரு மாப்பிள்ளை எனக்கு கிடைக்கலையேன்னு பொறாமையாக்கூட இருக்கு. பதினைஞ்சு இருபது தடவை தேவானைய பெண் பார்த்து ஆல் ஆளுக்கு வாய்க்கு வந்ததை பேசி என்னைய ராத்தூக்கமில்லாம அதிரடிச்சது இன்னம் என் மனசில இருக்கு. பொண்ணு பெத்தவன்கிட்ட காசு கேக்கறது. நல்ல ஆம்பளை செய்யமாட்டான் தம்பி. ஆனா இதை உடைக்க என்னாலமுடியாது நீ வாங்கலை யாடா வாதட்சணைன்னு கேட்டா நான் வாயே திறக்க முடியாது. அன்னைக்கு எம் மாமனாரை அழ வச்சத தோடபலன் இன்னைக்கு நான் அலஸ்தைப் படறேன். அசிங்கப்படறேன். எங்க அருணாவை நான் நின்னு சந்தோஷமாக் கல்யாணம் பண்ணித்தரேன். பீச்ல சுத்தறது வேணாம் பொம்பளைகிட்ட கடன் வாங்க வேணாம் உன் தலையை அடகு வச்சு எழுபத்தைஞ்சா யிரம் கொண்டா. உன் காசு வந்துதான் நான் ஸீர் சனத்திக்கு ஏற்பாடு பண்ணனும். உன்னால முடியும். இதுக்கு அருணாவைத் தேடாதே. அது உதவிய எதிர் பார்க்காதே. உன் மனசு எனக்குப் புரியுது. அதுகிட்ட

உன்னை பத்தி நல்லபடியா சொல்றேன். அந்தப் பொண்ணு நான் சரி பண்றேன். போ, போயி துட்டோட திரும்பி வா.

உங்கண்ணன் தனிக்குடித்தனம் போறது நிசயந் தானே? அவர்கிட்ட சொல்லு எம் பொண்ணு எட்டாவது தான். ஆனா பத்து வீட்டு வேலைய ஒண்டி ஆளா செய்வா. அவ சாப்பாரும், பசமும் சமைக்க வச்சா, நான் பொழுதெல்லாம் சாப்பிட்டிட்டிருக்கலாம்னு சொல்லு. அருணா படிச்சிருக்கலாம் ஆனா அடுப்படி வேலைய எம் பொண்ணுகிட்டதான் படிச்சிட்டிருக்குன்னு தெரிஞ்சுக்க. நான் வாசல்படிலதான் உட்கார்த்துட்டிருப்பேன். என் துட்டு எப்ப வருதுன்னு, புரிஞ்சுக்க.'

ஒரு டம்ளர் காபி கொடுத்து, வாசல் பக்கம் போய் வழியனுப்பினார். அவள் தலை மறைந்ததும வீட்டுக்கு ஓடிவந்து அருணாவிடம் மொத்த விஷயமும் சொன்னார். அருணா சந்தோஷமும், துக்கமும் பொங்க முகம் பொத்திக் கொண்டு விசும்பினாள்.

''அவன் நல்ல புள்ள தாயி, எதுவும் மறைக்காத பேசிட்டான். அத எனக்கு ரொம்ப ரொம்ப பிடிச்சி ருந்தது''

''எழுபத்தைஞ்சாயிரம் ரூபா தடால்ன்னு கேட் டீங்களே. அது எங்க போதும் சித்தப்பா? பாவம்ல?''

''அறிவு கெட்டவளே. தூண்டி விட்டு பாரம் இழுக்கச் சொல்லிட்டு அந்த ஆம்பள திணறித் திணறி பாரம் இழுக்கறபோது ஐயோ பாவம், ஐயோ பாவம்னா என்ன அர்த்தம்? அவனால இழுக்க முடியும். இழுப்பான். விடு.''

''நானைக்குப் போயி பார்த்து,சமாதானமா பேசி...''

''தப்பு அருணா. அவங்க வீட்டுப் பக்கம் யாராவது

பார்த்துட்டா இந்த வீட்டுக் கல்யாணம் பத்திப் தப்பா பேசுவாங்க. அப்புறம் அவங்க அப்படி பேசறாங்க இவங்க இப்படி பேசறாங்கன்னு உங்களுக்குள்ளதான் சண்டை வரும். எம் பொண்ணு கழுத்துல தாலி ஏறுறது வரைக்கும் நீங்க பீல் பாக்கறது கிடையாது. அப்புறம் எக்கேடும் கெட்டுப் போங்க.''

''ஏன் சித்தப்பா சுன்னுன்னு பேசறீங்க.''

''ஒரு பொறாமைதான். இத்தனை கருவா ஒரு நல்ல புள்ளைய மடக்கிப் போட்டுட்டியேன்னு ஆதங்கம் தான். எம் பொண்ணுக்கு அந்த சாமர்த்தியம் இல்லையேங்கற குறைதான்.'

''ஏன் சித்தப்பா நான் உன்பொண்ணு இல்லையா?''

''என் ராஜாத்தி, நீ இல்லாத இந்த கல்யாணம் நடந்திருக்குமா? முடியாதுன்னு நினைச்ச இடத்தை முடிச்சுட்டியேடி. எம்பொண்ணுக்கு சோகரம் உனக்குப் புடிச்ச புள்ளைக்கிட்ட சண்டை போட்டிருக்கியே. இதுகூடத் தெரியாத முண்டமா தான் இருந்தாலும்...'

''பாக்கக் கூடாது, பேசக் கூடாதுன்றியா?''

''ஆமா, அருணா. அது எல்லோருக்கும் நல்லது. கொஞ்சநாள் பொறுத்துக்க. அவனை துட்டு தேடவிடு. அதே கவலையா அவன் இருக்கட்டும். அது நல்லது.''

''என்னடி பேசறீங்க ரெண்டு பேரும்? என்ன சொல்றாங்க புள்ளை வீட்ல?''

''எல்லாம் நல்ல படிதான் சொல்றாங்க. உம் பொண்ணு எடை மட்டும் பத்து கிலோ கண்டிசனா குறையணுங்கறாங்க.'' அருணா சித்தப்பாவின் பேச்சுக்கு வாய் விட்டு சிரித்தாள்.

'சித்தப்பா கொஞ்ச நேரம் நான் அந்தக் கல்லுல உட்கார்ந்துக்கறேனே''

''ஏன்? இது அவரு உட்கார்ந்த இடமா?'

''ஆமாம். அவரு உட்கார்ந்த இடம். அவருடைய இடம் நாளைக்கு துட்டு கொண்டாந்து குடுத்துட்டா

தினம் வந்து இங்கதான் உட்காருவேன். இது என் நிலம்.''

''என்னங்கடி ஆடறீங்க ரெண்டு பேரும். துட்டு எகயில கொடுத்துட்டுப் பேசுங்க.''

''நாளைக்கு வரும் வோய்யா, கத்தாத.'' அருணா சந்தோஷமாய்க் கோபப்பட்டாள். சித்தப்பா சிரித்துக் கொண்டு வீட்டிற்குள் போனார். அவரை அவர்மனைவியும், மகளும் சூழ்ந்து கொண்டார்கள். அருணா அவள் அமர்ந்த இடத்தை மெல்ல தடவி, 'ஐயாம் ஸாரி சச்சி' என்றாள். வெகு தொலைவேயுள்ள அவனுக்குப் புரையேறியது.

7

திருமணத்திற்கு நாள் குறித்து பத்திரிகையெழுதிய போது சச்சி வரவில்லை. நிச்சய நாம்பூல சாப்பாடு சாப்பிடவில்லை. இன்னும் எட்டாயிரம் தேவானையின் அப்பாவுக்குக் கொடுக்க வேண்டியிருந்தது கல்யாணத்துக்கு முதல்நாள் அந்த எட்டாயிரமும் டிமாண்ட் ட்ராஃப்ட்டாய் தபாலில் வந்தது கல்யாணத்துக்கு முதல்நாள் மாலையில் மாப்பிள்ளை வீட்டார் வந்த போது சச்சிதானந்தம் ஒருமணி நேரம் தாமதமாக வந்தான். அவர்கள் பக்க ஆட்களை மட்டும் வரவேற்று உபசரித்தார்கள். ஏழுமணி முகூர்த்தத்துக்கு கூடமாட உதவிகள் செய்தான். அருணா எதிர்ப்பட்ட போதும் கண்டு கொள்ளாமலிருந்தான். தாலிகட்டி, அட்சதை போடுகிற போது ஒருகணம் அவளை உறுத்துப் பார்த்தான். பந்தி விசாரிக்க உள்பக்கம் ஓடினான். ரிஸப்ஷன் எங்க செலவு என்று பிள்ளை வீட்டார் ஏற்றுக் கொண்டு, ரிஸர்வ் பாங்க் கூட்டத்தினிடையே திக்குமுக்காடிக் கொண்டிருந்தது.

''இன்னும் கொஞ்சம் சந்தனம் எடுத்தாங்க.'' சச்சி கூவியபோது அவள் சந்தனப் பேலாவோடு அவன் அருகே

வந்தாள். அவன் கைகளில் கொடுத்துவிட்டு அருகே நின்றாள் நீ பௌர்ணமி, என்றும் என் நெஞ்சிலே... சினிமாப் பாட்டை ரிஸப்ஷன் சங்கீதம் எல்லோர் காதுகளிலும் திணித்துக் கொண்டிருந்தது.

''இன்னும் கோபம் போகலையா?'' அந்த இரைச்சலூடே அருணாவின் குரல் மெல்லியதாய் சச்சிதானந்தத்துக்குக் கேட்டது.

''என்ன அது கழுத்துல.''

''கல் அட்டிகை, அமெரிக்கன் டைமண்ட் ஏன்?''

''யாருது?''

''எங்கம்மாது.'

''மாடிக்கு வா.''

அவன் சரசரவென்று சத்திரத்தின் மேல்மாடிக்குப் போனான். மாடி இருளோவென்றிருந்தது. அமெரிக்கன் டைமண்ட் அட்டிகை அவள் அசையும் போதெல்லாம் மின்னிற்று

''உங்கம்மா நகை, உங்கக்கா நகை, உன் நகை எதுவும் எனக்குத் தேவையில்லை இந்தா இதுல ஐந்நூறு ரூபா இருக்கு. இதுதான் என்கிட்ட இருக்கற கடைசி காசு இனிமே அடுத்த மாச சம்பளம் வந்தாதான் உண்டு இந்த காசில கவரிங்கோ, ப்ளாருடிக்கோ, பீத்தலோ வாங்கி காதுல, கழுத்துல போட்டுக்க.''

''அதுதான் ஏங்கறேன்.''

''இத்தினி கூட்டத்தோட, இவ்வளவு செலவு பண்ணி நம்ம கல்யாணம் நடக்காது நாலுபேர் வரணும்னு ஆசைப்பட்டா நகை போட்டுக்கவும் ஆசை வரும் நகைக்கு ஆசைப்பட்டா கடன் வாங்கணும்னு தோணும். இனிமேல் நான் கடன் வாங்கறது கஷ்டம். அதனால அடுத்தபடி ஒரு நல்லநாள் பார்த்து திருநீர் மலைல தாலி கட்டறேன். எப்ப துட்டு இருக்கோ அப்ப ரெஜிஸ்டர் பண்றேன். நகையோட பொண்ணைக் கூட்டிட்டுப் போயிட்டானேன்னு எவனும் சொல்லக் கூடாது.

எனக்கு நகை வேணாம். நீ வந்தாப் போதும். நீ மட்டும் வந்தாப் போதும்.''

''அவ்வளவுதானே...இதுக்குப் போயி ஏன் இத்தனை சிடுபுடுன்னு பேசறீங்க உங்களுக்குப் பிடிக்கலேன்னா அது எனக்கும் தேவையில்லை. நெரு முனைல கடை இருக்கு இப்பமே வாங்கி மாட்டிக்கறேன்.''

''வேணாம் நாளை காலைலகூட மாட்டிக்கலாம்.''

''நாளை காலைல என்ன நாளை காலைல...நீங்க சொல்லிட்ட பிறகு எனக்கு எதுவும் முக்கியமில்லை நீங்க சம்பாதிச்சுப் போடுங்க அதை ஆசையா பூட்டிக்கறேன். இப்ப நிலம் வாங்கினதுல எவ்வளவு கடன் இருக்கு?''

''முப்பதாயிரம் ரூபா.''

''நான் லோன் போடட்டுமா?''

''இதுவே லோன்தான். மாசம் மூவாயிரத்து முந்நூறு அடைக்கணும்.''

''வரமாசத்துக்குள்ள என் கழுத்தில தாலிகட்டிடுங்க. அந்தக் கடன்ல எனக்கும் பொறுப்பு வரட்டும்.''

''அட்டிகைய இப்ப கழட்டாதே அருணா.''

''ஸாரி. நான் கழட்டுவேன்.''

''சட்டுன்னு ப்ளாஸ்டிக்கு மாறினா எல்லோரும் கேப்பாங்கள்ள? கேட்டுட்டு சிரிப்பாங்கள்ல?''

''கல்யாணமான பிறகு கேக்கதான் போறாங்க. கேட்டு சிரிக்கதான் போறாங்க. இப்பவே சிரிச்சுட்டுப் போகட்டும்.''

''உன்னைய கஷ்டப்படுத்தறேனா?''

''மனசு குடுத்தாச்சு. அப்புறம் கஷ்டமோ, நஷ்டமோ நமக்குள்ளதான்.''

''இந்த நெக்லஸ் எவ்வளவு விலை இருக்கும்'' கழற்றி அவள் கையில் வைத்திருந்ததை உற்றுப் பார்த்தான்.

''எட்டாயிரம், ஒன்பதாயிரம் இருக்கும்.''

''நான் சாகறதுக்குள்ள இந்த மாதிரி ஒரு நெக்லஸ் உன் கழுத்துல போடல. என் பேரை மாத்திக்கறேன்.''

''ச்சே, இப்ப என்ன சாதகத பத்தி பேச்சு?''

'வேறென்ன பேசறது?'

''தாலிக்கயிறு இருநூர் மலைல வாங்கிக்கலாமா? இல்லை மெட்ராஸ்லேயே வாங்கி எடுத்துட்டுப் போயிடலாமா?'

அவன் சிரித்தான்.

''நான் எடுத்துட்டு வரேன். நான் எடுத்துட்டு வந்து நானே கட்டறேன். அப்புறம் என்ன?'

''நிலம் வாங்கிட்டா போறுமா? வீடு?''

''அந்த நிலத்தை வச்சு நாப்பது அம்பது கடன் வாங்கி, சுத்தி சுவர் எழுப்பி ஓலைக்கூரை போட்டுக்குவோம். எப்ப முடியுதோ அப்ப தளம் போட்டுக்கலாம். என்ன, குடிசை வீட்ல இருக்கறது முதல்ல கொஞ்சம் கஷ்டமா இருக்கும்.''

''குடிசையா, ஓடோ, ராமன் இருக்கற இடமே எனக்கு அயோத்தி.''

''நான் ஒண்ணும் ராமன் இல்லை. ஒரு தடவை ப்ளூ பிலிம் பார்த்திருக்கேன்.''

''இனி பார்த்தா திருகிடுவேன்.''

''ஆமாம், அன்னிக்கு ஏன் நீ டக்குன்னு பஸ் ஏறிப் போயிட்டே?'' அவன் பேச்சு திசை மாற்றினான்.

'பஸ் வந்தது ஏறிட்டேன். அப்ப போகாட்டி இத்தனை ரோசம் இங்க வந்திருக்குமா? இந்த கல்யாணம் இங்க நடந்திருக்குமா?'' அவள் அவன் நெஞ்சு குத்திப் பேசினாள் குத்திய கைகளை அவன் தன்பால் இழுத்துக் கொண்டான். இறுக்கி அவள் உதடு தேடினான். அவள் இடக்கையால் அவனை அணைத்த வண்ணம் வலக் கையிலுள்ள தென்னை கைப்பிடிச்சுவர் கட்டையில் வைத்துவிட்டு, இரண்டு கைகளாலும் தழுவிக்கொண்டாள் இனி அங்கே அவர்களைத்தவிர வேறு யாரும் வேறு எதுவும் முக்கியமில்லாமல் போயிற்று.

கீழேயிருந்து 'நீ பௌர்ணமி' பாட்டு கேட்டது.

முற்றும்

14478